# இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிதை

முனைவர் சிற்பி பாலசுப்பிரமணியம்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

# இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிதை

முனைவர் சிற்பி பாலசுப்பிரமணியம்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
**International Institute of Tamil Studies**
இரண்டாவது முதன்மைச்சாலை,
மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம்,
தரமணி, சென்னை - 600 113

பதிப்புச்செம்மல் ச. மெய்யப்பனார் அறக்கட்டளைச்
சொற்பொழிவு
(அறக்கட்டளை நிறுவியவர் : பேரா. ச. மெய்யப்பன்)

வரிசை எண் : 2 நாள் : 28-12-2006

# BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| Title of the Book | : | **Irupatām Nūṟṟāṇṭut Tamiḻk Kavitai** |
| Author | : | Dr. Sirpi Balasubramaniam |
| General Editor | : | Dr. M. Valarmathi<br>Research Assistant<br>International Institute of Tamil Studies<br>C.I.T. Campus, Chennai 600 113 |
| Publisher & © | : | International Institute of Tamil Studies<br>II Main Road, C.I.T. Campus, Tharamani<br>Chennai - 600 113<br>Phone : 22542992 |
| Publication No | : | 561 |
| Language | : | Tamil |
| Edition | : | First |
| Year of Publication | : | 2006 |
| Paper used | : | 18.6 Kg. TNPL Maplitho |
| Size of the Book | : | Demy 1/8 |
| Printing Type used | : | 10 Points |
| No. of Pages | : | x+270 |
| No. of Copies | : | 1200 |
| Price | : | **Rs. 80 /-** (Rupees Eighty only) |
| Printed by | : | Pavai Printers Pvt., Ltd.,<br>#16(142), Jani Jan Khan Road,<br>Rayapettah, Chennai - 600 014<br>Tel : 044-28482441, 28482973 |
| Subject | : | Tamil Literature |


அறக்கட்டளைச் சொற்பொழிவாளர் கருத்துகளுக்கு நிறுவனம் பொறுப்பன்று.

முனைவர் ம. இராசேந்திரன்
இயக்குநர் (முழுக் கூடுதல் பொறுப்பு)
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை 600 113

# முகவுரை

கவிதை, மூன்றெழுத்துக் கூட்டணி. பிரித்தாலும் சேர்த்தாலும் வெவ்வேறு பொருள் காட்டும்.

கவிதையைக் கவி, விதை, கதை, தை என்றெல்லாம் பிரிக்கலாம்; சேர்க்கலாம்; பொருள் காணலாம்.

கவிதையில் கதை இருக்கும்; கவி இருக்கும்; எதிர்காலத்திற்குமான விதை இருக்கும்; மனதில் தைக்கும்படியும் சொல்லப்பட்டிருக்கும்.

கவிதை, கருத்துக்களைக் காட்சிப்படுத்தும்; காட்சிகளைக் கருத்துப்படுத்தும் - காட்டும்.

மொழிச்செயற்பாட்டின் உச்சநிலை கவிதை. கவிதை வான்நோக்கிப் பூக்கும்; வானம்பாடும்; உரைநடை மண்பார்க்கும் விழுதுகளாகும்.

நான்காயிரம் ஆண்டுகளுக்கும் முன்பே எழுத்தைப் பெற்றிருக்கிறது தமிழ் என்பதை அண்மையில் மயிலாடுதுறை செம்பியன்கண்டியூரில் கிடைத்துள்ள கற்கோடரி எழுத்து உறுதிப்படுத்தியிருக்கிறது.

எழுத்திற்கு முன்பே பாட்டு இருந்திருக்கும். பாட்டு, செய்யுள், கவிதை என்ற பாகுபாடுகள் இருப்பினும் கவிக்குப் பாட்டு என்றும் பொருள் உண்டு என்று பிங்கல நிகண்டு குறிப்பிடுகிறது. 'பாடேன் தொண்டர் தம்மைக் கவிதைப் பனுவல் கொண்டு' என்று திவ்யப்பிரபந்தம் குறிப்பிடும் நோக்கையும் போக்கையும் கடந்து கவிதை வளர்ந்து கொண்டிருக்கிறது.

உலகின் தொன்மையான மொழிகளில் ஒன்றாக மட்டுமின்றிக் கவிதை மரபின் தொடர்ச்சி அறுபடாமல் தொடர்வது தமிழின் தனிச்சிறப்புகளில் ஒன்றாகவும் காணப்படுகிறது.

தமிழ்க் கவிதையின் தொடர் வரலாற்றில் அந்நியர் ஆட்சி, விடுதலைப்போராட்டம், விடுதலை, சமூக நீதி, பொதுவுடைமை, தீவிர வாதம், தலித்தியம், பெண்ணியம், மானுடம் என்ற வகையில் இருபதாம் நூற்றாண்டு குறிப்பிடத்தக்கக் காலமாகும்.

**இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க்கவிதை** என்ற தலைப்பில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் அமைந்துள்ள ச.மெய்யப்பனார் அறக்கட்டளைச் சொற்பொழிவாக முனைவர் சிற்பி பாலசுப்பிரமணியம் அவர்களின் சொற்பொழிவுரை இது. சொற்பொழிவன்றே இந்நூல் வெளிவருகிறது.

முனைவர் சிற்பி பாலசுப்பிரமணியம் அவர்கள் கவிதைப் படைப்பாளியாகவும், சுவைஞராகவும், திறனாய்வாளராகவும் அமைந்து **இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிதை** எனும் சிறந்த பொழிவுரை நூலை வழங்கியுள்ளார். வரலாற்று ஆவணமாகவும் ஆய்விற்கான தரவுகளாகவும் கவிஞர்களைப் பற்றியும் கவிதைகளைப்பற்றியும் தொகுத்துப் பகுத்து வகுத்துத்தந்துள்ளமை பாராட்டத்தக்கதாகும். பல்வேறு கவிதை ஆய்வுகளுக்கும், ஒப்பாய்வுக் களங்களுக்கும் இந்நூல் வழிகாட்டியாக அமையும்.

நினைவில் வாழும் ச. மெய்யப்பனார் அறக்கட்டளையின் பொறுப்பாளர், ஆராய்ச்சி உதவியாளர் முனைவர் மு. வளர்மதியும், மெய்ப்புத்திருத்தம் செய்த முனைவர் ஆ. தசரதனும் இந்நூல் சிறப்புற அமைவதற்குப் பங்களித்துள்ளனர்.

**மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள்** முதன்முறை தமிழக முதல்வராக விளங்கிய காலத்தில் இந்நிறுவனத்தைத் தொடங்கி வைத்துள்ளார்கள். தொடர்ந்து இந்நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வழிநடத்தி வருகிறார்கள். தற்போது இந்நிறுவனத் தலைவராகவும் திகழ்கிற **மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள்** உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தை நெறிப்படுத்திவரும் பாங்கினை நிறுவனப் பணியாளர்களும் தமிழகமும் என்றென்றும் நன்றியுடன் போற்றும்.

இந்நிறுவனச் செயல்பாட்டுக்கு உறுதுணையாக இருந்துவரும் **சிறப்பு ஆணையர் மற்றும் அரசுச் செயலாளர்** - தமிழ் வளர்ச்சி-பண்பாடு (ம) இந்து சமய அறநிலையத் துறை- **திருமிகு இரா. கற்பூர சுந்தர பாண்டியன் இ.ஆ.ப.** அவர்களுக்கும் நன்றி.

இந்த அறக்கட்டளைச் சொற்பொழிவிற்கான அனைத்து ஏற்பாடுகளையும் செய்த நிறுவனப் பணியாளர்களுக்கும், இந்நூலுக்கு ஒளி அச்சுக்கோப்புச் செய்த கணிப்பொறி உதவியாளர் திரு சு. கண்ணனுக்கும், இந்நூலை அழகுற அச்சிட்டுத்தந்த பாவை பிரிண்டர்ஸ் அச்சகத்தார்க்கும் பாராட்டுகள்.

**இயக்குநர்**



# ஆசிரியர் குறிப்பு

இவருடைய இயற்பெயர் பொ. பாலசுப்பிரமணியம். இவர் பொள்ளாச்சி வட்டத்தில் உள்ள ஆத்துப் பொள்ளாச்சி என்ற ஊரில் 29.7.1936 ஆம் நாளன்று பிறந்தார். தந்தையின் பெயர் பொன்னுசாமி, தாய் - கண்டியம்மாள். இவர் கேரளம், தத்த மங்கலத்தில் உயர்நிலைப்பள்ளிக் கல்வி பயின்றார். திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் இண்டர் மீடியட் கல்வியை முடித்து அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் 1956 இல் பி.ஏ. (ஆனர்ஸ்) பட்டம் பெற்றார். 1987 ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக் கழகத்தில் பிஎச்டி. பட்டம் பெற்றார்.

1958 - 1989 ஆம் ஆண்டுகளில் பொள்ளாச்சியில் உள்ள நல்லமுத்துக்கவுண்டர் மகாலிங்கம் கல்லூரியில் விரிவுரையாளராகவும், துறைத் தலைவராகவும் பணியாற்றினார். 1989 - 1997 ஆம் ஆண்டுகளில் பாரதியார் பல்கலைக் கழகத்தில் தமிழியல் துறைத்தலைவராகப் பணியாற்றினார்.

'நிலவுப்பூ' (1963) முதல் சிற்பி கவிதைப் பயணங்கள், தேவயானி (2005) வரை 17 கவிதை நூல்கள், அலையும் சுவரும் (1994) முதல் காற்று வரைந்த ஓவியம் வரை 8 கட்டுரை நூல்கள், தேனீக்களும் மக்களும் (1982) முதல் வாரணாசி (2005) வரை 7 மொழிபெயர்ப்பு நூல்கள், ஆர். சண்முக சுந்தரம் (1999), பெ. தூரன் (1999) சி. சுப்பிரமணியம் (1999) இராமானுசர் (1999) செ.ப. நரசிம்மலு நாயுடு (2003) குறித்த வரலாற்று நூல்கள், மற்றும் கம்பனில் மானுடம் (2002), A Comparative study of Bharati and Vallathol (1991) முதலிய ஆய்வு நூல்கள் இவருடைய படைப்புகளாகத் திகழுகின்றன. இவர் பதிப்பித்த நூல்கள் 7.

பாவேந்தர் விருது (தமிழ்நாடு அரசு - 1991), கபிலர் விருது (குன்றக்குடி அடிகள் - 1992) பெற்றுள்ளார். மௌனமயக்கங்கள் (1982), பூஜ்யங்களின் சங்கிலி (1999) ஆகியவற்றுக்காகச் சிறந்த கவிதை நூல்களுக்கான அரசின் பரிசுகள் பெற்றுள்ளார். இவர் எழுதிய A Comparative study of Bharati and Vallathol என்ற ஆங்கில நூலுக்குத் தமிழ்ப்பல்கலைக் கழகம் 1994 ஆம் ஆண்டு விருது வழங்கியுள்ளது.

திருப்பூர் தமிழ்ச் சங்க விருது 'சிற்பியின் கவிதை வசனம்' (1997) நூலுக்கும், வில்லி தேவசிகாமணி விருது 'மூத்த எழுத்தாளர்' (1998) நூலுக்கும் பெற்றுள்ளார். சாகித்திய அகாதெமி மொழிபெயர்ப்பு விருது 'அக்கினி சாட்சி' நூலுக்காகப் (2002) பெற்றுள்ளார். இவருடைய 'ஒரு கிராமத்து நதி' என்ற படைப்பிற்குச் சாகித்திய அகாதெமி சிறந்த நூலிற்கான விருதை 2002 ஆம் ஆண்டு வழங்கியுள்ளது. மகாகவி உள்ளூர் விருது, ராணா விருது எனப் பல விருதுகள் பெற்றுள்ளார்.

சாகித்திய அகாதெமியின் பொதுக்குழு உறுப்பினராக (1993 - 1998), இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றத் தலைவராக (2000-2005); சிற்பி அறக்கட்டளைத் தலைவராக, பொள்ளாச்சி இலக்கியக்கழகச் செயலர், கோவை - பாரதியவித்யா பவன், கோவை NGP கல்லூரி, உடுமலை RKR கல்வியியல் கல்லூரி, 'இந்தியப் பல்கலைக் கழகங்கள் பலவற்றின் ஆசிரியர் தேர்வுக்குழு', பாடத்திட்டக் குழு, தேர்வுக்குழு ஆகியவற்றில் உறுப்பினராகப் பணியாற்றியுள்ளார். UGC UPSC, TNPSC குழுக்களில் பணியாற்றியுள்ளார்.

'விடுதலைப் போராட்டத்தின் தாக்கம் தமிழ் இலக்கியங்களில்', 'இடைக்கால கொங்குநாட்டில் சமூகப் பொருளாதார அமைப்புகள்' (1993 - 1997) ஆகிய இரு ஆய்வுத் திட்டங்கள் பல்கலைக் கழக நல்கைக் குழுப் பணிகளாக முடித்து வழங்கியுள்ளார். 'கொங்கு களஞ்சியம்' ஒன்றையும் தயாரித்து வழங்கியுள்ளார்.

இவர் 15 முனைவர் பட்டங்கள், 5 ஆய்வியல் நிறைஞர் பட்டங்கள் பெறுவதற்கு நெறியாளராக இருந்து வந்துள்ளார்.

1) சிற்பியின் படைப்புக்கலை (1993), 2) கோபுரத்தில் ஒரு குயில் (1996), 3) சிற்பி - மரபும் புதுமையும் (1996), 4) கவிஞர் சிற்பி கருத்தியல் வளம் (2003), 5) கவிஞர் சிற்பி கவிதை வளம் (2003), 6) சிற்பியின் கவிதைக்குள் ஒரு பிரபஞ்சம் (2004), 7) சிற்பியின் படைப்புலகம் (2004) ஆகிய தலைப்புகளில் சிற்பியைக் குறித்த ஆய்வு நூல்கள் வெளிவந்துள்ளன.

# முன்னுரையாகச் சில குறிப்புகள்

இந்த நூல் உருவாவதற்கு அடிப்படைக் காரணமாக அமைந்த உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், முன்னாள் இயக்குநர் முனைவர் சா. கிருட்டினமூர்த்தி, ஆராய்ச்சி உதவியாளர் முனைவர் மு. வளர்மதி ஆகியோருக்கு நன்றி.

இந்த நூல் வெளியிடப்பெறுவதற்கு முக்கியக் காரணமாக அமைந்த உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர் (முழுக் கூடுதல் பொறுப்பு) முனைவர் ம. இராசேந்திரன் அவர்களுக்கு என் நன்றியறிதலைப் புலப்படுத்திக் கொள்கிறேன்.

என் கெழுதகை நண்பர் அமரர் பதிப்புச்செம்மல் ச. மெய்யப்பனார் பெயரால் அமைந்த அறக்கட்டளையில் இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிதை குறித்துப் பொழிவு நிகழ்த்தக் கிடைத்த வாய்ப்பு அரியது. இந்த நேரத்தில் என்னோடு உடன்பயின்ற தோழர், கொடை முகில், தமிழுயிர் என்று வாழ்ந்த தகைசால் பெருந்தகை, ஆருயிர் நண்பர் மெய்யப்பனாரின் நினைவைத் தொழுது அஞ்சலிக்கின்றேன்.

ஒரு நூற்றாண்டைக் காகிதச் சிமிழில் அடைத்தல் இயலாது. அதனால் நூற்றுக்கணக்கான நூல்களைப் பயின்று சாரத்தை மட்டுமே சொல்ல முற்பட்டுள்ளேன். எனினும் இது இந்த வகையில் முதல் நூல்.

**முற்ற முழுக்க இருபதாம் நூற்றாண்டின் எல்லைக்குள் எழுதிய கவிஞர்கள் மட்டுமே நூலில் இடம் பெறுகின்றனர். அதனால் புத்தம் புதிய பெயர்கள் இங்கு இடம்பெறவில்லை.** சில கவிஞர்களின் பெயர் காணப்படாமல் இருந்தால் என் பார்வையில் அவர்கள் முக்கியமானவர்கள் அல்ல என்பது காரணம்.

ஈழத்துக் கவிஞர்களை இந்நூல் பேசவில்லை. பேச வேண்டியது அவசியம். மஹாகவி, முருகையன், நீலவாணன், வ.ஐ.ச. ஜெயபாலன்; சேரன், ஊர்வசி, சங்கரி, சிவரமணி, இன்னும் பலரும் ஈழத்தின் மிக முக்கியமான கவிஞர்கள். ஆயினும் ஒரு தனி நூலுக்கு உரியவர்கள் என்பதால் இங்குச் சேர்க்கப்படவில்லை. அவர்களை முழுமையாக ஆராய இந்த நூல் போதாது. தனியே அதை எழுதுவேன்.

கவிஞர்களைக் குறித்தும் கவிதைகளைக் குறித்தும் செய்யப்பட்ட திறனாய்வு அல்ல இது. வரலாற்று வழிப்பட்ட தொகுப்பு. ஆங்காங்கே சொல்லப்பட்ட கருத்துக்கள் என்னுடைய சொந்தக் கருத்துக்கள்.

பொள்ளாச்சி

அன்புடன்

**சிற்பி பாலசுப்பிரமணியம்**

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | வேர்கள் | 1 |
| 2. | ஆழிப்பேரலை | 10 |
| 3. | பாரதிக்குப்பின் மரபுக் கவிதை | 26 |
| 4. | புதுக்கவிதை பிறக்கிறது | 85 |
| 5. | மணிக்கொடியில் புதுக்கவிதை | 92 |
| 6. | புதுமைப்பித்தனும் பிறரும் | 104 |
| 7. | 'எழுத்து' - புதுக்கவிதையின் வெற்றிக்கொடி | 112 |
| 8. | கசடதபற தந்த ஞானக்கூத்தன் | 143 |
| 9. | வானம்பாடி | 152 |
| 10. | புதுக்கவிதை - படைப்புக்களம் விரிகிறது | 186 |
| 11. | புதிய அலைகள் | 249 |

# 1. வேர்கள்

## நெடிய கவிதை மரபு

பாரதத் தாயைக் குறித்துப் பாடவந்த பாரதியார் அவள் பழமையை வியந்து பேசுவார்:

**'தொன்று நிகழ்ந்த தனைத்தும் உணர்ந்திடும்**
**சூழ்கலை வாணர்களும் – இவள்**
**என்று பிறந்தவள் என்றுணராத**
**இயல்பினளாம் எங்கள் தாய்'**

இந்த உணர்ச்சிக் கூற்று தமிழ் மொழிக்கும் பொருந்தும். உலகின் தொன்மையான மொழிகளுள் ஒன்றாகத் திகழ்வது தமிழ் மொழி.

இயற்கையோடு ஒன்றிப் பிறந்தது தமிழ்மொழி என்பதைப் பாரதிதாசன்,

**'திங்களொடும் செழும்பரிதி தன்னோடும்**
**விண்ணோடும் உடுக்களோடும்**
**மங்குல் கடல் இவற்றோடும் பிறந்த தமிழ்**
**உடன் பிறந்தோம் நாங்கள்'**

என்று பெருமிதம் பொங்கக் கூறுவார்.

உணர்ச்சிப் பெருக்கால் இவ்வாறு கவிஞர்கள் கூறுகிறார்கள் என்று இக்கருத்தைப் புறந்தள்ள முடியாது. மொழியியல் பேரறிஞர் ச. அகத்தியலிங்கம் இதே கருத்தை வழி மொழிகிறார்.

> '. . . தமிழ் மொழி பழமையும் தொன்மையும் கொண்டு பன்னெடுங்காலமாக மாறா இளமையுடனும் மங்காப் பொலிவுடனும் வாழ்ந்து வளர்ந்து வரும் மொழியாக உள்ளது. இம் மொழியின் தோற்றமும் பிறப்பும் ஆராய்ச்சிக்கு அப்பாற்பட்டனவாகவே உள்ளன.'

இரண்டாயிரம் ஆண்டு இலக்கிய வளமும் இம் மொழியின் தனிச்சிறப்பாகத் திகழ்கிறது. அவ் இலக்கியங்களில் எட்டுத் தொகையும், பத்துப்பாட்டும் முழுக்க முழுக்கக் கவிதை இலக்கியங்களாகவே. அமைந்துள்ளன. அப்பாடல்கள் செவ்வியல் இலக்கியம் என அறிஞர்களாலும், திறனாய்வாளர்களாலும் மதிப்பிடப்பட்டுள்ளன.

இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிதையை ஆராய விரும்பும் எவரும் அதன் செழுமையான பாரம்பரியம் இருபது நூற்றாண்டுகள் பழமையானது என்பதை மறப்பதற்கில்லை. உலகின் மிகச்சில மொழிகளே இத்தகு தொன்மையான கவிதை இலக்கியத்தைப் பெற்றுள்ளன என்பது மட்டுமல்லாது, அந்த இலக்கியங்களும் முதிர்ந்த அனுபவத்தின் பிழிவாக அமைந்துள்ளன.

காலந்தோறும் மாறி வருகிற சமுதாயச் சாரமும், அதற்கேற்ற வெளிப்பாட்டு நெறி (யாப்பு)யும் தமிழ்க் கவிதை இலக்கிய மரபில் வியப்பூட்டும் மாறுதல்களைக் காட்சிக்கு வைக்கின்றன.

**'மேற்கு மலைச் சிகரங்கள்**
**போல் ஓங்கும்**
**எம் திராவிட குலத்தின்**
**ஆதி கவிகளே'**

என்று மலையாளக் கவிஞர் சச்சிதானந்தன் அழைத்தது போல் சங்கக் கவிகளே நம் ஆதிகவிகள். அகவல்யாப்பில் அகம், புறம் என்ற பொருள் பகுப்புகளைப் பாடியவர்கள் சங்கக் கவிஞர்கள். அவர்களிலும் பத்துப்பாட்டு என்ற நெடும்பாடல்களைத் தந்தவர்கள் அதே அகவல்பாவில் வஞ்சியடிகளும் கலந்து, விரிந்த இயற்கை வருணனைகளும், வாழ்வியல் ஓவியங்களும், மெல்லிய கதை சொல்பாணிகளும் பொதிந்து மற்றொரு கவிதைத் தளத்தை அடைந்தனர்.

நீதி சொல்ல வந்த திருக்குறள் நறுக்குத் தெறித்தாற் போல் பேசுதற்குக் குறள் வெண்பா வடிவைத் தேர்ந்தெடுத்துக் கொண்டது.

பத்துப்பாட்டின் நீட்சியாகச் சிலப்பதிகாரம், பெருங்கதை முதலிய நூல்கள் கதைகூறும் பாங்கில் அகவல்பாவின் எளிமையைப் பயன்படுத்திக் கொண்டன. அவற்றுள்ளும் நாட்டார் வழக்காற்றிலிருந்து பெற்றுக் கொண்ட இசைப்பாடல் வடிவங்களைச் சிலப்பதிகாரம் கானல்வரி, வேட்டுவ வரி, குன்றக் குரவை எனத் தன் அணிகலன்களாகப் பொருத்தி அழகு செய்தது.

நாட்டார் பாட்டு மரபினை உள்வாங்கி எழுந்த பண்ணிசைப் பாடல்களை விருத்தப்பாவின் முன்னோடியாகக் காரைக்கால் அம்மையாரும், திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர் முதலிய திருமுறைச் செல்வர்களும், ஆழ்வார்களும் தந்தனர். இங்கு இசை கலந்த பக்தி புதிய பொருண்மையாக மாறியது.

பக்தி இயக்கத்தின் மையத்திலிருந்து எடுத்த விருத்தப்பாக்களைச் செழுமை செய்து, கம்பனும் திருத்தக்க தேவரும் காப்பிய மரபை உருவாக்கினர். சேக்கிழார் அந்த மரபின் மற்றொரு இழையானார்.

தமிழ்நாட்டின் அரசியல், சமூக வாழ்வியல் பெருத்த மாற்றங்களைச் சந்தித்த பேரரசுகளின் வீழ்ச்சிக் காலத்தில் இலக்கியத்தின் நோக்கங்களும் மாறின. அதனால் மன்னர்களையும் பிரபுக்களையும் மகிழ்விக்கிற கோவை, உலா, அந்தாதி, பரணி இலக்கியங்கள் கவிதை வடிவங்களையும் சிக்கலும் இடுக்கும் மிக்கதாக மாற்றியவாறு பிறந்து வந்தன.

இச்சூழலில் ஒரு மரபு தல புராணங்களாய்ச் சிதைந்தது. மற்றொரு மரபு பள்ளு, குறவஞ்சி எனப் பிற்படுத்தப்பட்டோர் வாழ்வியல் சொல்லும் இலக்கிய வடிவமாய் உருவெடுத்தது. கவிதையின் உயிர்ப்பைப் பள்ளு, குறவஞ்சி வடிவங்கள் ஒருவாறு காப்பாற்றி வந்தன.

## 19-ஆம் நூற்றாண்டு

பத்தொன்பதாம் நூற்றாண்டின் கவிதைச் சூழல் - இருப்தாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிதையை உருவாக்குவதற்கு ஒரு முன்னோட்டமாக அமைந்தது.

நாடு ஆங்கிலேய ஆட்சிக்கு முழுமையாக அடிமைப் பட்டுக்கிடந்தது. கி.பி. 1707இல் ஔரங்கசீப் காலத்தோடு முகலாயர்

ஆட்சி கடைசி மூச்சை விட்டது. இந்திய அரசியலும், பொருளாதாரமும் ஐரோப்பிய வணிகக் கும்பெனிகளிடம் அலைபடத் தொடங்கின. 1755இல் பிரெஞ்சிந்திய ஆளுநராக இருந்த டூப்ளே களத்தைவிட்டு நீங்கியதும் கிழக்கிந்தியக் கும்பெனி வசப்பட்டது இந்தியா.

வீரபாண்டிய கட்டபொம்மன் (1799), ஊமைத்துரை, மருதுபாண்டியர் (1801) ஆகியவர்களின் எதிர்ப்புக்கு முடிவு கட்டப்பட்டது. 1806 வேலூர்ப் படையெழுச்சியும் தோல்வியுற்றது. 1857இல் நடந்த படைகளின் எதிர்ப்பு முறியடிக்கப்பட்டதும் 1859இல் தில்லியும் ஆங்கிலேயர் வசம் வந்தது. ஆங்கில மொழிக்கு முதன்மை தரும்படி இராஜாராம் மோகன்ராயே (1772-1833) வற்புறுத்த, மெக்காலே 1835இல் பெண்டிங் பிரபுவிடம் இதனை வழிமொழிய இந்திய மொழிகளின் பயிற்சி தேங்கத் தொடங்கியது.

புதிய அறிவியல் கண்டுபிடிப்புகளால் ஏற்பட்ட போக்குவரத்துப் புரட்சி, அச்சுயந்திர வளர்ச்சி, ஆங்கில மொழிப் பயிற்சி, இதழியல் பெருக்கம் எல்லாம் ஒரே சமயத்தில் நடத்திய தாக்குதலால் இந்தியச் சமூகத்தில் புதிதாக மத்தியதர வர்க்கம் என்ற படிக்கும் வர்க்கம் பிறந்தது.

வடக்கே இராமகிருஷ்ண பரமஹம்சர் (1833-1886) இயக்கமும், தெற்கே இராமலிங்கர் (1823-1874) இயக்கமும், நாராயணகுரு (1856-1928) போன்றோரின் சீர்திருத்தச் செயல்பாடுகளும் சிந்தனைகளில் மாறுதல்களை வடிவமைத்துக் கொண்டிருந்தன.

இந்த நெரிசல்களுக்கு நடுவே தமிழ்க் கவிதைச் சூழல் எவ்வாறிருந்தது என்பதை அ.சீனிவாசராகவன் துல்லியமாக மதிப்பிட்டுக் கூறியுள்ளார். அரசியல் அடிமைத்தனம், பொருளாதாரச் சுரண்டல், வெளிநாட்டினரின் சமயப்பிரச்சாரம் இவைகளுக்கு நடுவே தமிழின் நிலை எப்படி இருந்தது?

> 'வழிவழியாக வந்த வாழ்க்கை முறைகளில் இருந்த நம்பிக்கை மெல்லச் சிதைந்து வந்தது. நாட்டுப்புறத்திலே வாழ்ந்த தமிழ்ப் பாட்டாளி ஏதோ நிலத்தை உழுதான், விதைத்தான், அறுவடை செய்தான். பெற்றதைப்

> பறிகொடுத்தான். பரம்பரைத் தொழில்களால் வயிற்றைக்கழுவ முற்பட்டான். தன்னுடைய சாதி வரம்புக்குள் ஒடுங்கினான்-சாதிப் பூசல்களில் புழுங்கினான். தன்னுடைய பொருளையும், நாட்டின் உயிரான கலாச்சாரத்தையும், அன்னியன் ஆட்சி அழித்து வந்தது என்ற எண்ணத்தின் சாயலும் இல்லாத ஏழையாய்க் குறுகினான். தமிழ் கற்ற ஒரு சிலர், கற்க முயன்ற ஒரு சிலர் மடாலயங்களிலும், குறுநில மன்னர்களின் அரணில்லாத அரண்மனைகளிலும் ஒண்டி வாழ்ந்து வந்தார்கள். இவர்களுக்கு மக்களோடு அதிகமான தொடர்பில்லை. மக்கள் அனுபவித்த பரிபவத்தின் குரலாக நிற்கும் இலக்கியத்தையோ, அதை மாற்றும் வலிமையளிக்கும் இலக்கியத்தையோ இவர்களால் படைக்க இயலவில்லை'. (அ.சீ.ரா. ஒரு நூற்றாண்டுத் தமிழ்க் கவிதை, 1970)

இந்தக் கொடிய இலக்கியச் சூழ்நிலையில் - எதுவும் துளிர்விடத் தயங்கும் வெம்பாலையில் - சில நம்பிக்கை அரும்புகள் முளைக்கத்தான் செய்தன.

இரண்டு வகையான இலக்கியப் போக்குகளைப் பத்தொன்பதாம் நூற்றாண்டில் அவதானிக்க முடிகிறது.

1. பழமையில் ஊன்றி நின்றபடியே சமகாலத் தேவைகளையும் கருத்தில் கொண்ட போக்கு

2. மேலைச் சிந்தனைகளின் தாக்கத்தால் புதிய நோக்குகளை முன்வைத்த போக்கு

முதல்வகைப் போக்கில் படைப்புகளைத் தந்தவர்களில் இருவர் குறிக்கத் தக்கவர்கள்- இராமலிங்க வள்ளலாரும், கோபால கிருஷ்ண பாரதியாரும்.

திருவருட்பா என்னும் பண் கலந்த பாடல்களில் ஆன்மத் தேடலை மையப்படுத்திய இராமலிங்கர் (1823-1874) கடுமையான தத்துவப் பாடல்களையும் படைத்தார். 'அப்பா நான் வேண்டுதல் கேட்டு அருள்புரிதல் வேண்டும்' என்று பாமரனுக்கும் புரியும் எளிய உயிர்த்துடிப்புள்ள பாடல்களையும் தந்தார்.

எனவே இராமலிங்கரின் முதன்மையான இலக்கியப் பங்களிப்பு தமிழ்க் கவிதையை எளிமை ஆக்கிய அருமை எனலாம்.

'மரணமிலாப் பெருவாழ்வு' என்ற தத்துவத்தை வண்டுகள் போல் அவர் பாடல்கள் மொய்த்த போதிலும், வாழும் மனிதனின் பசிப்பிணி நீக்கமும், சாதிய எதிர்ப்பும், சமய சமரசமும், அருவுருவ வழிபாடும் அவர் பாடல்கள் தமிழுக்கும், சமூகத்துக்கும் தந்த மதிப்பிட முடியாத பரிசுகள் ஆகும். அவருடைய உரைநடை நூல்களான 'சீவகாருண்ய ஒழுக்கமும்', 'மனுமுறை கண்ட வாசகமும்' இந்தக் கோட்பாடுகளின் விளக்கங்களே.

**"சாதியிலே மதங்களிலே சமய நெறிகளிலே**
**சாத்திரச் சந்தடிகளிலே கோத்திரச் சண்டையிலே**
**ஆதியிலே அபிமானித் தலைகின்ற உலகீர்**
**அலைந்தலைந்து வீணேநீர் அழிதல் அழகலவே"**

என்று சாதிகளைக் கடிந்தவர் இராமலிங்கர்.

**"வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம்**
**வாடினேன், பசியினால் இளைத்தே**
**வீடுதோறிரந்தும் பசியறா தயர்ந்த**
**வெற்றரைக் கண்டுளம் பதைத்தேன்"**

என்று பசித்துயர் கண்டு பதைத்தெழுந்து அணையா அடுப்புள்ள சத்திய தருமச்சாலை கண்டவர் அடிகள்.

**"பிற்சமயத்தார் பெயரும்**
**அவர் பெயரே கண்டாய்"**

என்று மாற்றுச் சமயங்களிலும் உண்மையைத் தரிசித்தவர்.

ஆகவே இராமலிங்கர் படைத்த இலக்கியம் பழமையில் நின்றவாறே புதியவைகளைக் காட்டமுயன்றது.

இம்முதல் போக்கின் மற்றொரு சின்னமாகத் திகழ்ந்தவர் கோபால கிருஷ்ண பாரதியார். 'நந்தன் சரித்திரக் கீர்த்தனை'யால் நினைவுகூரப்படுபவர். தாழ்த்தப்பட்ட நந்தனை இவர் தம் நாடகத் தலைவனாகத் தேர்ந்தெடுத்ததே ஒரு புரட்சி. சேரியின் வாழ்நிலையைப் படம்பிடிக்கும் இவருடைய நந்தன் பண்ணை

அடிமையாயிருந்தும் தில்லைச் சிவபெருமானை வழிபடத்துடிக்கிறான். அந்தத் துடிப்பில்,

**"மூன்று லோகமும் படைத்தளித்திடும்**
**ஆண்டவர்க்குக் கொத்தடிமைக்காரன்**
**ஆண்டைக் கடிமைக்காரன் அல்லவே"**

என்று சொல்லவும் துணிகிறான். ஒரு தாழ்த்தப்பட்ட குலத்தவனை முன் வைத்து, அவன் உணர்வுகளைச் சொல்லத் துணிந்த இலக்கியப் புரட்சி கோபால கிருஷ்ண பாரதியாருடையது.

இவர் இராமலிங்கரைப் போலன்றிப் பேச்சு மொழியை மிகுதியாகவும், இயல்பாகவும் கையாண்டிருப்பது மற்றொரு குறிக்கத்தக்க பண்பு.

**"பறையா நீ போய்ப் பாரென்று**
**உத்தாரம் தாரும் தாரும்**
**பாவி எனக்கோ அந்தப்**
**பார்ப்பான் மனமிரங்கான்"**

என்று சேரி மொழியைத் தயங்காமல் பயன்படுத்துகிறார்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் முதல் இலக்கியப் போக்கை உருவாக்கிய இராமலிங்கரும், கோபால கிருஷ்ண பாரதியாரும் பழமையில் நின்றபடிப் புதுமையை நோக்கித் திசைகாட்டி நின்றனர். இவர்கள் இருவருக்கும் மேலைக் கல்விப் பயிற்சி இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இரண்டாவது வகையினர் மேலை இலக்கியத் தாக்கத்தால் புதுநெறி காட்டிய படைப்பாளிகள். இவர்களில் மாயூரம் முன்சீப் வேதநாயகம் பிள்ளையும், மனோன்மணியம் சுந்தரம் பிள்ளையும் முதன்மையானவர்கள்..

பிறநாட்டு இலக்கியங்களின் வளர்ச்சியைக் கண்டு தமிழுக்குப் புதுமை சமைக்கும் நோக்குடன் 'மனோன்மணியம்' நாடகம் படைத்துத் தந்தவர் சுந்தரம் பிள்ளை (1855-1897). 'காவிய நாடகம்' என்று இதனைச் சிறப்பிப்பார் அ.சீனிவாசராகவன். காரணம் இது படிப்பதற்காக என்றே எழுதப்பட்ட நாடகம். நடை எளிமையுடையதன்று.

விடுதலைப் பெண்மையின் வடிவாக வாணியையும், தத்துவ விவாதத்துக்கான கருணாகரர் நிஷ்டாபரர்களையும், இயற்கை நேசிப்புக்கும் அறிவியலுக்கும் நடராஜனையும், தூய சக்தியின் அடையாளமாகச் சுந்தர முனிவரையும் படைத்த சுந்தரம் பிள்ளை நாட்டுப்பற்றைச் சீவக வழுதி மூலம் வெளிப்படுத்துகின்றார்.

**"சுதந்தரம் அவர்க்குயிர் சுவாசம் மற்றன்று**
**நாட்டபி மானமுள் மூட்டிய சினத்தீ**
**அன்றோ வானோர்க்கு என்றுமே உவப்பு"**

என்றெல்லாம் பாத்திரத்தைப் பேச வைக்கிறார்.

மொழிப்பற்றைப் பிள்ளை வடித்த தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலில் மனம் சிலிர்க்குமளவுக்குக் காணமுடிகிறது.

**"வள்ளுவர் செய் திருக்குறளை**
**மறுவறநன் குணர்ந்தோர்கள்**
**உள்ளுவரோ மனுவாதி**
**ஒருகுலத்துக் கொரு நீதி"**

என்பன போன்ற அருமையான தாய்மொழிப் பற்றின் திரு வாசகங்களை அப்பாடலில் பார்க்கலாம்.

மனோன்மணியம் சுந்தரனாரைப் பாரதியார் கற்றறிந்திருந்தார் என்பதைச் 'சின்னச் சங்கரன் கதை'யில் ஒரு பாத்திரத்தின் பேச்சாக வெளியிடுவதால் உறுதி செய்து கொள்ள முடியும்.

> 'திருவனந்தபுரம் பெரியகலாசாலையில் தமிழ்ப் பண்டிதராகி, அன்னிய பாஷைகள் ஆயிரம் கற்று, நகரில் புலவர் சிகரமாக விளங்கிய சுந்தரம் பிள்ளையவர்கள் எழுதிய நூல்களில் ஏதேனும் ஒன்றை எப்போதாவது தலையணையாக வைத்துப் படுத்திருந்ததுண்டா? அல்லது அவர் புத்தகங்கள் வைத்திருந்த அலமாரியை மோந்து பார்த்ததுண்டா?'

என்று பாத்திரத்தைப் பேச வைத்திருக்கிறார் பாரதியார்.

ஆங்கிலக் கல்வி கற்று நீதிபதி பொறுப்பும் வகித்த வேத நாயகம் பிள்ளை (1826-1889), தமிழில் முதல் நாவலாகக் கருதப்படும் பிரதாப முதலியார் சரித்திரத்தை 1876இல் தந்தவர். சமய நம்பிக்கையால் கிறித்தவராக இருந்தும் திருவாவடுதுறை மடாதிபதி சுப்பிரமணிய தேசிகர் போன்றோரிடம் பேரன்பு காட்டியவர். சமய ஒற்றுமை நாடி சர்வ சமய சமரசக் கீர்த்தனை பாடியவர். பெண் விடுலைக்காகப் பெண்மதிமாலை நூலை அளித்தவர்.

சமகால வாழ்வை இலக்கியப் பொருளாக்கிய பெருமையும் இவருக்கு உண்டு. கவிதைகளிலும் தம் நீதிமன்ற அனுபவங்களை அழகுறக் கூறியவர்.

**"சுப்பையரோ அபத்த மூட்டை-அந்தச்**
**சுந்தரய்யர் வழக்கிலே தொள்ளாயிரம் ஓட்டை**
**அப்பையர் கற்பிப்பார் பொய்ச்சீட்டை- அந்த**
**அனந்தையர் கட்டுவார் ஆகாசக் கோட்டை"**

என்று அங்கதமாகப் பாடும் இயல்பும் அவருக்கு உண்டு.

சீர்திருத்தங்களைத் தம் கவிதைகளில் சிறப்பாகச் சொன்ன வேதநாயகம்பிள்ளை உரைநடை இலக்கியத்தையும் வளர்த்தவர்.

இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிதை குறித்துச் சிந்திக்கும் போது அதன் வேர்களை எண்ணிப்பார்க்கிறோம்.

மாற்றங்களை இயல்பாக ஏற்று வளர்ந்த தமிழ்க்கவிதையின் இரண்டாயிரமாண்டுப் பழமை தந்த செழுமை ஒரு புறம். பத்தொன்பதாம் நூற்றாண்டில் இராமலிங்கர், கோபாலகிருஷ்ண பாரதியார், சுந்தரம் பிள்ளை, வேதநாயகர் ஆகிய நான்கு பேராற்றல்கள் இலக்கியத்தை வழிநடத்திய திறம் இன்னொரு புறம்.

இந்த ஆதார வேர்களிலிருந்து வளர்ந்தது இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிதை.

# 2. ஆழிப்பேரலை

தமிழ்க் கவிதை இலக்கியத்துக்கு உந்து சக்தியாகவும், ஊட்டச் சத்தாகவும் திகழ்ந்த நான்கு படைப்பாளிகளை முன்னர்க் கண்டோம்.

ஒரு புதிய அலையை உருவாக்கும் பின்புலமாக இருந்தவர்கள் அவர்கள் என்றாலும், அரசியல் அடிமைத்தனத்தை உதறி எறியும் அளவுக்கு அவர்கள் தீவிரமானவர்களாக இல்லை.

ஏட்டுச் சுவடிகளிலிருந்து தமிழ் இலக்கியத்தை மீட்ட உ.வே.சாமிநாதய்யர் (1855-1942), கலித்தொகை, தொல்காப்பியம் ஆகியவற்றை அச்சேற்றிய சி.வை. தாமோதரம் பிள்ளை (1832-1901) தமிழை உயர்தனிச் செம்மொழியாக உணர்த்திய வி.கோ. சூரிய நாராயண சாத்திரியார் (1870-1903), இதழியலில் முத்திரை பதித்த ஜி. சுப்பிமணிய அய்யர் (1855-1914), புதிய முறை எழுத்துக்கு வித்திட்ட பி.ஆர். ராஜமையர் (1872-1898) என வேறுபல அறிஞர்களும் தமிழ் இலக்கியக் களத்தைப் பத்தொன்பதாம் நூற்றாண்டில் விசாலப்படுத்த உதவினார்கள்.

புதிய விழிப்புக்கு இவர்கள் அனைவருமே வழிவகுத்தவர்கள் தான். ஆயினும் விண்ணைக் கிழித்து மண்ணைப் பதமாக்கும் ஒரு பெருமழையின் வரவுக்கான ஒத்திகைய்யை இவர்கள் நிகழ்த்தினார்கள் என்பதே உண்மை.

இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிதையை ஈரமும் சாரமும் மிக்கதாக மாற்றிய அந்த மாமழை மகாகவி பாரதியார்.

**பாரதியார் (1882–1921)**

**'தமிழகம் தமிழுக்குத் தரும்உயர் வளிக்கும்**
**தலைவனை எண்ணித் தவம் கிடக்கையில்**
**இலகு பாரதிப் புலவன் தோன்றினான்'**

என்ற பாரதிதாசனின் கணிப்பு உயர்வு நவிற்சி அல்ல - உணர்வின் எழுச்சியுமல்ல, அனுபவம் தந்த கிளர்ச்சி.

'ஓராயிரம் வருடம் ஓய்ந்து கிடந்த பின் வாராது போல வந்த மாமணி' பாரதியார்.

ஒரே சமயத்தில் நாட்டு விடுதலை, மொழி விடுதலை, கவிதையைக் கட்டிய தளைகளிலிருந்து விடுதலை, சமுதாய விடுதலை என வெவ்வேறு களங்களில், ஒன்று மற்றொன்றுக்கு முரணின்றி ஒரு மகாரதனாக வெற்றி ஈட்டிய கவிஞர் பாரதியார். அரசியல் தெளிவும், சமுதாயக் கூர்நோக்கும், பொருளியல் பார்வையும் சங்கமித்த மேதை. உணர்ச்சிப் பிரளயத்திலும் நெய்யும் தறியில் நெருங்கிய நூல்போல் அறிவியலும், தத்துவமும் இழைத்துக் கொடுத்த எழுத்துச் சிகரம்.

குறுகிய வாழ்நாளில், அடிமைப்பட்டிருந்த நாடு, மொழி, சமூகச் சூழலில் வேதனைகளை விறகாக்கி வெளிச்சத்தைத் தரிசிக்க வைத்தவர் பாரதியார்.

கவிதை, சிறுகதை, காவியம், கட்டுரை, இசைப்பாடல், நாவல், மொழிபெயர்ப்பு, பத்திரிகைப்பணி என எழுத்துத்துறை களையெல்லாம் தொட்டுத் தழுவியவாறு ஆவேசம் சிதறிப் பொங்கிப் பெருகிய ஆழிப்பேரலை பாரதியார்.

தமிழகத்தின் வரலாற்று விளைவும், பாரதப் பண்பாட்டின் வியப்புறு கொடையும், உலகச் சிந்தனைக் களஞ்சியத்தின் புதுவரவுமான பாரதியாரைக் குறித்துத் திறனாய்வாளர் ஆர்.கே. கண்ணனின் மதிப்பீடு மிகவும் முக்கியமானது.

> 'அவன் ஒருவனே வெல்லற்கரியவன்! ஏனெனில் அவன் ஒருவன் தான் போர்க்கலம் முழுதும் எடுத்தணிந்து தயாராகப் புறப்பட்டவன். தத்துவம், வரலாறு, கலை, இலக்கியம், சங்கீதம், விஞ்ஞானம், பன்மொழியறிவு, அரசியல், போர்க்கலங்களும் அவன் அணிந்திருந்தான். அன்பு என்னும் மகாசக்தி வாய்ந்த கவசம் வேறு இருந்தது..' (ஆர்.கே. கண்ணன், புதுநெறி காட்டிய புலவன், ப.39, 1965)

மற்ற கவிஞர்களைப் போலன்றிக் 'காலம் திரட்டி வைத்திருந்த செல்வக் களஞ்சியங்கள் முழுவதையும் கைவசமாக்கிக்

கொண்டவர் பாரதியார் என்ற மதிப்பீடு முழுமையான ஒன்று என்று கொள்ள வேண்டும்.

பிற இந்திய மொழிகளில் ஏற்பட்ட மறுமலர்ச்சிக்குப் பல கவிஞர்கள் (எடுத்துக் காட்டாக மலையாளத்தில் ஆசான், வள்ளத்தோள், உள்ளூர்) காரணமாக இருந்தபோது, 'எழுவர் பூண்ட ஈகைச் செந்நுகம்' தான் ஒருவனாகவே தாங்கிய சிறுபாணாற்றுப் படைத் தலைவன் ஒய்மா நாட்டு நல்லியக் கோடன் போல - தமிழின் மறுமலர்ச்சிக்கு ஒருவனாய் நின்று ஓங்கிய பெருமை பாரதியாருக்கு உண்டு.

பாரதியாரின் தனித்தன்மைக்கு அடையாளமாக விளங்கும் கவிதைக் கூறுகளை அவரே வரையறுத்துக் கூறி இருக்கிறார், தம் சீட்டுக் கவியில்.

> **'சுவை புதிது, பொருள் புதிது, வளம் புதிது**
> **சொல் புதிது, சோதி மிக்க**
> **நவகவிதை எந்நாளும் அழியாத**
> **மகா கவிதை'**

இந்தக் கணிப்பைப் பிறர் சொல்லுவதாகப் பாரதியார் கூறினாலும் அவரே அதனைத் தம் படைப்பின் சிறப்பு அம்சமாகக் கருதி இருக்கிறார்.

முன்னையோர் சொல்லாத முறையில் கண்ணனைப் புகழும்போது கூறுவார்:

> **'தீக்குள் விரலை வைத்தால் நந்தலாலா – நின்னைத்**
> **தீண்டு மின்பம் தோன்றுதடா நந்தலாலா'**

அழகும் இன்பமுமாகக் காணும் இறையுணர்வைத் துன்பத்தில் தான் நன்கு காண முடியும் என்பதை இவ்வாறு உணர்த்துகிறார் கவிஞர். 'சுவை புதிது' என்று வியக்கிறோம்.

தமிழ் இலக்கியத்தில் கவிதைக்குரிய புதிய பாடுபொருளாகத் தேசியத்தை, சுதந்தர வேட்கையை முன் வைக்கிறார் பாரதியார். தெய்வங்களுக்குப் பாடிய திருப்பள்ளி யெழுச்சியைத் தேசத் தாய்க்கு உரியதாக மாற்றுகிறார்.

'வித முறு நின்மொழி பதினெட்டும் கூறி
வேண்டிய வாறுனைப் பாடுதும் காணாய்
இதமுற வந்தெமை ஆண்டருள் செய்வாய்
ஈன்றவளே பள்ளி எழுந்தருளாயே'

என்று பாரதத் தாய்க்குப் பள்ளியெழுச்சி பாடிப் பாடலில் புதுப் பொருள் சேர்க்கின்றார். தேசியக் கொடி, தேசியத் தலைவர்கள், சுதந்தர மாட்சி, தொழிலாளர் பெருமை,பெண்கல்வி, பெண் விடுதலை, தமிழ்மொழிச் சிறப்பு, தமிழர் நிலை, அறிவியல் நோக்கு, சாதிய எதிர்ப்பு, மத ஒருமைப்பாடு எனப் 'பொருள் புதி' தாகப் படைக்கிறார் பாரதியார். கண்ணன், பாஞ்சாலி என்ற தொன்மங்களுக்குப் புதுக் குரலையும், புதிய உட்பொருளையும் தருகிறார். பாரதியார் கவிதைகளில் 'பொருள் புதிது' தான்.

புதிய உணர்வுகளையும், வாழ்க்கையையும் சொல்லப் பழைய சொற்களஞ்சியங்கள் போதாமையால் மேதைமை மிகக் கவிஞர்கள் புதிய சொற்களைப் படைத்து எடுத்தாளுகிறார்கள்.

ஒரு பிரம்மாண்டமான மக்கள் எழுச்சியை எடுத்துரைக்க வந்த பாரதியார்,

'ஆகா என் றெழுந்தது பார் யுகப்புரட்சி'

என்பார். புரட்சி என்ற மகத்தான சொல் பாரதியாரின் படைப்பு. புதிய பாரத சமுதாயம் பற்றிய கனவு ததும்பும் ஒரு கவிதையில்,

'முப்பது கோடி ஜனங்களின் சங்கம்
முழுமைக்கும் பொதுவுடைமை'

என்று கூறுவார். இங்குப் பொதுவுடைமை என்பது பாரதியார் தமிழுக்குத் தந்த புதிய சொல்லாக்கம்.

குயிலின் பாடலை, 'மின்னல் சுவை', 'நெருப்புச் சுவை', 'மாமாயத் தீம்பாட்டு', என்றும் குழந்தையைப் 'பேசும் பொற்சித்திரம்', 'பிள்ளைக் கனியமுது', 'ஆடிவரும் தேன்' என்றும், சின்ன நெருப்பை 'அக்கினிக் குஞ்சு' என்றும் மேலும் எத்தனை எத்தனை வித்தகச் சொல்லாக்கங்கள்! பாரதியாரிடம் 'சொல்புதிது' தான்.

கண்ணன் பாட்டு, பாஞ்சாலி சபதம், குயில்பாட்டு எனும் முப்பெரும் பாடல்களால் 'வளமும்' புதிது தான்.

தீர்க்கமான தன்னம்பிக்கையோடு எழுத்தை அணுகியதால் 'நல்லதோர் வீணை செய்தே அதை நலம் கெடப் புழுதியில் எறிவதுண்டோ?' என்று கேட்க முடிந்தது. 'என் பாட்டுத் திறத்தாலே இவ் வையத்தைப் பாலித்திட வேண்டும்' என்றும் 'வறுமை என்பதை மண்மிசை மாய்ப்பேன்' என்றும் தெளிவுற மொழிய முடிந்தது. இந்தத் தெளிவு காரணமாக வாக்குக்கும் வாழ்க்கைக்கும் இடையே இடைவெளியின்றி வாழவும் அவரால் முடிந்தது.

பாரதியாரின் கவிதைகளில் அழகியலோடும், அறிவியலோடும் பின்னிய தேசியம், ஆன்மிகம், வாழ்க்கை நேசிப்பு, இயற்கையோடு இணைவு, மனிதநேயம், ஆழ்ந்த தேடல் இவையனைத்தும் புதிய புதிய உத்திகளோடு பொங்கித் ததும்புகின்றன.

தமிழ்த் தேசியத்தின் மாண்புகளை இழக்காத இந்தியத் தேசியம் பாரதியாருடையது.

**'வாழிய செந்தமிழ் வாழ்க நற்றமிழர்**
**வாழிய பாரத மணித்திருநாடு'**

என்ற வரிகளில் இதனை ரத்தினச் சுருக்கமாகப் பேசியிருக்கிறார்.

**'விதியே விதியே தமிழ்ச் சாதியை**
**என் செய நினைத்தாய்?'**

என்ற ஆதங்கமும், 'வானமளந்த தனைத்தும் அளந்திடு வண்மொழி' என்ற பெருமிதமும்,

**'செந்தமிழ் நாடென்ற போதினிலே – இன்பத்**
**தேன் வந்து பாயுது காதினிலே'**

என்று பெருகியோடும் இன்பக் கிளர்ச்சியும், 'மெத்த வளருது மேற்கே, அந்த மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை' என்ற வேதனையும்,

**'திறமான புலமையெனில் வெளிநாட்டார்**
**அதை வணக்கம் செய்தல் வேண்டும்'**

என்ற எச்சரிக்கையுமாகத் தமிழ், தமிழர், தமிழகம் என்ற தனித் தேசியத்தின் அடையாளங்களை அழுத்தமாக எடுத்துக் காட்டியுள்ளார்.

அதே சமயம் பாரத நாடு என்ற முழுமையான பார்வை கொண்டு இந்தியத் தேசியத்தை நேசித்தவர் பாரதியார்.

**'பாரத நாடு பழம்பெரு நாடு**
**நீரதன் புதல்வர் இந்நினைவகற்றாதீர்'**

என்று கூர்மையான நினைப்பூட்டியவாறு அதன் பழம் பெருமைகளில் திளைப்பார். வேதம், இதிகாசம், வீர மரபு அனைத்தும் உடைய நாடு என்று வியப்பார். 'தேசபக்தி' என்ற நவீன மார்க்கத்தை ஒரு மதம் போல் தழுவிக் கொள்ளும் பாங்கில் எத்தனையோ கவித்துவம் வீற்றிருக்கும் கவிதைகள் படைத்துத் தந்திருக்கிறார்.

'மன்னும் இமயமலை எங்கள் மலையே' என்று பேசும் ஆனந்தச் செருக்கு,

**'என்று பிறந்தவள் என்றுணராத**
**இயல்பினளாம் எங்கள் தாய்'**

என்று சிலிர்த்துக் கொள்ளும் அனுபவம், 'முன்னை இலங்கை அரக்கர் அழிய முடித்தவில்' எங்கள் அன்னையின் வில் என்று தொன்மங்களில் திளைக்கும் உவகை, 'தாய்த்திரு நாடென்னில் இனிக்கையை விரியோம்' என்று பேசும் சுதந்தர வீறு - இப்படி விரிகிறது பாரதியாரின் தேசியம்.

சுதந்தரச் சுடர் ஏற்றப்படுவதற்குக் கால் நூற்றாண்டுக்கு முன்பே மரணத்தைத் தழுவிவிட்டார் கவிஞரென்றாலும், அன்றே விடுதலை பெற்றுவிட்டாற் போல் சாதியத்திலிருந்து, அடிமைத் தனத்திலிருந்து விடுதலை கிடைத்து விட்டதாகப் பரவசம் கொண்டு பாடினார்.

'பறையருக்கும் இங்கு தீயர்
புலையருக்கும் விடுதலை
பரவரோடு குறவருக்கும்
மறவருக்கும் விடுதலை'

என்று 'கடையனுக்கும் கடைத்தேற்றம்' தரும் விடுதலையைப் போற்றினார்.

பரிபூரணமான விடுதலையை அடிமைத் தேசத்திலிருந்தே தீர்க்க தரிசனமாகக் கண்டார்.

'எங்கும் சுதந்தரம் என்பதே பேச்சு – நாம்
எல்லாரும் சமமென்ப துறுதியாச்சு'

என்று குதூகலித்தார். சுதந்தர நாட்டில் ஏற்றப்படும் தாயின் மணிக்கொடியின் நிழலில் தமிழரும், தெலுங்கரும், கன்னடரும், மலையாளிகளும், பஞ்சாபியரும், மராட்டியரும் எனப் பலமொழி பேசுவோரும் அணிவகுத்து நிற்கும் காட்சியை மனக் கண்ணில் கண்டார்.

'செந்தமிழ் நாட்டுப் பொருநர் – கொடுந்
தீக்கண் மறவர்கள் சேரன்றன் வீரர்
சிந்தை துணிந்த தெலுங்கர் – தாயின்
சேவடிக்கே பணி செய்யும் துளுவர்
கன்னடர் ஒட்டிய ரோடு – போரில்
காலனும் அஞ்சக் கலக்கும் மராட்டர்'

எனத் தேசிய ஒருமைப்பாட்டைக் காக்கும் வீரர் பட்டாளத்தைத் தேசியக் கொடியின் காவலர்களாய்ப் பார்த்தார்.

பாரத தேசத்துக்கு அருமையான பொருளாதாரத் திட்டத்தையும் இன்னொரு பாடலில் வரைந்தளித்தார். 'பாரத தேசம் என்று பெயர் சொல்லுவார்' எனத் தொடங்கும் எதிர்காலக் கற்பனை நயம் ததும்பும் படைப்பில், ஆயுதம், காகிதம், குடைகள், உழுபடைகள் அனைத்தும் செய்யும் ஆலைகளும் கல்விச் சாலைகளும் பற்றிய ஆசை ததும்பும் திட்டங்கள்.

'சந்திர மண்டலத்தியல் கண்டு தெளிவோம்
சந்தித் தெருப்பெருக்கும் சாத்திரம் கற்போம்'

என்று புதிய எல்லைகளை நாடு தொட வேண்டும் என்ற உற்சாகம் இப்பாடலில் பொங்கி வழிகிறது. ஏறத்தாழ ஒரு நூற்றாண்டை எட்டிய பிறகு நாம் இன்றும் இத்திசையில் நடைபோட எண்ணுகிறோம் எனில் எத்தகைய தரிசனம் இந்தக் கவிஞரின் இதயத்தில் இருந்ததென வியப்புறுகிறோம்.

புதிய பாரத சமுதாயத்தில் 'எல்லாரும் ஓர் நிறை எல்லாரும் ஓரினம்'! அங்கு 'மனிதர் உணவை மனிதர் பறிக்கும் வழக்கம் இருக்காதாம்! அது ஒப்பிலாத சமுதாயமாம், இப்படி ஓர் உன்னதக் கனவு. அந்தச் சமுதாயத்தில் 'வலிமையற்ற தோளும், கிலி பிடித்த நெஞ்சும், வேறு வேறு பாஷைகள் கற்று வீட்டுப் பாஷை கற்காத நீசத்தனமும், ஜாதி நூறு சொல்லும் புன்மையும்' இருக்கவே இருக்காது. ஒளிபடைத்த கண்ணும், உறுதி கொண்ட நெஞ்சும் சிறுமை கண்டு பொங்கும் சீற்றமும், கற்றது பொய்க்காத நல்ல உள்ளமும் உடையோர் வாழ்வார்களாம். இப்படி ஒரு தரிசனம்!

இந்த வியப்புறு சமுதாயம் காணத் தீராத தாகம். இதனைக் கவிஞர்,

**'என்று தணியும் எங்கள் சுதந்தர தாகம்?**
**என்று மடியும் எங்கள் அடிமையின் மோகம்?'**

என்று மனம் கசிவார்.

**'தண்ணீர் விட்டோ வளர்த்தோம், சர்வேசா இப்பயிரைக்**
**கண்ணீரால் காத்தோம் கருகத் திருவுளமோ?'**

என்று வெதும்புவார்.

இதனை அடைய முயலும் வீரத் தலைவர்களை அருமையான சொற்களால் அஞ்சலி செய்வார். லஜபதிராய், திலகர், மகாத்மா காந்தி ஆகியோரைக் குறித்த புகழ்ப் பாக்கள் என்றும் அழியாதவை.

**'வாழ்க நீ எம்மான், இந்த**
**வையத்து நாட்டி லெல்லாம்**
**தாழ்வுற்று வறுமை மிஞ்சி**
**விடுதலை தவறிக் கெட்டுப்**

பாழ்பட்டு நின்ற தாமோர்
பாரத தேசம் தன்னை
வாழ்விக்க வந்த காந்தி
மகாத்மா நீ வாழ்க வாழ்க'

என்ற கவிமாலைக்கு இணையான வரிகளை இந்திய இலக்கியத்தில் காண்பதரிது.

பாரதியாரின் ஆன்மிகப் பார்வையில் ஒரு தத்துவக் கனிவு சுரந்து நிற்பதை எளிதில் காண முடியும். கடவுள் வழிபாட்டுப் பாடல்களில் தேசியம் உட்பொதிந்த தத்துவமாவதை விநாயகர் நான்மணி மாலை புலப்படுத்தும்.

'நமக்குத் தொழில் கவிதை நாட்டுக் குழைத்தல்
இமைப் பொழுதும் சோரா திருத்தல்'

என்ற கோட்பாட்டில் படைப்புத் தொழிலோடு, உழைப்புத் தொழிலும் ஒன்று படுகிறது.

அவ்வாறே 'பேசாப் பொருளைப் பேச நான் துணிந்தேன்' எனத் தொடங்கி, அனைத்துயிர்களுக்கும் நலம் செய்ய விரும்பி, ஆன்ம நேயத்தில் முடியும் கவிதை நிகரற்ற படைப்பு.

'பூ மண்டலத்தில் அன்பும் பொறையும்
விளங்குக துன்பமும் மிடிமையும் நோவும்
சாவும் நீங்கிச் சார்ந்தபல் லுயிரெலாம்
இன்புற்று வாழ்க'

என்ற விழைவை விநாயகரிடம் புலப்படுத்தும்போது கவிஞரின் உயிரின்ப அன்புத் தத்துவம் சுடர்விடுகிறது.

கலைமகள் வணக்கம் கல்வித் தத்துவமாக வடிவெடுக்கிறது. 'வேள்வி' அமரத்தன்மை நோக்கிய விடுதலை ஆகிறது. 'யோக சித்தி' நாடு செழிக்க, தொழில்கள் வளர்க்க ஆற்றல் வேண்டும் அடங்காத தாகமாகிறது. காணிநிலம் வேண்டுமென்ற கோரிக்கை,

'பாட்டுத் திறத்தாலே – இவ்வையத்தைப்
பாலித்திட வேண்டும்'

என்னும் எல்லையை நோக்கி விசாலப்படுகிறது.

மந்திரம் போல் சொல்லின்பம், மனிதனுக்கு என்றும் அழியாத அமரத்துவம் என்ற கரை கடந்த தத்துவ வீச்சாகிறது பாரதியாரின் ஆன்மிகம்.

'நீ அதுவாகிறாய்' என்ற அத்வைதம் 'எல்லாமாகிக் கலந்து நிறைந்தபின் ஏழைமை உண்டோடா?' என்று சமத்துவச் சமுதாய நோக்காக விரிவடைகிறது. இத்தனைக்கும் அடித்தளம் அன்பு என்று காண்கிறார் பாரதியார்.

**'துன்ப நினைவுகளும்**
**சோர்வும் பயமும் எல்லாம்**
**அன்பில் அழியுமடி – கிளியே**
**அன்புக் கழிவில்லை காண்'**

என்னும் அன்புத் தத்துவமாக அனைத்துத் தத்துவமும் மாறுகின்றன.

'ஊழிக் கூத்து' கவிதையில் அன்னை பராசக்தி அழிவுச் சக்தியாக மாறி 'ஐந்துறு பூதமும் சிந்திப் போக' செருவெங்கூத்து நிகழ்த்துகிறாள். காலமும் உலகும் நிர்மூலமாகின்றன. முடிவில் மோனநிலையில் சினம் விலகுகிறது. சிவனுடைய

**'கோலம் கண்டுன் கனல் செய் சினமும் விலகும்–கையைக்**
**கொஞ்சித் தொடுவாய் ஆனந்தக் கூத்திடுவாய்'**

என்று முடிக்கும்போது பேராழியின் சீரழிவு விலகி அன்புத் தத்துவம் மீண்டும் வெல்வதாகப் பாடுவார் பாரதியார்.

இயற்கையில் மனிதனையும், மனிதனில் இயற்கையையும் இணைத்துப் பார்த்தவர் பாரதியார். ஷெல்லியிடமிருந்து இந்தப் பார்வை அவருக்குக் கிடைத்திருக்கக் கூடும். வேதரிஷிகளின் கவிதைகளிலிருந்தும் இந்த உணர்வை அவர் எய்தியிருக்கக் கூடும்.

**'புல்லை நகையுறுத்திப் பூவை வியப்பாக்கி**
**மண்ணைத் தெளிவாக்கி நீரில் மலர்ச்சி தந்து,**

சூரியன் வருவதை அவர் பேசியதுண்டு.

**'நிலாவையும் வானத்து மீனையும் காற்றையும்**
**நேர்பட வைத்தாங்கே**
**குலாவும் அமுதக் குழம்பைக் குடித்தொரு**
**கோல வெறி படைத்தோம்'**

என்று ஒரு கவிதைச் சித்தனாகத் திளைத்ததுண்டு. வசன கவிதையில் காற்று, ஞாயிறு என்று இயற்கையினுள் இதயம் பறி கொடுத்ததுண்டு.

ஆயினும் பாரதியாருக்கு மனித சுவாசம் படராத இயற்கையில் நாட்டமில்லை. எங்கும் சூரிய ஒளி படரும் காட்சியை அழகுறச் சித்திரிக்கிறார், 'ஒளியும் இருளும்' கவிதையில்.

'வானமெங்கும் பரிதியின் சோதி
மலைகள் மீதும் பரிதியின் சோதி'

என்று தொடரும் கவிதை,

'மானவன்றன் உளத்தினில் மட்டும்
வந்து குவியும் இருளிது என்னே?

என்று முடிகிறது. உலகம் முழுதும் ஒளி, என் உள்ளத்தில் இருள் ஏன் என்ற கேள்வி இயற்கைக் காட்சிக்குள் மனிதனைக் கொண்டு வந்து இணைக்கிறது.

நிலவைப் பலபடப் புனைந்து பாடுகிற பாடல் 'வெண்ணிலா'. 'சீத மணிக்குள வானத்தில் வெண்தாமரையாக மலரும் நிலவின் அழகுகள் சித்திரிக்கப்பட்டாலும்', மனித வாழ்க்கையை விட்டு விலகாதபடி கவிதை இயங்குகிறது. நிலவை மேகம் மறைக்கிறது. மறைத்தாலும் கரியமேகத்தையும் நிலவு முத்தின் ஒளி தந்து பெருமைப்படுத்துகிறதாம். அது தீமை செய்தவர்களுக்கும் நன்மை செய்யக் கருதும் மனிதப் பண்பை ஞாபகப்படுத்துகிறதாம்.

'மோத வரும் கருமேகத் திரளினை – வெண்ணிலாவே நீ
முத்தின் ஒளிதந்து அழகுறச் செய்குவை – வெண்ணிலாவே
தீது புரிந்திட வந்திடும் தீயர்க்கும் – வெண்ணிலாவே – நலம்
செய்தொளி நல்குவர் மேலவராம் அன்றோ வெண்ணிலாவே'

என்று கவிதையை நடத்துவார் கவிஞர்.

'தென்னையின் கீற்றுச் சலசலவென்றிடச் செய்துவரும் காற்றை' அறிமுகம் செய்கிற அதே மூச்சில்,

'உன்னைக் குதிரை கொண் டேறித்திரியுமோர்
உள்ளம் படைத்து விட்டோம்'

என்று காற்றை அடக்கியாளும் மனித ஆற்றலை முன் நிறுத்துவார்.

வசன கவிதையில் காற்றோடு நடத்தும் உரையாடல் மிக இனிய பகுதி,

> **'காற்றே வா மெதுவாக வா**
> **ஜன்னல் கதவை அடித்து உடைத்து விடாதே**
> **காயிதங்களை எல்லாம் எடுத்து விசிறி எறியாதே**
> **அலமாரிப் புத்தகங்களைக் கீழே தள்ளி விட்டுவிடாதே'**

என்று பேசிக்கொண்டே இயற்கையின் ஆற்றலை விவரிப்பார் கவிஞர். நொய்ந்த வீடு, நொய்ந்த கதவு, நொய்ந்த உயிர், நொய்ந்த உள்ளம் - இவற்றைக் காற்றுத் தேவன் நொறுக்கி விடுவான் என்பார். அடுத்த கணம் மனிதனை நோக்கித் திரும்புவார்.

> **'ஆதலால் மானிடரே வாருங்கள்**
> **வீடுகளைத் திண்மையுறக் கட்டுவோம்**
> **கதவுகளை வலிமையுறச் சேர்ப்போம்**
> **உடலை உறுதி கொள்ளப் பழக்குவோம்'**

என்று மனிதனுக்குப் பாடம் கற்றுக் கொடுப்பார்.

பாரதியாருக்கு இயற்கை மனிதனை அரவணைக்கும் தாய். மனிதன் அதனை மதித்து நடக்க வேண்டிய பிள்ளை. இந்த உறவின் விரிவு 'கண்ணன் - என் தாய்' கவிதையில் நுட்பமாகப் புலப்படுத்தப்படுகிறது.

மனிதனின் வாழ்நிலை, மனிதனின் விடுதலை, மீட்சி என்ற பார்வை தான் இதிகாசங்களை நெசவு செய்கிற இழை. மனித உறவுகளின் பின்னல்களால் அவற்றின் போக்குகள் வேறுபடுகின்றன. மில்டனின் சொர்க்கத்தின் இழப்பானாலும் இராமாயணமானாலும் மனித மீட்சியே மையப்படுத்தப்படுகிறது.

பாரதியாரின் கவிதைகளில் மனிதன் மையமாகத் திகழ்கிறான். அடிமை வாழ்வில் 'செம்புக்கும் கொம்புக்கும்' அஞ்சி வாழ்கிற மனிதனின் வாழ்நிலை அவரைத் துயர்ப்படுத்துகிறது.

> **'நெஞ்சு பொறுக்குதிலையே – இந்த**
> **நிலைகெட்ட மாந்தரை நினைத்து விட்டால்**

**'அஞ்சி அஞ்சிச் சாவார் – இவர்**
**அஞ்சாத பொருளில்லை – அவனியிலே'**

அச்சம், வறுமை, மூடநம்பிக்கை, அதிகார பயம், மதச் சண்டை, பஞ்சம், நோய் இத்தனைக்கும் நடுவில் தவிக்கும் மனிதம் அவர் நெஞ்சை நெகிழ்வித்தது.

இந்த நெகிழ்வில் பிறந்த ஆத்திரம் தான் உலகையே அழித்தால் என்ன என்ற வள்ளுவக் கோபமாய் வெடித்தது.

**'தனியொருவனுக் குணவிலையெனில்**
**ஜகத்தினை அழித்திடுவோம்'**

இந்த மனித நேயம் தான் சாதித் தடைகளைத் தகர்க்கும் உத் வேகமாய்ப் பரிணமித்தது.

**'ஏழை என்றும் அடிமை என்றும்**
**எவனுமில்லை சாதியில்**
**இழிவு கொண்ட மனிதரென்பார்**
**இந்தியாவில் இல்லையே'**

என்று முக்காரமிட்டு முழங்கும் தீவிரத்தை அவருக்குத் தந்தது. 'அச்சமும் பேடிமையும் அடிமைச் சிறுமதியும்' எத்தனை இழிவுகளுக்கு வழிவகுக்கும் என்பதை எண்ணி எண்ணி உருகினார் பாரதியார். பிஜித்தீவிலே நம் நாட்டுப் பெண்கள் கரும்புத் தோட்டத்திலே கசக்கிப் பிழியப்படுகிற அவலத்தைக் கண்ணீர்க் கவிதையாக்கினார்.

**'நாட்டை நினைப்பாரோ – எந்த**
**நாளினிப் போயதைக் காண்ப தென்றே அன்னை**
**வீட்டை நினைப்பாரோ – அவர்**
**விம்மி விம்மி விம்மி விம்மி அழுங்குரல்**
**கேட்டிருப்பாய் காற்றே – துன்பக்**
**கேணியிலே எங்கள் பெண்கள் அழுதசொல்**
**மீட்டும் உரையாயோ?'**

ஈரம் கசிந்த சொற்களிலே தேங்கிய துயரத்தின் குரல் இப்போதும் ஒலிப்பது போல் பிரமை உண்டாகிறது.

இத்தகைய கண்ணீர் சிந்தும் எளியவர்கள் பால் தன்னை ஒப்படைத்துக் கொண்டதாலேயே,

**'சொல்லக் கொதிக்குதடா நெஞ்சம் – வெறும்**
**சோற்றுக்கோ வந்ததிந்தப் பஞ்சம்?'**

என்று அவர் கவிதை குமுறுவதை எங்கெங்கும் காண முடிகிறது.

விசுவரூபம் கொள்ளும் இந்த மனித நேயம் எல்லைகள் தாண்டி - மு. பொன்னம்பலம் (ஈழக் கவிஞர்) கூறுவது போல யதார்த்தம் தாண்டி ஆத்மார்த்தமாக உருக்கொள்கிற நிலையையும் பாரதியாரிடம் பார்க்க முடியும்.

'விடுதலை' என்ற சின்னஞ்சிறு கவிதை நாடகத்தில் அமரத்துவம் மிகுந்த அறிவிப்பு ஒன்று கவித்துவத்தோடு தெறித்து விழுகிறது.

**'மண்ணுலகத்து மானுடன் தன்னைக்**
**கட்டிய தளையெலாம் சிதறுக'**

இந்த மனிதத்துவத் தேடல் தான் 'பட்டப் பகலிலே பாவலர்க்குத் தோன்றுவதாம் நெட்டைக் கனவு' எனப்படும் குயில் பாட்டில் சொற்களின் சிமிழ் திறந்து காதலன்பாகப் பெருக்கெடுக்கிறது.

**'காதலை வேண்டிக் கரைகின்றேன் இல்லையெனில்**
**சாதலை வேண்டித் தவிக்கின்றேன்'**

என்ற மாயக் குயிலின் குரலில் இந்தத் தேடல் எதிரொலிக்கிறது.

இந்தத் தேடல் தான் பாரத தேசத்தின் விடுதலைப் போராட்ட உருவகமான 'பாஞ்சாலி சபதத்தில்' மானத்துக்கு நேர்ந்த சோதனையாக விரிகிறது. சூதாடு களத்தில் மனைவி பணயமாக வைக்கப்பட்டுத் தோல்வி நேர்ந்தபோது, அர்ச்சுனன் வாயில்,

**'கட்டுண்டோம் பொறுத்திருப்போம்**
**காலம் மாறும்'**

என்று நம்பிக்கை வாசகமாக முன் வைக்கப்படுகிறது.

தாய், தந்தை, நண்பன், குரு, சீடன், அரசன், சேவகன் காதலன், காதலி, குழந்தை என்ற பன்முக உறவுகளில் கண்ணனை நிறுத்தி - ஒவ்வொரு முகத்திலும் ஆன்ம சத்தியத்தை இந்தத் தேடல் தான் தரிசிக்க வைத்தது.

**'சக்கரத்தை எடுப்ப தொரு கணம்**
**தருமம் பாரில் தழைத்தல் மறுகணம்'**

என்று மாசற்ற அன்பின் குரலாக ஒலித்ததும் அதுவே.

இந்தத் தேடலின் முடிவற்ற பயணத்தைப் பாரதியார் கவிதைகளில் சிறைப்பிடிக்க முயன்றிருக்கிறார்.

**'கண்ணில் தெரியும் பொருளினைக் கைகள்**
**கவர்ந்திட மாட்டாவோ - அட**
**மண்ணில் தெரியுது வானம் - அது நம்**
**வசப்படலாகாதோ?'**

என்றும் உயிர்ப்பு நல்கும் கவிஞராகப் பாரதியார் இருப்பதற்குக் காரணம் இந்தத் தீவிரத் தேடல் தான்.

கவிதையில், பல பரிசோதனைகளைப் பாரதியார் செய்து பார்த்தார். மரபான யாப்பை விட்டுச் சிந்து, கண்ணி என்ற நாட்டுப்புற வடிவங்களிலும் ஈடுபட்டார். இலக்கணம் அறிந்திருந்தும் பேச்சுமொழியைப் பயன்படுத்தி, 'ஆச்சே', 'போச்சே', 'வருகுது', 'பாயுது' என்று மாற்றிச் சோதித்தார். காவடிச் சிந்து மெட்டில் 'அக்கினிக் குஞ்சு' என்ற ஓரடிப் பாடலை உருவாக்கிப் பார்த்தார். (Single Stanza)

மற்றொரு பரிமாணமாக உரைநடையில் கவிதைச் செறிவை ஏற்ற முனைந்தார். அந்தச் சோதனை முயற்சியே காட்சி, சக்தி, காற்று, கடல் என்ற கவிதைகளாகப் பிறந்தது. இன்றைய புதுக்கவிதையின் முதல் விதைகள் என இக்கவிதைகளைக் கூறலாம்.

அவருக்கு இவ்வாறு எழுதத் தூண்டுதல் தந்தது வேதரிஷிகளின் கவிதைகளா? வால்ட் விட்மனின் கவிதைகளா? என்ற விவாதம் முடிவின்றித் தொடர்கிறது. இரண்டையும் அவர் அறிந்திருந்தார். இரண்டின் தாக்கமும் இருக்க வாய்ப்பு உண்டு.

வசன கவிதைப் பகுதிகளான இக்கவிதைகளில் அறிவியலும், தத்துவமும், வாழ்வியலும் ஒன்றிக் கரைந்து போயிருக்கின்றன.

'மண்ணிலே வேலி போடலாம்
வானத்திலே வேலி போடலாமா?
என்றான் இராமகிருஷ்ண முனி
ஜடத்தைக் கட்டலாம். சக்தியைக் கட்டலாமா?
உடலைக் கட்டலாம். உயிரைக் கட்டலாமா?
உயிரைக் கட்டு. உள்ளத்தைக் கட்டலாம்
என்னிடத்தே சக்தி எனதுயிரினும் உள்ளத்திலும்
நிற்கின்றாள்
சக்திக்கு அனந்தமான கோயில்கள் வேண்டும்
தொடக்கமும் முடிவுமில்லாத காலத்திலே
நிமிஷந் தோறும் அவளுக்குப் புதிய கோயில்கள் வேண்டும்
இந்த அநந்தமான கோயில்களிலே
ஒன்றுக்கு 'நான்' என்று பெயர்
இதனை ஓயாமல் புதுப்பித்துக் கொண்டிருந்தால்
சக்தி இதில் இருப்பாள்'

இந்த வசன கவிதையை மீண்டும் மீண்டும் படித்தால், அதனுள் தத்துவம், அறிவியல், தர்க்கம் ஆகியன ஒவ்வொன்றும் இதழ் விரிக்கக் காணலாம். ஐன்ஸ்டீனைக் கூடப் பார்க்க முடியலாம்.

பாரதியார் இந்தப் புதுநெறியில் தமிழ்க் கவிதையைத் திசை திருப்பி விடுகிறார். அப்படித்தான் ந. பிச்சமூர்த்தியும், வல்லிக்கண்ணனும் சொல்லி இருக்கிறார்கள்.

இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிதையின் மூலவர் பாரதியார். பாதை சமைத்ததும் அவரே, முதல் பயணியாக நடந்தவரும் அவரே. வருங்காலத்தைப் பாரதியுகமாக வடிவமைத்தவரும் அவரே.

தமிழ்ச் சமுதாயம் மடி சுரந்த தாய்ப்பால் மகாகவி பாரதியார் என்று ஒற்றை வரியில் உரைத்து விடலாம்.

# 3. பாரதிக்குப் பின் மரபுக் கவிதை

மகாகவி ஒருவரின் தோற்றம் ஒரு மொழியையும், இலக்கியத்தையும் அளந்தறிய முடியாத செழுமைகளுக்கு அழைத்துச் சென்று விடுகிறது. கம்பனுக்குப் பிறகு தமிழ்க்கவிதை பெற்ற மாறுதல்களையும், வளங்களையும் போலப் பாரதியாரின் வருகையும் புதுமைகளைத் தமிழுக்குக் கொண்டுவந்து சேர்த்தது.

எளிமை, புதுச்சொல் புனைவு, புதிய பொருண்மை, அறிவியல் பார்வை, வடிவமாற்றம், பரிசோதனை முயற்சி என மொழி புதிய அழகுகளையும், ஆற்றல்களையும் பெற்றது.

**'தேயமீது எவரோ சொலும் சொல்லினைச்**
**செம்மை என்று மனத்திடைக் கொள்வதாம்**
**தீய பக்தி இயற்கையும் வாய்ந்திலேன்'**

என்ற வரிகளில் பாரதியாரின் அறிவியல் பார்வை துலங்குவதாக அறிஞர் வா.செ. குழந்தைசாமி கண்டறிந்துரைப்பார்.

இத்தகு சாதனைகளின் வீச்சு புதிய அதிர்வுகளைத் தமிழ்க் கவிதைக் களத்தில் உருவாக்கிற்று.

பாரதியாருக்குப் பின்வந்த கவிஞர்களிடம் இந்த அதிர்வுகளின் தாக்கம் பெருமளவுக்குக் காணப்பட்டது. பாரதியாரின் புரட்சிச் சிந்தனைகளும், சீர்திருத்த வீச்சும் பாரதிதாசனாகவும், அவருடைய பாப்பாப் பாட்டும், முரசுப் பாட்டும் குழந்தைக் கவிஞர் தேசிக விநாயகம் பிள்ளையாகவும், அவருடைய தேசிய உணர்வு நாமக்கல் கவிஞராகவும் வடிவெடுத்தன என்று திறனாய்வாளர் குறித்திருக்கிறார்கள்.

ஆயினும் பாரதியாரின் ஆற்றலுக்குச் சமமாகவே கருதத் தக்க கவிஞர் பாரதிதாசன் என்ற கருத்தும் தமிழ் இலக்கியக் களத்தில் உண்டு.

## பாரதிதாசன் (1891 – 1964)

பாரதியாருக்குப் பிறகு இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிதையை ஆளுமை செய்த பேராற்றல் பாரதிதாசன்.

பாரதியார் நமக்குக் கொடுத்துவிட்டுப்போன செல்வங்கள் குயில்பாட்டு, கண்ணன் பாட்டு, பாஞ்சாலி சபதம், கனக சுப்புரத்தினம் என்கிற பாரதிதாசன் என்று புதுமைப்பித்தன் பட்டியலிடுவார்.

1908 முதல் 1918 வரை புதுவையில் அரசியல் சூழலால் ஒதுங்கிப் பாரதியார் வாழ நேரிட்ட காலத்தில் கனக சுப்புரத்தினம் (பாரதிதாசன்) அவரோடு நெருங்கிப் பழகினார். அதற்கு முன்னரே பாரதியாரின் சுதேச கீதங்களை அவர் அறிந்திருந்தார். பாடல் புனையவும் ஆற்றல் பெற்றிருந்தார் பாரதிதாசன்.

பாரதியாரோடு சந்திப்பு ஏற்பட்டு, அவர் கவிதைகளில் தோய்ந்த பிறகு பாரதிதாசனின் கவிதைகளில் பெரும்மாறுதல் ஏற்பட்டது. 1911 முதல் 1921 வரை இருவர் தொடர்பும் நீடித்தது என்பார் ஆய்வாளர் இரா. இளவரசு. (இந்திய விடுதலை இயக்கத்தில் பாரதிதாசன், ப.16, 1990)

சுதேசமித்திரனில் வெளிவந்த 'தராசு' கட்டுரையில் 'எங்கெங்குக் காணினும் சக்தியடா' என்ற கவிதையுடன் வந்த பாரதிதாசனை 'எழுக நீ புலவன்' என்று பாரதியார் வாழ்த்திய செய்தி எடுத்துரைக்கப்பட்டுள்ளது. இந்தக் கவிதை சுதேசமித்திரனில் 'ஸ்ரீ சுப்பிரமணிய பாரதியின் கவிதா மண்டலத்தைச் சேர்ந்த கனக சுப்புரத்தினம் எழுதியது' என வெளியிடப்பட்டது.

> 'கவிதை படைக்கும் ஆற்றல் பெற்றிருந்த பாவலரான சுப்பு ரத்தினத்தைப் பாவேந்தராகவும் புரட்சிக் கவிஞராகவும் முன் னேற்றுவதற்குக் காரணமானவர் பாரதியாரே ஆவார்'

என்று பாரதிதாசன் ஆய்வாளர் ச.சு. இளங்கோ குறிப்பிடுவார். (பாரதிதாசன் பார்வையில் பாரதி, ப.22, 1982)

இதனைப் பாரதிதாசனும் கட்டுரைகளிலும், கவிதையிலும் உறுதி செய்திருக்கின்றார். 'கவிஞரும் காதலும்' என்ற நூலுக்கு எழுதிய கவிதை முன்னுரையில் கூறுகின்றார்:

'பாடலில் பழமுறை பழநடை என்பதோர்
காடு முழுவதும் கண்டபின் கடைசி யாய்ச்
சுப்பிர மணிய பாரதி தோன்றியென்
பாட்டுக்குப் புதுமுறை புதுநடை காட்டினார்'

இந்த உண்மையைப் பல கட்டுரைகளிலும் தெளிவுபடுத்தி யிருக்கிறார் பாரதிதாசன். நாரண துரைக்கண்ணன் வெளியிட்ட கவிஞர் மலரில் பின்வருமாறு எழுதியுள்ளார்.

> 'விபூதி நாமங்களைப் போட்டுக் கொண்டு பஜனை மடங்களில் பாடியும் ஆடியும் கேவலமாகக் காலம் போக்கிக் கொண்டிருந்த என்னை இன்றுள்ள நிலைக்குக் கொண்டு வந்தவர் பாரதியார் தான்' (ச.சு. இளங்கோ, பாரதிதாசன் பார்வையில் பாரதி, ப.49)

இந்தத் தாக்கம் தான் சுப்பிரமணியர் துதியமுது பாடிக்கொண்டிருந்த சுப்புரத்தினத்தைச் சுதேசியம் பாடவும், சமுதாய மாற்றங்களுக்கு இழுத்துவந்து பாரதிதாசனாய் உருவாக்கவும் காரணமாயிற்று.

இந்திய விடுதலை இயக்கப் பாடல்களை 'நான் ஓர் இந்தியன்' என்ற அகம்பாவத்தோடு பாடத் தொடங்கினார். மகாத்மா காந்தி, லாலா லஜபதிராய், திலகர், அரவிந்தர் ஆகிய தேசியத் தலைவர்களைக் குறித்தும், கதர் இராட்டினம் குறித்தும், பாரத நாடு குறித்தும் உணர்ச்சி பொங்கப் பாடியுள்ளார் பாரதிதாசன்.

'அந்நியர் நூலைத் தொடோம் என்ற சேதி
அறைந்திட்டா புவி முற்றும் – எங்கள்
ஆயிரம் கோடி தடக்கையும் இராட்டினம்
சுற்றும் சுற்றும் சுற்றும்

கன்னலடா எங்கள் காந்தி யடிகள் சொல்
கழறுகின்றேன் அதைக் கேளே – நீவிர்
கதரணிவீர் உங்கள் பகைவரின் வேரங்குத்
தூளே தூளே தூளே'

இவ்வாறு தேசிய இயக்கக் கவிதைகள் வடித்தது பாரதி தாசனின் இலக்கிய வாழ்வில் ஒரு பகுதி என்பதை மறக்க இயலாது.

ஏறத்தாழ 1926, 1927-ஆம் ஆண்டுகள் வாக்கில் சுயமரியாதை இயக்கம் உருவாகிறது. அப்போது தேசிய இயக்கத்திலிருந்து பாரதிதாசனின் ஈர்ப்பு சுயமரியாதை இயக்கம் நோக்கித் திரும்புகிறது.

1929-இல் பாரதிதாசன் குடியரசு இதழில் எழுதிய 'நாளுக்கு நாணம்' கவிதையிலிருந்து தான் மத எதிர்ப்பு, கடவுள் மறுப்பு, இந்தி எதிர்ப்பு, தொழிலாளர் சார்பான பொதுவுடைமை ஈடுபாடு ஆகிய கோட்பாடுகள் பாரதிதாசனிடம் துளிர்த்துத் தழைக்கின்றன.

**'சாதி சமயம் சாத்திரப் புராணம்**
**மனிதர் மனிதரைச் சாமியாய் வணங்கல்**
**ஆனவை பலவும் சமூகத்தை அழுத்தி**
**அழுத்தி வருத்த'**

இழி நிலையில் வாழும் சமூகத்தைச் சித்திரிக்கிறது அக் கவிதை. 'ஆத்திகமென்னும் நாய்' என்று இகழவும், 1933-இல் நாத்திகர் மாநாட்டில் நான் ஒரு நிரந்தரமான நாத்திகன் என்று கையெழுத்திடவும் முற்படுகின்றார். தொடர்ந்து திராவிடம், திராவிடர் என்ற கற்பனாவாத விடுதலைக்காகத் தம் கவிதையாற்றலைச் செலவிடுகின்றார். விழலுக்கு இறைத்த நீராகத் 'திராவிட நாட்டு'ப் பாடல்கள் வீணாகிப் போயின. நிழற் போருக்குக் கத்தி சமைக்கிற முயற்சியாக - பெற முடியாத விடுதலைக்குக் கொட்டுகிற பேரிகையாக இப்பாடல்களில் பல அமைந்துவிட்டன.

ஆனால் தமிழ்மொழி பற்றிய பெருமிதமும், தமிழ்நாடு, தமிழ் இசை என்ற வீறுணர்வும் பாரதியார் கவிதைகளையும் தாண்டிப் பெருக்கெடுத்துப் பாய்ந்தன.

**'திங்களொடும் செழும்பரிதி தன்னோடும்**
**விண்ணோடும் உடுக்களோடும்**
**மங்குல் கடல் இவற்றோடும் பிறந்ததமிழ்**
**உடன் பிறந்தோம் நாங்கள்'**

என்று உணர்ச்சிப் பிரளயமாய்ப் பாடிய கவிதைகள் தமிழனுக்கு முதன்முறையாக அவனையே அடையாளம் காட்டின.

'தமிழுக்கும் அமுதென்று பேர் – அந்தத்
தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்'

என்றும்,

'தனிமைச் சுவையுள்ள சொல்லை – எங்கள்
தமிழினும் வேறெங்கும் யாம் கண்ட தில்லை'

என்றும் பொங்கிய அமுதக் கவிதைகளால் முன்னெப்போதும் இராத தமிழ் உணர்வைப் பாரதிதாசன் வெள்ளமெனப் பெருக வைத்தார்.

இதனைப் பாரதிதாசனின் நிகரற்ற சாதனையாக மதிப்பிட வேண்டும்.

1964-இல் பாரதிதாசன் மறைவு நிகழ்ந்தது. பாரதியாருக்குப் பிறகு 43 ஆண்டுகள் வாழ்ந்து பல படைப்புகளைத் தரும் வாய்ப்புப் பெற்றார். இன்று பாரதிதாசன் மறைவுக்குப் பின் நாற்பத்தைந்தாண்டுகள் கடந்து விட்டன. பாரதிதாசனின் தனித் தன்மைகளைக் காணவும், மதிப்பிடவும் இது பொருத்தமான காலம் என்று கருதலாம்.

பாரதிதாசனாலேயே மறுத்துரைக்கப்பட்ட பழம் பண்டிதப் பாடல்கள் (சுப்பிரமணியர் துதியமுது) அவர் புகழுக்கு ஏற்றவை அல்ல. அவருடைய சுதேசியப் பாடல்கள் பாரதியாரைத் தாண்டிய சிறப்புடையன என மதிப்பிட முடியாது. திராவிட இயக்கத்துக்கென்றே வடித்த கவிதைகள் வரலாற்றுப் பதிவாகவே கருதத் தக்கவை.

பாரதிதாசன் கவிதைகள் தொகுதி 1, 2, எதிர்பாராத முத்தம், பாண்டியன் பரிசு, அழகின் சிரிப்பு, குடும்ப விளக்கு, இசையமுது தொகுதிகள், காதல் நினைவுகள், பிசிராந்தையார், தமிழியக்கம், சில தனிக்கவிதைகள் - என்ற தோராயமான பட்டியலுக்குள் பாரதிதாசனை ஒரு மகாகவியாகக் காணுதல் நிச்சயமாக முடியும். இத் தொகுதிகளில் தான் அவருடைய தனிச் சிறப்புகளையும் அடையாளப்படுத்த முடியும்.

இலக்கிய வகைமைகளின் பன்மைத் தன்மை, பாடுபொருளில் மாற்றம், கவிதை மாந்தரின் தேர்வு, புதுமைப்

படைப்பு, கவித்துவச் செழுமை எனப் பாரதிதாசனின் தனிச் சிறப்புகளைத் தொகுத்துக் கொள்ளலாம். (பார்க்க : சிற்பி, கவிதை நேரங்கள், 2003)

**வகைமைப் பன்மை**

தல புராணச் செல்வாக்கைத் தாண்டிப் பத்தொன்பதாம் நூற்றாண்டில் நந்தனார் சரித்திரக் கீர்த்தனை நாடகம், மனோன்மணியம் காவிய நாடகம், நாவல், பெண்விடுதலை நோக்கில் பெண்மதி மாலை ஆகிய புதிய வடிவங்கள் பிறந்தன. அதன் வளமான தொடர்ச்சியாக விளைந்த பாரதியார் தனிக் கவிதைகள், கவிதைச் சிறு நாடகம், சிறு காப்பியம், தன் வரலாற்றுக் கவிதை, கவிதைக் கடிதம், வசன கவிதை நெடுங்கவிதை எனப் பல வகைமைகளைப் புதிதாய்க் கவிதை இலக்கியத்துக்குத் தந்தார்.

ஆனால் பாரதிதர்சன் கவிதைத் துறையில் அறிமுகம் செய்த வகைமைகள் வியப்பூட்டுவன. நெடுங்கவிதை, கடிதக் கவிதை, கவிதை நாடகம், தன் வரலாற்றுக் கவிதை, குறுங்காவியம், வசன கவிதை, இசைப்பாடல்கள் எனத் தானும் வகைமைகளை வளமையாகத் தந்திருக்கிறார்.

'சஞ்சீவி பருவதத்தின் சாரல்' - போன்ற பல நெடுங்கவிதைகளைப் படைத்திருக்கிறார். 'காதல் கடிதங்கள்' - கடிதக் கவிதைகளாக மலர்ந்திருக்கின்றன. 'வீரத்தாய்', 'போர் மறவன்', 'சத்தி முற்றப் புலவர்' முதலிய கவிதை நாடகங்களும் பல. பேராசிரியர் ந. இராமநாதனின் 'கவிதையும் காதலும்' நூலுக்கு ஒரு தன் வரலாற்றுக் கவிதையை முன்னுரையாக அளித்துள்ளார் பாரதிதாசன். 'புரட்சிக்கவி', 'எதிர்பாராத முத்தம்', 'பாண்டியன் பரிசு', 'தமிழச்சியின் கத்தி', எனக் குறுங்காப்பியங்கள் பலப்பல படைத்துள்ளார். பாரதிதாசன் கவிதைகள் இரண்டாம் பாகத்தில் உள்ள 'காதல் வாழ்வு' வசன கவிதையாகக் கருதத் தக்கது.

'இசையமுது தொகுதிகளில் நெஞ்சில் இனிக்கும் இசைப் பாடல்கள் நிறைந்து கிடக்கின்றன.

இவற்றுள் பாரதிதாசனின் தனித்தன்மை ஓங்கி நிற்கிறதென்றாலும், குறிப்பிட்டுச் சொல்ல வேண்டியவை

'அமைதி' நாடகமும், அவருடைய குறுங்காவியங்களும் ஆகும். கவிதை நாடகங்களில் பாரதிதாசனின் தனித்திறம் மேலோங்கித் திகழ்கிறதெனினும், பேச்சுக்கு இடமே இல்லாமல் விழி நுகர் நாடகமாக அமைகிறது 'அமைதி'. பிற்காலத்தில் வளர்ந்த 'மைமிங்' நாடக வகைக்கு முன்னோடியாக அமையும் சிறப்பு இந்நாடகத்துக்கு உண்டு.

இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிஞர்களில் யாரும் பாரதிதாசனைப் போல் இத்துணைக் குறுங்காவியங்களைப் படைக்கவில்லை. பாரதியார் 'பாஞ்சாலி சபதம்' என்ற குறுங்காப்பியம் படைத்தார். எனினும் பாரதிதாசன் பௌராணிக மரபிலிருந்து விலகித் தம் சொந்தக் கற்பனைகளிலிருந்தும், சிறுபான்மை வரலாற்றுப் பின்னணிகளிலிருந்தும் குறுங்காவியம் படைத்திருக்கிறார். நாமக்கல் கவிஞரின் 'அவனும் அவளும்', தேசிக விநாயகம் பிள்ளையின் 'மீராபாய் கதை' அல்லது பின்னர் எழுந்த குறுங்காவியங்கள் எவையும் தரத்தால் பாரதிதாசனைத் தாண்டியதாகக் கூறமுடியாது.

**கவிதை மாந்தர்**

கவிதைகளிலும், காவியங்களிலும் பாரதிதாசன் படைத்துள்ள பாத்திரங்கள் அதுவரை தமிழ்க் கவிதை உலகம் சந்தித்திராத மாந்தர்கள் என்பது ஒரு பெரும் புதுமையாகும்.

மன்னர்களும் மகாராணிகளும் பாரதிதாசனின் பாத்திரங்களாக அமைந்ததுண்டு. ஆயினும் நடுத்தர மக்களையும், கீழ்த்தட்டு மக்களையும் கவிதை நாயகர்களாக ஆக்கிய பெருமை பாரதிதாசனுக்கு உண்டு. நாட்டுப்புறக் கதைப்பாடல்களில் முத்துப்பட்டனும், மதுரைவீரனும் போன்ற வேறுபட்ட குலமாந்தர் இடம் பெற்றிருந்தாலும் இலக்கியப் படைப்புகளில் அவர்களை நிகர்த்தோர் ஏற்கப்படவில்லை. கோபால கிருஷ்ண பாரதியார் தான் நந்தனை நவீன இலக்கிய வாசலில் நிறுத்தினார்.

ஆனால் தமிழ்க் கவிதையின் மதிப்பிற்கும் மேன்மைக்குமுரிய இடத்தில் குப்பனும், வஞ்சியும், சுந்தரனும், சொர்ணமும், கஜராஜும், சரோஜாவும் முதன்முதலாக

இடம்பிடித்தனர். இவர்கள் இடம்பெற்றது கூட வியப்பல்ல. 'இசையமுது' பாடல்களில் வண்டி ஓட்டுபவன், ஆலைத் தொழிலாளி, பூக்காரி, விறகு வெட்டி, கூடைமுறம் கட்டுவோர், களையெடுக்கும் பெண், நெசவுத்தொழிலாளி, மாடு மேய்ப்பவன் ஆகிய அடித்தட்டு மக்களை அறிமுகம் செய்தபோது மெய்யாகவே தமிழ்க் கவிதையில் புரட்சி பூத்தது. 'புரட்சிக்கவி', 'பாண்டியன் பரிசு', காவியங்களில் உயர்குல நாயகிகள் எளிய குடியைச் சார்ந்த தலைவர்களைக் காதலித்து மணக்கிறார்கள்.

தமிழ்க் கவிதையின் மதிப்புக்குரிய பீடங்களைச் சாதாரண மனிதர்களின் இருக்கைகளாக மாற்றியவர் பாரதிதாசன்.

## பாடுபொருள் மாற்றம்

கடவுள், போர், காமம் என்ற பாடுபொருள்களிலிருந்து நாடு, மொழி, மக்கள், சுதந்தரம், பெண்விடுதலை என்ற திசைக்கு மடைமாற்றம் செய்தவர் பாரதியார்.

அந்த வழியில் மேலும் புதிய பாடுபொருள்களைக் கவிதைக்குள் கொண்டு வந்தவர் பாரதிதாசன்.

முதன் முதலாகத் தமிழ்க் கவிதையைப் பகுத்தறிவுச் சிந்தனைகளுக்குக் களஞ்சியமாக்கியவர் பாரதிதாசன். பெரியார் பாசறையின் பெருமுரசாக அவர் ஒலிக்கத் தொடங்கிய காலம் முதல், 'பகுத்தறிவு மன்றத்தில் உலகம் என்ற பழைய முதலாளியினை' நிறுத்தி விசாரணை செய்தார். அவருடைய பகுத்தறிவுக் கண்ணோட்டத்தில் கடவுள் மறுப்பும், சமய வெறுப்பும் முக்கிய இடம் பெற்றன.

'நடவு செய்த தோழர் கூலி
நாலணாவை ஏற்பதும்
உடலுழைப் பிலாத செல்வர்
உலகை ஆண்டு வருதலும்
கடவுளாணை என்று சொல்லும்
கயவர் கூட்ட மீதிலே
கடவுள் என்ற கட்டறுத்துத்
தொழிலாளரை ஏவுவோம்'

என்று கர்ச்சனை புரிந்தது அவர் கவிதை. 'மத ஓடத்தில் ஏறிய மாந்தரே, பலி பீடத்திலே சாய்ந்தீரே' என்று எச்சரித்தது அவர் கவிதை.

பகுத்தறிவுச் சிந்தனையின் மற்றொரு பக்கமாகச் சாதிய எதிர்ப்பும் அழிப்பும் மையம் கொண்டன.

**'சாதி மத பேதங்கள் மூடவழக்கங்கள்**
**தாங்கி நடைபெற்றுவரும் சண்டையுலகிதனை**
**ஊதையினில் துரும்புபோல் அலைக்கழிப்போம், பின்னர்**
**ஒழித்திடுவோம், புதியதோர் உலகம் செய்வோம்'**

மின்சாரத் தாக்குதலாய்க் கவிதைகள் சுரீலென்று பாய்ந்தன. மூடப்பழக்க வழக்கங்கள் முன்பும் சித்தர்கள் போன்றோரால் எதிர்க்கப்பட்டன. எனினும் குன்றுகளைப் பெயர்த்து வீசும் கொடும்புயல் போல் ஆத்திரம் குமுறியது பாரதிதாசன் பாக்களில்தான்.

**'மூடத்தனத்தை முடுக்கும் மதத்தை நிர்**
**மூலப் படுத்தக் கை ஓங்குவீர்'**

என்று வெப்பம் கனன்றது அவர் கவிதை.

பெண் கல்வி, பெண் உரிமை குறித்த முற்போக்குச் சிந்தனைகளை வேதநாயகர், சுந்தரம் பிள்ளை, பாரதியார் ஆகியோர் முன்னமே அடியெடுத்துக் கொடுத்திருந்தனர். அவர்கள் தொடாத பெண்களின் சிக்கல்களைப் பாரதிதாசன் புலப்படுத்தினார். கைம்மைக் கொடுமை, குழந்தை மணம், காதலைத் தீய்த்த கட்டுப்பாடுகளை மூர்க்கமாக எதிர்த்தது பாரதிதாசன் கவிதை. விதவையின் காதலை ஆதரித்து,

**'கோரிக்கை யற்றுக் கிடக்குதண்ணே – இங்கு**
**வேரில் பழுத்த பலா**
**கொடியதென் றெண்ணிடப் பட்ட தண்ணே – குளிர்**
**வடிகின்ற வட்டநிலா'**

என்று துயர் தோய எழுதினார்.

பாரதிதாசனின் பெண் பாத்திரங்கள் துணிவும், தீரமும் உடையவர்கள். 'புரட்சிக் கவியில் வரும் அமுதவல்லி,

'தமிழச்சியின் கத்தி'யில் வரும் சுப்பம்மா, 'வீரத்தாய்' புலப்படுத்தும் விஜயராணி அனைவரும் துணிவின் சின்னங்கள். 'சஞ்சீவி பருவதத்தின் சார'லின் நாயகி வஞ்சி பகுத்தறிவும் மிக்கவள்.

**'மண்ணுக்கும் கேடாய் மதித்தீரோ பெண்ணினத்தை'**

என்று சீறுகிறாள் அவள்.

பாரதிதாசனின் பாடுபொருள் புதுமைக்கு மற்றோர் அடையாளம். பொதுவுடைமை கமழும் கவிதைகள். பெரியாரின் சோவியத் பயணத்துக்குப் பின், அவர் பொதுவுடைமைச் சிந்தனைகளில் மிகுந்த ஈடுபாடு காட்டினார். அவர் காட்டிய வழியில் பாரதிதாசன் கவிதைகள் கூர்மை கொண்டன. 'வலியோர் சிலர் எளியோர்தமை வதையே புரிகுவதா?' என வினாக்கள் அவர் எழுத்துக்களில் வெடித்தன.

**'புவியை நடத்து – பொதுவில் நடத்து'**

**'பொதுவுடைமைக் கொள்கை திசையெட்டும் சேர்ப்போம்**
**புனிதமோ டதை எங்கள் உயிரென்று காப்போம்'**

**'சமமே பொருள் ஜனநாயகம்**
**எனவே முரசறைவாய்'**

**'ஒரு பொருள் தனி எனும்**
**மனிதரைச் சிரிப்போம்'**

இவ்வாறு பொதுவுடைமைச் சிந்தனைகளின் போர்ப் பாசறை ஆயிற்று பாரதிதாசன் கவிதைகள்.

சமத்துவ சமுதாயம் காண உழைப்பாளிகள் பக்கம் தோளோடு தோள் நிற்கப் பாரதிதாசன் விழைந்தார்.

**'ஓடப்ப ராயிருக்கும் ஏழையப்பர்**
**உதையப்ப ராகிவிட்டால் ஓர்நொடிக்குள்**
**ஓடப்பர் உயரப்பர் எல்லாம் மாறி**
**ஒப்பப்பர் ஆய்விடுவார் உணரப்பா நீ'**

என்று முழக்கமிட்டு ஊர்வலம் வந்தது அவர் கவிதை. காணும் உலகின் வடிவும் வனப்பும் தொழிலாளியின் உதிரத்தால் விளைந்தது என்று உணர்த்தினார்.

'சித்திரச் சோலைகளே உமை நன்கு
திருத்த இப்பாரினிலே – முன்னம்
எத்தனை தோழர்கள் இரத்தம் சொரிந்தன
ரோ உங்கள் வேரினிலே'

என்று தொழிலாளியின் வியர்வையை, கண்ணீரை, இரத்தத்தை உழைப்பின் வெளிப்பாடாக வியந்து எழுதினார்.

பாரதிதாசனின் காவியங்கள் எல்லாம் பெரும்பாலும், 'எல்லார்க்கும் தேசம் எல்லார்க்கும் உடைமை எலாம்' என்ற முத்திரையோடு நிறைவுற்றன.

'புரட்சிக்கவி'யில் உதாரன் செய்யும் பொழிவில், கரை தத்தி வழியும் உழைப்பின் பெருமையைக் காணலாம்.

'சிற்றூரும் வரப்பெடுத்த வயலும் ஆறு
தேக்கிய நல் வாய்க்காலும் வகைப்படுத்தி
நெற்சேர உழுதுழுது பயன் விளைக்கும்
நிறையுழைப்புத் தோள்களெலாம் எவரின்
தோள்கள்?

என அடுக்கடுக்காக எழும் வினாக்கள் புரட்சியின் மையமாகின்றன.

பாடுபொருளில் மற்றொரு புதுமையையும் பாரதிதாசனிடம் காண்கிறோம். ஏற்கெனவே குறித்தது போன்று தமிழ் மொழியின் வளர்ச்சிக்காக அலைபாயும் அவர் கவிதைப் பரப்பு அது.

'தமிழ்விடு தூது' தொடங்கித் திருவிளையாடல், குமரகுருபரர் பிரபந்தங்கள், சுந்தரம் பிள்ளை, பாரதியார் வழியில் பெருகிய மொழிப் பற்றின் வெளிப்பாடுகள் பல உண்டு. இவர்களில் பாரதியார் மட்டுமே தமிழின் இனிமை, பழமைகளோடு நில்லாது புதுமைக்காகவும் குரல் கொடுத்தவர். ஆனால் பாரதிதாசனுக்கோ தமிழே உயிர், உடல், உறவு, உணவு, உழைப்பு, உயர்வு ஊட்டி வளர்க்கும் தாய், ஓங்கி எரியும் தீ.

அப்படி நேசிக்கப்படும் தமிழ் - ஆட்சியில், ஆவணத்தில், காட்சியில், கல்வியில் இல்லாத நிலை கண்டு வெதும்புகிறார்.

'எங்கள் தமிழ் உயர்வென்று சொல்லிச் சொல்லி
தலைமுறைகள் பல கழித்தோம் குறைகளைந்தோ மில்லை'

என்று சுயவிமர்சனமும் செய்கிறார். அனைத்துத் துறைகளிலும் தமிழை வளர்க்கும் அன்பான வேண்டுகோள்களின் அருமையான தொகுப்பே 'தமிழியக்கம்'.

'மணக்க வரும் தென்றலிலா குளிரா இல்லை
தோப்பில் நிழலா இல்லை
தணிப்பரிதாம் துன்பம் இது –
தமிழ் நாட்டின் தமிழ்த் தெருவில்
தமிழ்தான் இல்லை'

என்ற அவலம் 'தமிழியக்கம்' கூர்மையுற வேண்டுகிறது.

பாரதிதாசனின் மொழியுணர்வு வெறும் உணர்ச்சிக் கொந்தளிப்பு அல்ல. மொழி சார்ந்த வாழ்வும், பண்பாடும், அம்மொழியாளர் எதிர்காலமும் சிறக்க வேண்டுமே எனும் அக்கறைதான் பாரதிதாசனின் மாளாத ஏக்கம், தீராத தமிழியக்கம்.

## படைப்புப் புதுமை

பிற கவிஞர்களிடம் காண முடியாத சில சிறப்புக்களையே பாரதிதாசனின் தனிப்பெரும் கொடையாகக் காண்கிறோம். அத்தகைய கொடைகளே புதுமைப் படைப்புகள்.

'அமைதி' - நாடகத்தின் புதுமை முன்னர்க் கூறப்பட்டது.

'குடும்ப விளக்கு' - பொதுவாகக் கவிதையில் வெற்றி காண முடியுமா என்று ஐயப்படுகிற பொருளை - கற்பனைக்கு அதிகம் வாய்ப்புத் தராத நிகழ்வுகளை - மையமாகக் கொண்டு கவிஞரால் படைக்கப்பட்ட புதுமையான நூல். கணவன், மனைவி பிள்ளைகள் ஆகிய குடும்ப உறுப்பினர்களைக் கொண்டு வாழ்வியல் மணக்கும் சிந்தனைகளை ஊன்றி அமைத்த குடும்பக் காவியம் இது. பழந்தமிழ் விழுமியங்களைப் பாரதிதாசன் இங்கு முன் நிறுத்துகிறார்.

எனினும் இதன் கடைசிப் பகுதியான 'முதியோர் காதல்' மனித வாழ்வின் வணக்கத்துக்குரிய ஒரு வாழ்க்கைப் பகுதியை

நெகிழ்ச்சியுடன் சித்திரிக்கிறது. தமிழ்க் கவிதை காணாத ஒரு உலகம் இங்கே விரிகிறது.

'புதுமலர் அல்ல காய்ந்த
புற்கட்டே அவள் உடம்பு
சதிராடும் நடையாள் அல்லள்
தள்ளாடி விழும் மூதாட்டி
மதியல்ல முகம் அவட்கு
வறள் நிலம்! குழிகள் கண்கள்
எது எனக் கின்பம் நல்கும்
இருக்கின்றாள் என்ப தொன்றே'

என்று முதியவன் நினைப்பதும், காதும் கண்ணும் காலும் ஓய்ந்துவிட்டாலும்,

'மறவனைச் சுமக்கும் என்றன்
மனம் மட்டும் ஓய்தல் இல்லை'

என்று முதியவள் நினைப்பதும் அபூர்வமான சித்திரங்கள்!

பாரதிதாசனின் மற்றொரு புதுமைப் படைப்பு 'அழகின் சிரிப்பு'. 'எங்கெங்குக் காணினும் சக்தியடா' என்ற கவிதையின் மூலம் அரங்குக்கு வந்த கவிஞர் 'நகையோடு நோக்கடா எங்கும் உள்ளாள், நல்லழகு வசப்பட்டால் துன்பம் இல்லை' என்று இயற்கையை உவந்து உவந்து நேசிக்கும் கவிதைக் களஞ்சியம் அழகின் சிரிப்பு.

முழுவதுமாக மலை, கடல், ஆறு, தென்றல், குன்றம், காடு என்று இயற்கை எழிலில் கரைந்து உருகும் அழகின் சிரிப்புக் கவிதைகள் மனிதனுக்கும் இயற்கைக்கும் இடையே மலர வேண்டிய நெருக்கத்தைக் கற்றுக் கொடுக்கின்றன. இயற்கை கலைகளின் தாய் என்பது புலப்படுத்தப்படுகிறது. கடல் என்ற வீணையில் காற்று மீட்டும் பாடலைக் காட்டி 'வண்கடல் பண் பாடல் கேள்' என்று உணர்த்துகின்றார். இயற்கையே மொழியின் தாய் என்பதை எடுத்துக் காட்டுகின்றார்.

'புனல் சூழ்ந்து வடிந்து போன
நிலத்திலே புதிய நாளை

மனிதப் பைங்கூழ் முளைத்தே
வகுத்தது அந்த நாளை
இனிய நற்றமிழே! நீதான்
எழுப்பினை'

என்று கூறுவார். இயற்கையைப் பாடல்கள் போதிக்கும் ஆசிரியன் என்ற வேர்ட்ஸ் வொர்த்தின் தத்துவத்தை மெய்ப்பிப்பது போலப் புறாக்கள் மூலம், விண்மீன்கள் மூலம் அரிய வாழ்க்கை உண்மைகளைச் சுட்டிக் காட்டுவார்.

இயற்கையை அதன் எல்லா அழகுகளோடும், ஆற்றல்களோடும் குளிரக் குளிரத் தமிழில் சொல்லும் 'அழகின் சிரிப்பு' புதுமையில் புதுமையாகப் பொலிகிறது.

## கவித்துவ மொழி

பாரதிதாசனின் நடை, மொழி அழகுகளை ஆராய்ந்து பல நூல்கள் எழுதப்படவேண்டும். தேர்ந்த ஓவியக் கலைஞன் கையில் வண்ணத் தூரிகை இயங்குவது போல, பாரதிதாசனிடம் தகத்தகாயத் தமிழ் இழைந்து குழைகிறது.

ஒரு சில எடுத்துக் காட்டுக்கள் - அதுவும் பாரதிதாசன் கவிதைகள் இரண்டாம் தொகுதியிலிருந்து மட்டும் சுருக்கத்துக் காகப் பார்ப்போம். எந்தக் காட்சியையும் சித்திரப்படுத்தும் (Picturisation) மொழியாற்றல் அவரிடம் நிரம்ப உண்டு. வெற்றிலை போட்ட உதடு எப்படி இருக்கிறதாம்?

'மணி விளக்கெதிரில்
மாணிக்கத்தை வைத்தது போல் உதடு
சிவக்கச் சிவக்கத் தின்று கொண்டிருந்தான்'

சூரியன் மறைகின்ற காட்சியைக் கவிஞர் ஓவியமாக்கும் அழகைப் பாருங்கள்:

'மிக்க முரண் கொண்ட மாடு – தன்
மூக்குக் கயிற்றையும் மீறி
பக்கமிருந்திடும் சேற்றில் – ஓடிப்
பாய்ச்சிடப் பட்டதோர் வண்டிச்
சக்கரம் போலிருள் வானில் – முற்றும்
சாய்ந்தது சூரிய வட்டம்'

'Epigram' என்று ஆங்கில அறிஞர் குறிப்பதைப் போல் முத்திரை மொழிகள் பொழிவதில் வல்லவர் பாரதிதாசன்.

> **'வாழ்க்கை மலர் சொரிகின்ற இன்பத் தேனை**
> **மனிதனது தனிமையினால் அடைதல் இல்லை'**
>
> **'ஜாரின் கொடுமை தாங்கா ருசியம்**
> **ஏருற லெனினை என்றே தீரும்'**
>
> **'வள்ளுவனைப் பெற்றதால் பெற்றதே புகழ்**
> **வையகமே'**

உணர்ச்சிப் பாங்கைச் சிக்கனச் சொற்களில் உறைய வைக்கிற திறமும் பாரதிதாசனுக்குக் கை வந்த கலை. எதிர்பாராத விரைவுடன் செல்லும் பெண்ணின் நடையை,

> **'சின்ன இடுப்பு திடுக்கிட நடந்தே'**

எனக் குறிப்பார்.

ஒலி நயம்பட, ஓவியக் கலை நயம்பட வரையும் காட்சிகளுக்கும் பஞ்சம் இல்லை.

> **'கலகலெனெ நீருகுத்த கண்ணீரோடும்**
> **கண கணெனத் தணல் பொங்கும் நெஞ்சத்தோடும்**
> **விலகினாள், விலகினவே சிலம்பின் பாட்டும்'**

என்று ஒலி ஓவியம் தீட்டுவார்.

தமது எண் சீர், அறுசீர் விருத்தங்களைப் பேச்சு நடைக்கு மிக நெருக்கமாக்கியவர் பாரதிதாசன். பாரதியாரைக் குறித்து அவர் எழுதிய 'மகாகவி' இதற்கு எடுத்துக்காட்டு. பாரதியார் உலகக்கவி அல்ல என்னும் கருத்துக்கு மறுப்புரையாக எழுந்த பாடலாதலால் மறுத்துப் பேசும் பேச்சுப் பாணி துலங்குகின்றது.

> **'தராதலத்துப் பாஷைகளில் அண்ணல் தந்த**
> **தமிழ்ப் பாட்டை மொழி பெயர்த்தால் தெரியும் சேதி'**

என்று பேசும் அறைகூவல்,

> **'அய்யர் கவிதைக் கிழுக்கும் கற்பிக்கின்றார்**
> **அழகாக முடிச்சவிழ்த்தால் விடுவார் உண்டோ?**

என்று கேட்கும் அங்கதம் இவையெல்லாம் பேச்சுமொழிச் சந்தமாக ஒலிக்கின்றன.

அறிவின் ஒளி, புலமையின் செறிவு, கற்பனை மெருகு, உணர்வின் கூர்மை ஆகிய பண்புகள் அனைத்தும் ஒருங்கே நிரம்பியுள்ள காரணத்தால் பாரதிதாசனின் மொழி சூரியத்தகடு போல் சுடர் வீசுகின்றது. இலக்கண வரம்புகளுக்குள் நின்றபடி 'சொக்க வெள்ளிப் பாற்குடமாய்' 'அமுத ஊற்றாய்'ப் பாரதிதாசனின் கவிதை மொழி களி நடம் புரிகிறது.

காலத்தை வெல்கிறது.

இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிதையின் இரண்டாவது சிகரமாகப் பாரதிதாசன் நிலைபெறுகிறார்.

**தேசிகவிநாயகம் பிள்ளை (1876 – 1954)**

கவிமணி என்ற பட்டப் பெயராலும், தேவி என்ற சுருக்கப் பெயராலும் அறியப்படுபவர் தேசிக விநாயகம் பிள்ளை.

பாரதியாருக்கு ஆறு ஆண்டுகள் முந்திப் பிறந்து சுதந்தர இந்தியாவிலும் வாழ்ந்தவர்.

இவருடைய முக்கியமான நூல்கள்: மலரும் மாலையும், ஆசிய ஜோதி, நாஞ்சில் நாட்டு மருமக்கள் வழி மான்மியம், உமார்கய்யாம் (மொழிபெயர்ப்பு).

அமைதியும் மென்மையும் தவழும் கவிதைகள் தந்த தேசிக விநாயகம் பிள்ளை அவருடைய சிறுவர் இலக்கியத்துக்காக என்றும் நினைவுகூரப்படுவார். பாரதியாரின் பாப்பாப் பாட்டின் தொடர்ச்சி இவருடைய சிறுவர் பாடல்கள்.

'முல்லை நறு மலரோ
முருகவிழ்க்கும் தாமரையோ
மல்லிகைப் பூவோ
மருக்கொழுந்தோ சண்பகமோ'

என்று குழந்தையைக் கொஞ்சும் அழகு,

'அப்பா எழுந்திரையா
அரசே எழுந்திரையா

கொக் கொக்கோ என்று
கோழி அதோ கூவுது பார்'

என்று தட்டிக் கொடுத்துக் குழந்தையை எழுப்பும் தாய்மை, அழகான பச்சைக் கிளியை வெகு பக்குவமாய் அழைத்து,

'வட்ட மாயுன் கழுத்திலே
வான வில்லை ஆரமாய்
இட்ட மன்னர் யாரம்மா
யான் அறியக் கூறம்மா'

என்று நயமாகக் கேட்கும் நேர்த்தி, தாய்ப்பசுவிடம் துள்ளும் கன்றைப் பார்த்து,

'தோட்டத்தில் மேயுது வெள்ளைப்பசு – அங்கே
துள்ளிக் குதிக்குது கன்றுக்குட்டி
முத்தம் கொடுக்குது வெள்ளைப்பசு – மடி
முட்டிக் குடிக்குது கன்றுக் குட்டி'

என்று வருணிக்கும் குதூகலம், இவையெல்லாம் கவிமணி வழியாகத் தமிழ்க் குழந்தைகள் பெற்ற வரங்கள். பஞ்சினும் மெல்லிய குழந்தைகள் உதடுகளில் பாலினும் இனிதாய் மணக்கும் பாடல்கள் கவிமணியின் தனிப்பெருங் கொடை.

எனினும் முதிர்ந்த மனதுக்கும் பொருந்தும் சில கவிதைகளை அவர் படைத்திருக்கிறார். கவிதைக்கு இலக்கணம் கூறும்போது,

'கல்லின் கதைகள் எல்லாம் – இரு
காது குளிரக் கேட்பேன்
புல்லின் பேச்சும் அறிவேன் – அதைப்
புராணமாக விரிப்பேன்'

என்று கவியுளத்தைப் புலப்படுத்துவார். கவிமணியின் சிறந்த கவிதைகளில் ஒன்று 'கோயில் வழிபாடு'. கோவில், கோபுரம், சிற்பம், தூபம், தீபம் எல்லாம் கண்டும் இறைவனைக் காணவில்லை.

'கோயில் முழுதும் கண்டேன் – உயர்
கோபுரம் ஏறிக் கண்டேன்

தேவாதி தேவனை யான் – எங்கும்
தேடியும் கண்டிலனே'

என்று தொடங்கும் கவிதை அழகான ஒரு தத்துவத்தைச் சொல்லி நிறைவெய்தும்.

'உள்ளத்தில் உள்ளானடி – அது நீ
உணர வேண்டுமடி
உள்ளத்தில் காண்பாயெனில் – கோயில்
உள்ளேயும் காண்பாயடி'

கவிமணியின் இன்னொரு சிறந்த கவிதை பாரதியாரைக் குறித்து அவர் எழுதியது. பாரதிதாசனின் பாரதி பற்றிய கவிதைகளில் உள்ளத்தை ஈர்ப்பன பல உண்டு. அவற்றிற்கு அடுத்தாற்போல் கவிமணியின் கவிதையைத் தான் கூறமுடியும்.

'பாட்டுக் கொரு புலவன் பாரதி அடா – அவன்
பாட்டைப் பண்ணோடு ஒருவன் பாடினான் அடா
கேட்டுக் கிறுகிறுத்துப் போனேனே அடா – அந்தக்
கிறுக்கில் உளறுமொழி பொறுப்பாய் அடா
சொல்லுக்குச் சொல்லழகு ஏறுமே அடா – கவி
துள்ளும் மறியைப் போலே துள்ளுமே அடா
கல்லும் கனிந்து கனி ஆகுமே அடா – பசுங்
கன்றும் பால் உண்டிடாது கேட்குமே அடா'

இப்படியே பாரதியாரின் கவிதை அழகுகளைக் கை தட்டிக் கூவிக் காட்சிக்கு இக்கவிதை வைக்கும். எப்போதும் அம்மா, அய்யா என்று அழைத்துப் பாடும் கவிமணி பாரதியாரைப் பாடும்போது உணர்ச்சி ஏறி 'அடா' என்று பாடுவது நினைவில் கொள்ள வேண்டிய சிறப்பு.

உமார் கய்யாம் பாடல்களைப் பச்சைப் பசுந்தமிழில் மொழிபெயர்ப்பு என்பதை வாசகன் மறக்கும்படி வார்த்துத் தந்திருக்கிறார் கவிமணி. பிட்ஜிரால்டின் ஆங்கில மொழிபெயர்ப்பு 'The moving finger writes' என்று தொடங்கும் கவிமணியின் தமிழ் நதியாய்ப் பெருகுகிறது.

'எழுதிச் செல்லும் விதியின் கை
எழுதி எழுதி மேற்செல்லும்

**தொழுது போற்றி நின்றாலும்**
**சூழ்ச்சி பலவும் செய்தாலும்**
**அழுது கண்ணீர்விட்டாலும்**
**அபயம் அபயம் என்றாலும்**
**வழுவிப் பின்னால் ஏகியொரு**
**வார்த்தை மாற்றம் செய்திடுமோ?**

பாரசீகக் கவிஞன் பச்சைத் தமிழனாகி விடுகிற மாயம் கவிமணியின் எழுதுகோல் இயற்றும் அற்புதம்!

ஆசிய ஜோதி எட்வின் ஆர்னால்டின் 'The Light of Asia' நூலைத் தழுவியது. நேருக்கு நேர் மொழிபெயர்ப்பாகக் கருத முடியாது. அதனால் இன்னும் அதிக சுதந்தரம் கவிமணிக்கு வாய்க்கிறது. குழந்தையை இழந்த தாயின் கதறல் புத்தபெருமானின் சந்நிதியில் கண்ணீரால் வரைந்த ஓவியமாக அமைந்திருப்பதைப் பலரும் அறிவர்.

சாந்தியே வடிவான புத்தர் நகருக்குள் நுழைகிறார். 'முடமான இள மறியை முதுகில் ஏந்தி' வரும் கருணை வள்ளல் வருகிறார். நகரின் செயல்களெல்லாம் நின்று போகின்றன. அவரைக் காண ஊரே திரள்கிறது.

**'கன்னி ஒருமகள் மையெழுதி – இரு**
**கண்ணும் எழுதுமுன் ஓடி வந்தாள்'**

**'மாடும் அரிசியைத் தின்றதம்மா – அதை**
**மாற்றி அடிப்பாரும் இல்லையம்மா'**

இப்படி வனப்புக் கொஞ்சும் காட்சிச் சித்திரங்கள்!

வெண்பா வடிப்பதில் ஒரு வேந்தர் கவிமணி. தளை தட்டாமல், மோனை முறியாமல், சீர் சிதையாமல் அப்படி ஒரு ஓட்டம் கவிமணியின் வெண்பாக்களில். நகைச் சுவையாகவும் பாட வல்லவர்.

தன் மேனியில் வந்த சிரங்கைப் பற்றி ஒரு வெண்பா.

**'செந்தில் குமரா! திருமால் மருகா! என்**
**சிந்தை குடிகொன் [illegible] – நொந்த இம்**

மெய்யில் சிரங்கை விடியுமட் டுஞ் சொரிய
கையிரண்டு போதாது காண்'

மெல்லிய மன அசைவுகளைத் துல்லியமாகக் கவிதைகளில் பதிவு செய்த வித்தகம் கவிமணியினுடையது.

**நாமக்கல் கவிஞர் (1888 – 1972)**

பாரதியாரின் தேசியம் நாமக்கல் கவிஞராய்க் கோலம் கொண்டது.

நாமக்கல் கவிஞரின் 'கத்தியின்றி ரத்தமின்றி யுத்தம் ஒன்று வருகுது' என்ற பாடலை அன்பர்கள் இசைக்க, ராஜாஜி உப்புச் சத்தியாக்கிரகம் செய்யும் பொருட்டு வேதாரண்ய யாத்திரை சென்றது வரலாறு. அவர் நாமக்கல் கவிஞரைக் குறித்துக் கூறுகிறார்:

> 'திலகர் விதைத்த விதை பாரதியாக முளைத்தது. காந்தி தூவிய விதை நாமக்கல் கவிஞராகத் தோன்றியது.'

காந்தியக் கவிஞர் என்று அறியப்படும் நாமக்கல் கவிஞரின் புகழும் பெருமையும் காந்தியடிகளுக்குத் தமிழ்க் கவிதையில் நினைவுச் சின்னம் அமைத்ததால் ஏற்பட்டன. காந்தியடிகளைக் குறித்து அவர் எழுதியுள்ள கவிதைகள் முப்பத்தைந்து. காந்தியக் கொள்கைகள், தேசியம், தாய்நாட்டுத் தலைவர்கள் குறித்து எழுதியவையும் கணிசமானவை.

காந்தியடிகளை நபிகள் நாயகத்துடனும், ஏசுநாதருடனும் புத்தருடனும் இணைத்துப் பாடியுள்ளார் நாமக்கல் கவிஞர். சாந்தி நிறை பாத்திரம், சன்மார்க்க சாத்திரம், வலிமைதரும் சூரியன், வழிகாட்டும் தாரகை, பகைமை புகா அரண்மனை, படை தொடுக்கா ராணுவம் என்று புகழ் மொழிகளால் அர்ச்சித்துள்ளார். காந்தியடிகள் குறித்து,

**'கவிபாடிப் பெருமை செய்யக் கம்பனில்லை
கற்பனைக்கு இங்கில்லை அந்தக் காளிதாசன்
செவிநாடும் கீர்த்தனைக்குத் தியாகரில்லை தேசிய
பாரதியின் திறமும் இல்லை'**

என்று வருந்துவார்.

காந்தியடிகளின் அகிம்சைப் போர்முறை குறித்து நாமக்கல் கவிஞர் வரைந்துள்ள வரிகள் மறக்க முடியாதவை.

'குத்தீட்டி ஒரு புறத்தில் குத்த வேண்டும்
கோடாரி ஒரு புறத்தைப் பிளக்க வேண்டும்
ரத்தம் வரத் தடியடியால் ரண முண்டாக்கி
நாற்புறமும் பலர் உதைத்து நலியத் திட்ட
அத்தனையும் நான்பொறுத்து அகிம்சை காத்து
அனைவரையும் அதைப் போல நடக்கச் சொல்லி
ஒத்து முகம் மலர்ந்து உதட்டில் புன் சிரிப்பினோடும்
உயிர் துறந்தால் அதுவே என் உயர்ந்த ஆசை
என்றுரைக்கும் காந்தியினை எண்ணிப் பார்த்தால்
எலும்பெல்லாம் நெக்கு நெக்காய் இளகு மன்றோ?'

இத்தகு காந்திய வரைவோவியங்கள் தந்திருப்பது நாமக்கல் கவிஞரின் சிறந்த பங்களிப்பாகும்.

நாமக்கல் கவிஞரை நினைப்பூட்டிக் கொண்டிருக்கும் பாடல்களில் ஒன்று.

'தமிழன் என்றோர் இனமுண்டு
தனியே அவற்கொரு குணமுண்டு
அமிழ்தம் அவனது மொழியாகும்
அன்பே அவனது வழியாகும்'

கம்பனைக் குறித்துக் கவிஞர் எழுதிய வரிகளும் நினைவில் நிற்பன. வால்மீகியோடு ஒப்பிட்டு எழுதுகிறார்.

'மால் கடிந்த தவமுனி வான் மீகி என்பான்
வனத்திடையே தான் கண்டு கொண்டு வந்த
பால்படிந்து முள்ளடர்ந்து பருத்து, நீண்டு
பரிமளிக்கும் பலவின்கனி பாருக்கீந்தான்
மேல்படிந்த பிசினகற்றி, மெள்ளக் கீறி
மெதுவாகச் சுளையெடுத்துத் தேனும் வார்த்து
நூல்படிந்த மனத்தவர்க்கு விருந்து வைத்தான்
கம்பனென்ற தமிழ்த்தாயார் நோற்ற மைந்தன்'

எனினும் இத்தகைய சத்துள்ள வரிகள் நாமக்கல் கவிஞரிடம் அரிதாகவே காணக்கிடைச்கின்

கம்பனிலும், திருக்குறளிலும் ஆய்வு செய்த நாமக்கல் கவிஞரின் புதினம் மலைக்கள்ளன் வாசகர்களைக் கவர்ந்தது. அதுபோன்றே அவருடைய தன் வரலாற்று நூல் 'என் சரித்திரம்' மிகச் சுவையாக எழுதப்பட்டது.

சுதந்தரப் போரில் பங்கு கொண்டு, அக்காலத் தேசிய உணர்வுகளைப் பாடிய வரலாறு காரணமாகக் காந்தியக் கவிஞர் இலக்கிய வரலாற்றில் இடம்பெறுகிறார்.

## பாரதி பரம்பரை

மகாகவி பாரதியார் காலத்திலேயே வாழ்ந்து, அவரை அல்லது அவரது கவிதைகளை அறிந்த கவிஞர்களை இதுவரை கண்டோம். பாரதி பரம்பரையாகத் தங்களைக் கருதிக்கொண்ட மேலும் சில கவிஞர்களைக் காண்போம். இவர்களும் மரபுக் கவிதையில் திளைத்தவர்களாகவே இருந்தார்கள்.

## சுத்தானந்த பாரதியார் (1897 – 1989)

பாரதியாரை நேரில் அறிந்த அரவிந்தர் ஆசிரமத் துறவி சுத்தானந்த பாரதியார். இவரை இரண்டு சாதனைகளுக்காக இலக்கிய உலகம் நினைவுகூர்கிறது. இருபதாம் நூற்றாண்டின் இருபதுகளிலேயே இவர் பாடி முடித்த பாரத சக்தி மகா காவியம் ஒன்று. மற்றொன்று விக்டர் ஹியூகோவின் ஏழைபடும்பாடு முதல் பல மேலை இலக்கியங்களைச் சுருக்கித் தமிழில் தந்த சிறப்பு.

தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் ராஜராஜன் விருது பெற்ற பாரத சக்தி மகா காவியத்தை,

**'மகா காவியத்தை மலை நதி வனங்கள்**
**கோயில் குளங்கள் தூய்தவக் குடில்களில்**
**தியானத் தமர்ந்து மோனத் துணர்ந்து**
**படலம் படலமாய்ப் பாடி முடித்தேன்'**

என்று சொல்கிறார் சுத்தானந்தர்.

ஐந்து காண்டங்களையும் நூற்றுக்கு மேற்பட்ட படலங்களையும் கொண்ட இக்காப்பியம் பண்புகளையே பாத்திரங்களாகக் கொண்டு இயங்குகிறது. உலகம் ஒரு நாடாக அதைப் பாரத சக்தி சபை ஆள்வதாகக் கதை செல்கிறது.

பரிசுத்தர்களின் யோக சக்தியால் அசுரபலம் அழிந்து, மனிதர்கள் அதி மனிதர்களாகி, மாதர் சக்தி மண்டலமாக மாறுவதே இக் காவியத்தின் பாவிகம்.

உன்னதமான இலட்சியமென்றாலும், 'உத்தம காவியம்' என்று வ.வே.சு. அய்யர் புகழ்ந்தாலும் எளிதில் படித்தறிந்து கொள்வது கடினம்.

சுத்தானந்தரின் கீர்த்தனைகள் இன்றும் ரசித்துப் பாடப்பெறுகின்றன.

*ச.து.சு. யோகியார் (1904 – 1963)*

பாரதி மரபுக் கவிஞர் என்று அழைப்பதற்குப் பொருத்தமானவர் யோகியார். சக்தி உபாசனையும் கொண்டவர்.

மரபின் செழுமை, உணர்ச்சிப் பெருக்கு, செறிந்த சொல் வளம் இவையனைத்தும் ஒன்றுபடும்போது ஏற்படும் கிளர்ச்சியை யோகியாரின் கவிதைகளில் சந்திக்கலாம்.

'தமிழ்க் குமரி' இவருடைய சிறந்த கவிதைகள் அடங்கிய அருமையான நூல். அகல்யா, கண்மணி ராஜம், ருபயாத், மேரி மக்தலேனா, கண்ணகி ஆகிய நெடுங்கவிதைகளும் சில தனிக் கவிதைகளும் இத் தொகுப்பில் உண்டு.

சக்தி தத்துவத்தில் உள்ள ஈடுபாட்டால்,

**'பாடு நீ என்பார், எங்ஙனம் பாடுவேன்**
**உண்மை அறிந்திவர் உலகத்து மக்கள்**
**பாடும் குரல் நான், பாடுவாள் காளி'**

என்று வாக்குமூலம் அளிப்பார்.

காலம் உள்ள வரை பேசப்படும் பாத்திரம் அகலிகை. எத்தனையோ கவிஞர்கள் எடுத்தாண்ட பாத்திரத்தை அனுதாபத்தோடு சித்திரிப்பார் யோகியார். அகலிகைக் கட்சியை அழுத்தமாகப் பேசும் கவிஞர், இந்திரனைப் பார்த்து அவள்

**'கற்புக் கனல் நான்**
**காமச் சிறு புழு நீ'**

என்று பெண்மையின் பேராற்றலாய் உரையாடுவதாகச் சித்திரிப்பார். 'நெஞ்சினால் பிழைப்பிலாளை நீ ஏற்றுக் கொள்' என்று கௌதமனிடம் இராமன் சொல்வதாகக் கம்பன் எழுதுவான். ஆனால் யோகியாரின் இராமனோ, 'போ, அவள் காலில் விழு' என்று கோதமனிடம் சொல்வான். யோகியாரின் அகல்யா தமிழ் செய்த தவம்.

யோகியாரின் மேரி மக்தலேனா கம்பனின் கற்பனை ஆற்றல்களைச் சுவீகரித்துக் கொண்ட அழகுக் கொள்ளை. மக்தலேனா நீராடுகிறாள். பன்னீர்த் துளி சொட்டும் அவள் கூந்தலைப் பற்றி ஒரு கற்பனை. . .

**'பட்டினில் கருமை பூசிப்**
**பளபளச் செய்த கூந்தல்**
**சொட்டு பன்னீரின் துள்ளி**
**துடைவரை தவழ்ந்து மேனி**
**தொட்டணைத் தின்பம் கொண்ட**
**சுவையெலாம் நீங்கத் தன்னைக்**
**கட்டுவார் என்பதாலே**
**கண்கலுழ்ந்து அழுவ போன்ற'.**

கவிமணியின் உமர்கய்யாமுக்கு ஒருவகைச் சிறப்பு என்றால் யோகியார் மொழிபெயர்ப்பு இன்னொரு வகை அழகு கொண்டது.

**'தேவன் வளர்த்த மணித்**
**தேனூறும் திராட்சையினைப்**
**பாவமெனச் சொல்பவர் ஆர்**
**பரமனருள் சுவை அன்றோ?**
**தீயதுவோ? இவ்வார்த்தை**
**தெய்வம் பொறுத்திடுமோ?'**

என்ற வினாவை எத்தனை இன்பலாகிரியோடு தமிழ் மயப்படுத்துகிறார் யோகியார்!

யோகியாரிடம் உணர்ச்சியின் உச்சியில் வார்த்தை உடைபடும் அனுபவங்கள் உண்டு. உள்ளம் உடைபடும் உணர்ச்சியும் உண்டு. தன் சின்னஞ்சிறுமகள் இறந்தபோது அவர் உருகிப் பாடிய 'கண்மணி ராஜம்' சோகத்தின் சிகரம்.

'புருவத்தில் பொட்டிட்டு
புதுவிழிக்கு மையெழுதிக்
கருவம் கொண்டதெல்லாம்
கண்மூடிப் போச்சுதடி
அப்பன் இவன் ஏழை
அரைக் காசு கஞ்சியில்லை
இப்பரிசு வேண்டாம்
எனத் துறந்து போயினையோ'

குறைவாகவே எழுதியிருந்தாலும் கவிதை உள்ளங்களில் நிறைவாகவே வாழும் கவிஞர் ச.து.சு. யோகியார்.

இவருடைய 'மனிதனைப் பாடுவேன்' வால்ட் விட்மன் படைத்த 'புல்லின் இதழ்களின் தேர்ந்த மொழிபெயர்ப்பு என்பதைச் சொல்லியாக வேண்டும்.

## பாரதி மரபு தொடர்கிறது

இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிதையில் பேரொளியாக நின்ற பாரதியாரை ஆதர்சமாகக் கொண்டு ஒரு கவிஞர் பட்டாளம் எழுதத் தொடங்கிற்று.

பெ. தூரன், திருலோக சீதாராம், எஸ்.டி.சுந்தரம், துறைவன், அ. சீனிவாசராகவன் (நாணல்), கலைவாணன், தமிழழகன், சோமு என நீளும் வரிசை அது.

**பெரியசாமித் தூரன்** (1908 - 1987) உயர்ந்த கவிதையை ஆன்ம நேய ஒருமைப்பாட்டுக்கு இட்டுச் செல்லும் கருவியாகக் கருதியவர். இளந்தமிழா, மின்னல் பூ, நிலாப் பிஞ்சு, பட்டிப்பறவைகள் ஆகியன இவர் கவிதை நூல்கள்.

> 'நான் வேர்ட்ஸ் வொர்த், கீட்ஸ், ஷெல்லி, ரவீந்திரநாத் தாகூர் என்ற கவிஞர்களைப் பின்பற்றியே கவிதை எழுதுகிறேன்' (நினைவுகள் - கையெழுத்துப் பிரதி)

என்று அவர் கூறினாலும் பாரதியாரின் தாக்கம் தெளிவாகவே கவிதைகளில் தெரிகிறது.

இயற்கை அழகில் முழுவதுமாய் ஈடுபடும் உள்ளம் இவருடையது. காவிரி நீல நிறமாக இருப்பதைக் குறித்த கவிதையில்,

'நீலத்துக் குள்வளர் நீலம் – என்றன்
நெஞ்சை இழுத்திடும் நீலம்
ஆலம் பழுத்த நல் நீலம் – எங்கள்
அன்னை பயங்கரி கோலம்'

என்று சிலிர்ப்புறுவார்.

'விலங்கு நெறி' - கவிதையில் ஒன்றை ஒன்று தின்னும் இயற்கை நெறி மீது சினமுறுகிறார்.

'என்னடா சட்டம் இது, இதுவோ இயற்கை நெறி
சின்னப் புழு பூச்சி சிறுமீன் இரையாகும்
சிறுமீனைக் கொத்தச் செம்மூக்கு மணிப்பறவை
பறவை யதைக் கொல்ல பாழ்வயிற்று வல்லூறு'

அன்பு தழுவிய பார்வையால் இயற்கையைக் காண்பது போல மனித வாழ்க்கையையும் காணுகின்றார். சேரிக் குழந்தைகளின் விளையாட்டில் கூட ஏழ்மையும், வறுமையும், குந்தியிருப்பதை எண்ணிப் பாடிய 'குழந்தை விளையாட்டு, அருமையான கவிதை - தூரனின் பெயர் சொல்லும் கவிதை.

*திருலோக சீதாராம் (1917 – 1973) :* உதயம், கந்தர்வகானம், ஆகிய கவிதை நூல்களின் ஆசிரியர். 'புதுப்புனல்' வெளியீடு என்ற அமைப்பின் வாயிலாகப் பல இளங்கவிஞர்களை அறிமுகம் செய்தவர். சிவாஜி இலக்கிய இதழின் ஆசிரியர். பாரதியார் குடும்பத்தோடும், பாரதிதாசனோடும் நெருங்கிப் பழகியவர்.

மிகுதியாக எழுதவில்லையாயினும், நுட்பமான உணர்வுகளைக் கவிதைக்குள் கொண்டு வந்தவர். 'மூலப் பிரதி' என்ற கவிதை இதற்குச் சான்று.

'முன்பொரு பாடல் எழுதினேன் – அந்த
மூலப் பிரதி கைவச மில்லை (முன்)

எழுதிய பாடல் ஒன்றினை வீட்டின்
எரவாணத்தில் செருகியிருந்தேன்
பழுது வந்தது பார்த்திருந்தவர்
பாடலை எடுத்துப் பதுக்கிக் கொண்டார் (முன்)

**இன்ப மென்றொரு தலைப்பிட்டந்த**
**இனிய பாடலை எழுதிய நினைவு**
**துன்பம் வந்து சூழும்போது**
**துணை செயக்கூடும் தொலைந்து போயிற்று (முன்)**

என நயமுற விரியும் பாடல் ஒரு வேண்டுகோளோடு நிறைவுறும்.

**'ஏட்டுப் பிரதியை எடுத்தவர் தந்தால்**
**இனிய பாடலைக் கற்றவர் சொன்னால்**
**காட்டில் இருளைக் கடந்திட லாகும்**
**கருணை செய்தவர் ஆவீர் அய்யா' (முன்)**

திருலோக சீதாராம் கவிதைகளில் கவித்துவ மின்னல் தெறிக்கும் அனுபவத்தைக் காணலாம்.

***அ. சீனிவாசராகவன் (1905 – 1974) :*** ஆங்கிலப் பேராசிரியராக இருந்து கொண்டே தமிழ்க் கவிதையிலும் கவனம் செலுத்தியவர். தாகூர், பாரதியார் கவிதைகளை முறையே தமிழுக்கும், ஆங்கிலத்துக்கும் மொழியாக்கம் செய்தவர்.

'வெள்ளைப் பறவை' கவிதை நூலுக்காகச் சாகித்திய அகாதெமி விருது பெற்றவர். இலக்கிய ரசனையை வளர்க்க ஆங்கில இலக்கிய அறிமுகங்கள் செய்தவர்.

இயற்கையில் கரைகிற உள்ளமும், வாழ்க்கையின் அலை வீச்சுகளை ஆதங்கத்துடன் பார்க்கும் மனமும், மெல்லிய தத்துவ இழை பின்னும் நெஞ்சமும் இவர் கவிதைகளினூடே கவனத்தைக் கவரும்.

**'ஓமென வான் சுதியில் – குரல்**
**ஒன்றி முழங்கி தத்தீம்**
**தீமென ஆடிவரும் – இருள்**
**தேக்கு வனத்தருவி'**

என்று அழகில் சிலிர்ப்பதும் உண்டு.

**'மூச்சுப் படகினிலே – உயிரும்**
**மூட்டையைத் தூக்கிச் செல்லும்**
**ஆச்சு, கணநேரம் – இனி**
**அக்கரை எப்படியோ?'**

என்று பெருமூச்சில் களைப்பதும் உண்டு.

வாழ்வின் எல்லைகள் பார்த்த அனுபவம், பேரிலக்கியங்களில் மூழ்கிய அனுபவம் இவர் கவிதைகளில் பக்குவம் பெறுகிறது.

தமிழழகன் (1929 – ) : சிறுவர் கவிதைகள் பல எழுதியுள்ள வே. சண்முகசுந்தரம் மனதைக் கொள்ளை கொள்ளும் சந்தக் கவிதைகள் பல தந்தவர்.

இயற்கை அழகைச் சந்த இசையுடன் சிறைப்பிடிக்கும் ஒயிலைத் 'தமிழழகன் கவிதைகள்' வெகு இயல்பாக வெளிப்படுத்து கின்றன.

'காலைக் கன்னி' கவிதை இதற்கு எடுத்துக்காட்டு

'கங்குல் இருளின்
கதவைத் திறந்தொரு
கன்னி எழுந்தாச்சு – காலைப்
பொன்னி வளர்ந்தாச்சு
மங்குலில் வைகறை
மாமனை தோறும் நீர்
மஞ்சள் தெளித்தாச்சு – வர்ணம்
கொஞ்சிக் கொழித்தாச்சு'

சோமு (1921 – ) : 'தமிழ் மகளுக்கு ஒரு சீதனம்' என்று ரசிகமணி டி.கே.சியால் பாராட்டப்பெற்ற கவிதைத் தொகுப்பு சோமுவின் 'இளவேனில்'. 'மனப்பறவை' என்ற மற்றொரு கவிதை நூலையும் வெளியிட்டுள்ளார்.

கவிதையின் ஓசை நயமும், கற்பனை வண்ணமும் தெரிந்தவர் சோமு. சொற்களைக் கடந்த ஒரு தத்துவச் சாயலும் இவர் கவிதையில் உண்டு. 'ஓய்விலாக் காலம்' என்றொரு கவிதை:

'காலன் ஆழி சுழன்றாடு தம்மா – அது
காது துளைபடச் சாடுதம்மா
ஓலமிட்டே காதில் ஊதுதம்மா – தனக்
கோய்வுதான் இல்லையென் றோதுதம்மா'

அதன் சுழற்சியில் அனைத்தும் தேய்கின்ற மாய்கின்ற அற்புதத்தைப் பேசுகின்றார்.

பேச்சுச் சந்தமும், இசைப்பாடல் போன்ற தொடக்கமும் இசையப் பல கவிதைகள் தந்திருப்பது ஒரு மாறுபட்ட புதுமை.

'ஏகாந்தச் சாலையிலே
ஏகுதொரு பொற்சிவிகை
ஆகாய வீதியிலே
அசைந்தாடும் கூன்பிறைபோல் (ஏகா)

அந்தி மயங்கி வர
அழகென்பாள் கொஞ்சிவர
சுந்தரஞ்சேர் இளங்காற்றுச்
சோபனங்கள் சொல்லி வர (ஏகா)

மண்ணோடு விண்வந்து
மருவி நிற்கும் எல்லையினை
நண்ணிப் பிடித்திடவே
நடந்தேகும் சாலையிலே (ஏகா)

அழகியலை வார்த்தெடுத்த, இன்னிசையை ஆரத்தியாக்கிய நாட்டிய அசைவுகளை இணைத்தமைத்த சோமுவின் கவிதைப் பயணம் தொடராமற் போனது பேரிழப்பே.

மு. மேத்தா : வானம்பாடி கவிதை இயக்கத்துக்கு வந்து சேரும் வரை கவிஞர் மு. மேத்தா மரபுக்கவிதையாளராக இருந்தார்.

காந்தியப் பற்று மிக்கவராக இருந்த அந்த நாட்களில் அவருடைய கவிதைகளில் காதலும் வீரமும் என்ற இரண்டும் சுரதா வழியில் காட்சி தந்தன.

பாரிமகளிர், வல்வில் ஓரி குறித்த அழகிய சித்திரங்களை அப்போது தந்திருக்கிறார்.

'தன்னந்தனித் தீவில்
தமிழ்க் கவிதை நூல்களுடன்
என்னை இறக்கி விட்டு
என் கப்பல் போய் விடட்டும்
வீசும் இளங்காற்று
விசிறிவிடத் தென்னைமரம்
ஆசைப் பறவைகளின்
அன்றாடப் புதுக் கீதம்

போதும் இவை எனக்கு
போய்விடட்டும் என் கப்பல்'

என்று ஏகாந்தத்தை இவர் நேசித்ததுண்டு.

## பொதுவுடைமைக் கவிஞர்கள்

இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிதையை வளப்படுத்தும் பணிக்கு அரசியல் இயக்கங்களும் துணை நின்றன. ஒரு சித்தாந்தம் அல்லது ஒரு தத்துவச் சார்பில் இயங்கிய கவிஞர்களில் தேசியம் தந்த கவிஞர்களை முன்னர்க் கண்டோம். அதுபோன்றே பொதுவுடைமை இயக்கமும், திராவிட இயக்கமும் வளர்த்தெடுத்த கவிஞர்கள் பலர் சென்ற நூற்றாண்டுக் கவிதைக்குக் கனமும் வளமும் சேர்த்திருக்கிறார்கள். அவர்களில் மரபுக் கவிதை சமைத்தவர்களை இங்குக் காண்போம்.

பொதுவுடைமை அல்லது சம தருமக் கோட்பாட்டில் நம்பிக்கை வைத்த கவிஞர்களின் வரிசையில் ஜீவா, ரகுநாதன், கே.சி.எஸ். அருணாசலம், பட்டுக்கோட்டை, தமிழ் ஒளி, மீரா, சிற்பி, புவியரசு, பரிணாமன், தணிகைச் செல்வன், வெ.நா.திருமூர்த்தி ஆகியோரைக் குறிப்பிடலாம்.

***ஜீவா (1907 – 1963) :*** பொதுவுடைமை இயக்கத்தில் தமிழ் இயக்கத்தைக் கலந்து தந்த பெருமை ப. ஜீவானந்தம் அவர்களுக்கு உண்டு. ஓய்வு ஒழிவு இல்லாத அரசியல் பணிகளுக்கு இடையே இலக்கியச் சாளரத்தையும் திறந்து வைத்துக் கொண்டவர் ஜீவா. முழுவதும் கொள்கைப் பிரசாரத்துக்காகவே பாடல்கள் புனைந்தவர் ஜீவா.

தொழிலாளர் போராட்ட மத்தியில் (கோவை ஸ்டேன்ஸ் ஆலைப் போராட்டம்) 1935-இல் பிறந்த பாடல் :

'காலுக்குச் செருப்புமில்லை
கால் வயிற்றுக் கூழுமில்லை
பாழுக்கு உழைத்தோ மடா – என் தோழனே
பசையற்றுப் போனோ மடா'

இந்தப் பாடலைப் போர்க்களத்தில் பூத்த செம்பருத்தி என்று கூறலாம்.

'பாலின்றிக் குழந்தையழும்
பட்டினியால் தாய் அழுவாள்
வேலையின்றி நாமழுவோம் – என் தோழனே
வீடு முச்சூடும் அழும்'

என்ற வரிகளைக் கேட்டு, தேசபக்தர் வ.ரா. விம்மிவிம்மி அழுதார் என்பார்கள்.

அனைத்தும் பிரசார மயமான பாடல்கள் என்றாலும் சமூகத்தைத் தட்டியெழுப்பிய வரலாற்றுச் சிறப்புள்ளவை ஜீவா பாடல்கள். போராட்ட இலக்கியம் என்று அவர் பாடல்களைக் கூறலாம்.

ரகுநாதன் (1923 – 2001) : பொதுவுடைமை இயக்கத்தில் செயலாற்றியபடியே தமிழ் இலக்கியத்தில் கவிதை, திறனாய்வு, நாவல், சிறுகதை எனப் பன்முனைகளிலும் செயலாற்றியவர் தொ.மு.சி. ரகுநாதன். புதுமைப்பித்தனின் நெருங்கிய தோழராக இருந்தமையால் அருடைய வாழ்க்கை வரலாற்றை மிக அருமையாக எழுதியிருக்கிறார். சென்ற நூற்றாண்டின் ஐம்பது, அறுபதுகளில் அவருடைய கவியரங்கக் கவிதைகள் தனிப்புகழ் பெற்றிருந்தன.

ரகுநாதன் கவிதைகள், கவியரங்கக் கவிதைகள், காவியப்பரிசு என்பன இவர் கவிதை நூல்கள்.

நவம்பர் புரட்சி, வியட்நாம் என இயக்க வெப்பத்துக்காக எழுதிய கவிதைகள் பல. அவற்றுள் அவர் கவிதையழகை விட இதயக் கனலைப் பார்க்கலாம். ஆனால் இதயமும் கவிதையும் கை கோர்க்கும் அழகைச் சில கவிதைகளில் காண முடியும். 'ஆறுதனைக் காதலித்தேன்' 'ஒற்றையடிப்பாதை' போன்ற கவிதைகள் இத்தகையவை.

ஒற்றையடிப் பாதையைப் பார்த்துக் கவிஞர் கேட்கிறார்:

'பேதாய்! இப் பாலைவெளிப் பேய்த்தேரின் வெம்மையிலே
ஆதாரம் ஏதுமின்றி அலைக்கழிந்து நீ கிடத்தல்
வேதனையோ? விதிவசமோ? வெய்ய பழ வினைப்பயனோ?'

பாதை இந்த வினாவுக்குப் பதில் கூறுகிறது:

'வெஞ்சுரந்தான் என்றாலும் விடாய்தணிக்க நீர் தேடி
வஞ்சியர்கள் குடமெடுத்து வாரித் தடம் நாடி
மஞ்சள் வெயில் மயங்க வரும் சமயம் அன்னவர்தம்
கஞ்சமலர்ச் சேவடியைக் கையேந்திக் கண்ணொற்றி
நெஞ்சம் தெகிழ்ந்தெனது நினைவு மறந்திருக்கும்
கொஞ்சப் பொழுதுக்காய்க் கோடியுகம் காத்திருப்பேன்'

ரகுநாதன் என்னும் மார்க்சியவாதிக்குள் ஒரு மாகவிஞன் முழுமையாக வெளிப்படாமல் போய்விட்டதைச் சூழலின் மீது பழியாகத் தான் போட வேண்டி இருக்கிறது.

கே.சி.எஸ். அருணாசலம் (1921 – 1999) : பொதுவுடைமை இயக்கம் தந்த கவிதைப் பூங்காற்று கே.சி.எஸ். அருணாசலம்.

கவிதை என் கைவாள், பாட்டு வராத குயில் ஆகிய இரண்டு தொகுதிகள் படைத்தவர்.

மரபுக் கவிதையின் நாடி பிடித்தறிந்தவர். நாட்டுப்புற நளினங்களைக் கவிதையில் இணைத்தவர். கொள்கைகளை நோகாமல், பிரசார நெடி படராமல் இசையமுதமாக்கி வழங்கியவர். நாடக உலகிலிருந்து இலக்கியப் பயணம் மேற்கொண்டதால் கவிதைகள் எளிதில் மக்கள் சிந்தனைக்கு இடம்பெயரும் வண்ணம் எளிமையைக் கடைப்பிடித்தவர்.

தம்முடைய இலட்சியத்தை வரையறுத்துக் கவிதையில் கூறும் அழகு தனியழகாய் ஒளிரும்.

'கவிதை எனக்கொருகைவாள் – மார்பில்
கவசம் எனக்கு வாய்மை
புவியில் தீமைகள் வீழ – நான்
போரிடும் ஓர் படைவீரன்
மானிட இனமென் சாதி – இந்த
மண்ணுல கெங்குமென் சுற்றம்
தேனிறை பூ நிகர் பெண்ணின் – கண்ணில்
தேங்குதென் பாடலின் போதை'

பாரதியார் பாஞ்சாலி சபதத்தில் அருச்சுன சபதத்தைக் கூறுவாரே, 'இவள் கண்ணினும் காண்டிப வில்லினும் ஆணை' என்று. அப்படி ஒரு கச்சிதம் இவர் இலட்சியம் கூறும் பாடலிலும்.

அழகியலையும் அரசியலையும் வெகு லாவகமாக இணை சேர்க்கும் கலை இவருடையது. தேயிலைத் தோட்டத் தொழிலாளர் போராட்டதைச் சொல்லக் காவடிச் சிந்தில் ஒரு கவிதை, மலையின் அழகைச் சொல்லி ஆரம்பமாகிறது.

**'சந்திரனை வழிமறிக்கத் தலைநிமிர்ந்த மலைகளின் மேல்**
**வந்தமர்ந்து மேகம் தூது பேசும் - சுற்றிச்**
**சந்தன மரங்கள் வாசம் வீசும்'**

இப்படியே மலைகளின் வளமும் அழகும் தொடர்ந்து கொண்டே சென்று கடைசி அடியில் ஒரு திருப்பம்.

**'தேயிலை தழைமலையில் தினமுழைத்துப் பொன்விளைத்துக்**
**காயும் வயிறோடு வாழ்ந்த கூட்டம் - இன்று**
**கரமுயர்த்திச் செய்யுதே ஆர்ப்பாட்டம்'**

புதுமை புதுமையாக மரபில் இவ்வாறு உத்திகளைப் பயன்படுத்தியவர் கே.சி.எஸ்.

நாட்டார் மொழி இவருக்குத் தட்டில் வைத்த தாம்பூலம்.

**'சின்னச் சின்ன மூக்குத்தியாம்**
**செகப்புக் கல்லு மூக்குத்தியாம்**
**கன்னிப் பொண்ணே உன் ஒய்யாரம் கண்டு**
**கண்ணைச் சிமிட்டுகிற மூக்குத்தியாம்'**

என்ற பாடல் திரையிலும் வந்து சிந்தையை மயக்கியது!

நகைச்சுவை இவர் பெற்ற வரம். ஓட்டலில் இளைத்துப் போன இட்டிலியைக் குறித்துப் பேசுவார்:

**'வட்டில் எனும் குளம்தனிலே**
**வாத்துக் கோழி போல் மிதந்த**
**இட்டிலியே ஏன் இளைத்துப்போனாய் - நீயும்**
**எந்தப் பயல் மீது காதலானாய்?'**

அருமைத் தலைவர் நேரு பற்றிய இவர் கவிதை நெஞ்சில் பூவாக மலர்ந்து கொண்டே இருக்கும்.

**'பளிங்கு மாளிகை வாசலிலே - பால்**
**நிலவு தேங்கிடும் வேளையிலே - இந்த**

*சிவந்த ரோஜா*
*மலரை அணிந்தே*
*மகிழ்ந்து நின்றவன் யார் – இதை*
*மறந்து சென்றவன் யார்?'*

படிப்பவர் மனமும் பாடக் கேட்டவர் செவியும் நந்தவன மாகும்படிப் பாடிப்பறந்த குயில் கே.சி.எஸ். அருணாசலம்.

***பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் (1930 – 1959) :*** மக்கள் கவிஞர் என அழைக்கப்பட்ட பட்டுக்கோட்டை இருபத்தொன்பதே ஆண்டுகள் வாழ்ந்தவர். குறுகிய வாழ்நாளில் இலக்கிய முத்திரை பதித்துவிட்டுப்போன கவிஞர் இவர்.

பெரிதும் திரையிசைப் பாடல்களைத் தான் இவர் கவிதை இலக்கியப் படைப்பாகப் பார்க்கிறோம். ஆயினும் பட்டுக் கோட்டைக்கு அது குறித்த தெளிவு இருந்தது.

'நான் நாடகங்களுக் கென்றும் சினிமாவுக்கென்றும் எழுதியுள்ள பாடல்கள் அனைத்துமே ஒவ்வொரு காரணத்துடன் பிறந்ததாக இருக்கும்'

என்று ஒரு பத்திரிகை நேர்முகத்தில் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

ஒரு பாடல் திரையில் அரங்கேறப் பல தடைகள் இருந்த போதிலும், நிலை தடுமாறாமல் எழுந்து நின்ற பாடல்களைத் தந்தவர் கவிஞர்.

திரைப்பாடல் கவிதை என்ற தகுதியைப் பெறுமா? இக் கேள்விக்கான விடை இதுதான். எல்லாப் பாடல்களும் இத்தகுதியைப் பெறா. பாடலின் சூழலைக் கவிஞன் தன் வசமாக்கி, தன் கற்பனைக்கும், மனோ தருமத்துக்கும் சுதந்தரமான ஒரு விளையாட்டரங்காக அதை மாற்றும்போது அது கவிதையாகும்.

இந்த வாய்ப்பை முழுமையாகப் பயன்படுத்திக் கொண்ட கவிஞர் பட்டுக்கோட்டை.

*'ஊருக் கெல்லாம் ஒரே சாமி*
*ஒரே சாமி ஒரே நீதி*
*ஒரே நீதி ஒரே சாதி'*

என்ற பாடல் வரிகளில் 'எல்லாரும் ஓர் நிறை, எல்லாரும் ஓர் விலை' என்னும் பாரதியார் கருத்து மட்டுமல்ல, திருமூலரின் 'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' கூடச் சேர்ந்து கொள்கிறது.

'பள்ளிக் கூடம் இல்லாத ஊருக்குப்
பயணம் போறேண்டா
அங்கே நானும் வாரேண்டா – வெளியே
படிக்க வேண்டியது நெறய இருக்கு
படிச்சிட்டு வாரேண்டா'

என்ற பாடலில் இக்காலக் கல்வி பற்றி ஒரு விமர்சனமே இருக்கிறது. உழவனும் உழத்தியும் உரையாடும் அருமையான பாடல் 'சும்மா கிடந்த நிலத்தைக்கொத்தி' என்று தொடங்குகிறது. உழைப்பின் படி நிலைகள் வரிசையாகக் கூறப்படுகின்றன. பிறகு உழவன் சொல்கிறான்:

'நெல்லு வெளஞ்சிருக்கு – வரப்பும்
உள்ளே மறைஞ்சிருக்கு'

அதற்கு அவள் சொல்கிறாள் :

'காடு வெளஞ்சென்ன மச்சான் – நமக்கு
கையும் காலும் தானே மிச்சம்'

வாழ்நிலை யதார்த்தத்தைக் கலையழகோடு சொல்லும் இது கவிதையில்லை யென்றால் வேறு எதுதான் கவிதை?

ஆனால் எத்தனை எடுத்துச் சொல்லியும் மாற்றம் நேரவில்லை என்ற ஆதங்கத்தையும் கூறுகிறார்.

'உப்புக்கல்லை வைரமென்று சொன்னால் – நம்பி
ஒப்புக் கொள்ளும் மூடருக்கு முன்னால்
உளறி என்ன? கதறி என்ன?
ஒன்றுமே நடக்கவில்லை தோழா
ரொம்ப நாளா'

இன்னொரு திரைக்கவிதை இந்த ஏக்கத்தை அகற்றி நம்பிக்கைக்கு இட்டுச் செல்கிறது.

**'உண்மை ஒருநாள் வெளியாகும் – அதில்**
**உள்ளங்கள் எல்லாம் தெளிவாகும்**
**பொறுமை ஒருநாள் புலியாகும் – அதற்குப்**
**பொய்யும் புரட்டும் பலியாகும்'**

நம்பிக்கைகளை விதைக்கவும், எச்சரிக்கைகளைச் செய்யவும் கவிஞன் வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்கிறான். வயல்வெளியில் துள்ளிக் குதிக்கும் கெண்டை மீனைப் பார்த்து,

**'தூண்டில்காரன் வரும் நேரமாச்சு – சும்மா**
**துள்ளிக் குதிக்காதே கெண்டைக் குஞ்சே'**

என்றும் பாடுவார் பட்டுக்கோட்டை .

காலமறிந்து கூவிய சேவல் பட்டுக்கோட்டை மிகுதியும் எழுதியது திரைப்பாட்டுத் தான். எனினும் அந்த மாய உலகிலிருந்து கொண்டே யதார்த்தங்களைப் புரட்டிப் போட்டவர் பட்டுக்கோட்டை .

*தமிழ் ஒளி (1924 – 1965) :* புதுவையில் பிறந்த தமிழ் ஒளி இளம் வயதிலேயே பொதுவுடைமை இயக்கத்தில் இணைந்துவிட்டவர். நவீனத் தமிழ்க்கவிதைப் படைப்பாளிகளில் முதல் தலித் கவிஞர் தமிழ் ஒளி.

தனிக் கவிதைகள் தவிரப் பல சிறு காவியங்கள் தந்தவர் தமிழ் ஒளி. கோசலைக் குமரி, விதியோ வீணையோ, வீராயி, கண்ணப்பன் கிளிகள் என்பன முக்கியமானவை.

தாழ்த்தப்பட்டவரை ஏமாற்றும் வஞ்சனையைத் தோலுரித்துக் காட்டியவர் தமிழ்ஒளி.

**'சாற்றுவார் கீர்த்தனங்கள், தட்டுவார் மேளங்கள்**
**ஆற்றல் உடையவர்கள் ஆதித் திராவிடராம்**
**உன்பேர் உரைத்தே உயர்ந்தார் ஒருசில பேர்**
**துன்பக் கொடுஞ்சேற்றில் தூர்ந்தாய் துயருற்றாய்**
**அன்றிருந்த மேனி அழியா திருக்கின்றாய்'**

என்று அல்லல் சுமை மாறாத சூழலைச் சுட்டுவார்.

கற்பனை யாற்றல் செறிந்தவர் தமிழ் ஒளி. அதனை ஓசை நயத்தோடு பின்னித் தருவதில் வல்லவர். 'பயணம்' என்ற கவிதையில் வாழ்க்கை அலுப்பைச் சொல்லுவார்.

**'தோள் கனக்குது சுமை கனக்குது**
**தொல்லை வழிப் பயணம்**
**நாள் கனக்குது நடை கனக்குது**
**நைந்த வழிப் பயணம்'**

சுமை நம்மையும் சேர்த்து அமுக்குவது போல் ஒரு பிரமை பிறக்கிறது.

புனைவுகளில் புதுமை கொஞ்சும். இயற்கை புத்தாடை அணிந்து வந்து நிற்கும்.

**'விழுது விரல்களாலே**
**எழுதும் ஆலமரங்கள்'**

என்பார். ஏரிக்கரை மரங்களின் நிழல் நீரில் விழுவதை

**'திண்ணோடு நெடுமரங்கள்**
**கண்ணாடி ஏரியில் முகம்**
**பார்க்குமே'**

என்பார். வாழ்வின் இறுதிக் கணங்களை ஒரு பட்டமரத்தோடு ஒப்பிட்டு எழுதும் உருவகம் நெஞ்சில் நிலைத்து நிற்கும் திறமுடையது.

**'மொட்டைக் கிளையொடு நின்று தினம் பெரு**
**மூச்சு விடும் மரமே**
**வெட்டப் படும் ஒரு நாள் வரும் என்று**
**விசனம் அடைந்தனையோ?**
**கட்டை எனும் பெயர் உற்றுக் கொடுந்துயர்**
**பட்டுக் கருகினையோ?**
**பட்டை எனும் உடை இற்றுக் கிழிந்தெழில்**
**முற்றும் இழந்தனையோ?'**

வாழ்வில் ஊன்றிய நம்பிக்கையும், மனித மாண்புகளில் அக்கறையும், அதே சமயம் நிராசை ரேகையும் ஒன்றுபட்டுக் கிடக்கின்றன தமிழ் ஒளியின் கவிதைகளில்.

**கம்பதாசன் (1916 – 1973)** : 'சமத்துவச் சிந்தனைகளைத் தம் உயிரினும் மேலாகக் கருதிய பெருங்கவி' என்று கம்பதாசனைத் தொகுத்தளித்த சிலோன் விஜயேந்திரன் சிறப்பித்துக் கூறுவார்.

இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிதையில் மிகப் பெரிய சாதனையாளராகத் திகழ்ந்திருக்க வேண்டிய கவிதா விலாசம் கம்பதாசனிடம் இருந்தது. விசாலமான கற்பனைச் சிறகுகள் இவருக்கு வாய்த்திருந்தன. படிமங்களும், உவமைகளும் இவரிடம் 'படியாய்க் கிடந்தும் உன் பவளவாய் காண்பேனே' என்று காத்துக் கிடந்தன.

திரையுலக வாழ்க்கை அவரைத் திசை திருப்பிற்றோ என்னவோ ஒரு வட்டத்தைத் தாண்டாமல் போனது தமிழின் நல்லூழ் இன்மை போலும்.

தொடங்கிய 'புதுக்குர'லின் வீச்சு பெரியது.

**'நலமுறவே உழைப்பவர்க்கு உணவு வேண்டும்**
**நியாயமிது நியாயமிது நியாயமீதே**
**அலவெனவே மறுப்பவர்கள் கடவுளேனும்**
**அடுத்த கணம் அவர்தலை எம் காலில் வீழும்'**

என்பது கம்பதாசனின் போர் முரசு.

**'சூரியனும் ஒரு தொழிலாளி – தினம்**
**சுற்றும் உலகும் தொழிலாளி**
**வாரி அலையும் தொழிலாளி – எதிர்**
**வந்திடும் காற்றும் தொழிலாளி**
**மாரி நதியும் தொழிலாளி – இருள்**
**மலரும் உடுவும் தொழிலாளி**
**பாரை நடத்தும் தொழிலாளி – இனிப்**
**பரமனடா கலைப் பிரமனடா'**

என்ற உரிமைக்குரல், உறவுக் குரல் கம்பதாசனின் குரல். செம்படவன், கொல்லன், பரதவர், ரிக்ஷாக்காரன், படகோட்டி, நடிகன், நெல் அறுப்போன், மாடு மேய்க்கும் பையன் என உழைப்பவர்களின் ஒரு நெடிய வரிசை இவர் பாடலில் இடம்பெறுகிறது.

**'கண் இளைப்பாறிடத் தூக்கம் உண்டு – அற்பக்**
**கழுதை இளைப்பாறத் துறையும் உண்டு**
**பண் இளைப்பாறிடத் தாளம் உண்டு – எங்கள்**
**பசி இளைப்பாறிட உண்டோ இடம்?'**

என்ற பசித்தவன் குரல் பல கவிதைகளில் நியாயம் கேட்கிறது. உழைப்பாளிக்கு ஊன்று கோலாகிறது.

**'விவசாயி விழி! அச்சம்**
**விடு விடு – ஏரின்**
**தவச்சாலை நிலம் – வித்தை**
**நடு நடு'**

இப்படிப் பாடுபடுபவர்க்குக் கம்பதாசன் பாட்டுத்துணை ஆகிறார்.

அழகிய கற்பனைகளுக்கும் அவரிடம் பஞ்சம் இருந்ததில்லை. தாஜ்மகாலைப் பாடுகிறார்.

**'வட்டநிலா புவி வீழ்ந்ததுவோ – ஷாஜகான்**
**வடித்த கண்ணீரின் முதல் துளியோ?**
**திட்டமிட்டுப் பூத்த சொப்பனமோ – மும்தாஜ்**
**ஜீவ தீபம் தான் எரிகின்றதோ?'**

திரைப்பாடல்களிலும் உணர்வின் நதி கரை ததும்பி வழிவதைப் பார்க்கலாம். காதலி நினைவைக் கவிதையாக்குகிறார்.

**'பாட்டு முடியுமுன்னே – வீணையைப்**
**பக்கம் வைத்தே நடந்தாய்**
**கேட்ட நினைவே கண்ணீர்த்துளியில்**
**கீதமிசைக்குதடி – காதல்**
**பாட்டு முடியு முன்னே. . . .'**

சிகரங்களைத் தொடச் சிறகுகள் விரித்த கம்பதாசனின் கவிப் பறவை அடிவாரத்து மரக்கிளையிலேயே ஓய்வெடுத்துக் கொண்டது. எனினும் அது சின்னஞ்சிறு குருவியல்ல இராஜாளிப் பறவை.

**இன்குலாப் :** திராவிட இயக்கச் சார்பாளராக இருந்து பொதுவுடைமைச் சிந்தனைக்குத் தம்மை மறுநடவு செய்து கொண்டவர் இன்குலாப்.

1972இல் வெளியிடப்பட்ட இன்குலாப் கவிதைகள் தீப்பிழம்புகளை வாரி வீசின.

> **'சேரிகளின் ஓலங்களில்**
> **வயல்வெளிகளின் புலம்பல்களில்**
> **ஊர்வலங்களில்**
> **உரிமை முழக்கங்களில்**
> **எந்த ராகத்தை இசைத்துச் சென்றோமோ**
> **அந்த ராகங்களுக்கு நான் வீணை மீட்டுகிறேன்'**

என்று முன்னுரையில் குறிப்பிட்டிருந்தார் இன்குலாப்.

புதுக்கவிதைகளும் மரபுக் கவிதைகளும் இடைகலந்த இத்தொகுப்பில், விடியல் கீதங்கள் பாடினார் இன்குலாப்.

> **'விடியல் கீதங்கள் பாடுகிறோம்**
> **விலங்குகள் நொறுங்கட்டும் – கனவு**
> **விலங்குகள் நொறுங்கட்டும்**
> **வேர்வையின் மக்களே விழித்தெழுவீர்**
> **வேள்விகள் தொடங்கட்டும் – ரத்த**
> **வேள்விகள் தொடங்கட்டும்'**

என்று எழுதினார் இன்குலாப்.

> **'கண்ணீர்ச் சுமைகளை இறக்க வந்தோம் – உங்கள்**
> **கனவைச் செயலில் விதைக்க வந்தோம்**
> **செந்நீர் சிந்தும் உரிமைக் களங்களில்**
> **தியாகச் சுவடுகள் பதிக்க வந்தோம்'**

என்று வாலிப ஊர்வலத்தின் போர்ப்பாடல்களை முழங்கினார்.

இன்குலாப் களங்களில் நின்று போராடிய கவிஞர். அதன் காயங்கள் வாய்திறந்து பேசுவது போல் அவர் கவிதைகள் பேசுகின்றன.

மேலும் சிலர்

பொதுவுடைமை இயக்கத்தில் பங்கு பெற்று,

'பத்துத்தலை ராவணனை
ஒத்தத் தலை ராமன் வென்றான்
மொத்தத்திலே வீரம் வேணும் சுடலைமாடா'

போன்ற அருமையான கவிதைகளைத் தந்தவர் பரிணாமன். மரபுக் கவிதைக் காலத்தில் திராவிட இயக்கச் சார்பாளராக இருந்தும் பொதுவுடைமைச் சித்தாந்தத்தில் மனம் பறிகொடுத்து,

'சாகாத வானம் நாம், வாழ்வைப் பாடும்
சங்கீதப் பறவைகள் நாம், பெருமை வற்றிப்
போகாத நெடுங்கடல் நாம், நிமிர்ந்து நிற்கும்
பொதியம் நாம் இமயம் நாம், காலத் தீயில்
வேகாத பொசுங்காத தத்துவம் நாம்
வெங்கதிர் நாம் திங்கள் நாம், அறிவை மாய்க்கும்
ஆகாத பழமையினை அகற்றிப் பாயும்
அழியாத காவிரிநாம், கங்கையும் நாம்'

என்று கீதம் இசைத்தவர் மீரா.

மரபுக் கவிதை எழுதி வந்த ஆண்டுகளிலேயே மார்க்சியத்தில் ஆர்வம் கொண்டு,

'இழுத்துக் கட்டிய முக்காட் டின்மேல்
தெருப் புழுதியின் பூச்சு – கொஞ்சம்
இங்கும் அங்கும் பார்த்து நின்றால்
கொத்தனாரின் ஏச்சு
துணுக்குத் தங்கத்தை இணுக்கி வைத்த
தோட்டில் வறுமை சிரிக்கும் – அவள்
முணுமுணுத்திடும் தெம்மாங் கிசைக்கு
முத்தமிழ் முந்தி விரிக்கும்'

என ஒரு ஏழைக் கூலிக்காரியைச் சித்திரித்தவர் சிற்பி.

'குழலைக் கொடுங்கள் ஊதுகிறேன்
அனலைப் புனலாய் மாற்றுகிறேன்'

என அறிவிப்புச் செய்த புவியரசுவும் இந்தச் சித்தாந்தத்தில் திளைத்தவர்.

இன்னும் பல மரபுக் கவிஞர்களும் - பொதுவுடைமை இயக்கத்தவர் அல்ல எனினும் - இந்தக் கருத்தோட்டத்தில் இசைந்திருந்தனர்.

## திராவிட இயக்கக் கவிஞர்கள்

பிராமணர் அல்லாதார் நலன் காக்க டாக்டர் சி. நடேசன் 1912இல் 'மாகாண திராவிடர் சங்கம்' தொடங்கினார். 1916இல் தியாகராயர், டி.எம். நாயர் ஆகியோர் 'தென்னிந்திய நல உரிமைச் சங்கம்' அமைத்தனர். Justice என்று அவர்கள் தொடங்கிய இதழ் பின்னர் இயக்கத்துக்கும் அப்பெயரைத் தந்தது.

காங்கிரஸ் பேரியக்கத்தில் இருந்த பெரியார் தாம் கொண்டு வந்த வகுப்புரிமைத் தீர்மானங்கள் 1919 முதல் 1925 வரை ஒவ்வோர் ஆண்டும் மறுக்கப்பட்டதால் அவ்வியக்கத்திலிருந்து விலகினார். 1926இல் சுயமரியாதை இயக்கம் தொடங்கினார். நீதிக்கட்சியுடன் பெரியார் 1935 முதல் நெருக்கம் கொண்டார். 1944இல் அண்ணா கொண்டுவந்த தீர்மானத்தின் அடிப்படையில் திராவிடர் கழகம் என நீதிக்கட்சி பெயர் மாற்றம் பெற்றது. பின்னர்த் திராவிடர் கழகத்திலிருந்து திராவிட முன்னேற்றக் கழகம் பிரிந்தது.

திராவிட இயக்கத்தின் அடிப்படைக் கொள்கை, இந்தியக் குடியரசிலிருந்து ஆந்திரம், கேரளம், கர்நாடகம், தமிழ்நாடு உள்ளிட்ட திராவிட நாட்டைத் தனி நாடாகப் பிரித்துக் கொள்ளப் போராடுவதாகும். சாதி ஒழிப்பு, மத எதிர்ப்பு, கடவுள் மறுப்பு, பார்ப்பன ஆதிக்க எதிர்ப்பு, பெண் விடுதலை, தமிழுக்கு அனைத்துத் துறைகளிலும் முதலிடம், இந்தி எதிர்ப்பு என வேறு கொள்கைகளையும் இயக்கம் முன் வைத்தது.

பெரியார், அண்ணா தலைமை மீது இருந்த ஈர்ப்பும், மேற்குறித்த கொள்கைகளில் பற்றும் கொண்ட கவிஞர்கள் பலர் திராவிட இயக்கக் கவிஞர்களாக அறியப்பட்டனர். இவர்கள் அனைவருக்கும் பாரதிதாசனே ஆதர்சமாகத் திகழ்ந்தார். அதனால் பாரதிதாசன் பரம்பரைக் கவிஞர்கள் என்றும் இக்கவிஞர்கள் அழைக்கப்பட்டனர்.

புதுக்கவிதைக் களத்துக்குச் செல்லுமுன் மரபுக் கவிதையில் செய்த பங்களிப்பையே இங்குப் பார்க்கிறோம்.

**புலவர் குழந்தை (1906–1972) :** இலக்கண இலக்கியப்பெரும் புலவராக விளங்கிய குழந்தை திராவிட இயக்கக் கொள்கைகளில் தீவிர ஈடுபாடு கொண்டவர்.

திராவிடர் கழகம் இராமாயணம் திராவிடர்களை இழிவு படுத்துகிற நூலென்றும், இராவணன் திராவிடன் என்றும், ஆரிய இராமனின் வெற்றியைக் கொண்டாடும் இராமாயணம் எரிக்கப்படவேண்டும் என்றும் கருத்துப் போர் நடத்தி வந்தது.

இராவணனை நினைத்துச் சிந்தையும் தோளும் பூரிப்பதாகப் பாரதிதாசனும் எழுதினார். 'தீ பரவட்டும்' என்று இராமாயண எரிப்புப் போராட்டத்தைக் கருத்து விவாதமாக அண்ணா நடத்தி வந்தார்.

இந்தச் சூழலில் இராம காவியத்துக்கு மாற்றாக 'இராவண காவியம்' படைத்தார் புலவர் குழந்தை.

> 'இந்நூல் பழமைக்குப் பயணச்சீட்டு, புதுமைக்கு நுழைவுச் சீட்டு, தன்மான இயக்கத்தார் தமிழ்ப்பகைவர்கள், காவிய மறியாதார், கலையுணர்வில்லாதார் என்ற அவமொழியினை அடித்துத் துரத்தும் ஆற்றலாயுதம்'

என்று முன்னுரையில் பாராட்டினார் அண்ணா.

இருபதாம் நூற்றாண்டில் ஒரு சுவையான பெருங்காவியம் இல்லாத குறையை இராவண காவியம் நிறைவு செய்கிறது. பாரத சக்தி மகாகாவியத்தை விடக் கவித்துவம் உடையது இந்நூல்.

தமிழகக் காண்டம் முதல் போர்க்காண்டம் முடிய ஐந்து காண்டங்களையும் 56 படலங்களையும் 2828 செய்யுட்களையும் கொண்டது இராவண காவியம். இராமாயணத்துக் கதையில் மாற்றங்கள் செய்து இராவணனைத் தமிழ் வேந்தனாகவும், வஞ்சனையால் அவன் கொல்லப்பட்டதாகவும் கதை மாற்றியமைக்கப்பட்டது.

மரபுக் கவிதையின் பழைய காவியத்தழகு தேவையான அளவுக்குப் புலவர் குழந்தையின் கவிதையிலும் குடி கொண்டிருக்கக் காணலாம். இராவணன் சேய் போரில் உயிரிழக்கத் தாய் புலம்புகிறாள்:

**'படிமேல் நடந்து விளையாடி முந்து**
**பசியாக வந்து பரிவாய்**
**மடிமீத மர்ந்து தமிழ்வாய் திறந்து**
**வடிதேன் நுகர்ந்து மழலை**
**நெடிதே மொழிந்து மதிபோல் வளர்ந்து**
**நிலமாள நின்ற மகனே**
**கடிதே சினந்து வடவோன் எறிந்த**
**கணையால் இறந்த தறமோ?**

காவிய நடையும், கதையின் செயற்கைத் தன்மையும் காரணமாக இராவண காவியம் ஒரு வரலாற்றுச் சின்னம் என்ற அளவில் காட்சி தருகிறது.

பாரதிதாசன் பரம்பரை முன்னோடிகள் : பொன்னி இதழ் பாரதிதாசன் பரம்பரையாகக் குறித்த கவிஞர்களில் சாமி பழனியப்பன், மு. அண்ணாமலை, நாரா. நாச்சியப்பன், முடியரசன், வாணிதாசன் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

பாரதிதாசனைப் போன்று எண்சீர், அறுசீர் விருத்தங்களில் இவர்களும் பாடினார்கள். பொருளிலும் பெரிய வேறுபாடு இல்லை. அங்கங்கே அழகிய உவமைகள், உருவங்களில் மட்டும் சில மாறுபாடுகள் இருந்தன.

ஓடத்தை மு. அண்ணாமலை 'பிச்சையெனக் கேட்பானின் இணைக் கை' என்று பாடுவதும்,

**'ஓடாத மண்குதிரை காதல், ஓங்கி**
**உலவிவரத் தெரியாத தென்றல், யாரும்**
**தேடாத கவியுலகக் கஞ்சா என்று**
**தெரிந்திருந்தும் காதலொன்றே சித்திரிப்பேன்'**

என்ற காதலுக்குக் கைலாகு கொடுப்பதும், திராவிட இயக்கப் போக்குக்கு மாறாக,

'அறிவிருக்கப் பொலிவிருக்க
ஆற்றல் பல மிகுந்திருக்க
குறிக்கின்ற நலமெல்லாம்
குவிந்திருக்க இராவணனும்
பிறன்தாரம் நச்சியதால்
பெரியதொரு பிழை செய்தான்'

என்று எழுதுவதும், மொழியைச் சரளமாகக் கையாளுவதும் மேலே குறித்த கவிஞர்களிடமிருந்து அவரைத்தனித்தும், பிரித்தும் காட்டுகின்றன.

முடியரசனும், வாணிதாசனும் தம் கொள்கைப் பிடிப்பால் நினைவுகூரப்படுகின்றனர்.

**குலோத்துங்கன் :** அறிஞர் வா.செ. குழந்தைசாமி பாரதிதாசன் பரம்பரைக் கவிஞர். ஆயினும் கூட்டத்திலிருந்து வேறுபட்டு ஒலிக்கும் குரல் அவருடையது. அவருடைய கவிதையின் மையம் தமிழ்ச் சமுதாயத்தைத் தேக்கத்தினின்றும் காப்பதும், அறிவியல் அணுகுமுறையைப் புகட்டுவதும் ஆகும்.

'முன்செல்ல வழிகாணும் முனைப்பில்லாது
மூவேந்தர் பழம் பெருமை முழங்குவோரை
என்சொல்ல – அவர் திருந்த என்ன செய்ய'

என்ற ஆதங்கம் ஊடு சரடாய் அவர் கவிதை முழுதும் பரந்து கிடக்கிறது.

'....... சாதிப் பற்றின்
நஞ்சினால் தமிழ்ச்சாதி
நசியுமோ என்பதெண்ணி
அஞ்சினேன், அஞ்சினேன்'

என்று சாதிகளை எதன் பெயராலாவது வளர்ப்பவர்களை நினைத்து நெஞ்சம் சாம்புகிறார்.

பாபர் மசூதி இடிப்பினால் மனம் இடிந்து போனவராய், அத் தீச்செயல் புரிந்தவர்களை நோக்கி,

'உளங்களில் புற்றுநோயா
உம்மிடம், உம்மால் வந்த

**களங்கத்தைக் கழுவுதற்குக்**
**கங்கையும் போதுமோ தான்?**

என்று வினவுகின்றார்.

**'திருக்குறளும் சிலம்பொலியும் கம்பன் செய்த**
**சித்திரமும் தேவையெலாம் தீர்ப்ப துண்டோ?'**

என்று பழம்பெருமை மட்டும் பேசுவோரைக் கடிகின்றார்.

மனிதன் இயற்கையை வெல்லப் பிறந்தவன். இதனை இயற்கையின் வாசல் கதவு தட்டிச் சொல்கிற உன்னதம் குலோத்துங்கனின் தனித்தன்மை.

**'முயற்சி கொஞ்சமோ கோப்பை நஞ்சுண்டதும்**
**முழங்கு தீயிடை வெந்ததும், சேயுடன்**
**கயற்கண் அன்பினள் காதல் துறந்ததும்**
**காடு சென்று கடுந்தவம் நோற்றதும்**
**செயற் படுந்துறை வெஞ்சிறை சேர்ந்ததும்**
**சிலுவை கண்டதும் எம் இனம் தேவியே'**

என்பது மானுடத்தின் மேல் குலோத்துங்கன் கொள்கிற பெருமிதம்.

இந்தத் தனித்த குரல்களால் குலோத்துங்கன் திராவிட இயக்கக் கவிஞர்களிலிருந்து விலகி நிற்கிறார்.

சுரதா :சுப்புரத்தின தாசன் என்ற புனைபெயரில் அறிமுகமான சுரதா மற்ற கவிஞர்களிடமிருந்து சொல்லும் முறையாலும், உவமை வளத்தாலும் வேறுபட்டவர்.

இவருடைய புகழ்பெற்ற தொகுதி 'தேன் மழை'.

மாலைப்பொழுதை,

**'எண்ணெய் விளக்கும் இயற்கை விளக்கும்**
**இருட்டை விழுங்கிக் கொண்டிருந்த வேளை**

என்பார். பனியை 'நிலா வடிக்கும் வியர்வை' என்றும், கனியை 'விதைக் குடும்பம்' என்றும், அலைகளைத் 'தண்ணீரின் ஏப்பம்' என்றும், நிலாவை 'ஆனைத் தந்தம்' என்றும் சொல்லும் உவமைக் களஞ்சியம் சுரதா.

பாரதிதாசனின் நெடிய வாழ்வை நான்கே அடிகளில் நவில்வது சுரதாவின் கவிதைக்கலை.

பங்காருப் பத்தரிடம் பயின்று மீசைப்
பாரதியைப் பின்பற்றி நடையை மாற்றி
சிங்கார வேலவனைப் பாடிப் பின்னர்
சீர்திருத்தத் துறைகண்டு பெரியாருக்கோர்
நங்கூரம் போன்றிருந்து பிரிந்து, காஞ்சி
நல்லறிஞர் கழகத்தால் பெருமை பெற்று
தங்காமல் விரைந்தோடும் நீர்போல் ஓடித்
தரித்திரத்தில் சரித்திரத்தை முடித்துக் கெண்டார்

சுரதா பல இளங்கவிஞர்களைக் கவர்ந்தவர். அவரை அடியொற்றி எழுதிப் புகழ் கொண்டவர் முருகு சுந்தரம். தங்கள் உத்திகள் பலவற்றை அப்துல் ரகுமானும், தமிழன்பனும், மீராவும் அவரிடம் கற்றுக்கொண்டனர் என்று சொல்ல வாய்ப்புண்டு.

நா. காமராசன் : திராவிட இயக்கத்தின் இந்தி எதிர்ப்புப் போரில் மாணவர் தலைவராய்ப் படைநடத்திய பெருமை இவருக்கு உண்டு. தொடக்கத்தில் மரபுக் கவிதை நூலான 'சூரிய காந்தி' யால் புகழ் பெற்றவர்.

பாரதி தாசனிடமும் சுரதாவிடமும் கற்றுக்கொண்ட கவிதைக் கலையில் குருமார்களை வென்ற சீடர் இவர்.

'கிளி மூக்குத் தீநாக்கும் கவிதைகளால்
கிளர்ச்சிகளை வளர்ப்பன் நான்
தளிர்க் கவியைச் செடிகளிலே எழுதுகின்ற
தங்க இள வேனிலைப் போல்
ஒளிப் புலவன்'

புனைவியலின் உச்சியாக அமைந்தவை இவர் கவிதைகள், மயான பூமியை, 'தாய்ப்பால் எழுதி சரித்திர ஏட்டில் தீயிடும் இடம்' என்றும், 'இருவிழி தூங்கும் இரண்டாம் தொட்டில்' என்றும் சொல்லும் பாணிக்குச் சொந்தக்காரர்.

குழந்தையைப் பற்றி நா. காமராசன் எழுதியுள்ள கவிதை பேரழகுப் பெட்டகம்.

'கோடிக் கனவுகள் ஆடி வருகுது – மலர்க்
கூட்டம் எழுந்துயிரோடு வருகுது
மோடிக் கவிதையின் ஏடு வருது – இன்னும்
முற்றுப் பெறாததோர் பாடல் வருது'

என்பார். இன்னும் ஒருபடி மேலே சென்றும் பாடுவார்.

'பேதைவிழிகளின் கனவு வருகுது – மொழி
பேசத் தெரியாத மனது வருகுது
ஆதி மனிதனின் ஆவி வருகுது – எடுத்து
ஆளமுடியாத உவமை வருகுது'

கடைசி வரியைப் படிக்கும்போது பரவசம் தொற்றிக் கொள்கிறது.

மரபு என்றாலும் புதுக்கவிதை என்றாலும் புனைவுகள் நிரம்பிய ஒரு கனவுக் கவிஞராக நா. காமராசன் காட்சி தருவதை மறுக்க முடியாது.

**கண்ணதாசன் (1927 – 1981)** : திராவிட இயக்கம் பெற்றெடுத்த கவிஞர்களின் எண்ணிக்கை பெரியது. ஏற்கெனவே பேசப்பட்டவர்கள் தவிர, சாலை, நீலமணி, வேழவேந்தன், வல்லம் வேங்கடபதி, பொன்னடியான் என மேலும் பலர் உண்டு. அனைவரையும் குறித்துப் பேசுவது இந்த நூலின் எல்லைக்குச் சாத்தியமல்ல.

ஆனால் திராவிட இயக்கத்திலிருந்து வந்த கவிஞர்களில் இணையில்லாப் புகழைத் தனக்கு உரிமையாக்கிக் கொண்டவர் கவிஞர் கண்ணதாசன்.

அவருடைய புகழின் தொடக்கம் திரைப்பாடல் களென்றாலும், அங்கு முத்திரை பதித்தது போலவே, கவிதை இலக்கியம் படைப்பதிலும் அவர் கவனம் செலுத்தினார்.

இயல்பாகத் தனிப்பாடல் திரட்டு, கம்பன் பாட்டு, இடைக்கால இலக்கியங்கள் இவற்றில் ஆழ்ந்து கற்ற அனுபவம் அவருக்குச் சொல் வளத்தை வாரி வழங்கி இருந்தது. பாரதியார், பாரதிதாசன் கவிதைகள் வழியே கிடைத்த எளிமையும் கவிதை

வெளிப்பாட்டைச் சாதாரண வாசகனுக்கும் நெருக்கமாக்கிற்று. ஆடம்பரமான வார்த்தைச் சேர்க்கைகளும், அ-மனிதக் கற்பனைகளும் கவிதைக்கு அடையாளம் என்பதை மறுதலிக்கின்றன கண்ணதாசன் பாடல்கள்.

1959 வாக்கில் வெளியான முதல் கவிதைத் தொகுதியிலேயே 'மாங்கனி' 'ஆட்டனத்தி ஆதி மந்தி' காவியங்கள் இடம்பெற்றன.

'போற்றுபவர் போற்றட்டும் புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும் தொடர்ந்து செல்வேன்
ஏற்றதொரு கருத்தை எனதுள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன் எவர்வரினும் நில்லேன் அஞ்சேன்'

என்பது அவர் கவிதைப் பிரகடனம்.

முதல் தொகுதியில் வந்த 'மாங்கனி' எழுதிய காலம் இளமையும் காதலின் குதூகலமுமாக இருந்தது.

'விரிக்காத தோகைமயில் வண்டு வந்து
மடக்காத வெள்ளைமலர் நிலவு கண்டு
சிரிக்காத அல்லிமுகம்! செகத்தில் யாரும்
தீண்டாத இளமைநலம், பருவஞானம்'

என்று நாட்டியக்காரி மாங்கனி அறிமுகமாகும்போதே அன்றைய வாசகன் மனதில் தீப்பிடித்தது. இவ்வாறே ஆட்டனத்தி காவியத்தின் மருதியையும் வருணிப்பார்.

'நாற்சாதிப் பெண் வகையில் இவளே அந்த
நற்சாதிப் பதுமினியாள், மெல்லத் தூக்கும்
காற்சாதி மலர்ச்சாதி, கண்ணின் சாதி
கருங்குவளைப் பூச்சாதி'

என்று காதல் சுவை ததும்பத் ததும்ப எழுதினார்.

தமிழர் இலக்கிய நெறி எனக் காதலையும் வீரத்தையும் முன் வைத்து இடைக்கால இலக்கியப் பாணியில் எழுதிய கவிதைகள் தொடக்க காலக் கண்ணதாசனிடம் மிகுதி. அந்நாளில் கண்ணதாசனின் கவித்துவம் பலரைக் கட்டிப் போட்டது. மதுரை எழுத்தாளர் மாநாட்டில்

'கதிர் வெடித்துப் பிழம்பு விடக்
கடல் குதித்துச் சூடாற்ற
முதுமை மிகு நிலப்பரப்பின்
முதற் பிறப்புத் தோன்றிவிட
நதி வருமுன் மணல் தருமுன்
நலம் வளர்த்த தமிழணங்கே'

என்ற தொடக்கமே உயிரைக் கவ்வியது. 'கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே' என்ற பழைய கருத்தின் புது வடிவமென்றாலும் பளிங்கு போன்ற தமிழ் உள்ளத்தை அள்ளியது.

அரசியல் கவிதைகள் பல அவரிடம் பிறந்திருந்தாலும் அவற்றுக்கு அப்பால் ஒரு கண்ணதாசன் உண்டு. நவீன யுகத்தின் உமார் கய்யாமாக அவர் உலவினார். உலக வாழ்வின் நிலையாமையை ஒரு புறமும், காதலும் மதுவுமே அந்தத் துயருக்கு மருந்தாக மற்றொரு புறமும் வியந்து பாடினார்.

'பெண்களை விட்டென்ன பேரின்பம், வழிகாட்டும்
கண்களை விட்டென்ன கடவுள் நெறி?'

என்று கிளர்ச்சியுடன் கேட்டார்.

'மதுவே வா! மயிலே வா! வாழும் காலம் வரைக்கும்
புதுவதுவாய்த் தோன்றும் பொருளே வா! எப்போதும்
என்னுடனே நீங்கள் இருவர் இருப்பீரேல்
பொன்னுலகம் காண்பேன்'

என்று சிலிர்த்துக் கொண்டார்.

'ஒரு கோப்பையிலே என் குடியிருப்பு
ஒரு கோல மயில் என் துணையிருப்பு'

என்பதை வாழ்க்கைச் சித்தாந்தமாகப் பேசினார். 'காமம்', 'ஞானம்' என்பவை அவர் கவிதை நாணயத்தின் இருபக்கங்களாய் ஒளிர்ந்தன.

'நூலிடையின் கீழமுந்தி
ஆலிலையின் மேல் விழுந்து
ஆயகலை கொண்டதொரு காலம் – இன்று
நோய் வழியில் வந்ததடி ஞானம்'

அந்தச் சித்தர் தொனியிலேயே வாழ்வியல் தத்துவங்களையும் சொல்ல விழைந்தார்.

**'சுடுகாட் டெலும்புகளைச் சோதித்துப் பார்த்ததிலே**
**வடநாட் டெலும்பென்று வந்த எலும் பில்லையடி**
**தென்னாட் டெலும்பென்று தெரிந்த எலும் பில்லையடி**
**எந்நாட் டெலும் பென்று எழுதிவைக்க வில்லையடி**
**ஒருநாட்டு மக்களுக்குள் ஓராயிரம் பிரிவை**
**எரியூட்ட வில்லையெனில் எந்நாளும் துன்பமடி'**

அரசியல் அலைகளிலிருந்து மீண்ட கண்ணதாசன் அருளியல் நோக்கி நடந்தார். அதன் விளைவாகப் பல ஆன்மீக உணர்வுப் பாடல்கள் எழுந்தன.

**'பூஜ்ஜியத்துக் குள்ளே ஒரு**
**ராஜ்ஜியத்தை ஆண்டு கொண்டு**
**புரியாமலே இருப்பான் ஒருவன் – அவனைப்**
**புரிந்து கொண்டால் அவன்தான் இறைவன்'**

அவருடைய தத்துவ நோக்கு மேலும் கூர்மை கொண்டதன் அடையாளம் 'நீ மணி, நான் ஒலி' என்ற கவிதை.

**'பிறப்பின் வருவது யாதெனக் கேட்டேன்**
**பிறந்து பாரென இறைவன் பணித்தான்'**

இப்படியே கேள்வியும் பதிலும் தொடர்கின்றன. படிப்பு, அறிவு, அன்பு, முதுமை, வறுமை எல்லாவற்றையும் வாழ்ந்து பாரென இறைவன் கூறுகிறான்.

**'இறப்பின் பின்னது ஏதெனக் கேட்டேன்**
**இறந்துபார் என இறைவன் பணித்தான்**
**அனுபவித்தே தான் அறிவது வாழ்வெனில்**
**ஆண்டவனே நீ ஏன் எனக் கேட்டேன்**
**ஆண்டவன் சற்றே அருகு நெருங்கி**
**அனுபவம் என்பதே நான்தான் என்றான்'**

இந்த நுட்பத்தை நோக்கிக் கண்ணதாசனின் கவிதை அடியெடுத்து வைத்த காலத்தில் நாம் அவரை இழந்து விட்டோம்.

பண்டை இலக்கியப் புலமையும் நிலையாமை கலந்த தத்துவப் பார்வையும், வாழ்வின் இன்பங்கள் நுகர்வதற்கே என்ற நோக்கும் கூடிக் குழைந்த கலவையே அவர் கவிதைகள்.

எல்லாச் சூழலுக்கும் எல்லா வயதுக்கும், மகிழ்வையும், தெம்பையும் ஊட்டிய கண்ணதாசனின் திரைப்பாடல்கள் ஒரு தனி உலகம். பழகு தமிழில் படித்தவரையும், பாமரரையும் இன்று வரை அதிர்வுகளிலும் இன்ப அலைகளிலும் ஆழ்த்தி வருபவை அவருடைய சுகமான பாடல்கள்.

**'சிங்காரப் புன்னகை கண்ணாரக் கண்டாலே**
**சங்கீத வீணையும் ஏதுக்கம்மா'**

**'மழைகூட ஒரு நாளில் தேனாகலாம்**
**மணல்கூடச் சிலநாளில் பொன்னாகலாம்**
**ஆனாலும் அவை யாவும் நீயாகுமா?**
**அம்மா என்றழைக்கின்ற சேயாகுமா?**

என்ற பாடல்களுக்கு ஐம்பது வயதாகிறது. ஆனால் இன்னும் தமிழர் சிந்தையில் நரை திரை யின்றி இப்பாடல்கள் வாழ்கின்றன. இதன் ஜீவரகசியம் எளியமொழி, உணர்வின் இழைவு, பாத்திரங்களாய்க் கூடுவிட்டுக் கூடு பாய்கிற லாவகம் - இதுதான் கலையின் வெற்றி.

**'உள்ளம் என்பது ஆமை – அதில்**
**உண்மை என்பது ஊமை**
**சொல்லில் வருவது பாதி – நெஞ்சில்**
**தூங்கிக் கிடப்பது மீதி'**

இதனை வெறும் திரைப்பாடல் என்று ஒதுக்க முடியுமா? ஒரு படைப்பாளியின் மன நிலையையும் அல்லவா இவை படம் பிடிக்கின்றன.

**'பிறக்கும் போதும் அழுகின்றான்**
**இறக்கும் போதும் அழுகின்றான்**
**ஒரு நாளேனும் கவலை இல்லாமல்**
**சிரிக்க மறந்தாய் மானிடனே'**

என்ற பாடல் தத்துவஞானி இராதாகிருஷ்ணனையும் வியப்படைய வைத்தது அல்லவா?

காலைப்பொழுது அமைதியில் மலர்கிறது. அதை ஒலியில் காட்சிப்படுத்துகிறார் கவிஞர்.

*'ஆலய மணியின் ஓசையை நான் கேட்டேன்*
*அருள் மொழி கூறும் பறவைகள் ஒலி கேட்டேன்'*

பறவையின் காலைக் குரலைச் சூழலுக்கேற்ப 'அருள்மொழி' என்று அழைப்பதில் ஒரு பேரழகு பொலிகிறது.

*'நேற்றுவரை நீயாரோ நான் யாரோ?*
*இன்று முதல் நீவேறோ நான் வேறோ?'*

சங்க இலக்கியத்தின் 'யாயும் ஞாயும் யாராகியரோ' நெஞ்சில் நிழலாடுகிறது இப்பாடலைக் கேட்கும்போது.

கதையின் இழையைப் பாடல்வரிகளில் ஒரு கதை போலவே சொல்லும் உத்தி கண்ணதாசனின் தனிச்சிறப்பு.

*'சின்னச் சின்ன ஊரணியாம்*
*தேன் மணக்கும் சோலைகளாம்*
*ஊரணியின் கரையில்*
*ஓங்கி நிற்கும் மாமரமாம்*
*மாமரத்துக் கிளைதனிலே*
*மாடப்புறாக் கூடுகளாம்'*

இப்படி ஒரு கதைப் பாட்டு, 'படிக்காத மேதை' படத்தில்.

*'ஒரே ஒரு ஊரிலே*
*ஒரே ஒரு ராஜா*
*ஒரே ஒரு ராஜாவுக்கு*
*ஒரே ஒரு ராணி*
*ஒரே ஒரு ராணி பெற்றாள்*
*ஒன்பது பிள்ளை – அந்த*
*ஒன்பதிலே ஒன்று கூட*
*உருப்படி இல்லை'*

என்ற திரைப்பாடலுக்குள் கதையின் சாரமே உருவகமாய் ஒதுங்கி விடுகிறது.

'தென்னையைப் பெத்தா இளநீரு
பிள்ளையைப் பெத்தா கண்ணீரு'

'வாழ்க்கை என்பது வியாபாரம் - வரும்
ஜனனம் என்பது வரவாகும்
மரணம் என்பது செலவாகும்'

'தன்னை அறிதல் உண்மையில் இன்பம்
தன்னலம் மறுத்தல் பெரும் பேரின்பம்'

'ஆசை கோபம் களவு கொள்பவன்
பேசத் தெரிந்த மிருகம்'

'போனால் போகட்டும் போடா - இந்தப்
பூமியில் நிலையாய் வாழ்ந்தவர் யாரடா'

இப்படி எத்தனை எத்தனை வாழ்க்கைத் தத்துவங்களின் பொன்னொளிப் பிரவாகம் திரைப்பாடல்களில்.

காதலுக்குத் தான் எத்தனை முகங்கள்! எத்தனைப் பரிமாணங்கள் அவர் பாட்டுக்களில்.

'காலங்களில் அவள் வசந்தம்
கலைகளிலே அவள் ஓவியம்
மாதங்களில் அவள் மார்கழி
மலர்களிலே அவள் மல்லிகை'

'மண்பார்த்து விளைவதில்லை
மரம்பார்த்து படர்வதில்லை
கன்னியரும் பூங்கொடியும் கண்ணையா'

உறவும் பிரிவுமாகப் பாடிய பாடல்களில் எத்தனைக் கோணங்கள்! எத்தனைக் கோலங்கள்!

'மலர்ந்தும் மலராத பாதி மலர் போல'

'மௌனம் எனது தாய் மொழி
கலக்கம் எனது காவியம் - நான்
கண்ணீர் வரைந்த ஓவியம்'

என்று ததும்பும் உருக்கம் ஒருபுறம்.

'தெய்வம் தந்த வீடு வீதியிருக்கு – இந்த
ஊரென்ன? சொந்த வீடென்ன ஞானப் பெண்ணே
வாழ்வின் பொருள் என்ன நீ வந்த கதை என்ன'

என்று மனிதன் கொள்ளும் விரக்தி மறுபுறம் - என ஆயிரம் அவதாரங்கள் அவர் திரைப் பாடலுக்கு.

'தைப்பாவை' எழுதிக் 'காளைமணி ஓசை, களத்துமணி நெல்லோசை' என்று திருப்பாவையை ஞாபகப்படுத்திய கண்ணதாசனுக்கு 'எதையும் இலக்கியத்தில் செய்ய முடியும்' என்ற தனித்திறன் இருந்தது.

கடைசியாக அவர் தந்தது 'இயேசு காவியம்'. ஒரு முழுமை பெற்ற படைப்பு இது. இந்நூலில் அங்கங்கே அவர் கவித்துவம் பளிச்சிடுகிறது. 'மலைப்பொழிவு' பகுதி ஒரு சான்று.

'எளிய மனதோர் பேறுபெற் றோரென
எடுத்ததும் அவர் சொன்னார் – இதில்
எளிமை என்பது பற்றில்லாமை
இறைவனை நம்புவதே'

'மாந்தரின் வாழ்வில் தேவைப்படுவது
சாந்தம் தானென்றார் – அது
மண்ணையும் ஆளும் விண்ணையும் ஆளும்
மகத்துவம் பாரென்றார்'

ஓடிக்கொண்டே இருக்கும் வாழ்க்கையில், அதன் தடைகளைத் தாண்டிக் கொண்டே பாடுகிற அவசரம் கண்ணதாசனுக்கு இருந்தது. பசி பொறுக்காத குழந்தை போல் வாழ்ந்தவர் கண்ணதாசன். ஆனால், இந்த நெரிசலை வென்று பிறந்தவை அவருடைய கவிதைகள்.

'பாமர ஜாதியில் தனிமனிதன் –
படைப்பதனால் என்பேர் இறைவன்'

என்று கம்பீரமாகப் பேச முடிந்தது கண்ணதாசனால். சொற்களில் சத்தியம் விதைப்பவனுக்கே சாத்தியமான செருக்கு இது.

திராவிட இயக்கம் வளர்ந்த போக்கில் திராவிட நாடு கோரிக்கை கைவிடப்பட்டது. கடவுள் பற்றிய தீவிர எதிர்ப்பும் தடுமாற்றம் கண்டது. இந்த மாற்றங்களை முன்கூட்டியே

உணர்ந்து தன்னுடைய கருத்துக்களிலும் மாற்றம் கண்டவர் கண்ணதாசன்.

'நான் நிரந்தர மானவன் அழிவதில்லை – எந்த
நிலையிலும் எனக்கு மரணம் இல்லை'

என்று அவர் சொன்னது அவர் எழுத்துக்களுக்கு மெய்க்கீர்த்தியாகவே நிலைக்கிறது.

**மு. கருணாநிதி (கலைஞர்) :** இருபதுகளின் ஐம்பதுகளில் அறுபதுகளில் சிறுகதை, நாடகம் எனக் கருத்துவிளக்கப் படைப்புகள் தந்த மு. கருணாநிதி இலக்கண வரையறைக்கு உட்படாத கவித்துவமான வரிகளைப் பரிசோதனையாக எழுதிப் பார்த்தவர்.

அன்று இலக்கண ஆயுதங்களோடு நின்றவர்களை எதிர் கொள்ள 'இது கவிதையல்ல' என்ற தலைப்பில் வசன கவிதைகள் எழுதினார். புறநானூற்றுக் கவிதையை மையப்படுத்தி,

'குடிசை தான்! ஓர் புறத்தில்
கூரிய வேல்வாள்
வரிசையாய் அமைந்திருக்கும் – வையத்தைப்
பிடிப்பதற்கும் வெம்பகை முடிப்பதற்கும்
வடித்து வைத்த படைக்கலம்போல் மின்னும்; மிளிரும்'

என்று தொடங்கும் வசன கவிதை அந்நாளில் பெரும் வரவேற்பை வாசகர்களிடம் பெற்றது.

கலைஞரிடம் கற்பனை வளமும் கருத்துத் தெளிவும் உண்டு. "பச்சைக் கிளி" என்ற கவிதையை எடுத்துக்காட்டாகக் கூறலாம். கிளியே இயற்கை அழகின் இருப்பிடம். அதனை இயற்கைப் பொருள்களாலேயே புனைந்துரைக்கிறார்.

'சுரைக்காய்ப் பிஞ்சின் தலையில் மிளகாய்ப்
பழத்தைச் செருகி இடையில் மல்லிகை
இலைகள் சிறகாய்ப் பின்புறம் தாழை
மடலை வைத்தால் பச்சைக் கிளியே!
உன்போல் படைப்பு! உன்போல் படைப்பு!'

கிளியைக் கவிஞர் சிறையில் போட்டு விடுகிறார். தானே சிறைப்பட்ட போதுதான் சிறையின் கொடுமை இவருக்குத் தெரிகிறது. இவர் சிறை மீண்டதும் கிளியின் சிறையையும் நீக்கி விடுதலை நல்குவதாய்ச் சொல்கிறார். இதுவரை கவிதை மற்றவர்கள் சொன்னதையே சொல்கிறது.

ஆனால் முத்திரை எங்கே விழுகிறது என்றால் கவிதையின் கடைசி வரிகளில். அது கலைஞரின் தனித்துவமாய் மிளிர்கிறது.

**'உன்னை நான் அடைத்ததால் என்னை அடைத்தார்**
**என்றே சொல்வாய் நன்று கிளியே. . .**
***நீ யாரை அடைத்ததால் நானுன்னை அடைத்தேன்?'***

கவிதையின் முடிவு ஒரு ஜென்கவிதை போல் ஆழம் செறிந்ததாக ஆகிவிடுகிறது. இங்குக் கலைஞரின் அனுபவக் கூர்மை தர்க்க உலகின் தீராத கேள்வி ஒன்றைக் கேட்டு வாசகனைச் சிந்திக்க வைத்து விடுகிறது. இது கலைஞரின் கவிதையைத் தத்துவக் கண்ணோட்டம் மிக்கதாக மாற்றி விடுகிறது.

2004 ஆம் ஆண்டில் வெளிவந்துள்ள 'கலைஞரின் கவிதை மழை' என்ற 210 கவிதைகளடங்கிய இவருடைய கவிதைத் தொகுப்பு தமிழ்க் கவிதை குறித்த அவருடைய கோட்பாட்டைக் காட்டும்.

**"என் கவிதை**
**யாப்பின்றிப் போனாலும் போகட்டும்**
**நம்நாடு, மொழி, மானம் உணர்வெல்லாம்**
**காப்பின்றிப் போதல் கூடாதெனும் கொள்கை யொன்றால்**
**வாய்ப்பின்றிப் போனாலும் செய்யுள் கற்கக்**
**காய்ப்பின்றி நிற்கின்ற மரமாக ஆகாமல் நெஞ்சில்**
**ஊறுகின்ற உணர்ச்சிகளை வரிகளாக்கிக் கொள்கை**
**மாறுகின்ற கோடரிகள் உணர்வதற்கு ஒன்று சொல்வேன்"**

என்று தன்னுடைய கவிதை பற்றிக் குறிப்பிடுகிறார்.

இலக்கண வரையறைக்கு அப்பாற்பட்டுக் கவிதைகளை முயன்று பார்த்த முன்னோடிகளில் கலைஞர் மு. கருணாநிதியும் ஒருவர்.

## மதிப்பீடு

இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிதையை மரபுக் கவிதை, புதுக்கவிதை என்று இரு கூறுகளாகப் பிரித்துக் கொள்வது சரியாக இருக்கும் என்று கருதி இதுவரை மரபுக் கவிதை வளர்ச்சியை ஒருவாறு பார்த்தோம்.

தோராயமாக ஒரு மதிப்பீடு செய்வதாக இருந்தால் கண்ணதாசன் மறைவை ஓர் எல்லையாக வைத்துக் கொள்ளலாம். அதாவது எண்பதுகள் வரை மரபுக் கவிதை தன்னைத் தக்க வைத்துக் காப்பாற்றிக் கொண்டது எனலாம்.

எழுபதுகளிலிருந்தே புதுக்கவிதை வேர் பிடித்து வளரத் தொடங்கி விட்டது. அறுபதுகளில் பாரதிதாசன் காலமான பிறகு மரபுக் கவிதை ஒளிகுன்றத் தொடங்கிவிட்டது. கண்ணதாசன் மரபின் கடைசிக் கொழுந்தாகக் கொள்ளப்பட வேண்டும்.

பாரதியாரின் காலத்துக்குப் பிறகு மரபுக் கவிதையின் வேரும் விழுதுமாகப் பாரதிதாசன் திகழ்ந்தார். மணிக்கொடி எழுத்தாளராகவும் இருந்த பாரதிதாசன் வசன கவிதைப் பரிசோதனைகளை அறியாமல் இருக்கவில்லை. ஆனால் அதில் அவர் ஆர்வம் காட்டவில்லை. மேலும் எதைச் சொல்வதற்கும் யாப்பு அவருக்குத் தடையாக இருந்ததில்லை.

வரவர யாப்புப் புலமை குறைந்தது. யாப்புத் தெரிந்தவர்களிடம் கவித்துவம் இல்லை. கவித்துவம் இருந்தவர்கள் பலருக்கு யாப்பு இடைஞ்சலாக இருந்தது. இது புதுக்கவிதை தோன்ற ஒரு காரணம்.

காலத்தின் மாறுதல்கள் புதியமொழியையும், வெளிப்பாட்டு முறையையும் அவாவி நின்றன. உரைநடையின் வெற்றிக்கொடி பறக்கத் தலைப்பட்டபோது கவிதை உரைநடைக் கூறுகளை ஏற்றுக்கொண்டது. உலகளாவிய இந்த மாற்றம் தமிழிலும் நிகழ்ந்தது.

இதனால் வெறும் யாப்புக் கூட்டுக்குள் கவிதையைச் சிறை வைக்க முடியவில்லை.

கண்ணதாசன், கம்பதாசன், யோகியார், தமிழ் ஒளி போன்ற வெகு சிலரைத் தவிர மற்ற கவிஞர்களிடம் அலைகளைக் கடைந்து அமுதம் எடுக்கும் ஆற்றல் பெரிய அளவுக்கு அமையவில்லை. நாட்டுப்புற மரபுகளை உள் வாங்கிப் பாரதியார் போன்று புதுமைகள் புனைந்திருந்தால் மரபுக் கவிதை புத்துயிர் பெற்றிருக்கக் கூடும். அத்தகைய பார்வையும் வீச்சும் இல்லாமற் போனதால் மரபுக்கவிதை உயிர்ப்பை இழந்தது.

சின்னச்சின்ன விண்மீன்களாகவே மரபுக் கவிஞர்கள் ஒளிர முடிந்தது. பாரதியாரும், பாரதிதாசனும் வகித்த வரலாற்றுப் பாத்திரமும், விசுவரூபமும் மற்ற கவிஞர்களின் பரிமாணத்தை விரிவு செய்ய வாய்ப்புத் தரவில்லை என்றும் கருதலாம்.

மரபுக் கவிதை பற்றிய கட்டுரையில் சில கவிஞர்கள் விடுபட்டிருப்பதற்குக் காரணங்கள் இரண்டு. முதலாவது காரணம் இந்த நூலின் குறுகிய எல்லை. அதாவது ஒரு நூற்றாண்டை ஒரு மணி நேரத்தில் அடக்க வேண்டிய கட்டாயம். இரண்டாவது, அந்தக் கவிஞர்களில் பலர் தனித்தன்மையின் தங்கத்துகள் ஒன்றுகூடத் தாங்காதவர்களாக இருப்பது அல்லது அவ்வாறு இந்நூலாசிரியர் கருதியது.

அடுத்த காலப்பகுதியாகப் புதுக்கவிதை யுகம் பிறக்கப் போகிற போதும் அதிசயம் ஒன்று நிகழ்ந்தது. மரபுக் கவிதையின் மறு மலர்ச்சிக்குக் காரணமான பாரதியாரே, புதுக்கவிதைக்கும் பிதாமகரான அதிசயம் அது.

ஒரே நூற்றாண்டில் இரண்டு கவிதைப் புரட்சிகளிலும் முதன்மையராகப் பங்கேற்கிறார் பாரதியார் என்பது வரலாறு

# 4. புதுக்கவிதை பிறக்கிறது

கவிஞர் புவியரசு 'ஒரு அப்பளத்தின் மரணம்' என்று ஒரு கவிதை எழுதியிருக்கிறார். அவர் புலவர் பட்டம் பெற்றவர். யாப்பில் கணக்கின்றிக் கவிதைகள் படைத்தவர். ஆயினும் புதுக் காற்றின் வருகையை ஆவலோடு வரவேற்றார்.

'அரைத்த மாவையே
குழைத்து உருட்டி
பழமைக் கல்லில்
நடுவில் நிறுத்தி
யாப்பு உருளையால்
எண் சீர் அளவுக்கு
இழுத்துத் தேய்த்து
உலர்ந்த உவமை
மாவைத் தூவி
எடுத்துச் சிலேடை
எண்ணெயில் போட
'பஃப்' என
உப்பிச் சிலிர்த்தது அது
அதை ஆசையாய்
எடுத்து இலையில்
போடும் வேளையில்
ஒரு புதுக் காற்று
'குப்'பென வீசிற்று, ஓ
குனிந்து பார்த்தேன்
உடைந்த அதற்குள்
ஒன்றுமே இல்லை.

கவிதை இலக்கணம் மட்டுமே கற்றுச் செய்யுள் கூடுகளைப் படைக்கிற சூழல் இலக்கிய உலகில் தேக்கத்தை உண்டு பண்ணியபோது, அதனை உடைத்துக் கொண்டு புதுமைகளை நோக்கிப் பாய ஒரு புதுக்காற்று வீசிற்று. அதன் பெயர்தான் 'புதுக் கவிதை'.

ஒரு கால வடிவம் தான் உயிர் வாழ்வதற்குத் தன்னைத் தானே புதுப்பித்துக் கொள்ள வேண்டியது அவசியம். இல்லையெனில் 'சென்று தேய்ந் திறுதல்' என்ற அவலத்துக்கு அது இரையாக நேரும். 'புதுக் கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும்' என்ற ஆவணத்தில் வல்லிக்கண்ணன் பாரதியாரின் புதுக்கவிதை ஒன்றையே அருமையான சான்றாகக் காட்டுவார்.

'என் முன்னே பஞ்சுத் தலையணை கிடக்கிறது
அதற்கு ஒரு வடிவம், ஓரளவு நியமம்
ஏற்பட்டிருக்கின்றது
இந்த நியமத்தை, அறியாதபடி சக்தி
பின்னே நின்று காத்துக் கொண்டிருக்கிறாள்
மனிதஜாதி இருக்குமளவும் இதே தலையணை
அழிவெய்தாதபடி காக்கலாம்.
அதனை அடிக்கடி புதுப்பித்துக் கொண்டிருந்தால்.
அந்த வடிவத்திலே சக்தி நீடித்து நிற்கும்
புதுப்பிக்கா விட்டால் அவ்வடிவம் மாறும்'

'சக்தி காக்கப்படவேண்டுமானால் புதுப்பித்துக் கொண்டிரு' என்பது தான் பாரதியார் சொல்லும் செய்தி. கவிதை என்ற இலக்கிய வடிவமும் தேவைக்கேற்பப் புதுப்பித்தால் மட்டுமே உயிர்ப்போடு இருக்கும் என்ற உண்மையைப் புரிந்து கொள்கிறோம்.

ஓரளவுக்குப் பாரதிதாசனும் இதனை உணர்ந்தே இருந்தார். அதனால்தான் 'கலம்பகம் பார்த்தொரு கலம்பகத்தையும், அந்தாதி பார்த்தொரு அந்தாதி' யையும் எழுதும் போக்கைக் கடுமையாகச் சாடினார். ஆனால் யாப்புக்குள் பாரதியார் உண்டு பண்ணிய ஆற்றல் மிகு மாற்றங்களைப் பின்பற்றியதால், யாப்புக்குள் புதுமை படைக்கிறவராக அவர் பணி அமைந்தது. மெல்ல மெல்ல ஒரு 'பண்டிதத் தன்மை' குடி புகுந்ததால் யாப்புக் கவிதை தேய்மானமுற்றது.

யாப்பு, சக்தி இழந்தது மட்டுமே புதுக்கவிதை தோன்றுவதற்குக் காரணமல்ல. எதுகை மோனைகளின் சிறைக் கம்பிகளுக்கு அப்பால் ஒரு புது உலகத்தின் அழைப்பு இருந்தது.

அந்த அழைப்பை ஏற்று வல்லவர்கள் சிறைக் கம்பிகளை உடைத்து வெளியேற நேர்ந்தது.

பாரதியார், பாரதிதாசன் காலத்திய சமூகம் பெருமளவு மாறிப்போய்விட்டது. குடும்ப உறவுகள் குடும்ப விளக்குக் காலத்திலிருந்து மாறிச்சிதைந்துவிட்டன. கூட்டுக் குடும்பம் இல்லை. நகரங்கள் நவீன மயமாகி, கிராமங்கள் நகர முகப்பூச்சுக்களை ஏற்றுக்கொண்டு விட்டன. தொழில் நுட்பம் வெறும் தொழிற் சாலைகளோடு நில்லாமல் மனிதனின் ஒவ்வொரு வாழ்வியல் கூறிலும் - உடை, உணவு, வீடு பயன்படுத்தும் அன்றாடப் பொருள்கள், கலை ஊட்டகங்கள் என அனைத்திலும் - தன் பங்களிப்பைச் செய்யத் தொடங்கி விட்டது. மனிதனை விட இயந்திரம் மனிதனுக்கு நெருக்கமாகிவிட்டது. வேகமும் விரைவும் அவசரமும் மனிதகதி ஆகிவிட்டன. பொருளாதார அமைப்பு புதிதாகி விட்டது. கணவனும் மனைவியும் பணிக்குப் போகிற சூழலால் 'இல்லாள்' என்றோ 'மனைவி' என்றோ அழைக்கிற பெயரின் பொருள்கூட மாறிப் போய்விட்டது. நேற்றைய மனிதனாக இன்றைய மனிதனும் இல்லை. நேற்றைய நம்பிக்கைகளும் விழுமியங்களும் கூட இன்று இல்லை.

எனவே புதிய சமூகம், புதிய தேவைகளை நிறைவு செய்யப் புதிய கலை வடிவங்களை நாடுகிறது. இதுவும் புதுக்கவிதை உருவாகக் காரணம் என்பார் பேராசிரியர் பாலா.

> 'புதிய வாழ்க்கைக் களங்கள், சமூகப் பொருளாதார மாறுதல்கள், மாறிவரும் மனித உறவுகள், பண்பாட்டுச் சிக்கல்கள், புதிய சமூக அங்கீகாரங்கள், சினிமாவும் பத்திரிகைகளும் ஏற்படுத்த நினைக்கும் ஜனரஞ்சகக் கலாசாரம், நடைமுறை அரசியல் - ஆகியவற்றிலிருந்து இன்றைய வாழ்க்கை பிறப்பெடுக்கிறது. இவற்றின் விளைவாகவும், எதிர் விளைவாகவும் இன்றைய இலக்கியப் படைப்பு நிகழ்கிறது' (புதுக்கவிதை ஒரு புதுப்பார்வை, பாலா, 1981)

பாலாவின் கருத்து புதுக்கவிதை தோன்றியதற்கான நியாயத்தை ஆழமாகப் புலப்படுத்துகிறது.

மற்றொரு கருத்து கவிஞர் தமிழ்நாடனால் எடுத்து முன் வைக்கப்படுகிறது. 'புதுமையின் வேர்கள்' என்ற நூலில் அவர் கருத்துக்கள் காணக்கிடைக்கின்றன. (புதுமலர் வெளியீடு, 2000)

ஆங்கிலத்தில் எதுகைக்கு முதன்மை தராத கவிதை வடிவத்தை மில்டன் அறிமுகப்படுத்துகிறார். அவருடைய இழந்த சுவர்க்கமும், மீண்ட சுவர்க்கமும் தமிழில் 19-ஆம் நூற்றாண்டிலேயே பலரால் பல பகுதிகளாக மொழிபெயர்க்கப் பட்டன. வேதக்கண்ணு, சாமுவேல் யோவான் அய்யர், சாமுவேல் வேதநாயகம், தாமஸ், வெ.ப.சு., வில்வராணி பச்சையப்பன் என மொழிபெயர்ப்பாளர்களும் பலர். சா.வே. தாமஸ் 'பூங்கா வனப் பிரளயம்' என்ற தன் மொழிபெயர்ப்பை எதுகை நீக்கி வெளியிடுகிறார்.

> 'அது (எதுகை) கயவர் மிகுந்த காலத்தில் பொருள் வழுக்கும் இசை இழுக்கும் உள்ள ஒலித்திரளை ஒப்படைக்கும்படி கன்னா பின்னா கவிராயர்கள் கண்டுபிடித்த கட்டுப்பாடு அன்றி வேறல்ல' (சா.வே. தாமஸ், 1887)

வங்கத்தில் 1861 இல் வெளியிடப்பட்ட புரட்சிக் காப்பியமான 'மேகநாதன் வதம்' வசன கவிதை போன்றதோர் வடிவம் கொண்டிருந்தது. இதனைப் படைத்த மதுசூதன் தத் சென்னையில் வசித்தபோது இக்காவியம் எழுதத் தொடங்கினார் என்றும், சென்னைச் சூழல் புதிய பாணியில் கவிதை படைக்கக் காரணமாயிற்று என்றும் தமிழ் நாடன் கூறுகின்றார்.

1898 இல் ஆய்வறிஞர் கே.என். சிவராஜபிள்ளை 'தமிழ்க் கவி வாணருக்கு ஒரு விண்ணப்பம்' எனத் திருவனந்தபுரத்தில் ஆற்றிய உரை (1921 இல் செந்தமிழில் வெளிவந்தது) வித்துவான்களின் செய்யுட் கவிதைகளைக் கடிந்து, புதிய பொருள், எதுகைமோனை தவிர்ப்பு, புதிய மொழி ஆகியவற்றின் அவசியத்தை வலியுறுத்திய செய்தியையும் தமிழ் நாடன் சுட்டிக் காட்டியுள்ளார்.

இந்தச் சூழல்கள் எல்லாம் இசைவுற்று நிற்கப் பாரதியார் புதுக்கவிதை நோக்கி நகர்ந்தார். விட்மனால் தாக்கம் பெறு

முன்பே பாஞ்சாலி சபதக் காவியத்திலேயே வசனகவிதை தலைகாட்டி விடுகிறது. இந்த உண்மைகளெல்லாம் பாரதியாரை உயிர்ப்புள்ள வசன கவிதை எழுதத் தூண்டியிருக்க வேண்டும் என்பார் தமிழ்நாடன்.

எனவே யாப்பு வடிவங்களைத் தகர்க்கும் போக்குக்கு ஒரு வரலாறு உண்டென்று காட்டிப் பாரதியாரின் புதுக்கவிதை புதிய சூழலின் திருப்புமுனையாகும் என்று காட்டுவார் தமிழ்நாடன்.

பிறந்த மேனியான சிந்தனைகளைக் கறந்தபால் நடையில் தரும் பாங்கைப் பாரதியாரின் வசனகவிதைகள் முன் வைத்தன. ஓரளவுக்குப் பிறமொழி அறிவும், புதுமைகளை வரவேற்கும் மனமும் கொண்ட ந. பிச்சமூர்த்தி, கு.ப.ரா., புதுமைப்பித்தன் ஆகியோருக்குப் புதுக்கவிதைப் பரிசோதனைகள் செய்யும் ஆர்வம் உருவாயிற்று.

பாரதியாருக்கு வசன கவிதைத் தோரணையில் எழுத எது முன்னோடியாக இருந்தது என்பதைக் கணித்துரைக்க முடிய வில்லை. வால்ட் விட்மனைக் குறித்து அவர் தெளிவாக அறிந்திருந்தார். 1916இல் அவர் எழுதிய 'நகரம்' என்ற கட்டுரையில் வால்ட் விட்மனின் கவிதை நுட்பத்தை விளக்குகிறார்.

> 'வால்ட் விட்மான் என்பவர் சமீபகாலத்தில் வாழ்ந்த அமெரிக்கா (யுனைடெட் ஸ்டேட்ஸ்) தேசத்துக் கவி. இவருடைய பாட்டில் ஒரு புதுமை என்னவென்றால் அது வசனநடை போலத்தான் இருக்கும். எதுகை, மோனை, தளை ஒன்றுமே கிடையாது. எதுகை மோனையில்லாத கவிதை தான் உலகத்திலே பெரிய பாஷைகளில் பெரும் பகுதியாகும். ஆனால் தளையும் சந்தமும் இல்லாத கவிதை வழக்கமில்லை. வால்ட் விட்மான் 'கவிதையைப் பொருளில் காட்டவேண்டுமே யல்லாது சொல்லடுக்கில் காட்டுவது பிரயோஜனமில்லை' என்று கருதி ஆழ்ந்த ஓசை மாத்திரம் உடையதாய் மற்றபடி வசனமாகவே எழுதி விட்டார். இவரை ஐரோப்பியர், காளிதாசன்,

> கம்பன், ஷேக்ஸ்பியர், மில்டன், தான்தே, கெத்தே முதலிய மகா கவிகளுக்கும் சமான பதவியுடையவராகவே மதிக்கிறார்கள்'.

இவ்வாறு எழுதும் பாரதியாருக்கு விட்மனின் 'புல்லின் இதழ்கள்' புதுக்கவிதை குறித்துத் தெளிவான ஞானம் இருந்திருக்கிறது.

இதே ஆண்டில் (1916), வேதரிஷிகளின் கவிதை மொழிபெயர்ப்புப் பணியும் நடந்திருக்கிறது. ஜப்பானிய 'ஹொக்கு'க் கவிதையில் சொல் சிக்கனம் இருப்பது குறித்தும், அக்கவிதை நயங்கள் குறித்தும் இதே ஆண்டில் எழுதியிருக்கிறார். அக் கட்டுரை முடிவில் 'எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு' என்னும் திருக்குறளை அமைத்து, இக்கவிதைப் பண்புகள் வரவேற்கத் தக்கவையே என்றும் எழுதியிருக்கிறார்.

ஆகவே பாரதியார் ஏறத்தாழ இக்காலப் பகுதியில் வசனத்தில் எழுதும் கவிதையை எழுதியிருக்க வேண்டும். இவை வசனங்களே, கவிதையல்ல என்பார் கருத்துக்கு நாம் முக்கியம் தர வேண்டுவதில்லை.

மணிக்கொடி எழுத்துக்கள் புதிய முயற்சிகளாக வெளிவந்த காலத்தில் ந. பிச்சமூர்த்தி, கு.ப.ரா., புதுமைப்பித்தன் முதலிய பலருக்குப் பாரதியாரின் வசன கவிதைகள் படைப்பூக்கம் நல்கியதாகவே அறிகிறோம்.

1934 முதலே புதுக்கவிதை முயற்சிகளில் ஈடுபட்ட ந. பிச்சமூர்த்தி 'பிக்ஷு' என்ற புனைபெயரில் இக்கவிதைகளை எழுதினார். தனது ஆதர்சம் விட்மனும் பாரதியும் தான் என்று அவர் வாக்குமூலம் தந்திருக்கிறார்:

> 'சம்பிரதாயமான யாப்பு முறைகளுக்கு உட்படாமல் கவிதையைக் காணும் புதுக்கவிதை முயற்சிக்கு, யாப்பு மரபே கண்டிராத வகையில் அமெரிக்கக் கவிஞர் வால்ட் விட்மன் எழுதிய 'புல்லின் இதழ்கள்' என்ற கவிதைத் தொகுப்புதான் வித்திட்டது. அதைப் படித்தபோது கவிதையின்

ஊற்றுக் கண் எனக்குத் தெரிந்தது. பின்னர் பாரதியின் வசன கவிதையைப் படிக்க நேர்ந்தது. என் கருத்து வலுவடைந்தது. இவற்றின் விளைவாக என் உணர்ச்சிப் போக்கில் இக் கவிதைகளை எழுதினேன்.' (வல்லிக்கண்ணன், புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும், ப.7, 1980)

சிறுகதைச் சாதனையாளரும், ந. பிச்சமூர்த்தி காலத்திலேயே புதுக்கவிதை எழுதத் தொடங்கியவருமான கு.ப.ராவும் பாரதியாரின் தாக்கம் குறித்துக் குறிப்பிட்டிருக்கிறார்.

'இந்த முறையில் வசன கவிதையைத் தமிழில் முதல் முதலாகக் கையாண்டவர் சுப்பிரமணிய பாரதி தான். 'காட்சிகள் என்று அவர் எழுதியிருக்கும் சித்திரங்களைப் படிப்பவர்கள் வசனம் எதுவென்றும், வசன கவிதை எதுவென்றும் தெளிவாக அறியலாம். . . . எட்வர்ட் கார் பெண்டரும், வால்ட் விட்மனும் ஆங்கிலத்தில் பெற்ற வெற்றிக்குப் பிறகு, பாரதியே தமிழில் பெற்ற வெற்றிக்குப் பிறகு, தமிழில் வசன கவிதையை எந்தக் கற்பனை உச்சியிலும் கையாளலாம் என்பது ஒரு சிலரின் தீர்மானம். முயன்று பார்த்து விடுவது என்றும் ஓரிருவர் தீர்மானித்திருக்கிறார்கள் என்று தெரிகிறது' (வல்லிக்கண்ணன், நூல், ப.16, 1980)

அந்த ஓரிருவர் வேறு யாருமல்ல, ந.பி., கு.ப.ரா., வல்லிக்கண்ணன், புதுமைப்பித்தன் போன்றவர்கள்தாம்.

மணிக்கொடியில், பாரதியாருக்குப் பின் புதுக்கவிதைப் படைப்புகள் வெளிவரத் தொடங்கிய போது தமிழ் இலக்கிய உலகில் எதிர்ப்புக் குரல்களும் எழுந்தன. க.நா.சு. நடத்திய சூறாவளி (1939) இதழ்களிலும் புதுக் கவிதைகள் வெளிவந்தன. அதற்கும் கண்டனங்கள் எழுந்தன. விவாதங்களுக்கும் நடந்தன.

இன்று எதிர்ப்புகளைப் புறங்கண்டு புதுக்கவிதை தன்னை நிலை நிறுத்திக் கொண்டு விட்டது.

# 5. மணிக்கொடியில் புதுக்கவிதை

1933 ஆம் ஆண்டு செப்டம்பர் 17 ஆம் நாள் சீனிவாசன், வ.ரா., டி.எஸ். சொக்கலிங்கம் இணைந்து மணிக்கொடி இதழைத் தொடங்கினர். அது வார இதழாக வாழ்வு தொடங்கியது.

> 'பாரதி பாடியது மணிக்கொடி, காந்தி ஏந்தியது மணிக்கொடி, காங்கிரஸ் உயர்த்தியது மணிக்கொடி, சுதந்திரப் போராட்டத்தில் பல்லாயிரம் வீரர்களை ஈடுபடச் செய்து அவர்களுக்கு உற்சாகம் ஊட்டியது மணிக்கொடி. மணிக்கொடி பாரத மக்களின் மனத்தினை ஓங்கி வளரும் அரசியல் லட்சியத்தின் நுனி, முனை, கொழுந்து.

என்று உணர்ச்சி பொங்கப் பேசும் முதல் இதழ் தலையங்கம்.

முதலில் வ.ரா. பின்னர்ப் பி.எஸ். ராமையா, அவரைத் தொடர்ந்து கு.ப.ரா., இறுதியாக கே.எம். ரங்கசாமி என ஆசிரியர்கள் மாற, அதன் இலக்கியப் பணியும் மாற 1939 வரை மணிக்கொடி இலட்சிய இதழாக நடைபெற்றது.

மணிக்கொடியில் எழுதிய பாரதிதாசன் உட்படப் பலர் மரபுக் கவிஞர்கள். கவிதையைக் காட்டிலும் கதைகளும், கட்டுரைகளுமாகச் செழித்த மணிக்கொடியில் புதுக்கவிதை எழுதிய கவிஞர்கள் இருவர் மட்டுமே என ஆய்வாளர் க. உமாமகேசுவரி தெளிவுபடுத்தியிருக்கிறார். அவர்கள் ந. பிச்சமூர்த்தியும், கு.ப.ராவும். (க. உமாமகேஸ்வரி, மணிக்கொடி இதழ்க் கவிதைகள், எம்ஃபில் ஆய்வேடு, பாரதியார் பல்கலைக்கழகம்)

எனவே இவர்கள் இருவரும்தான் பாரதியாருக்குப் பின் புதுக்கவிதையை அறிமுகம் செய்த மூல முதல்வர்கள் ஆவர். மணிக்கொடியில் கு.ப.ரா. எழுதியவை, கலா மோகினியில் அவர் எழுதியவை எல்லாம் சேர்த்து இருபத்தொன்பது கவிதைகளைப்

படைத்தார். ந. பிச்சமூர்த்தி மணிக்கொடியில் எழுதியவை எட்டுக் கவிதைகள். ஆனால் பிற்காலத்தில் புதுக்கவிதையில் அவர் விசுவரூபம் பூண்டார். எதிர்பாராத மரணத்தால் (1944) கு.ப.ரா. செய்திருக்க வேண்டிய சாதனைகள் தடைபட்டுப் போயின.

**'மாந்தோப்பு வஸந்தத்தின் பட்டாடை உடுத்திருக்கிறது**
**மலர்கள் வாசம் கமழ்கிறது'**

'பளிச்' சென்று மனதைக் கௌவிக் கொள்கிறது ந.பி.யின் முதல்வரி. கவிதை சொல்ல வரும் செய்தியும் புதிதாக முன் நிற்கிறது.

மரத்திலிருந்து ஆண்குயில் காதற் கனல் பெருகிக், கரை யுடைந்து போனதனால்,

**'நெஞ்சத்தின் வேர்கள் கருகுகின்றன**
**குயிலி! காதல் நீரை வார்த்துத் தீயை அணைப்பாய்**
**கருகிய வேர்களுக்கு உயிரை ஊட்டுவாய்'**

என அழைப்பு விடுகிறது. அடுத்த கொல்லையிலிருந்த பெண் குயில் பதிலளிக்கிறது. 'என்ன சோகம்', என்ன இனிமை!' என்று வியக்கிறார் கவிஞர். பெண்குயில் சொல்லுகிறது.

**'தனிமை உன் குரலால் தணலாக்கிவிட்டது**
**தணல் உன் குரலால் ஜ்வாலையாகிறது**
**என் நெருப்பு உன் நெருப்பை அணைக்குமா?**
**காதல் தீர்வதைவிட இக்கிளர்ச்சியே போதை**
**இத்துன்பமே இன்பம்**
**குயிலா! நெருப்பை வளர்ப்போம்'.**

இந்தக் காதல் புதியது. 'பிரிவினையின் இன்பம் இணையற்றது.' அது தெய்வ லீலை என்று பேசுகிறார் கவிஞர்.

சொல்லும் முறையும், சொல்லும் பொருளும் புதிதாகிற ரசவாத வித்தையை முதல் கவிதையிலேயே புலப்படுத்தி விடுகிறார்.

ஒரு கவிதை வெவ்வேறு வண்ணங்களின் கலவையாகிற தொழில் நுட்பத்தை ந.பி. தம் கவிதைகளினூடே பயன்படுத்தி இருக்கிறார். பச்சை நிறக் காம்பு, நீல இதழ்கள், மஞ்சள் நிற

மகரந்த வட்டம் என்பன கொண்டமைந்த மலரைப் போல் விரிகின்றன ந.பி.யின் கவிதைகள். இந்த முப்பரிமாணம் பெரும்பாலான கவிதைகளின் வடிவமாகிறது.

விட்டில்கள் ஒன்றன் பின் ஒன்றாய் விளக்கில் விழுந்து மாய்கின்றன. 'அட கதையே! விளக்குப் பூச்சியா மாய்வதற்கு உதாரணம்' என்ற வினாவுடன் கவிதை தொடங்குகிறது. சக்தி தூண்ட' விரையும் விட்டில்கள் இரண்டாவது காட்சி. தறிகெட்ட மரணத்துக்கு எடுத்துக்காட்டாகப் பேசப்படும் இந்த நிகழ்வு கவிஞருக்கு வேறொரு பார்வையைத் தருகிறது.

**'அதான் உருமாற்றும் தெய்வ முயற்சி**
**அத்வைத சாதனை'**

தமிழ்ப் புதுக்கவிதையைத் தங்கள் வரலாற்றுக் கடமையாக உணர்ந்து படைத்த ந. பிச்சமூர்த்தி, கு.ப.ரா. ஆகியோர் கவிதைகளைக் குறித்து இங்கு அறிமுகம் செய்து கெள்ளலாம்.

ந.பிச்சமூர்த்தி (1900 – 1977) : 1924 இல் 'காதல்' என்ற புதுக்கவிதையுடன் தொடங்குகிறது இவருடைய கவிதைப் பயணம். மொத்தமாகக் கிடைக்கும் கவிதைகளின் எண்ணிக்கை 83.

மணிக்கொடியில் எழுதத் தொடங்கி, கலாமோகினி, தினமணி, எழுத்து எனப் பல இதழ்களிலும் பிச்சமூர்த்தி தன் காவிய உலகை விரிவுபடுத்திக் கொண்டார். 1937 முதல் 1944 வரை கவிதைகள் எழுதிய ந.பி. அதன்பின் பதினைந்தாண்டுகள் மௌனமாகிவிட்டார். 1959 இல் மீண்டும் எழுதத் தொடங்கி 'எழுத்து' இதழில் புதுக் கவிதையின் மறுபிறப்புக்கு வித்திட்டார்.

ந.பி.யின் இரண்டாவது காலக்கட்டக் கவிதைகளை முன் வைத்து, சுந்தர ராமசாமி, 'பிச்சமூர்த்தியின் இரண்டாவது பிறப்புத் தான் அவருடைய முக்கியமான பிறப்பு' என்றும், இதற்குக் களம் அமைத்துத் தந்த சி.சு. செல்லப்பாவை, 'இந்தப் பிறப்புக்கு இங்கித அனுசரணைகளைக் கூட்டியவர்' என்றும் குறிப்பிட்டிருப்பது கவனத்துக்குரியது. (சுந்தரராமசாமி, ந. பிச்சமூர்த்தியின் கலை மரபும் மனித நேயமும், ப.xiv, 1991)

பாரதியாரும் விட்மனும் இவருடைய கவிதைக் கனலை ஊதி விட்டவர்கள் என்று முன்னரே பார்த்தோம். தன்னுடைய கவிதை முயற்சி புதிதென்பதை ந.பி. நன்கு உணர்ந்திருந்தார்.

> 'கவிதை இனி காதுக்கு மட்டுமல்ல. அச்சு இயந்திரத்துக்குப் பிறகு கவிதையில் கண்ணுக்கும் முக்கிய இடமுண்டு. உரைநடைக் கவிதை இதை நன்றாய் உணருகிறது' (வல்லிக்கண்ணன், பு.க.தோ.வ., ப.58)

என்று அவர் தெளிவுபடுத்தியிருக்கிறார்.

புதுக்கவிதை வசன வடிவம் கொண்டது தான். ஆனாலும் வசனத்தை மீறிய கலையழகு அதன் சொற்களை மீறித் ததும்பி வழிகிறது. இந்த நேர்த்தியை முதல் கவிதையின் முதல் வரியிலேயே சாதித்தவர் ந. பிச்சமூர்த்தி. 'காதல்' கவிதை இப்படித் தொடங்குகிறது.

> **'ஜோதியின் அகண்டம் ஜீவாணுவை அழைக்கிறது**
> **லயம்!'**

இது கவிதையின் மூன்றாம் கூறு. விழுந்து மாய்கிற விளக்குப் பூச்சியின் செய்கையில் (பரம-ஜீவ) இறை - உயிர்க் கலப்பைக் காண்கிறார் கவிஞர். மாறுபட்ட இந்தப் பார்வை 'தீக்குளி' கவிதையாகிறது.

'கிளிக் குஞ்சு' என்ற தொடக்க காலக் கவிதையும் இந்தத் தத்துவத்தையே இழைக்கிறது. கிளிக் குஞ்சுக்குக் கூடு சிறை என்பதாகப் பேசப்படும் வளமையான கருத்தோட்டத்துக்கு எதிர்ப்பாய்ச்சலிடுகிறது கவிதை.

> **'உன் பஞ்சரம் சிறையல்ல**
> **கம்பிகள் இறகின் வைரியல்ல'**

என்று சொல்லிவிட்டு, மனக்கிளியை அழைக்கத் தொடங்கும் கவிஞர்,

> **'உடல் பஞ்சரமல்ல**
> **புலன்கள் பஞ்சரத்தின் கம்பியல்ல**

**வெளியும் ஒளியும் நுழையும் பலகணி**
**தெய்வம் பேச்சுக் கேட்கும் காது'**

என்று தத்துவம் மொழிய ஆரம்பிக்கிறார். மறுதலையான பார்வைப் பாங்கு பிச்சமூர்த்தி கவிதைகளின் ஒரு தனிக்கூறு.

இயற்கையோடும், இயற்கை நிகழ்வுகளோடும் கலந்து நின்று, அறிவியலும், ஆன்மிகமும், உணர்வியலும் சுருதி சேர்க்கக் கவிதைகளைப் படைப்பதும் ந.பி.யின்.மற்றொரு கவிதை நெறி. 'ஒளியின் அழைப்பு' - கவிதையைப் பார்ப்போம்.

வானெங்கும் கிளை விரித்த ஒரு பெருமரம். அதனடியில் இரத்தம் செத்த ஒரு சோனிக் கமுகு. 'பெருமரத்துப் பெரும்பசி சிறுமரத்தின் தலையில் கை வைத்து விட்டது.' அதுதான் வாழ்க்கைப் போர் என்று பேசுவது கவிதையின் முதல் பகுதி.

சோனிக் கமுகு ஒளியமுது தேடி உடலை நெளித்து, வளைத்துப் படர்வதை இரண்டாம் பகுதி பேசுகிறது.

**'அதான் வாழ்க்கைப் போர்**
**முண்டி மோதும் துணிவே இன்பம்'**

மூன்றாம் பகுதி இன்னொரு தளத்துக்கு உயர்கிறது. மனித உயிரைச் சோனிக் கமுகாகக் காண்கிறது கவிஞர் மனம். 'நானும் ஒரு கமுகு, சோனிக் கமுகு' என்று உருவகப்படுத்திக் கொள்ளும் ந.பி. அந்தக் கமுகு பழமை இருட்டில் சிக்கி 'உலகம் பொய் சாவு மெய்' என்கிற சாஸ்திரீயப் புலம்பலில் தவிக்கிறதாம். சோனியாகாமல் எப்படி இருக்க முடியும்?

கவிதை அடுத்த எல்லையைத் தொடுகிறது. அங்கே வாழ்வுப் போரில் வெற்றிக் கோட்டைத் தொடும் உத்தி புலப்படுத்தப்படுகிறது.

**'அழகும் அத்யாத்மமும் அழைக்கின்றன**
**ஜீவா! விழியை உயர்த்து**
**சூழ்வின் இருள் என்ன செய்யும்?**
**அமுதத்தை நம்பு.**
**ஒளியை நாடு,**

**கழுகு பெற்ற வெற்றி நமக்கும் கூடும்**
**சூழ்வின் இருள் என்ன செய்யும்?'**

ஒளியை நாடும் மரத்தின் அறிவியல் உண்மைக்குள்ளே மனித விழிப்பின் தத்துவம் பொதிந்து வைக்கப்படுகிறது.

கவிதைக்குள் கருத்து எதுவும் இருக்க வேண்டியதில்லை என்று சொல்லும் கண்மூடித்தனத்தை வெகு லாவகமாகப் புறந்தள்ளி, 'தன்னம்பிக்கையின் வேர்களை வலுப்படுத்துகிறது பிச்சமூர்த்தியின் தலைசிறந்த இக்கவிதை.

படைப்பு ஓர் அனுபவம். அனுபவத்தைச் சொல்லுக்குள் அகப்படுத்த முயலும் விளையாட்டு. வார்த்தைகளுக்குள் வசப்பட மறுக்கும் உணர்வுகளைத் தொட்டும் தொடாமலும் மீட்டிப் பார்க்கும் தேடல். இந்த நுண்ணிய தேடலைச் சொல்லும் அழகிய கவிதை 'கிளிக் கூண்டு'.

காவிரிக் கரை மணலில் குழந்தைகள் கிளிக் கூண்டு வனையும் விளையாட்டைச் சொல்லத்தொடங்கும் கவிஞர் வழக்கம்போல் அடுத்த கட்டத்துக்குச்செல்கிறார்.

**'வாழ்க்கையும் காவிரி**
**அதிலெங்கும் கிளிக்கூண்டு**
**நானொன்று கட்டினேன்**
**வார்த்தையே மணல், ஓசையே ஜலம்**
**என் தீராத வேட்கையே குவிக்கும் விரல்கள்**
**பாட்டென்னும் கூண்டொன் றமைத்தேன்**
**அழகென்னும் கிளியை அழைத்தேன்'**

கவிஞர் வயிற்றையும் வாழ்க்கையையும் விட்டு, காசையும் காலத்தையும் போக்கும் அடி முட்டாள் என்று பெரியவர்கள் இகழ்ந்தார்கள். சிறியவர்கள் புகழ்ந்தார்கள்.

**'தொட்ட வார்த்தையில் தங்கத்தைத் தேக்கினாய்**
**தொடாத தந்தியில் ஒலியை எழுப்பினாய்**
**எண்ணாத உள்ளத்தில் எழிலினை ஊற்றினாய்**
**அழகின் அம்பை வார்த்தையில் பூட்டினாய்**
**அழகுப் பித்தே வாழ்க'**

பெரியவர் தூற்றலை ஒதுக்கி, சிறியவர் வாழ்த்தை உகந்து கிளிக்கூண்டைக் கட்டும் முயற்சியைக் கவிஞர் தொடர்வதாகத் தெரிவிக்கிறார்.

கவிதைப் படைப்பின் ரகசியம் அழகு என்பதையும், புதிய முயற்சிகள் குறித்த பொருளற்ற விமர்சனங்கள் கவனத்துக்கு உரியவை அல்ல என்பதையும் நுணுக்கமாகக் கூறுகிறது 'கிளிக் கூண்டு'.

சம கால வாழ்வியல் போக்குகளையும், சிக்கல்களையும் ந.பி. தன் கவிதையில் எடுத்தாளுவதையும் காணலாம். பங்கீட்டுக் கடைகள் கருப்புச் சந்தைகள் ஆவதைப் 'பெட்டிக் கடை நாரணன்' பதிவு செய்கிறது. 'ஆத்தூரான் மூட்டை' குடும்பப் பாரத்தைப் பேசுகிறது. 'பூக்காரி' மழை நாளில் பூ விற்பனை இழந்தது போல் போர் விதைகள் கருவடையும் நாட்களில் அன்பும் அகிம்சையும் வாங்குவாரின்றிப் போன சமூக அவலம் வேதனை தருவதாய்ச் சித்திரிக்கப்படுகிறது.

**'சூலம் எழுந்தது**
**அண்டம் அதிர்ந்தது**
**உலகெங்கும் கூடாரம்**
**ஊரெங்கும் விஷப்புகை**
**வானெங்கும் பிளேனிறகு**
**தெருவெங்கும் பிணமலை'**

என்று அமைதியிழந்த உலகம் கவிஞரால் கூர்மையாகப் பேசப்படுவது குறிப்பிடத்தக்கது.

ந. பிச்சமூர்த்தி நெடுங்கவிதைகளிலும் ஈடுபாடு கொண்டவர். 'இருளும் ஒளியும்', 'அக்னி', 'உயிர்மகள்', 'மழை அரசி', 'வழித்துணை' ஆகிய கவிதைகளை எடுத்துக் காட்டலாம்.

'வழித்துணை'யில் இடையறாத கலைமுயற்சியில் குமாரபுரத் தச்சன் கைக்கோல் சமைக்க முயல்கிறான். அவன் தலைமுறை மறைகிறது. படைத்த பழங்குயவன் பிரமனுக்கும் காலம் முடிகிறது. இன்னும் கைக்கோலின் கைப்பிடி வேலை முடியவில்லை. தச்சனின் இளமை குன்றாது எரிந்தது. தச்சனுக்கோ,

'வானத் தமைதி
வடித்தெடுத்த வதனம்
தண்ணீரில் சூரிய ஒளி
தத்தளிக்கும் மேனி
காலத்தின் சுவடுகள்
மதியாத பாங்கு'

கண்ணாழ்ந்த கையில் கலையான கொம்புடன் அவன் இன்னும் பணியில் ஆழ்கிறான்.

'வழித்துணை' - கைக்கோல் அல்ல, கலை. கலைக்கு முதுமை இல்லை, கலைஞனுக்கு மரணமில்லை என்ற உன்னத உண்மை கவிதையாக வார்க்கப்படுகிறது.

ந. பிச்சமூர்த்திக்கு நவநவமான சொற்சேர்க்கைகள் கை வந்த கலை.

'இருளின் மடல்கள்', 'வானத்து ஜவந்திகள்', 'காலத்தின் ஜபமாலை', 'காலையின் வாள் வீச்சு', 'பழம் இருட்டுப் பாய் விரிப்பு', 'வேப்பிலை வால்' என்கிற தகதகக்கும் சொற்கோவைகள் நபி. கவிதை எங்கும்.

'போட்டி' என்ற கவிதையில் நபி. குறிப்பார் - பலர் கையில் முற்றுப் புள்ளிகள் வைத்திருப்பார்கள். ஆனால் தன் கையில் 'கமா' இருப்பதாக. . . .

'திடீரென்று என் கையைப் பார்த்தேன்
கமா தான் இருந்தது'

மேலும், மேலும், இன்னும், இன்னும் என்று சிந்திக்க, அனுபவிக்க ந. பிச்சமூர்த்தியின் கவிதை உலகம் எல்லைகளை விரித்துக்கொண்டே இருக்கிறது. அதற்கு முற்றுப் புள்ளி இல்லை.

ஆயினும் அவரைப் பாரதியாருக்குப் பின் வந்த மகாகவி என்று சி.சு. செல்லப்பாவைப் போல மதிப்பிட முடியுமா?

'பிச்ச மூர்த்தியை ஒரு மகாகவி என்று அழைக்க விரும்புகிறார் செல்லப்பா. ஆனால் ஆசைகள் ஒருபோதும் இலக்கிய விமர்சனத்தின் அடிப்படைகளை உருவாக்கி விடுவதில்லை. . . .

> பிச்சமூர்த்தி வெற்றி அடைந்திருக்கும் கவிதைகளின் எண்ணிக்கை கூட அவர் ஒரு மகாகவி தானா என்பதைப் பரிசீலிக்கப் போதுமானவையாக இல்லை' (சுந்தர ராமசாமி, ந.பி. கலை மரபும் மனித நேயமும், ப.xiv, 1991)

என்னும் திறனாய்வுக் கருத்து ஒரு பேருண்மை என்பதை மறுக்க இயலாது.

பாரதியாருக்குப் பின் புதுக்கவிதைத் திருப்பம் கண்ட இரட்டையரில் முதல்வர் ந. பிச்சமூர்த்தி என்று கணிப்பதே பொருத்தம்.

**கு.ப. ராஜகோபாலன் (1902–1944) :** கு.ப.ரா. தமிழ் நவீன இலக்கியத்துக்கு வாய்த்த அபூர்வமான பரிசு. தாய்மொழியான தெலுங்கும், இலக்கிய மொழியான தமிழும் தவிர ஆங்கிலம், வடமொழிகளில் தேர்ச்சி பெற்றிருந்தார். தாகூரைப் பயில்வதற்காகவே வங்க மொழியும் கற்றுத் தேர்ந்தார். பல இதழ்களில், பல புனைபெயர்களில் (கரிச்சான், பரத்வாஜன், சத்யன், இலக்கியத் தொண்டன்) எழுதியவரென்றாலும் மணிக்கொடியிலும் கலா மோகினியிலும் மட்டும் தான் கவிதை எழுதியுள்ளார். மணிக்கொடியில் இருபத்து நான்கும், கலாமோகினியில் ஐந்துமாக மொத்தம் 29 கவிதைகள் வெளிவந்துள்ளன.

கதைகளில் நுட்பமான உறவுச் சிக்கல்களைப் புலப்படுத்திய கு.ப.ரா. கவிதைகளிலும் மின்வெட்டும் உணர்வுகளை அருமையாகப் படைத்துத் தந்திருக்கிறார். புதுக்கவிதை மூலவர்கள் இருவரில் ஒருவரான கு.ப.ரா. குறைவான கவிதைகளையே படைத்திருந்தாலும், அக்கவிதைகள் ந.பியின் குரலிலிருந்து வேறுபட்டவை. அவருடைய கவிதை மொழி இன்று வரையிலும் வேறு எந்தக் கவிஞராலும் பின்பற்ற முடியாத தனி இசைலயம் சார்ந்ததாகக் கூறத்தக்கது.

நாட்டுப்புற நளினம் கொஞ்சும்படிக் கிராமியக் காதல் கவிதைகளையும் அவர் எழுதியதுண்டு.

'குட்டி அவ என்ன சோக்கு
என்ன 'சோரு' தெரியுமா?
தீண்டாத சாதி அவ
கலியன் சாம்பான் பொண்ணுடா!
மட்டசாதி ஈன சாதி
எண்ணு ஆர்ரா சொன்னவன்?
அவனெக் கொண்டு அவமுன்னே
நிறுத்தியல்ல பாக்கணும்'

என்று நீள்கிறது 'ராக்கி நெனப்பு' என்ற மணிக்கொடிக் கவிதை. மரபுக் கவிதைத் தொனி இந்தக் கவிதையில் உண்டு.

ஆனால் புதுக்கவிதை படைக்க முற்படும்போது கு.ப.ராவின் மொழியும் புது வார்ப்பாகி விடுகிறது. உழவும் வயலுமாகக் கிடக்கும் தஞ்சைச் சீமையின் புதல்வர் என்பதால், அதன் எதிரொலிகளான கவிதைகளும் அவரிடம் பிறந்ததுண்டு.

'ஏர் புதிதா? என்ற கவிதையில் புதிதாகத் தொடங்கும் உழவு ஒரு நம்பிக்கை அத்தியாயமாக விரிகிறது.

'ஏர் புதிதன்று, ஏரும் நுகத்தடி கண்டது
காடு புதிதன்று, கரையும் பிடித்தது தான்
கை புதிதா? கார் புதிதா? இல்லை!
நாள் தான் புதிது, நட்சத்திரம் புதிது!
ஊக்கம் புதிது, உரம் புதிது!
மாட்டைத் தூண்டி, கொழுவை அழுத்து
மண்புரளும், மழை பொழியும்
நிலம் சிலிர்க்கும் பிறகு; நாற்றும் நிமிரும்
எல்லைத் தெய்வம் நிலம் காக்கும், கவலை இல்லை'

செயற்கைத் தன்மை இல்லாத இயல்பு நடை கு.ப.ராவுக்கு கதையில் மட்டுமன்று, கவிதையிலும் கைகூடியிருந்தது.

கு.ப.ரா. 'கருவளையும் கையும்' என்றொரு கவிதை எழுதி யுள்ளார். அதே தலைப்பில் ஒரு கவிதை நூல் வெளியிட அவர் ஆசை கொண்டிருந்ததாக வல்லிக்கண்ணன் குறிப்பிட்டுள்ளார். அவருடைய தனித்துவ ரேகைகள் புலனாகும்படி அதிகமாக கு.பரா. எழுதாமல் போனது இழப்பே.

ஆயினும் அபாரமான சொற் புனைவு நம் உள்ளத்தைத் தன் அழகால் அள்ளிக் கொள்கிறது. வாழ்க்கை பற்றி ஒரு கவிதை:

'வாழ்க்கை ஒரு வெற்றி ஒரு துடிப்பு
ஒரு காதற்பா, ஒரு இசை
மண்ணின் மாய மோனையில் பிறந்தது'

மண்ணின் மாய மோனை என்ற தொடர் இனம்புரியாத உவகையில் நம்மைத் தள்ளுகிறது. 'கருவளையும் கையும்', கவிதையில் பவனி வரும் ஒரு காதல் சித்திரிப்பின் அழகு ஓர் இதிகாசம்.

'கவிகள் களைப்பின்றிக் காவியம் இயற்ற
நின் கண்கள் என்ன நிலைக்காக் கவர்ச்சியில்
கருமை தட்டியவை?'

யுகம் யுகமாக மனிதனை
மாயை போல் மயக்க
உன் கருவளையும் கையும்
என்ன சொற்சுவையில்
சுருதி சேர்ந்தவை?

மானிடன் மார்பில்
ஒவ்வொரு அடியிலும் எதிரொலிக்க
உன் கால் மெட்டி
என்ன வெள்ளி இசையில்
இன்பம் கட்டியது?'

உணர்வின் நரம்புகளை ஒவ்வொரு சொல்லாலும் மீட்டி விடுகிற கு.ப.ராவின் திறன் வியப்பையும் கடந்தது.

உலகியலின் முழுச் சுவையையும் உண்டு பார்க்கத் துடிக்கும் கு.ப.ரா.வுக்கு அதுவே தத்துவமாகவும் கவிதைக்குள் இழையோடுகிறது.

'உயிரின் இன்ப ஊழியத்தில்
அடிமைகளாவோம், பாதகமில்லை
ஆத்மா, பரமாத்மா இந்தப் பேச்சு
யுகம் யுகமாகக் காது துளைத்துப் போச்சு!

அது வேண்டாம் நமக்கு
மதுக் கிண்ணத்தைப் பற்றிப் பேசினானே
அவன் யார்? - உமர் கயாம்
அவனைத் தொடர்வோம் அப்பா!'

குறைவாக எழுதினாலும் இதமாக எழுதிய கு.ப.ரா. கையாண்ட கவிதைமொழி, இறகு போல் மென்மையாக, ஆனால் வண்ணங்களை விசிறிக் கொண்டே வந்து இறங்குகிறது.

# 6. புதுமைப்பித்தனும் பிறரும்

புதுமைப்பித்தன் (1906 – 1948) : மணிக்கொடியில் புதுமைப்பித்தன் கவிதை எழுதாவிட்டாலும், பிற இதழ்களில் சிறிதும் பெரிதுமாகச் சில கவிதைகளைப் படைத்திருக்கிறார்.

1944-இல் தான் வேளூர் வெ. கந்தசாமி பிள்ளை என்ற புனைபெயரில் புதுமைப்பித்தன் கவிதை எழுதத் தொடங்கினார், என்கிறார் வல்லிக்கண்ணன். அது 'கிராம ஊழியன்' இதழில் வெளிவந்தது.

'கடவுளுக்குக் கண்ணுண்டு
கண்ணோ நெருப்பு வைக்க'

என்று தொடங்கும் கவிதை சிவபெருமான் அருளும் அழிவுமாகக் காட்சி தரும் கோலத்தை 'மரபு ஓசை'யுடன் தருகிறது.

'பூத்திருக்கும் பொட்டுப் போல்
பொறி கனலும் நெற்றிக்கண்
காத்திருக்கும் பூத
கணங்களுக்கே கைலாசம்'

என்ற முடிவிலும் அழகும் அழிவும் கலந்த காட்சி முன் வைக்கப்படுகிறது.

புதுமைப்பித்தன் கவிதைகள் சிதம்பர ரகுநாதனால் தொகுக்கப்பட்டு, 1954 இல் ஸ்டார் பிரசுர வெளியீடாக வந்தது. 18 கவிதைகளும், 19-ம் கவிதைப் பகுதியில் சில உதிரித் துணுக்கு களுமாக அமைந்திருக்கின்றன.

இக் கவிதைகளின் முக்கியப் பண்புகள் இரண்டு; சிதைவு படுத்தப்பட்டுக் கட்டுக் குலைந்த வெண்பா, கலிவெண்பா வடிவங்களாகக் கவிதைகள் விளங்குவது ஒரு பண்பு. மற்றொன்று கேலியும் குத்தலுமாக வாழ்க்கையைப் பார்க்கும் பார்வை.

'கவிதை என்றால் என்ன? யாப்பிலக்கண விதிகளைக் கவனித்து வார்த்தையைக் கோர்த்து அமைத்துவிட்டால் கவியாகுமா? கவிதையின் இலட்சணங்கள் என்ன? கவிதைக்குப் பல அம்சங்கள் உண்டு. ஆனால் அவைகளின் கூட்டுறவு மட்டும் கவிதையை உண்டாக்கி விடாது. கவிதையின் முக்கிய பாகம் அதன் ஜீவசக்தி. அது கவிஞனது உள்மனதின் உணர்ச்சி உத்வேகத்தைப் பொருத்துத்தான் இருக்கிறது' (புதுமைப்பித்தன் கவிதைகள், 1957)

புதுமைப்பித்தனுக்கு ஓசை நயத்தில் ஈடுபாடு உண்டு. 'சாம்ராட்டுகளின் சப்த ஜாலம்' என்று அதை அவர் கட்டுரைகளில் வியந்து பேசி இருக்கிறார். அதன் பிரதிபலிப்பை அவர் கவிதைகளில் காணலாம்.

'குப்பை கூளம், செத்தை
கூட்டி வைத்த
தூசு தும்பட்டம் – அத்தனைக்கும்
உப்பு, பருப்பு
உளுத்தம் பயறு
சித்தரத்தை, புளி
சீமை இலந்தை எனவே
செப்பி விலை கூறும்
வாணிபத்துக்கு
ஒப்பி வருமோ
உயர் கவிதை'

என்று எதுகை மோனை ஓசை நயங்களுடன் நடைபோடுவது புதுமைப்பித்தன் கவிதை.

வெண்பாக்களின் ஓசையை மட்டும் கவனத்தில் எடுத்துக் கொண்டு தளை தட்டப் பாடுவது புபி.யின் பாணி.

'கந்தா, கடம்பா, கதிர்வேலா கட்டழகா
சந்தார் தடந்தோளா சட்டுணுவா – இந்தவூர்
ரேடியோக் காரரெனை நெருக்குகிறார் 'லேட்'டாச்சாம்
ஓடியா ஓடியே வா'

இந்த வெண்பாக்களில் சில 'தொழில் என்னும் தலைப்பில் வந்தவை. அவற்றுள் மிகவும் புகழ்பெற்ற ஒரு வெண்பா இது:

**'பண்ணென்பார் பாவமென்பார் பண்பு மர பென்றிடுவார்**
**கண்ணைச் சொருகிக் கவியென்பார் – அண்ணாந்து**
**கொட்டாவி விட்டதெல்லாம் கூறுதமிழ்ப் பாட்டாச்சே**
**முட்டாளே இன்னமுமா பாட்டு?'**

தம் காலச் செய்யுட் கவிராயர்களைக் கேலிப் பொரு ளாக்குகிறார் புபி.

**'கள்ளம் விளைந்த களர்**
**கவியாமோ? காவியங்கள்**
**நொள்ளைக் கதை சொல்லி**
**நோஞ்ச நடை பயின்று**
**உன்னை வணங்கிடுமோ?'**

என்று சரஸ்வதியை வினவும் கவிதை 'நிசந்தானோ? சொப்பனமோ?'

'செல்லரித்த நெஞ்சின் சிறகொடிந்த கற்பனை'களைக் காவியங்கள் என்று தமுக்கடிக்கும் பேர்வழிகளைச் சவுக்கெடுத்து விரட்டும் புதுமைப்பித்தனின் 'மாகாவியம்'. நீண்ட இக்கவிதை,

**'காளான் குடை நிழலில்**
**கரப்பான் அரசிருந்த,**

கதையைச் சொல்லும். அர்த்தமற்ற கற்பனைகளைக் கிண்டல் செய்ய எழுந்தது இக்கவிதை.

'ஓடாதீர் என்ற கவிதையும், படைப்புகளை வற்றி உலர்ந்த சக்கைகளாகக் குவிப்பவர்களை ஏளனம் செய்யும் குரலாய் எழுந்தது. அப்போது கு.ப.ரா. மறைந்த நேரமென்பதால், அவருடைய குடும்ப நிதி திரட்டும் போலி முயற்சியையும் கடுமையாக விமர்சித்தது இந்தக் கவிதை.

**'இத்தனைக்கும் மேலே**
**இனி ஒன்று : அய்யா நான்**
**செத்ததற்குப் பின்னால்**
**நிதிகள் திரட்டாதீர்!**
**நினைவை விளிம்பு கட்டி**

கல்லில் வடித்து
வையாதீர்!
'வானத்து அமரன்
வந்தான் காண், வந்தது போல்
போனான் காண்' என்று
புலம்பாதீர்'

என்று எச்சரிக்கை விடுகிறார் புதுமைப்பித்தன்.

நகைச்சுவையும் அங்கதமும் விமர்சனப் பாங்குமாக எழுதிய புதுமைப்பித்தன் ஆழமாய் எழுதும் பக்குவம் உள்ளவர். அதனால் அவருடைய 'இருட்டு' வாழ்வைத் தோல்வியும் இழப்புமாகப் பார்ப்பதில் வெற்றியடைகிறது.

'செல்லும் வழி இருட்டு
செல்லும் மனம் இருட்டு
சிந்தை அறிவினிலும்
தனி இருட்டு. . .
சுமையகற்றிச் சுமை யேற்றும்
சுமைதாங்கியாய் விளங்கும்
சுமைக்குள்ளே தானியங்கிச்
சுமையேற்றும் சும்மாடே'

இத்தகைய வாழ்க்கைப் பார்வைகள் நிரம்பிய கவிதைகள் புதுமைப்பித்தனிடம் அதிகமாக இல்லை.

**பிற கவிஞர்கள் :** மணிக்கொடிக்கும் 'எழுத்து' இதழ்ப் பிறப்புக்கும் இடையில் புதுக்கவிதை பற்றிய விவாதங்கள் நடந்தன. இது பழைய மரபு தான் என்றும், தமிழ் மொழியைப் பிடித்த பீடை என்றும் இரண்டு எல்லைகள் இந்த விவாதத்தில் இருந்தன. ஆயினும் கு.ப.ரா., அ. சீனிவாச ராகவன், ந.பி., க.நா.சு. ஆகியோர் 'அழகான புதுமைகளை ஆக்கும் அறிவின் முயற்சியாக, இதனை ஆதரித்தனர்.

**க.நா. சுப்பிரமணியம்**

இந்தச் சூழலில் க.நா.சு. 1939இல் 'சூறாவளி' என்ற இலக்கிய இதழைத் தொடங்கினார். அதன் நான்காம் இதழில் அவர் 'மயன்' என்ற புனைபெயரில் கவிதை எழுதினார்.

கலைகளின் தளைகளை அறுத்தெறியும் முயற்சி என்று அவர் புதுக்கவிதையை நியாயப்படுத்தினார்.

1963-இன் இறுதியில் அவர் 'இலக்கிய வட்டம்' மாதமிருமுறை இதழைத் தொடங்கி நடத்திய போதும் புதுக்கவிதைக்கு உரிய இடம் கொடுத்து வளர்த்தார்.

> 'புதுக்கவிதை புது வாழ்வின் எதிரொலியாம். வாழ்க்கையின் இன்றைய சிக்கலைச் சிக்கலாகக்காட்டும் சிந்தனை வெறியாம். சிக்கலைச் சுலபமாக்கிச் சுகம் தேடும் மனப்பிராந்தி அன்று. . .
>
> அது இன்னும் கவிதையாகி விடவில்லை. புதுக்கவிதை எழுதுகிற பத்திருபது பேர் தொடர்ந்து எழுதி வந்தால் புதுக்கவிதை கவிதையாகிற பக்குவம் பெறலாம்.
>
> 'அதுவரை அது ஒரு சோதனைத் துறை' (இலக்கிய வட்டம் 23 அக்.64 - மேற்கோள் வல்லிக்கண்ணன் நூலிலிருந்து)

1964-விலும் புதுக்கவிதையைச் சோதனை முயற்சியாகவே கருதினார். ந.பி.யின் புகழ்பெற்ற வழித்துணை கவிதையைக் கடுமையாக விமர்சித்து 'வலிகுன்றிய' சிந்தனையாகக் க.நா.சு. எழுதியுள்ளது குறிப்பிடத்தக்கது.

சூறாவளி இதழில் டி.கே. துரைஸ்வாமி, சுந்தரராமசாமி இருவருடைய கவிதைகளும் வெளியிடப்பட்டன.

க.நா.சு. 'மயன்' என்ற புனைபெயரில் கவிதைகள் பல எழுதினார். 1989-லேயே ஒரு தனித் தொகுப்பாகவும் இவை வெளிவந்திருக்கின்றன. ஏதோ புதிது பிறக்கிறது என்ற சிலிர்ப்பு க.நா.சு.வுக்கு இருந்தது என்று சொல்லலாமே ஒழிய முழுவதுமாகப் புதுக்கவிதை குறித்த தெளிவு அவருக்கு இருந்ததென்று கொள்ள முடியவில்லை.

ந.பி.யைக் கவிஞராகவோ, அல்லது புதுக்கவிதை படைக்கும் கவிஞராகவோ ஏற்றுக் கொள்ளாத க.நா.சு. (க.நா.

சுப்பிரமண்யம், புதுக்கவிதைகள் ப.13, 1989) ஷண்முக சுப்பையாவைக் கொண்டாடுவதன் புதிரை விளங்கிக் கொள்ள முடியவில்லை. வார்த்தைச் சேர்க்கைகள் ஒரு தரம் ஒலித்து மீண்டும் உள்ளத்தில் எதிரொலிப்பது, சம காலச் சிக்கல்களைப் பிரதிபலிப்பது, புரியாமையிலிருந்து புரிதலை நோக்கிய நகர்வு, நள்ளிரவில் விழிப்பு வந்து காரணகாரியமே இல்லாமல் ஒரு கவிதை வரி திடீரெனப் புதுப்பொருள் தருவது என்ற நான்கு அடையாளங்கள் கவிதைக்குரிய நல்லடையாளமாகக் க.நா.சு. குறித்திருப்பது (சரஸ்வதி, 1959) அவருடைய தெளிவற்ற கவிதை இலக்கணத்துக்கு அடையாளமாகும்.

மேற்குறித்த பண்புகளைக் கொண்ட நா. காமராசன், மு. மேத்தா கவிதைகளை அவர் நிரகாரித்திருப்பதால் அவரை நம்மால் புரிந்து கொள்ள முடியவில்லை.

க.நா.சு.வின் பெரும்பாலான கவிதைகள் அப்பட்டமான உரைநடை தான். 'அபஸ்வரம்' கவிதை இப்படித் தொடங்குகிறது.

**'வேப்ப மரத்தடி வீட்டில்**
**பரமேசுவர அய்யர் ஹோட்டலுக்குப் பின்னால்**
**ஐந்தாவது பாரம் படித்துக் கொண்டிருந்த போது**
**என் தாயார் இறந்து போனாள்'**

இதை வேறு யாராவது எழுதியிருந்தால் கவிதை என்று சொல்வார்களா?

வாக்கியங்களை மனம் போனபடிக் குறுக்கியும், நீட்டியும் எழுதி வடிவப்படுத்துவது க.நா.சு. இயல்பு.

**'மல்லாந்து படுத்துக் கால் நீட்டிக்**
**குறுக்**
**கிக் கயிற்றின் நுனியைப் பல்லால் கடித்திழுத்துத்**
**தாவி எழுந்த வெள்ளைப்**
**பந்தாக'**

இம்மாதிரி வடிவம் Cummings போன்ற ஆங்கிலக் கவிஞர்களிடம் அவர் இரவல் பெற்றதாகலாம். வாசகனிடம் இதனால் விளைவு ஏதும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. இதர

பந்தமும், நாக பந்தமும், கோ மூத்திரியும் ஏற்கெனவே தமிழ்க் கவிதை பார்த்தது தானே!

பாடு பொருள்களாகக் கநா.சு. எடுத்துக் கொண்டவற்றில் பன்மைத் தன்மை உண்டு என்பது ஒரு சிறப்பு. மணப்பெண், பேச்சாளர், விளையாடும் பூனைக்குட்டி, 'ஆ' என்று முடியும் கவிதை, அகராதி, காசியும் பம்பாயும் - இப்படியாகப் பல்வேறு தலைப்புகளில் எழுதி இருக்கிறார்.

எனினும் க.நா.சு.வின் கவிதை ஓரிரு இடங்களில் மனதைத் தொடத்தான் செய்கிறது. 'உயில்' என்ற நீண்ட கவிதையை அவ்வாறு கூறலாம்.

**'என் உயிலை எழுதிவைக்க வேண்டிய நாள்**
**வந்து விட்டது. சொத்து ஒன்றும் இல்லாவிட்டாலும்**
**உயில் எழுத வேண்டும் – அது ஒரு புருஷ லட்சணம்**
**என் பெட்டிகளில் நிரம்பியுள்ள கிழிசல்**
**காகிதங்களை எல்லாம் உலகத்துச் சர்வகலா**
**சாலைகளுக்குத் தந்துவிடுகிறேன் – அதைவிடச்**
**சிறப்பாக அவர்களால் கிழிக்க முடியாது. நான்**
**உபயோகிக்காத உள்ளத்தையும் இல்லாததையும்**
**எனக்குப் பின்வருகிற கவிகளுக்கு அளித்து**
**விடுகிறேன். நான் சம்பாதித்த சொல்ப**
**ஊதியத்தை என்னை எழுத்தாளனாக்கிப்**
**பெருமை கொள்ள எண்ணி நம்பிக்கையுடன்**
**உயிர்நீத்த என் தகப்பானருக்குத் தந்து**
**விடுகிறேன்......**

இவ்வாறு முரண்களின் அழகோடு நீண்டு செல்லும் கவிதை அருமையானது. 'உயில்' கவிதையின் முடிவு வெகு சிறப்பு.

**'வேறு ஒன்றும்**
**எனது என்று சொல்ல சாகும் சமயத்தில்**
**என்னிடம் இருக்கக் கூடாது. காதற்ற**
**ஊசியும் உடன் வராது காண் என்று**
**சொன்னவர் வாக்கு என் விஷயத்தில்**
**பலிக்கட்டும். என் பெயரையும் நான்**
**துறந்து விடுகிறேன் – என் பெயரை**

**யாருக்கு இஷ்டமோ அவர்கள்**
**எடுத்துக் கொள்ளட்டும்'.**

இது போன்ற உயரனுபவம் தருகிற கவிதைகளைக் க.நா.சு. அநேகமாக எழுதவே இல்லை. மேலை இலக்கியங்களைத் தன் வசப்படுத்திக்கொள்ள முடிந்த அவரால் தமிழில் தன் அனுபவச் சாரத்தைக் கவிதையாகத் தர முடியாமல் போனது பேரிழப்பே.

## மற்ற கவிஞர்கள்

வல்லிக்கண்ணன், திருலோகசீதாராம், தி.க.சி. ஆகியோர் புதுக்கவிதை எழுத முயன்றவர்கள். இவர்களால் புதுக்கவிதை வளம் பெருகியதாகக் கூற முடியவில்லை.

# 7. 'எழுத்து' - புதுக்கவிதையின் வெற்றிக்கொடி

தமிழில் இன்று தழைத்து வளர்ந்து விட்ட புதுக்கவிதைக்கு அடித்தளம் முன்னரே இடப்பட்டிருந்தாலும் சி.சு. செல்லப்பாவின் 'எழுத்து' இதழ் தோன்றாதிருந்தால் அது முளையிலே கருகிப்போயிருக்கக் கூடும்.

பல்வேறு இதழ்களில் எழுத்தாளர், துணை ஆசிரியர் எனப் பணிபுரிந்த சி.சு. செல்லப்பா 1959 ஜனவரியில் 'எழுத்து' இதழைத் தொடங்கினார்.

> 'இலக்கிய அபிப்பிராயம் சம்பந்தமாக மாறுபட்ட கருத்துக்களுக்குக் களமாக எழுத்து அமைவது போலவே, இலக்கியத் தரமான எத்தகைய புதுச் சோதனைகளுக்கும் எழுத்து இடம் தரும்'

என்று தெளிவான கொள்கைப் பிரகடனம் செய்திருந்தார் சி.சு. செல்லப்பா.

திறனாய்வு, படைப்பு என்று தீவிரமாகக் களம் இறங்கிய எழுத்து இதழில் எதிர்பாரா வண்ணம் புதுக்கவிதை பச்சை பிடித்துப் பால்கதிர் பிடித்துச் செழுமையுற்றது. தொடக்க இதழ்களில் ந.பி.யும், க.நா.சு.வும் புதுக்கவிதை எழுதத் தொடங்கினர். இந்தத் தாக்கத்தின் தீவிரத்தால் பல புதுக்கவிதைப் படைப்பாளிகள் இந்தக் களத்தில் துணிவுடன் இறங்கினர்.

'எழுத்து' இதழ் தந்த அருமையான புதுக்கவிதைப் படைப்பாளிகளாக, தி.சோ. வேணுகோபாலன், எஸ். வைதீசுவரன், டி.கே. துரைஸ்வாமி (நகுலன்), சுந்தரராமசாமி (பசுவய்யா), சி. மணி (சி. பழனிசாமி), தருமு சிவராம், ஷண்முக சுப்பையா ஆகியோரைச் சிறப்பாகச் சொல்ல வேண்டும். நபி. குறித்து முன்பே பார்த்திருக்கிறோம்.

வேறு சில இளங்கவிஞர்களும் எழுத்து இதழில் எழுதி இருக்கிறார்கள் (இரா. மீனாட்சி, நா. காமராசன், ந. முத்துச்சாமி, சுப. கோ. நாராயணசாமி போன்றோர்). 1962 அக்டோபரில் எழுத்து சி.சு.செல்லப்பா, 'புதுக்குரல்கள்' தொகுப்பை வெளியிட்டது ஒரு வரலாற்று நிகழ்வாகும்.

1958 இல் புதிதாய் முளைத்த கவிதைக்கு ஒரு பெயர் சூட்டக் கருதிப் 'புதுக்கவிதை' என்று 'நாமகரணம்' செய்தவர் க.நா. சுப்பிரமணியம். இதனை அவரே தம் கவிதைத் தொகுப்பு 1986 இல் வெளிவந்த போது குறிப்பிட்டு எழுதியிருக்கிறார். 'எழுத்து' இதழில் முகம் காட்டி முதிர்ச்சி பெற்ற சில முக்கியமான கவிஞர்களை இனிக் காண்போம்.

**ஷண்முக சுப்பையா :** எழுத்து காலக்கட்டத்தில் நிறைய நிறையப் புதுக்கவிதைகள் படைத்துத் தம் பெயரைப் பதிவு செய்து கொண்டவர் ஷண்முக சுப்பையா. க.நா.சு.வால் அடிக்கடிக் குறிப்பிடப்பட்ட பெயர் இவருடையது.

> 'மிகச் சிறந்த கவிஞர்களின் படைப்புக்களில் நாம் உச்ச கட்டங்கள் என்ற இடங்கள் ஒரு அபூர்வமான விவரிக்க இயலாத ஒரு எளிமை, தெளிவு - சிக்கல் படைத்திருப்பதைப் பார்க்கலாம். இத்தகைய ஒரு தன்மையை இங்கும் பார்க்கலாம்'.

என்று நகுலன் இவர் கவிதைகளைப் பற்றிக் கூறியிருக்கிறார். 1975 இல் இவர் கவிதைகளை எழுத்து பிரசுரம் தொகுத்துத் தந்திருக்கிறது.

ஷண்முக சுப்பையா எழுதியது போன்ற பல கவிதைகள் இன்றைய வணிக இதழ்களில் ஏராளமாக வருகின்றன.

> **'உலகைத் திருத்த**
> **உன்னைத் திருத்து**
> **உன்னைத் திருத்த**
> **உலகைத் திருத்து'**

என்பது போன்றோ,

'எங்களூர் பூதப்பாண்டி
அங்குண்டோர்
இரட்டைக் காளை வண்டி
இடது காளை நொண்டி
வலது காளை சண்டி
வண்டிக்காரன் பாண்டி
வந்தது ஓர் ஆண்டி
உங்களூரில் உண்டோ
இது போலொரு
இரட்டைக் காளை வண்டி'

என்பது போன்றோ இவர் எழுதிய கவிதைகள் என்ன அளவு கோலை வைத்துக் கொண்டாடப்பட்டன என்பது புலனாக வில்லை.

மிக மிக அரிதாகத் தான் ஒரு பொறியை எழுப்பும் கவிதையை இவரிடம் காண முடிகிறது

'தலையைச் சொரி
நாக்கைக் கடி!
பல்லை இளி!
முதுகை வளை
காலைச் சேர்!
என்ன இது?
வயிற்றைக் கேள்
சொல்லுமது'

என்பது 'வயிறு' என்ற கவிதை, பெரிதாகப் பேசப்பட்ட கவிதை. எளிமையாக ஓர் உண்மை சொல்லப்பட்டிருக்கிறது.

'எழுத்து' கவிஞர்களில் இவரை முக்கியமான கவிஞராகக் கருத எவ்வகையிலும் சாத்தியமில்லை.

**எஸ். வைதீஸ்வரன் :** 'எழுத்து' யுகத்தில் அறிமுகமாகி இன்றுவரை இயங்கிக் கொண்டிருக்கும் கவிஞர் எஸ். வைதீஸ்வரன். அவரே தன் 'நகரச் சுவர்கள்' தொகுப்பில் குறிப்பிட்டிருப்பது போல 1961 இல் 'கிணற்றில் விழுந்த நிலவு' கவிதையுடன் பயணம் தொடங்கினார்.

'கைகளில் வானமும்
கால்களில் மண்ணும் தொட்டு
பூமியை பொதுவான
விழிகளால் காணும்
ஞானம் தேடி
மௌனக் கரைகளில்
மனம் திறந்து
காத்திருப்பவன் நான்'

என்று தன்னை அவர் அறிமுகப்படுத்திக் கொண்டிருப்பது சில அடையாளங்களைப் புலப்படுத்துகிறது.

இயற்கை, மண்ணுலக வாழ்க்கை - இவற்றைப் புனையும் போது அமைதியில் திளைக்கும் புதுமை - இதுதான் எஸ். வைதீஸ்வரனின் கவிதைச் சாரம்.

அவருடைய முதல் கவிதையான 'கிணற்றில் விழுந்த நிலவு' இந்தக் கவிதைப் பண்புகள் அனைத்தும் கொண்டது. ஒரு கவி மனம் கிணற்று நீரில் அலைபடும் நிலவுக்காகவும் பரிவு கொள்கிறது.

'கிணற்றில் விழுந்த நிலவைக் கீழிறங்கித் தூக்கி விடு
நனைந்த அவளுடலை நழுவாமல் தூக்கி விடு
மணக்கும் அவள் உடலை மணல் மீது தோய விடு
நடுக்கும் ஒளியுடலை நாணல்கொண்டு போர்த்தி விடு'

எனத் தொடங்கும் கவிதை, இந்த நிகழ்வை யாருக்கும் தெரியாத ரகசிமாய்க் காப்பாற்றி வான்முனையில் பத்திரமாய்க் கொண்டு போய் நிலவை விட்டுவிடும்படிக் கேட்டுக் கொண்டு நிறைவு எய்துகிறது.

எல்லையற்ற பரிவைப் படிமமாக்கித் தருகிற வித்தை எஸ். வைதீஸ்வரனின் தனிச் சிறப்பு. வாழ்க்கையைப் 'பொன்னைத் துரத்தும் போட்டிச் சக்கரம்' என்று கூறி,

'என்னையும் மாட்டிக் கொண்டேன்
ஏறியிறங்கித் தேய்ந்து திரிந்தேன்'

என அவலச் சித்திரம் வரைகிறார்.

பசியினால் நீளும் எலும்புக்கரமான பிச்சைக்காரியைச்

'சாலை யோரத்தில்
கிடக்கும் அந்தத் தப்புச்செடி'

என்று சித்திரித்து,

'இன்னும் காற்றுக்கு ஆடுவது
கோரமான அதிசயம்'

என்று பேசும்போது அவரது படிமங்களில் மனித வாழ்க்கை தேங்கிக் கிடப்பதைக் காண முடிகிறது.

வெறும் படிம அழகு என்று கருதத்தக்க கவிதைகளையும் எஸ். வை. படைத்ததுண்டு.

'உலகு பெரும் இளநீர்த் தேங்காய்
அதில்
சொருகிய மரங்கள்
பலபல ஸ்ட்ராக்கள்'

என்றோ,

'செத்துக் கிடக்கும் காகம்
யாரோ கசக்கிய கார்பன் காகிதம்'

என்றோ,

'கோடைச் சூரியன்
கொதித் தெழுந்த முள்ளம் பன்றி'

என்றோ அவர் படிமங்களாய்ச் சித்திரப்படுத்தும் போது அவருக்குள் மறைந்து கிடக்கும் ஓவியன் வெளியே வருகிறான். நம் காலத்திய மாபெரும் படிமக் கவிஞர் தருமு சிவராம் ஒரு நல்ல ஓவியர் என்பதை இங்கு நினைவுகூரலாம்.

படிமக் கலைஞர் என்பதனால் தான் நகரத்துச் சுவர்களை அவரால் அழகான காட்சிப் படிமம் ஆக்க முடிகின்றது.

'இந்த நகரச் சுவர்கள்
நகராத பாம்புகள்
அடிக்கடி வால் போஸ்டர் தோல்

வளர்ந்து தடித்து விட
நள்ளிரவில்
அவசரமாய்ச் சட்டை யுரித்துப்
புதுத் தோலில் விடிந்து
பளபளக்கும்
பட்டணத்துப் பாம்புகள் –
இந்த நகரத்துச் சுவர்கள்.'

இவ்வாறு கூறும்போதே நகரின் அவலமும், நகரச் சுவர்கள் பாம்புகளாகி நம்மை அலைக்கழிக்கும் வஞ்சமும் விளக்கமாகி விடுகின்றன.

பாம்பு, காகம், சுவர், நிழல், சிலந்தி என்பன திரும்பத் திரும்ப அவருக்குள் படிம உருக்கொள்கின்றன.

ஆர். ராஜகோபாலன் குறிப்பிடுவது போல ஓர் அழகிய மென்மைச் சூரியன் வரையும் அலைகளின் வரிசை போல் எஸ். வைதீஸ்வரன் கவிதைகளில் வந்து வந்து போகிறது. ஆனால் வாழ்வின் குரூர சத்தியங்களையும் அந்த மென்மை தொட்டுக் காட்டி விட்டுப் போகிறது. 'எனக்குள் ஒரு கிளி' கவிதையில் ஒரு கூண்டுக் கிளி பேருந்தில் பயணம் செல்கிற காட்சி வருகிறது

அந்தக் கூண்டுக்கிளி 'பஸ்ஸு'க்குள் தொங்கும் மனிதனைப் பார்க்கிறது. இருவரும் அனுபவிக்கும் துயர் ஒன்றே யாகிறது.

'வீதிப் பள்ளங்களில்
விழுந்து வெகுண்டு
பக்கக் கம்பிகளில் தலைமோதி
தோல்பிடித்துத் தொங்கும்
நானும், கிளியும்
பொதுவான துயரத்தால்
கொஞ்சம் மகிழ்ந்து போகிறோம்'

என்கிறார் கவிஞர். அபத்தங்களினூடே சஞ்சரிக்கும் வாழ்க்கையும், அதன் ஈவிரக்கமற்ற இயக்கமும் ஓவியமாக உள்ளத்தைத் தவிக்க வைக்கின்றன எஸ். வைதீஸ்வரன் கவிதைகளில்.

இரவல்களை நகல் செய்யாத அசல் தன்மை எஸ். வைதீஸ்வரன் கவிதைகளுக்கு உண்டு.

தி.சோ. வேணுகோபாலன் : 'எழுத்து' செழுமையுடன் அறிமுகம் செய்த மற்றொரு கவிஞர் தி.சோ. வேணுகோபாலன்.

**'ஏதோ சொல்ல**
**எழுது கோல் எடுத்திங்கு**
**எழுதிய பின்னர்**
**ஏமாறிப் போய்**
**புரியாப் புதிராய்**
**உலவிட விட்டுக்**
**காகிதம் கிறுக்கிக்**
**'கவி' யானேனே'**

என்று தி.சோ.வே. எழுதியிருந்த போதிலும் அவர் ஒரு குறிப்பிடத்தக்க படைப்பாளி.

> 'பழைய நடையில் உருவங்களில் எழுதும் தெம்புண்டு. எழுதியும் இருக்கிறேன். சீர் வரிசையும், அடிக்கணக்கும், எதுகை மோனை நச்சரிப்பும், இந்த ஜெட் யுகத்து உணர்ச்சிகளுக்குத் தடையாக இருப்பதால் புதிய முறையைக் கைக்கொள்ள நேர்ந்தது. பழைய வகை மோசமானது, சாரமற்றது என்பதால் அல்ல; ஈடு கொடுக்க முடியாது என்பதால்' (கோடை வயல் : முன்னுரை 1965)

என்று எழுதும் தி.சோ.வே. அதிகம் எழுதவில்லை. ஆயினும் எழுதியவரை சத்துள்ள கவிதைகள்.

பழமை மோகத்தைக் கடுமையாகச் சாடும் 'பழம் பெருமை' மிகக் கூர்மையான கவிதை.

**'குழம்பு மாங்கொட்டை**
**குலப் பெருமை பேசிற்று**
**நட்டு வைத்துக்**
**காத்திருந்தேன்**
**நெடுமரமும் மரக்கனியும்**
**நிழலாச்சு!**

நெளிந்தது
புழு!'

அங்கதம் அகங்காரத்தின் முகத்தைக் கீறி இரத்த விளாறாக மாற்றி விடுகிறது. 'கவலை' என்ற கவிதையும்,

'விண்ணை அண்ணாந்து பார்க்கின்றோம்
பார்த்து
விடுவானேன் பெரு மூச்சு?'

என்று ஆத்திரமாய்க் கேட்கும்.

எஸ். வைதீசுவரனின் 'கிணற்றில் விழுந்த நிலவு' - கவிதைக்கு எதிர் வினையாக ஒட்டு, வெட்டு என இரு கவிதைகள் எழுதினார். முதல் கவிதையில், கற்பரசியான நிலவைத் தொடாதே, 'நீட்டிய கையை மடக்கு' என்று எழுதினார். அவள் தற்கொலை செய்யக் கிணற்றில் விழுந்திருக்கிறாள். காரணம் கவிராயர்கள் தான்.

'தேகம் கிழக் கூடாய்த்
தேயும் வரை முயங்கிப்
பாட்டெழுதும் கவிராயர். . . .
(சாகட்டும் சந்திரிகை;
செத்த பிறகேனும்)
பேச்சற்றுப் போகட்டும்
பேனா மடங்கட்டும்'

என்று மரபுக் கவிஞர்களை ஏளனம் செய்தார். 'வெட்டு' என்ற கவிதையில் நிலவை 'நாணமிலாப் பரத்தை' என்று வருணித்து விட்டு எழுதுவார்:

'நீட்டிய கையை மடக்கு
திரும்பிப் போ!
இல்லை . . . . . நில்!
எடு ஒரு கல்
'ஏசு' வரு முன்
வீசி எறி
மதி முகத்துச் சதித் தளுக்கை
அலைக்கை குலைக்கட்டும்'

இந்த இரண்டு கவிதைகளும் முரண்பட்ட பார்வைகளால் அழகைப் பகிர்ந்து கொண்டன.

'கவி வேதனை' என்ற முதல் கவிதையிலே தத்துவம் தேடும் மனது இந்தக் கவிக்குள் இருப்பது காட்டிற்று. அதன் தெறிப்புகளைத் தி.சோ.வே. கவிதைகளில் காணலாம்.

'காலம்
நீண்டு நீள்கின்ற நீளும் நெடுங்கோடு
கனவாய்
நிகழ்ச்சியாய்
கதையாய் மாறும்
'நான்'
ஒரு புள்ளி'

இந்தத் தத்துவத் தேடல் - குறைவாக எழுதினாலும் நிறைவாக வேணுகோபாலன் கவிதைகளில் தன் இருப்பைப் புலப்படுத்துகிறது.

**பசுவய்யா (சுந்தர ராமசாமி) (1931 – 2005) :** எழுத்து இதழில் தொடங்கி இலக்கிய வட்டம் முதலிய சிற்றிதழ்களின் வழியே பல்கிப் பெருகிய கவிதை இயக்கம் பசுவய்யா.

'என் வீணை மீட்டலில்
கிழிபடக் காத்திருக்கின்றன
உன்னை
நரையேற்றும் காலங்கள்'

என்று அழுத்தமாய்ப் பேசப் பசுவய்யாவின் கவிதைகள் சக்தி கொண்டு தகதகக்கின்றன.

திடுக்கீடு அவருடைய உத்திகளில் ஒன்று. தொடக்க காலக் கவிதைகளிலேயே அதனைத் திறம்படக் கையாண்டவர் அவர்.

'நகத்தை வெட்டி எறி – அழுக்குச் சேரும்
நகத்தை வெட்டி எறி – அழுக்குச் சேரும்
அகிலமே சொந்தம் அழுக்குக்கு
நகக் கண்ணும் எதற்கு அழுக்குக்கு'

இப்படித் தொடங்கும் கவிதை வாசகனைத் திடுக்கிடச் செய்கிறது எது நகம்? எது அழுக்கு?

கூரிய நகமாய் வளர்ந்து விட்ட உன் அகம் நகம். அதனை வளர விட்டால் அழுக்குச் சேரும் தானே.

நகமிருந்தால் எதிரியைப் பிறாண்டலாமே என்று கேட்கிறது மனம். உண்மைதான். நகம் வளர்த்தால் குத்தலாம், பிடுங்கலாம், கிழிக்கலாம். கடைசியில் என்ன ஆகும்? உறவையும் அது அழிக்கும்.

**'ஆரத் தழுவிய**
**அருமைக் கண்ணாளின்**
**இடது தோளில்**
**ரத்தம் கசியும்**
**வலது கை நகத்தை வெட்டியெறி – அல்லது**
**தாம்பத்திய பந்தத்தை விட்டுவிடு'**

அப்படியே இடது கை நகம் அருமைக் குழந்தையின் பிஞ்சுத் துடைகளில் ரத்தம் கசிய வைக்கும்.

நகத்தால் இன்னொரு சுகம் உண்டே, குறும்பை தோண்டலாம் அல்லவா? ஆனால்,

**'குறும்பைக்குக் குடியிருப்பு**
**குடலுக்குக் குடிமாற்றம்**
**குருதியிலும் கலந்து போம்'**

தொடக்க நாட்களிலேயே சிந்திக்க வைக்கும் கவிதைகள் பசுவய்யாவிடம் பிறந்தன.

எழுத்து இதழில் பசுவய்யா எழுதிய மகத்தான கவிதைகளில் ஒன்று 'காலம். . . .' விண்டுரைக்க முடியாத விந்தையாய் விரியும் காலத்தை அக முகமாய் ஆராய்ந்து நுட்பமான படிமங்களில் உறைய வைத்த கவிதை 'காலம்' ஆழ்ந்து சிந்திக்க வைக்கும் படைப்பு.

**'மணியின் முள்ளில் காலமில்லை**
**காலமோ**
**மாயை என்றான் சங்கரன்**

**அரவிந்தனோ லீலை என்றான்**
**லீலை தானோ என்றும் கேட்டான்**
**அறிந்தறிந்து**
**தத்துவப் பாகனையே கொல்லும்**
**யானை அது'**

மாயையும், லீலையுமாகப் புலன்களைக் கடந்து நின்ற காலத்துக்குப் பசுவய்யா ஒரு வடிவம் தந்து விடுகிறார். அது எப்படிப்பட்ட வடிவம்? இலக்கண வடிவம் தர வருகிறவர் களையே காணாமல் செய்யப் போகிற வடிவம்!

காலத்தை உணர முடிகிறது. வரையறுக்க முடியவில்லை. அது கண்ணுக்குத் தெரியாமல் விரல் மட்டும் உணரும் ஒரு சிற்ப அற்புதமோ?

**'காலம் என்ற ஒன்று**
**யாளியின் வாய்க்குள்**
**விரலுணர**
**ஓசையெழ உருண்டோடும்**
**கண்ணுக்குப் படாத**
**கல் பந்து'**

அது எங்கிருந்து வந்தது? எங்கே போகிறது? யாரால் சொல்ல முடியும்? சொல்லிப் பார்க்கிறார் பசுவய்யா. சென்ற காலம் குறையாத ஜாடி . வருங்காலம் நிறையாத ஜாடி. இடையே விழும் தேன் பெருக்காம் காலம்.

**'குறையாத ஜாடியினின்று**
**நிறையாத ஜாடிக்குள்**
**பார்வைக்குத் தெவிட்டாமல்**
**வில்லாய் வளைந்து விழும்**
**விழுந்து கொண்டேயிருக்கும்**
**கட்டித் தேன் பெருக்கு'**

காலத்தின் நெடும் பயணத்தில் அதன் மூலமும் அறியோம். முடிவும் அறியோம். ஏனெனில் இடையில் தோன்றி இடையில் மறைகிறவர்கள் நாம். காலம் நதி யென்றால் அதன் மூலமும் முடிவும் தெரியுமே என்று குதூகலிப்போம். அது நதி தான்.

ஆனால் நிலத்தடியில் ஓடும் நதி. நாம் நிகழ்காலம் என்ற கிணற்றில் மட்டுமே அதைப் பார்க்க முடியும்.

**'கிணற்றினுள்ளே**
**கண்ணுக்குத் தெரியும்**
**நதியின் பிரவாஹம்'**

என்று அற்புதம் செய்கிறது பசுவய்யாவின் கவிதை. இன்னும் ஒரு படி மேலே செல்கிறார்.

**'தேயாததை எல்லாம்**
**தேயவைத்து**
**தேய்மானம் ஒன்றே**
**தேயாதது என்று**
**தேய்ந்தும் தேயாது**
**கோலோச்சும்**
**தேய்மானத் தத்துவம்'**

ஒரு பேருண்மையை நோக்கி நகரும் கவிதை வாழ்வனுபவமாக இப்படிச் சொல்லிக் கொள்ள முனைகிறது.

**'எனக்கோ**
**கடவுள் அளித்த ரஜா**
**மரண ஊரில்**
**ஆஜராகி வேலை ஏற்க**
**யான்பெற்ற**
**காலாவதி'**

இந்தக் கவிதை மோனத்திருந்து சிந்திக்க வைக்கும் ஞானப் பிழம்பாகத் திகழ்கிறது.

புதுக் கவிதை வரலாற்றில் ஒரு துருவ நட்சத்திரம் பசுவய்யாவின் 'காலம்'.

வேறு தளங்களிலும் பசுவய்யா கவிதைப் பயணம் சென்றிருப்பதை 'நடு நிசி நாய்கள்' - கவிதைத் தொகுப்பு பிரதிபலிக்கும். அங்கதம் என்ற கூரிய அம்பு பசுவய்யாவின் படைக்கலங்களில் ஒன்று. 'கொள்கை' என்ற கவிதையில் இதைக் காணலாம்.

*'மேற்கே*
*ரொமாண்டிசிஸம்*
*நாச்சுரலிஸம்*
*ரியலிஸம்*
*அப்பால்*
*இம்ப்ரஷனிஸம்*
*என் மனைவிக்கு*
*தக்காளி*
*ரஸம்'*

நம் எழுத்துலகைச் சுற்றி வளைத்துப் பின்னியெடுக்கும் இக்கவிதை சொல்கிறது:

*'நாம் எல்லாம்*
*டமில் எழுத்தாளர்*
*நமக்கோ*
*ப்ளேஜியாரிஸம்'*

இத்தகைய கூரிய கேலிக்கணைகள் பசுவய்யாவின் அம்புப் புட்டிலில் நிறையவே உண்டு.

ஆயினும் பசுவய்யாவுக்குக் கவிதை ஓர் ஆழ்மன ஊடகமாகவும், அகத்தின் தேடலாகவும் அமைகிற நேரங்களில் எல்லாம் தெவிட்டாத அனுபவங்களின் தீராத விருந்தாகவே மாறிவிடுகின்றன. 'ஓய்ந்தேன் என மகிழாதே, உறக்கமல்ல தியானம்' என்பது அவர் பிரகடனம்.

பசுவய்யா புதுக்கவிதையின் வளம் பெருக்கிய முன்னோடியாக வரலாற்றில் இடம் பெறுகிறார்.

## நகுலன் (டி.கே. துரைஸ்வாமி)

இந்திய இதிகாசப் பின்புலமும், தமிழ் இலக்கியப் பயிற்சியும், மேலைப் படைப்பு நுட்பமும் ஒன்று கலந்த கலவை நகுலன். அவரும் எழுத்து இதழில் கவிதை யாத்திரை தொடங்கியவர். நாவல், சிறுகதை, மொழிபெயர்ப்பு எனப் பல்துறை வித்தகர்.

எண்பது வயது நிரம்பிய 2001 இல் அனைத்துக் கவிதைகளும் ஒன்றாகத் திரட்டப்பட்ட தொகுதி

வெளிவந்துள்ளது. ஆங்கிலத்திலும் கவிதை நூல்கள் வெளிவந்துள்ளன.

ஒருவகையான சித்தர் மரபு (Mystic Tradition) அவர் கவிதைகளில் இருப்பதாகக் காவ்யா சண்முக சுந்தரம் குறிப்பிடுகின்றார். 'கனவும் நனவும் கலந்து மயங்கும் கற்பனை கடந்த நிலையில் உயிர்த்தெழும் அனுபவங்கள்' என்று அவர் படைப்புகளை மதிப்பிடுவார் பேராசிரியர் கி.நாச்சிமுத்து.

'ஒரு பெருங்காப்பியத்தின் துண்டு துணுக்குகள்' என்று நகுலன் கவிதைகளைக் க.நா.சு. மதிப்பிடுவது சாலப் பொருந்தும்.

கொல்லிப் பாவை, சுசீலா, சூரல் நாற்காலி திரும்பத் திரும்ப வரும் கவிப் பொருள்கள்.

அஞ்சலி, மழை-மரம்-காற்று இரண்டும் நெடுங்கவிதைகள். இருந்த இடத்தில் இருந்த படியே ஒரு மாயப் பயணம் செய்யும் அனுபவங்கள். 'அஞ்சலி'யில் காட்சிகள் பலவாயினும் அவள் வந்து வந்து போகிறாள்:

**'அவனுக்கு**
**நீ**
**அவன் பெற்ற பரிசு**
**எனக்கு**
**நீ**
**என் குரிசு'**

என்ற வரிகளில் பின்னிப் படரும் வேதனை நிழல் கவிதை முழுவதிலும் உண்டு.

மழை-மரம்-காற்று பத்துப் பகுதிகளாக அமைந்த நெடுங்கவிதை. இக் கவிதைக்குள் அப்பா, அம்மா, நண்பர்கள், மௌனி, ஹெமிங்வே, கி.ராஜநாராயணன், குருவி, மைனா, மழை, மரம், பாரதியார், வேத மந்திரம் இத்தனையும் குழைந்து கலந்து கவிஞரின் மனம் அங்கொரு கோடும், இங்கொரு வண்ணமுமாக வரையும் அனுபவத்தைக் காணலாம்.

மூன்று, ஐந்து என்று இரண்டு நூல்கள். அவற்றில் இராவண சோகம், உறங்குகின்ற கும்பகருணன், குகன், சடாயு,

சபரி, வீடணன் என இதிகாசப் பாத்திரங்கள் புதிது புதிதான நியாயங்கள் பேசுகிறார்கள். இராவணனிடம் சூர்ப்பணகை சொல்வாள்:

'நீயும் நானும் தொலைய
உருவம் கரந்து
இருவராகி வந்த
ஒரு பெருந்தெய்வமோ
இவரிருவருந்தாமோ?'

என்று தான் காதலிக்கும் இராமனையும், இராவணனுக்குக் காமமூட்டும் சீதையையும் குறித்துப் பேசுவாள் அரக்கி.

'இராவணன் நான்
இராவணன் நான்
தோற்றாலும் வென்றாலும்
இராவணன் நான்'

என்று தடுமாறும் காமத்திலும் குலையாது பேசுவான் அரக்கன். வீடணனிடம் கும்பகருணன் எடுத்துரைக்கும் தத்துவப் பாங்கான உரை இராமாயணம் காணாதது.

'நாங்கள் அரக்கர்கள் ரத்தமும்
சதையுமாகத் தான் நாங்கள் இந்த
உலகைத் தர்சிக்கிறோம்
ஸ்பர்சிக்கிறோம்–சுவைக்கிறோம்
உணர்கிறோம். தலைவிரித்துக்
கொண்டு நிற்கும் மரங்கள்
சிறகிரண்டையும் விரித்துக்
கொண்டு அந்தரத்தில்
அம்மணமாகப் பறக்கும்
பறவைகள், நிலத்தை
ஈரம் பண்ணிக் கொண்டு ஓடும்நதிகள்–
இவைகளெல்லாம் எங்கள் தீராத
தாகத்தைத் தூண்டி விடுகிறது.
எங்களுக்கு இந்தக் காயம் ஒரு
அற்புத சிருஷ்டி. உயிர் ஒரு சக்திப்
பிரளயம்'

மோகமுற்று வாழ்கிற வாழ்வே வாழ்வு என்ற தத்துவத்தின் பிரதிநிதி ஆகிறான் கும்பகருணன்.

இப்படி இதிகாசப் பாத்திரங்கள் புதிது புதிதாய்ப் பேசுகிறார்கள் நகுலன் கவிதைகளில்.

நகுலனின் புதுக்கவிதைப் பார்வையே வேறு. ஓசைகளைத் தின்று விட்ட புதுக்கவிதையில் அவருக்கு நாட்டமில்லை.

> **ஒன்று** – 'ஓசைகளை நிறைக்க வருவதாகக் கருதப்படும் சில சொற்கள் (அசைச் சொற்கள்) எனக்கு உத்வேகம் நழுவாமல் இருக்க உதவி புரிந்தன. இரண்டு - அப்பட்டமான ஓசைகள் கூடப் பல மனநிலைகளை எழுப்ப முடியும் என்பது மூன்று - வாலரி சொன்ன மாதிரி கவிதை எழுப்பும் பரவச நிலையை வார்த்தைகளிலிருந்து பிரிக்க முடியாதென்றால், கவிதையில் வார்த்தைகள் நமது உப-போத மண்டலத்தில் ரீங்கரிப்பதற்கு ஒரு காரணம் ஓசை என்பது. நான்கு - தேய்ந்து போன இலக்கிய - மரபில் வந்த வார்த்தைகள் கூட- தாமரை, சூரியன், சந்திரன், மோகினி, பிசாசு - போன்றவை சங்கேதங்கள் என்ற அடிப்படையில் அழிந்து விடவில்லை. **ஐந்து** - புதுக்கவிதையில் பிரதான அம்சமாகக் கருதப்படும் 'புரியாத் தன்மை' கூட சற்று ஆலோசிக்கப்பட வேண்டிய விஷயம்'. அனுபவச் செறிவினால் வெளியீட்டு இறுக்கத்தால் வருவது ஒரு 'புரியாத தன்மை' என்றால், வெறும் கெட்டிக்காரத் தன்மையால் ஒரு மேல் பாங்கான 'புரியாத் தன்மை'யை சிருஷ்டிப்பது என்பதை என்னவென்று சொல்வது? இல்லாவிட்டாலும் என் அனுபவத்தில் எந்த உயர்ந்த கவிதையிலும் உச்ச கட்டம் என்பதில் அபூர்வ எளிமை, ஆழம், தெளிவு இருக்கின்றன'

புதுக்கவிதைப் பிதாமகர்களில் ஒருவரான நகுலன் முன்பு சிலர் தெளிவின்மையால் வகுத்த இலக்கணங்களை இங்குத் தகர்த்திருப்பதைப் பார்க்கலாம்.

நகுலனின் ஆழ்ந்த பார்வைக்கு எடுத்துக்காட்டாகப் பேசப்படும் கவிதைகள்:

1. 'இருப்பதற் கென்று தான்
வருகிறோம்
இல்லாமல்
போகிறோம்'

2. 'ராமச்சந்திரனா
என்று கேட்டேன்
ராமச்சந்திரன்
என்றார்
எந்த ராமச்சந்திரன்
என்று நான் கேட்கவில்லை
அவர் சொல்லவுமில்லை'

3. 'அலைகளைச் சொல்லி
பிரயோஜனமில்லை
கடல் இருக்கிற வரை'

ஒரு மந்திரத்தின் ஆழம் போல் இந்த எளிய சொற்களில் சுருதி சேர்க்க முடியுமென்றால் இருண்மை எதற்காக? நகுலன் அவர் கவிதைகளைப் போலவே ஆழமும் எளிமையும் மிக்கவர். தன்னுடைய தேவைகளைப் பாரதியார் 'காணிநிலம் வேண்டும்' கவிதையில் சொல்லிப் போயிருக்கிறார், பசுவய்யா கூட எழுதியிருக்கிறார். அந்தத் தடம் பற்றி.

'கொஞ்சம் முகம்பார்த்து தலைசீவ ஒரு
சந்திரன்
லோஷன் மணக்கும் பாத்ரூம்
என் மனக் குதிரைகள் நின்று அசைபோட
ஒரு லாயம்
என் கையெழுத்துப் பிரதியில் கண்ணோட
முகம் கொள்ளும் ஆனந்தச் சலனங்கள்
நான் காண ஒரு பெண்
சிந்திக்கையில் கோத ஒரு வெண்தாடி
சாந்த சூரியன்

**லேசான குளிர்**
**அடிமனத்தில் கவிதையின் நீரோடை'**

இந்த அடிமன விருப்பங்களையும் வென்று விடுகின்றன நகுலனின் ஆசைகள். அவ்வளவு எளிமை! அவ்வளவு ஒளிவு மறைவு பாவனை. பாசாங்கற்ற மனம்!

**'ஒரு கட்டு வெற்றிலை**
**பாக்கு சுண்ணாம்பு புகையிலை**
**வாய் கழுவ நீர்**
**ப்ளாஸ்க் நிறைய ஐஸ்**
**ஒரு புட்டி பிராந்தி**
**வத்திப்பெட்டி சிகரெட்**
**சாம்பல் தட்டு**
**பேசுவதற்கு நீ**
**நண்பா**
**இந்தச் சாவிலும்**
**ஒரு சுகம் உண்டு'**

உமார் கய்யாமின் மோகனக் கனவு இல்லை இது. நகுலன் என்ற மேதைமை சராசரி மனிதனின் தளத்துக்கு இறங்கி வரும் அபூர்வ எளிமை.

கணத்துக்குக் கணம் கிளைதாவும் குருவிகள் போல் மனமும், கவிதையும் தாவித் தாவி எழும்பிப் போகும் வாழ்க்கை ஓவியங்களின் மாறிக் கொண்டே இருக்கும் காட்சிக் கோவை நகுலனின் கவிதைகள். ஒரு மொக்கு ஒரு மரத்தின் சரித்திரத்தை உள்ளே புதைத்து வைத்திருப்பது போன்ற எளிமை ஒவ்வொரு வரியிலும்.

சி.மணி : எழுத்து தொடங்கப்பட்ட 1959 முதல் தொடர்ந்து எழுதி வரும் சி.மணிக்குக் கிழக்கும் மேற்கும் நன்கு பரிச்சயமானவை. சங்கம் முதல் கம்பன் வரையிலான பண்டைத் தமிழ் இலக்கியத்திலும் வல்லவர். இந்த வகையில் புதுக்கவிதை முன்னோடிகளில் நகுலனுக்கு இணையானவர் சி.மணி.

வேமாலி, எஸ். பழனிசாமி, செல்வம் என்ற பெயர்களிலும் கவிதைகள், கட்டுரைகள் எழுதியுள்ள சி.மணி, ஆங்கிலப் பேராசிரியராகப் பணி புரிந்தவர்.

'அறிந்ததற்கு அப்பாலுள்ள பிரக்ஞைத் தளங்களைக் கண்டறிய உதவும் சிந்தனைகள் - திருமூலரிலிருந்து, தாவோவிலிருந்து, ஜென், சூஃபி, குர்ட்ஜீஃப், ஜே.கிருஷ்ண மூர்த்தி, கார்லோஸ் காஸ்டென்டா ஈறாக - ஆனால் இன்னும் எதிலும் நிலை கொள்ள முடியாத அந்நியன் உணர்வு. இவற்றின் வெளிப்பாடுகள் ஒரு தன்மையன அல்ல. அதனால் தான் செய்நேர்த்தியும், எளிதில் எதிலும் சிக்கிக் கொண்டு விடாத ஜாக்கிரதையும், எள்ளலும், புராதனமும், நவீனமும், கலையும், விளையாட்டுத் தனமும் இவர் கவிதைகளில் கலந்து காணப்படுகின்றன.'

என 'இதுவரை' (அனைத்துக் கவிதைகளின் தொகுப்பு) நூலின் முகப்புரை இவரை அறிமுகம் செய்கிறது. சி.மணியின் கவிதைகளில் பன் முகத் தன்மைக்குக் காரணம் காண முயல்கிறது முகப்புரை. 'வரும் போகும்', 'ஒளிச்சேர்க்கை', 'மீட்சி விண்ணப்பம்' என்ற தொகுப்புக்கள் அனைத்தும் சேர்ந்து 'இதுவரை' வெளிவந்த போது நூற்றுக்கும் மேற்பட்ட சத்தான கவிதைகளின் தொகுதியாக அமைந்தது.

சி.மணி நெடுங் கவிதைகளாலும் புகழ் பெற்றவர். சிறு கவிதைகளாலும் தனித்துவம் நிறுவியவர். யாப்பறிந்து யாப்புடைத்த புதுக்கவிஞர் சி. மணி

**'யாப்புடைத்த கவிதை**
**அணையுடைத்த காவிரி**
**இயற்கை எழில் இருக்க**
**செயற்கையணி எதற்கென்று**
**உடையுடன் ஒப்பனையும்**
**நீக்கி விட்ட கன்னி'**

என்பார் சி.மணி. இன்னும் ஒரு படி மேலே சென்று பழந்தமிழ்க் கவிதை ஒன்றையே பயன்படுத்திப் புதுக்கவிதையின் இருப்புக்கும் வரவுக்கும் அர்த்தம் புலப்படுத்துவார்.

**'அன்று மணிக்கதவை**
**தாயர் அடைக்கவும்**
**மகளிர் திறக்கவும்**

**செய்தார் மாறி மாறி**
**என்றும்**
**புலவர் அடைப்ப**
**கவிஞர் திறப்பார்'**

என்பது அவர் புதுக்கவிதைக்குச் செய்யும் நியாயம்! எனினும் திட்டமிட்டு முயன்றாலும் கவிதை எட்டிவிடும் என்று கூறமுடியாதென்பதையும் உணர்த்துவார்:

**'சொல்ல விரும்பிய தெல்லாம்**
**சொல்லில் வருவதில்லை. . . .**
**குதிரை வரைய குதிரையே**
**வராது, கழுதையும் வரலாம்'**

இத்தகைய படைப்பின் பாங்கை அறிந்திருந்ததால் புதுக்கவிதை அவருக்கு வெற்றிகளைக் குவித்தது. அந்தத் தன்னம்பிக்கை அவரிடம் குடியிருந்தது.

**'நான்**
**எதையும் எதையும்**
**செய்வேன், செய்ய**
**முடியும், முடியும், முடியும். முடியும்'**

என்பது அவர் துணிவுக் கவிதைகளில் ஒன்று.

நகர வாழ்க்கை அவரை அலைக்கழித்த அனுபவங்களாய் இருந்தது. நரகம், பச்சையம், வரும்போகும் என்ற நெடுங் கவிதைகளில் இதைப் பார்க்கலாம்.

பசி தீண்டிய நாயாய்க் காமம் அலைக்க நகரை வலம் வரும் அனுபவங்கள் 'நரகம்' முழுவதும். மரீனா கடற்கரையில் 'இன்னல் தனித்தே வராதா?' என ஏங்க வைக்கும் மகளிர் கூட்டம்.

**'துருப்பிடித்த இதயத்தைத்**
**துடைக்க வந்த நேரத்தில்**
**துருவேற்றுவோர் எத்தனை?**
**வளைந்திட்ட வாலை**
**நிமிர்த்த வந்த இடத்தில்**
**வளைத்து விடுவோர் எத்தனை?'**

கடற்கரை மட்டுமல்ல, திரையரங்கச் சல்லாபங்கள், பேருந்துக் கும்பலில் கால் மிதிப்பு, தோள் இடிப்புக்கள், வாசிக்க எடுத்த புத்தகத்தில் வளரும் கிளர்ச்சிகள், வானொலிப் பாட்டில் துளிர்விடும் உணர்வுகள், எதிர் வீட்டில் 'அத் தீராத் தீராப் புதிர்' ஆன மங்கை மூட்டிய நெருப்புகள் - இப்படி வளரும் காமம் -

***'காமம்***
***பலநோய் ஒரு மொழி***
***புற்று சோகை ஈளை***
***இரத்த அழுத்தம் இன்னுமென்ன***
***உண்டோ அத்தனையும் அத்தனையும்***
***காமத்துள் அடக்கம்'***

இதன் இன்னொரு பரிமாணத்தை 'வரும்போகும்' கவிதை சொல்கிறது.

***'காதடைக்கும் இரைச்சலுடன்***
***டவுன் பஸ்கள் வரும் போகும்'***

அதனிடையே மயக்கும் காட்சிகள் பல கலைந்து கலைந்து வருகின்றன. ஆசை உலாக்கள். இவைகளை நினைந்தேங்கும் முதுமை.

***'முதுமை***
***வறுமை***
***சிறுமை***
***நாய்வால் முதுகு***
***சீவாத தலையாகக் கலைந்து***
***சிதறிக் கிடக்கும் தாள்கள்***
***இப் பிறவியில் விடிவில்லை'***

இரண்டு எல்லைகளை - பதறும் இளமையையும் கதறும் முதுமையையும் - இணைக்கிறது கவிதை.

'பச்சையம்' - எழுத்தில் பச்சையை நியாயப்படுத்தும் கவிதை. பச்சையம் அனுபவங்களை முன் வைக்கும் எழுத்தின் கடமையென வாதிடுகிறார் கவிஞர்.

**'என்ன தான் சொன்னாலும்**
**உயிரியல் தேவையிது'**

என்று முடிவு செய்கிறார் கவிஞர்.

நெடுங் கவிதைகளில் வாழ்வின் பரபரப்புகளைச் சித்திரித்த சி.மணி குறுங்கவிதைகளில் மேலும் பல எல்லைகளைத் தொடுகிறார். இயக்கமே வாழ்க்கை. அதிலும் அசைவும், அலைவும் கலந்தது வாழ்க்கை.

'வளைவிலா நேர்கோட்டில் இன்பமில்லை' என்று தொடங்கி,

**'கிளைத்தள்ளும் ஆலம்**
**வளைந்தள்ளும் வானவில்**
**அலைந் தள்ளும் கார்குழல்'**

என்று வளைவுகளையும் அசைவுகளையும் எடுத்துக்காட்டி,

**'இருப்பதை நினைவூட்ட**
**அசைவு தேவை**
**விழியசைவில் காதல்**
**இடையசைவில் கூடல**
**மூச்சசைவில் வாழ்வு'**

என்று முடிப்பார் 'அலைவு' கவிதையில்.

சி. மணி வாழ்வை அளந்து பார்த்த கவிஞர், காதலும், காமமும் என்ற எல்லைக்குள் அவர் ஒடுங்கிவிடவில்லை. அபூர்வமான தரிசனங்களும் அவரிடம் உண்டு. 'முதுமை' குறித்து ஒரு கவிதை, 'கேட்டீரா, முதுமையை அறிவாம்' என்று ஆரம்பமாகும் கவிதையை எழுதிய போது அரும்பும் இளைஞர் அவர்.

**'இளங்கன்று மேய்ந்த**
**புல்வெளி வட்டமாகப்**
**பளிச்சிடும் தலை. . .**

**பல்லொடிந்த சீப்பாக**
**வெறுப்பேற்றும் வாய். . .**

பிணை தளர் கவணான
சுருங்கிச் சிறுத்த விழி . . .

ஊறுகாய் ஒன்றே தேடும்
கால வெயில் வறுத்த நாக்கு . . .

சிலந்தி கூடு கட்டி
வெளவால் குடி புகுந்து
புல்லும் காளானும் புரையோடி
நாற்றம் பொறுக்க முடியாத
பாழடைந்த கோவில்'

முன் வனப்புறு கோவில், இப்போது பாழடைந்த கோவில் இதற்கு என்ன தான் பெருமை. சிலேடை மெல்லென ஊர்ந்துவரக் கவிதை முடிகிறது:

'பாழடைந்த கோவில்
பெருமைபெற உள்ளது
புதை பொருளியல் தான்'

வருணனைகளில் பழைய இலக்கிய வரிகளை அல்லது அச்சாயலை இடையிடையே தங்கக் கொடிகள் கொழித்தோடும் படிக் கையாளுகிற அழகைச் சி.மணியிடம் காணலாம்.

'கலைந்த மழையுள; மறைந்த பூவுள
தாங்கிய செங்கை தலைக்கண் மேலுள
ஒலித்த வளையுள, ஓய்ந்த விரலுள
சரிந்த தலைப்பால் தெரிந்த மலருள'

எனக் கம்பனைப் போல், சங்கப் பாப் போல் வரும் இடங்கள் பல.

வலிந்து திணிக்காமல் படிமங்கள் இயற்கையாய் வந்து விழுந்து அழகு செய்வது அவர் கவிதைத் திறன்.

சாக்குப் படுதாக் கிழிசலில், சாலையோர வீட்டில் ஒரு பெண் முகம் தெரிகிறது. வழிப்போக்கன் பார்வையை வீசிவிட்டுப் போகிறான். கவிஞர் எழுதுகிறார்:

'. . . . . .சாக்குக் கிழிசல்
வழியே தென்பட்ட கீறல்

விழுந்த கண்ணாடி முகத்திற்கு
ஓர்கணத் தயக்கத்தேர்
ஈந்து சென்றான் இன்றைய பாரி'

'ஓர் கணத் தயக்கத் தேர், என்ற சொல்லழகில் மனக்கிளி சென்று தொத்திக் கொள்கிறது.

ஜன்னல் வழித் தெரியும் சூரியனை, 'மீட்பு' மறக்க முடியாத காட்சிப் படிமம் ஆக்குகிறது.

'கம்பிகள் கூறு போட்ட
கீழ்வான ஆரஞ்சை
சன்னல் நெருங்கி மீட்டேன்'

புதிய புதிய எல்லைகளைத் தம் கவிதையால் தொட்டவர் சி.மணி. பெரும் படைப்புத் திறனும், பூவிரிவது போல் இயற்கையான மொழியும், பேசாப் பொருளைப் பேசும் பாங்கும் சி.மணியை மற்ற புதுக்கவிஞர்களிடமிருந்து தனித்து நிறுத்துகின்றன.

*பிரமிள் (தருமு சிவராம்) (1939–1997)*

அழகியலும், மெய்யியலும், அறிவியலும் ஒன்று கூடிய ஓர் ஆச்சரியம் தருமு சிவராம் என்று அறிமுகமான பிரமிள். ஈழ நாட்டவரென்றாலும் தமிழ்நாட்டில் வாழ்ந்து மறைந்ததால் தமிழ் நாட்டுக் கவிஞராகவே மதிக்கப்படுபவர்.

எழுத்து இதழில் தொடங்கிப் பல சிற்றிதழ்களிலும் எழுதிய பிரமிள் ஓர் ஓவியரும், திறனாய்வாளரும் கூட. கண்ணாடியுள்ளிருந்து, கைப்பிடியளவு கடல், மேல் நோக்கிய பயணம் ஆகிய கவிதை நூல்களையும், பிற கவிதைகளையும் சேர்த்து, தொகுப்பாளர் ஒரே தொகுப்பாக, 'பிரமிள் கவிதைகள்' நூலைக் கொண்டு வந்திருக்கிறார்.

பிரமிளின் தொடக்க காலக் கவிதைகளில் அவருக்குள் ஆழ்ந்து வேர் விட்டிருந்த மெய்யியலையும், அறிவியலையும் கண்டு கொள்ள முடிகிறது.

'ஆரீன்றாள் என்னை
பாரீன்று பாரிடத்தே
ஊரீன்று உயிர்க்குலத்தின்

**வேரீன்று வெறும்வெளியில்**
**ஒன்று மற்ற பாழ் நிறைத்து**
**உருளுகின்ற கோளமெல்லாம்**
**அன்று பெற்று விட்டவளென்**
**தாய்'**

அறுசீர் விருத்த ஓசை அடிபெயர்ந்து வர, அண்ட கோடிகளின் படைப்பு ரகசியங்களுக்குள் தன்னையும் புதைத்துக்கொள்ள முனைகிறார் பிரமிள்.

அடுத்து வெளிவந்த 'பயிர்', 'கேள்விகள்' முதலிய கவிதைகளிலும் இந்தத் திகைப்பும் தேடலும் தொடர்ந்தன. வாழ்நாள் முழுவதிலும் பூமியும், வானமும், வெயிலும், இருளும் பிரமிளைப் பிரமிக்க வைத்த புதிர்களாகவே அமைந்தன.

**'பாழாம் வெளியும்**
**படைப்பினை வரையவோர்**
**சுவரா?'**

என்று வெடிக்கும் அவருடைய வினா பல்வேறு கவிதைகளில் வெவ்வேறு வடிவங்களில் வெளிப்பட்டுக் கொண்டே இருந்தது.

**'வானத்தின் இருள்பூத்துப் பூமிப் பூவில்**
**தேனுறிஞ்சும் நாக்குகளா ஒளிக்கதிர்கள்?**

**தீ முளைத்துக் காற்று எனும்**
**பூமியிலே வேரை விட்டால்**
**பூக்கிறது எத்திசையில்?'**

பிரபஞ்ச ரகசியங்களைத் துழாவும் குழந்தையின் கரங்களெனப் படர்கின்றன பிரமிளின் கவிதைகள். இது அவர் கவிதை குறித்த முக்கியமான கணிப்பு.

உண்மையில் இந்தத் தேடலின் தவிப்பில் - ஒரு துணைப் பொருளாக - விளைந்தவை தான் பிரமிளின் நிகரில்லாப் படிமப் பொக்கிஷங்கள்.

விடிவு, எரிகல், மின்னல் என்ற புகழ்பெற்ற மூன்று படிமக் கவிதைகளும் இந்தப் பின்புலத்தின் நன்கொடைகள் என்றே நான் கருதுகிறேன். அந்த மூன்று கவிதைகளையும் பார்ப்போம்.

'பூமித் தோலில்
அழகுத் தேமல்
பரிதி புணர்ந்து
படரும் விந்து
கதிர்கள் கமழ்ந்து
விரியும் பூ
வெளிச்சச் சிறகில்
மிதக்கும் குருவி (விடிவு)

வெளிவானம் எரிகல்லில்
கிழிபட்டுத் தெரிகிறது
வானக் கடல் முத்து
விழுகிறது இருட்கரியின்
வைரம் உதிர்கிறது
இயற்கை தன் இருளை மொழி
பெயர்த்து உதிர்த்த கவி
உதரக் குடல் நாடி
உதிரும் சிறு குழவி (எரிகல்)

ககனப் பறவை
நீட்டும் அலகு
கதிரோன் நிலத்தில்
எறியும் பார்வை
கடலுள் வழியும்
அமிர்தத் தாரை
கடவுள் ஊன்றும்
செங்கோல்' (மின்னல்)

மேலே குறித்த மூன்றும் வானம் நிகழ்த்துகிற விந்தைகள். அதன் விந்தைகளில் வியப்பூறிப் போன கவிஞர் பரிதியின் ஒளியைப் பாஞ்சாலி சபதத்தில் பாரதியார் கண்டு பிரமித்ததைப் போன்ற உணர்வுலகத்தில் மூழ்குகிறார். அதன் விளைவாகக் கதிர், எரிகல், மின்னல் என்ற மூன்றும் பிரமிளின் படிம ஒளித் துணுக்குகளாக உயிர்கொள்கின்றன.

பிரமிள் படிமக் கவிஞராக உருவானதற்குச் சிருஷ்டி அதிசயங்களில் திளைத்த அவர் கவிமனமே காரணமாகிறது. வெறும் படிம அடுக்குகளைத் தாண்டி மின்னலைக் 'கடவுள்

ஊன்றும் செங்கோல்' என்று கம்பீரமாக மொழிகிற போது ஒரு மெய்யியலாளனும் அவருக்குள் உதயமாகி விடுகிறான்.

கவிதை அனுபவத்தை விகசிக்க வைக்கும் பேராற்றல் பிரமிளுக்கு உண்டு. 'எல்லை' என்ற கவிதை எல்லைகளைக் கடந்து யோசிக்க வைக்கிறது.

**'கருகித்தான் விறகு**
**தீயாகும்**
**அதிராத தந்தி**
**இசைக்குமா**
**ஆனாலும்**
**அதிர்கிற தந்தியில்**
**தூசி குந்தாது**
**கொசு**
**நெருப்பில் மொய்க்காது'**

என்பது கவிதை. இயக்கம் உயிர்ப்பு. இயக்கம் தவிர்த்தால் தேக்கம் என்பதையே தூசியும், கொசுவும் சொல்கின்றன. வரிகளின் இடைவெளிகளில் யோசனைகளின் தூரம் விசும்பாக விரிகிறது.

**'நட்சத்திரங்களை விட**
**நிறையவே பேசுவது**
**அவற்றின் இடையுள்ள**
**இருள்'**

என்பதன் பொருளை இங்கே கண்டு கொள்கிறோம். 'காவியம்' என்ற ஆறு வரிக் கவிதை விசாலத்தின் எல்லையற்ற வெளிக்குள் நம்மை இழுத்துக் கொண்டு போகிறது.

இங்கே 'காற்றின் தீராத பக்கங்கள்' என்ற தொடர்தான் கவிதையை அகலமும் ஆழமும் மிக்கதாக மாற்றுகிறது. அதனுள் பரிணாமம் முதல் வரலாறு வரையிலான நிகழ்வுகளின், நிகழாமைகளின் விரிவாக்கம் குவிந்து கிடக்கிறது. நவீனக் கவிதையில் இந்த அனுபவத்தைப் பிரமிளைப் போல் எவரும் தர முடிந்ததில்லை.

பிரமிளின் $E = MC^2$ விஞ்ஞானம் பேசுகிறது என்பதால் மட்டும் உயர்ந்த கவிதை அல்ல. மானுட இனத்தைப் பூண்டோடு மாய்க்கும் அசுர சக்திகளுக்கு எதிரான குரல் அது. அதனுள்

ஆத்திரம் கனல்கிறது. கருணை கனிகிறது. இத்தனையும் சொல்ல, அறிவியல் நுட்பத்தை இதற்கு மேலும் சொல்லத் தமிழுக்கு வல்லமையும் விளைகிறது.

முதல் காட்சியில் ஒற்றைக் குருட்டு வெண்விழிப் பரிதியின் பயணம். அது என்னிடம் வருகிறது என்கிறான் சிவன். பரிதி பேராற்றல்களின் குவி மையம். அதன் அழிவுச் சக்தி சம்கார தேவனான தன்னுடையது என்கிறான் சிவன் என்பது பொருள்.

***'இரண்டாம் காட்சி:***
***ஒரு குழந்தை விரல் பயிற்ற***
***ஐன்ஸ்டீனின் பியானோ***
***வெளியாய் எழுந்து விரிகிறது***
***மேஜையில் அக்ஷர கணிதத்தின்***
***சங்கேத நதி!***
***மனித மனதின் மணற்கரையில்***
***தடுமாறும்***
***ஒரு பழைய பிரபஞ்ச விருட்சம்!'***

இந்தக் காட்சியில் குழந்தை மன விஞ்ஞானி கண்டறிந்த அறிவியல் சூட்சுமம் பேசப்படுகிறது. காலம், வெளி என்ற இரண்டு புதிய பரிமாணத்தைக் கண்டறிந்த ஐன்ஸ்டீனின் சார்பியல் தத்துவத்தால் பிரபஞ்சம் பற்றிய அறிவு கூர்மை அடைகிறது. ஒளியின் வேகத்தை நாம் அடையாததாலும், உணராததாலும் அண்டப் பெரு வெளியின் இப்போது தெரியும் நட்சத்திரங்கள் எப்போதோ செத்துப் போனதாகவும் இருக்கலாம் என்ற கருத்து முன் வைக்கப்படுகிறது.

***'நேற்று நேற்று என்று***
***இறந்த யுகங்களில்***
***என்றோ ஒருநாள் அவிந்த***
***நக்ஷத்ர கோளங்கள்***
***ஒளிவேகத்தின்***
***மந்த கதி தரும் நிதர்சனத்தில்***
***இன்றும் இருக்கின்றன***
***காலமே வெளி'***

அடுத்த காட்சியில் ஐன்ஸ்டீன் கண்ட சக்தி தத்துவம் எடுத்துரைக்கப்படுகிறது.

$E = Mc^2$

சக்தி = பொருள் x ஒளியின் வேகம் x ஒளியின் வேகம்

கவிஞர் இதனை அழகுறச் சொல்கிறார். அணுவுக்குள் சக்தியின் சலனம் நிகழ்ந்த வண்ணம் உள்ளது. அந்தச் சக்தியைப் பேரூழிப் பிரவாகமாக மாற்ற முடியும். எப்போது?

**'ஒளியின் கதியை**
**ஒளியின் கதியால்**
**பெருக்கிய வேகம்**
**ஜடத்தைப் புணர்ந்தால்**
**ஜடமே சக்தி'** **(ஜடம் - Mass)**

இந்தச் சாம்யம் பரிசோதிக்கப்பட்டு அணு குண்டாக உரு வெடுப்பதை அடுத்தபடியாகக் கவிதை சொல்கிறது. பரிசோதனை மெக்ஸிகோ பாலைவனத்தில் நிகழ்ந்த பின் ஹிரோஷிமா நாகசாகியில் அணுகுண்டு போடப்படுகிறது. சூரியனை நிகர்த்த வெப்பம் கொப்பளித்துச் சர்வநாசம் விளைகிறது.

**'கண்ணற்ற சூர்யப் போலிகள்**
**கெக்கலித்து**
**தொடுவான் வரை சிதறும்**
**கணநேர நிழல்கள்**
**பசித்து**
**செத்துக் கொண்டிருக்கும்**
**சிவனின்**
**கபாலத்துக்**
**கெக்கலிப்பு'**

பேரழிவுக் கடவுளின் கபாலங்கள் தமக்குக் கிடைத்த விருந்துக்காகக் கெக்கலிக்கின்றன.

ஆனால் இத்தனைக்கும் காரணமான சாம்யத்தைக் கண்டு பிடித்த அந்த விஞ்ஞானி இந்தப் பேரழிவை எதிர்பார்க்கவில்லை. அவருடைய எல்லை கனிந்த சோகம், பியானோவின் ஒலியற்ற அமைதியில் இணைகிறது.

**'இசை வெளியில் சிறகு மடிந்து**
**கருவி ஜடமாகிறது**

பியானோவின் சுருதி மண்டலம்
வெறிச்சோடிக் கிடக்கிறது
உலகின் முரட்டு இருளில்
எங்கோ ஒரு குழந்தை அழுகிறது
ஐன்ஸ்டீனின் கண்ணீர்த் துளியில்
தெளிக்கிறது பரிதி
ஒரு கணப் பார்வை'

இந்தக் கவிதையில் பிரமிளின் அறிவியலும், அறவியலும், மெய்யியலும் அழகியலோடு இணைந்து, தமிழ்க் கவிதையில் ஒரு வரலாறு பிறக்கிறது. முன்னும் பின்னும் தமிழில் இதற்கு நிகரான ஒரு கவிதை இல்லை.

பிரமிளின் கவிதையை உணர்வதற்குச் சாதாரண வாசகனாலும் முடியும். ஆனால் சில கவிதைகளுக்குள் பிரவேசிப்பதற்குப் பல்துறை அறிவும் தேவைப்படும். அத்தகைய கவிதைகளில் ஒன்று $E = Mc^2$.

பிரமிள் நிறைய விமர்சனங்களைக் கவிதைகள் ஆக்கியது உண்டு. மார்க்சியவாதிகளைக் கடிந்தும் எதிர்த்தும் எழுதியதுண்டு. ஆயினும் அவர்கள் பிரமிளின் கவித்திறத்தை மறுத்ததில்லை. வானம்பாடி கவிதா மண்டலம் அவர் கவிதைக்குப் பரிசளித்ததும் உண்டு. (பார்க்க: சிற்பி, கவிதை நேரங்கள், நேற்றுப் பெய்த மழை)

ஆனால் அவரைச் சாதிய விமர்சனங்கள் குதறிக் கிழிக்க முற்பட்டபோது, அவற்றை எதிர்த்துப் 'பட்டறைக்' கவிதைகள் எழுதினார். அதனால் வெகுண்ட எழுத்தாளர் சிலர் அவரைப் புதுக்கவிதை அரங்கிலிருந்து அகற்ற முயற்சி செய்தனர். பூனைகள் கண்ணை மூடியதால் ஒரு மாபெருங்கலைஞனின் விசுவரூபம் மறைந்து விடுவதில்லை.

ஒரு சமயம் பிரமிள் எழுதினார்:

'பாரதியும் புதுமைப்
பித்தனுமோ எனில்
பெருநெருப்பு ஒன்றன்
தார்மிகப் பிழம்புகள்
மானுடவாழ்வு

**தன்னைத் தானே**
**விசாரித்த களங்கள்**
**கலையின் உயரத்தில்**
**தொடர்ந்து பறக்கும்**
**வீரியம் இருந்தும்**
**மண்ணை நோக்கி**
**மழைபொழிந்து மீண்டும்**
**விண்ணில் எழவல்ல**
**கலைஞர்கள்'**

அந்த மகத்தான கலைஞர்களின் வரிசையில் பிரமிளுக்கு இடம் உண்டு.

புதுக்கவிதையில் வீரியம் மிக்க படைப்பாளி பிரமிள். நெடிதோங்கி நிற்கும் ஒரு தனிச்சிகரம். வாழ்வின் சுழிபட்டுத் தடுமாறி, சூழல்களில் சிக்கித் தவிக்காமல் வாழ்ந்திருந்தால் பாரதியாருக்கு அடுத்த மகாகவியாக அவரே திகழ்ந்திருப்பார். இப்போதும் அவருடைய இடம் அதற்கு அருகில் தான்.

**பிற கவிஞர்கள்**

வல்லிக்கண்ணன், சி.சு. செல்லப்பா, சங்கர சுப்ரமண்யன், நா. வெங்கட்ராமன், இ. அண்ணாமலை, சிட்டி, முதலிய பலர் 'எழுத்து' காலக்கட்டத்தில் முகம் காட்டினார்களாயினும் கவிதை அவர்களுக்குப் பெரிய வீச்சாக உருவாகவில்லை.

எழுத்து ஒரு கவிதைத் திறனாய்வாளரைக் கண்டெடுத்தது ஒரு முக்கிய நிகழ்வு. அவர்தான் புதுக்கவிதையை முதன் முதலில் திறனாய்வில் இடம்பெறவைத்த சி. கனகசபாபதி. விரிவான பல திறனாய்வு நூல்கள் எழுத இது ஒரு தூண்டுகோலாக அவருக்கு வாய்த்தது.

# 8. கசடதபற தந்த ஞானக்கூத்தன்

எழுத்து இதழின் இறுதி நாட்களில் அதன் இலக்கியப் போக்கில் நிறைவு காணாத இளம்படைப்பாளிகள் 1968-இல் சேலத்திலிருந்து 'நடை' என்றொரு இதழைக் கொண்டு வந்தார்கள். முத்திங்கள் இதழாக வெளிவந்த 'நடை'- சி.மணியை மையமாகக் கொண்டு நடைபெற்றது.

எழுத்து இதழில் எழுதிய பலரும் இவ்விதழிலும் எழுதினார்கள். ஐராவதம், அசோகமித்திரன், மா. தட்சிணாமூர்த்தி, நீலபத்மநாபன், கோ. ராஜாராம், கி.ஆ. சச்சிதானந்தம், பிரமிள் ஆகியோருடன் ஞானக்கூத்தனும் நிறையக் கவிதைகள் எழுதினார்.

தமிழ் யாப்பு, திரைப்படம், விமர்சனம், ஓவியம், கலை எனப் பல துறைகளைப் பற்றியும் சிந்தித்த 'நடை' எட்டு இதழ்களோடு தன் பயணத்தை நிறுத்திக் கொண்டது. சி.மணியின் படைப்புகளை அதிகமாக வெளியிட்ட இவ்விதழில் ஞானக்கூத்தன் வாசகர்களின் கவனத்துக்கு வந்தார்.

**ஞானக்கூத்தன்**

'எதையும் செய்யுங்கள்; ஆனால் இலக்கியமாகச் செய்யுங்கள் என்று மட்டுமே கசடதபற சொல்லும்' என்ற அறிவிப்போடு 1970 அக்டோபரில் பிறந்தது கசடதபற. ஒரு வல்லின மாத ஏடு என்று தன்னை அறிமுகப் படுத்திக் கொண்ட இவ்விதழ் 1973 ஜுன் / ஜுலையுடன் தன் செயல்பாட்டை நிறுத்திக் கொண்டது.

'நடை'யைப் போலவே விரிவான களம் அமைத்துக் கொண்டு செயலாற்றிய 'கசடதபற' கலை, இலக்கியம், திரைப்படம், நாடகம், விமர்சனம் எனப் பல பொருள்களையும் எடுத்துக் கொண்டு கருத்துக்களை முன் வைத்தது. நவீன ஓவியங்கள் இதன் பக்கங்களைச் செழுமைப்படுத்தின.

இவ்விதழில் பாலகுமாரன், நீலமணி, கலாப்ரியா, ஐராவதம், நகுலன், வே.மாலி, கோ. ராஜாராம், கங்கை கொண்டான், கல்யாண்ஜி எனப் பலர் கவிதை எழுதி இருக்கிறார்கள்.

அழகுணர்ச்சியால் பாலகுமாரன்,

**'முட்டிமுட்டிப்**
**பால் குடிக்கின்றன**
**நீலக் குழல் விளக்கில்**
**விட்டில் பூச்சிகள்'**

போன்ற கவிதைகள் எழுதினார். நீலமணி வேடிக்கை உணர்வை வைத்துச் சிறு சிறு கவிதைகள் எழுதினார்.

**'காபரேக்காரியைக்**
**கட்டிக் கொண்டேன்**
**ம்யூஸிக் இன்றி**
**அவிழ்க்க மறுக்கிறாள்'**

போன்ற விவாதம் கிளப்பிய நீலமணி கவிதைகள் பல 'கசடதபற'வில் வந்தன. ஆத்மாநாம் கவிதைகளும் இவ்விதழில் இடம்பெற்றன.

இவை ஒருபுறமிருக்க மிகப்பெரிய வரவேற்பைப் பெற்ற கவிஞராக ஞானக்கூத்தன் வெளிப்பட்டார். ஏற்கெனவே 'நடை'யில் அறிமுகமாகி இருந்த அவரை முழுமையாக அறிமுகம் செய்தது 'கசடதபற' இதழ். பிற்காலத்தில் வேறு பல சிற்றிதழ்களோடும் தொடர்பு கொண்டிருந்தார் ஞானக்கூத்தன்.

'அன்று வேறு கிழமை', 'கடற்ரையில் சில மரங்கள்', 'சூரியனுக்குப் பின்பக்கம்' என்று வெவ்வேறு காலக் கட்டங்களில் வெளிவந்த அவருடைய கவிதைகள் அனைத்தையும் தொகுத்து 1994 இல் மையம் வெளியீடாக 'மீண்டும் அவர்கள்' வெளியிடப்பட்டது.

ஆயினும் சென்னை இலக்கியச் சங்க வெளியீடாக 1973 இல் வெளிவந்த 'அன்று வேறு கிழமை' கவிதைகளாலேயே ஞானக்கூத்தன் இன்றும் நினைவுகூரத் தக்கவராக இருக்கிறார்.

ஞானக்கூத்தனின் முக்கியமான கவிதைகளில் மரபின் விருத்தப்பாடல் ஓசை மறைந்திருப்பதைக் காணலாம்.

**'தவளையின் கூச்சல் கேட்டு**
**தமிழ்க் கூச்சல் என்றான் கம்பன்'**

என்பதில் அறுசீர் விருத்த ஒழுங்கும்,

**'கொல்லையிலே என்ன சப்தம் என்றாள் அம்மா**
**போய்ப்பார்த்து வரச்சொன்னாள் இரவு நேரம்'**

என்பதில் எண்சீர் விருத்த அளவும் கலந்திருப்பதைக் காணலாம்.

அதுபோன்றே 'காடெ கோழி வெச்சு' கவிதையிலும் வேறு சில கவிதைகளிலும் நாட்டுப்புறப் பாடல்களின் பேச்சு மொழியும், சொல் முறையும் இடம் பெறுகின்றன.

இவையெல்லாம் பொருளிலும், வெளிப்பாட்டிலும் புதுமை காணும் ஞானக்கூத்தனிடம் காணப்படும் மரபின் எச்சங்கள் எனலாம்.

சமகால வாழ்வின் அபத்தங்களைக் கண்டு கேலி செய்யும் ஞானக்கூத்தன் கவிதைகள் தனியழகு வாய்ந்தவை. அரசியல் பேச்சாளராகக் கற்பனை செய்து கொண்டு பேசும் போலிகளைக் 'கால வழுவமைதி' கிண்டல் செய்கிறது

**'தலைவரார்களேங் . . . .**
**தமிழ்ப் பெருமக்களேங் . . . வணக்கொம்'**

என்று ஆரம்பித்து, தப்பும் தவறுமாய்ப் பேசும் அரசியல்வாதி,

**'தலைவரார்களேங்**
**பொது மக்களேங் நானின்னும்**
**யிரு கூட்டம் பேச விருப்பதால்**
**வொடய் பெறுகறேன் வணக்கொம். '**

என்று முடிக்கிறபோது கவிதையின் பரிகாசத்தொனி கூர்மை அடைகிறது.

'மஹ்ஹான் காந்தி மஹ்ஹான்' கவிதையும் இதே வில்லங்கப் பேச்சாளர்களைப் பற்றியது தான்.

'வழுக்கையைச் சொறிந்தவாறு
'வாழ்க நீ எம்மான்' என்றார்
மேசையின் விரிப்பைச் சுண்டி
'வையத்து நாட்டில்' என்றார்
வேட்டியை இறுக்கிக் கொண்டு
'விடுதலை தவறி' என்றார்'

என்று தொடர்கிறது கவிதை. 'பரிசில் வாழ்க்கை' கவிதையும் அரசியல் பேச்சு வியாபாரிகளைப் பகடி செய்கிறது.

'புகையூதி ரயில்வண்டி எழும்பூர் நீங்கும்
பேச்சாளர் மனதில் கையொலிகள் கேட்கும்'

இத்தகைய தலைவர்களைப் போற்றி வளர்க்கும் மக்களுக்கு அவர்கள் தரத்துக்கேற்ற தலைவர்கள் தானே கிடைப்பார்கள். தமிழர் போற்றும் தலைவர்கள் இரண்டு ரகமாம்-கவிஞர் சொல்கிறார்:

'இருந்தவர் இரண்டு பேர்கள்
அவர்களின் அடையாளங்கள்
நடப்பவர் பார்க்கமாட்டார்
பார்ப்பவர் நடக்கமாட்டார்'

இவ்வாறு எழுதப்பட்ட கவிதைகள் ஞானக்கூத்தனில் ஒரு பகுதி.

இன்னொருவகைக் கவிதைகள் - கவிஞரின் நுட்பமான பார்வை படிந்து பழங்கதைகள் தரும் புதுச் செய்தி. தொன்மங்களை இழுத்து வந்து ஒரு வன்மத்தோடு நம்முடன் பேசுகிறார் கவிஞர். 'யெதிரெதிர் உலகங்கள்', 'ஸ்ரீலஸ்ரீ', 'விட்டுப்போன நரி' ஆகிய கவிதைகள் இந்தப் பாங்கில் அமைந்தவை.

எல்லாவற்றுக்கும் நகல்கள் வந்துவிட்ட காலம் இது. எப்படி இது நேர்ந்திருக்கும். திரிசங்குக்குச் சுவர்க்கம் மறுக்கப்பட்ட போது விசுவாமித்திரன் கோபித்துக் கொண்டு அவனுக்காக ஒரு சுவர்க்கம் படைக்க முற்படுகிறான். தேவர்கள் கெஞ்சிக் கேட்டதால் பாதியில் நிறுத்திக் கொண்டான் என்பது கதை. அதில் ஒரு புதுப்பார்வை பாய்ச்சுகிறார் ஞானக்கூத்தன்.

**'கண்ணிமையாக் கால்தோயாத் தேவர்நாட்டில்**
**திரிசங்கைப் போகவிட மாட்டேன் என்று**
**ஒரு முட்டாள் சொன்னது பேராபத் தாச்சு'**

விசுவாமித்திரனின் கோபம் புது உலகு படைக்கலாயிற்று. தேவர் அடிபணிய,

**'சினம் தணிந்தான் தவஞானி ஆனால் அந்தக்**
**கணம்மட்டும் படைத்தவைகள் உலகில் என்றும்**
**இருந்துவர வேண்டுமென்றான் வரமும் பெற்றான்'**

அதனால் பிரம்மன் படைப்பும், முனிவன் படைப்பும் வாழ்ந்துவர நேர்ந்தன. எடுத்துக்காட்டு:

**'மயிலுக்கு வான்கோழி; புலிக்குப் பூனை**
**குதிரைக்குக் கழுதை; குயிலுக்குக் காக்கை**
**கவிஞர்களுக் கெந்நாளும் பண்டிட்ஜிக்கள்'**

கடைசி வரியில் ஈட்டிமுனையாய் அங்கதம் பாய்கிறது.

வாழ்க்கையில் எத்தனை நரிகளைச் சந்திக்கிறோம் மனித வடிவில். இதன் இரகசியத்தைக் கவிஞர் போட்டு உடைக்கிறார். சிவபெருமான் அன்று மதுரையில் நரிகளை எல்லாம் பரிகள் ஆக்கினாரே, அன்று சிலபேர் விடுபட்டுப் போனார்களாம். அதை ஒரு நரி எடுத்துச் சொல்லச் சிவன் சொன்னாராம்:

**'நரிகளைப் பரிகளாக்கும்**
**திருவிளையாடல் முற்றும்**
**விடுபட்டபேரை நாங்கள்**
**கவனிக்க மாட்டோம், போய் வா'**

ஞானக்கூத்தன் புதுக்கவிதைக்குள் செய்த மாய வித்தைகள் இப்படிப் பல.

'அரைக்காசு சம்பளமானாலும் அரசு உத்யோகம்' வேண்டும் என்பது மக்கள் வழக்கு. காரணம் அபரிமிதமான ஓய்வு என்பார்கள். அதனால் அரசுயந்திரம் ஆமை வேகத்தில் இயங்குகிறது என்பார்கள் அல்லவா? இதை நோகாமல் சொல்லச் சங்ககாலத்துப் புலவர் மோசிகீரனாரைத் துணைக்கு அழைத்துக்

கொள்கிறார் கவிஞர். பசிக்களைப்பால் மன்னரின் முரசு வைக்கும் கட்டிலில் உறங்கி விடுகிறார் மோசி கீரனார். அந்தக் கவிஞரை இந்தக் கவிஞர் அழைக்கிறார்.

'மோசி கீரா
மகிழ்ச்சியினால்
மரியாதையை நான்
கறைத்ததற்கு
மன்னித்தருள வேண்டும் நீ
சொந்தமாக உனக்கிருக்கும்
சங்கக் கவிதை யாதொன்றும்
படித்ததில்லை நானின்றும்
ஆனால் உன்மேல் அளவிறந்த
அன்பு தோன்றிற்று
இன்று எனக்கு
அரசாங்கத்துக் கட்டிடத்தில்
தூக்கம் போட்ட முதல் மனிதன்
நீ தான் என்னும் காரணத்தால்'

என்ற இந்தக் கவிதைக்குத் 'தோழர் மோசி கீரனார்' என்று தலைப்பிட்டு இருப்பதிலும் குறும்பு மிளிர்கிறது.

ஞானக்கூத்தனின் 'சைக்கிள் கமலம்', 'அம்மாவின் பொய்கள்' போன்ற கவிதைகளில் யதார்த்தத்தின் மெல்லிய ஒளிக்கோடுகள் வெளிப்படுகின்றன. ஆழ்ந்து முக்குளிக்க ஏதுமில்லா விட்டாலும் சின்ன அசைவுகளின் சிலிர்ப்புகள் இருக்கின்றன.

அம்மா குழந்தையின் நலனுக்காகப் பல பொய்கள் சொல்லுகிறாள். அன்பு அதன் அடித்தளம். எத்தனை அழகான பொய்கள்!

'பெண்ணுடன் சினேகம் கொண்டால்
காதறுந்து போகும் என்றாய்
தவறுகள் செய்தால் சாமி
கண்களைக் குத்தும் என்றாய்
தின்பதற் கேதும் கேட்டால்

வயிற்றுக்குக் கெடுதல் என்றாய்
ஒரு முறத் தவிட்டுக்காக
வாங்கினேன் உன்னை என்றாய்'

ஆனால் வயது முதிர முதிர அம்மா பொய்யொன்றும் சொல்லுவதில்லை. பிள்ளை கேட்பதாகக் கவிஞர் கேட்கிறார்.

'எனக்கினி பொய்கள் தேவை
இல்லையென் றெண்ணி னாயா?
அல்லது வயதா னோர்க்குத்
தகுந்ததாய்ப் பொய்கள் சொல்லும்
பொறுப்பினி அரசாங்கத்தைச்
சார்ந்ததாய்க் கருதினாயா?
தாய்ப் பாலை நிறுத்தல் போலத்
தாய் பொய்யை நிறுத்தலாமா?'

அன்பில் தோய்ந்த அழகை இந்தக் கவிதையில் சந்திக்கிறோம்.

இதே கவிஞர் தலைப்பிடப்படாத எட்டுக் கவிதைகளில் விபரீதமான கற்பனைகளைப் பகிர்ந்து கொள்கிறார். நனவிலிமனக் காட்சிகள் போல் சித்திரிக்கப்படும் கவிதைகளில் ஒருவகைக் குரூரம் குடியிருக்கிறது.

தேங்காய் விழுந்து மனிதன் இறக்க, தேங்காய் நோவும் ரத்தமும் இல்லாமல் கிடப்பதும், வள்ளிக்கிழங்காய் வெந்து போன அம்மா உடலை அப்பனும் பிள்ளைகளும் அள்ளித் தின்பதும், வக்கிரமான சில காட்சிகளை வருணிப்பதுமான எட்டுக் கவிதைகள் என்ன நவீனத்துவமோ, மேலை நகலியமோ புரியவில்லை.

இன்னோரிடத்தில் ஐந்து கவிதைகள் எழுதியிருக்கிறார் ஞானக்கூத்தன். அக் கவிதைகளில் ஒன்றில் கூறுவார்:

'மரமே அறியும் இலைகளில் எவ்வெவ்
இலைகளை உதிர்க்கலாம் அன்றைக் கென்று'

அந்த விளக்கத்தையே எட்டுக் கவிதைகளுக்கும் சொல்லிக் கொள்ளலாம்.

ஞானக்கூத்தனின் அதிகம் உயர்த்திப் பேசப்பட்ட கவிதை ஒன்று உண்டு.

**சூளைச் செங்கல் குவியலிலே**
**தனிக்கல் ஒன்று சரிகிறது.**

கூட்டத்தில் கூடிநின்று கூவிப் பிதற்றாமல் தனித்து நிற்பது ஓர் ஆளுமை என்று இதற்குப் பொருள் கொள்ளலாம். அத்தகைய ஆளுமை ஞானக்கூத்தனின் 'அன்று வேறு கிழமை'க் காலக் கவிதைகளில் சேமித்து வைக்கப்பட்டிருக்கிறது.

**ஆத்மாநாம்**

எழுபதுகளில் எழுதத் தொடங்கி வாழ்வின் ஏதோ ஓர் அறுந்த இழையால் தன்னைத் தானே மாய்த்துக் கொண்டவர் ஆத்மாநாம்.

தமிழ்க் கவிஞர்களில் ஒரு தனிக்குரல் ஆத்மா நாமினுடையது. ஏனோ அது முழுமை பெறாமல் ஓய்ந்தது.

**'ஒரு தூசியின் ஒரு கோடிப் பங்கில்**
**ஒரு சிற்றணுவாய்**
**நான் தோன்றினேன்**
**நட்சத்ரக் கண் சிமிட்ட'**

என்ற 'ஆரம்ப'மே ஒரு நுட்ப வெளிப்பாடு.

வாழ்வின் தவிர்க்க ஒண்ணாத விதியைச் 'சில எதிர்கால நிஜங்கள்' கூறும்,

**'மொசைக் தரையில் தவறிப் போன**
**ஒற்றைக் குண்டூசி போல'**

என்ற உவமையின் கூர்மை புதுமையானது.

இயற்கையில் தன்னைக் கரைத்துக் கொள்ளும் இயல்பும் ஆத்மாநாமுக்கு இருந்தது.

**'அற்புத மரங்களின் அணைப்பில்**
**நான் ஒரு காற்றாடி**
**வேப்ப மரக் கிளைகளின் இடையே**
**நான் ஒரு சூரியரேகை**
**பப்பாளிச் செடிகளின் நடுவே**

**நான் ஒரு இனிமை**
**சடைசடையாய்த் தொங்கும் கொடிகளில்**
**நான் ஒரு நட்சத்திரம்'**

இப்படி ஒரு தெளிவு இருந்த போதிலும் ஆத்மாநாமை என்னவோ ஒன்று - நான் ஓர் அற்பப் புள்ளி என்ற உணர்வோ, நிராசையோ உலுக்கிக் கொண்டே இருந்தது.

**'நான் ஒரு ஞானியுமில்லை**
**நான் ஒரு சித்தனுமில்லை**
**பித்தம் பிடித்தும் பிடிக்காத மேதை நான்**
**படித்தும் படிக்காத புலவன் நான்**
**வைத்தியம் தெரிந்தும்**
**செய்து கொள்ளா நோயாளி நான்'**

இத்தகைய பிரமைகள் பிடித்தாட்ட, நம்பிக்கையும் அவநம்பிக்கையும் போட்டு அலைக்க அறுந்து போனது ஆத்மாநாமின் உயிர்க் கயிறு.

# 9. வானம்பாடி

சூழலில் அதிருப்தியுற்று ஒரு தேடலில் தங்களை ஈடுபடுத்திக் கொண்ட (20-ஆம் நூற்றாண்டு எழுபதுகளில்) இளம்படைப்பாளிகளின் பருவகாலப் பயணம் வானம்பாடி.

இதயத்து வெப்பத்தை மார்க்சிய இளஞ்சூட்டிலிருந்து பெற்றுக் கொண்ட, மனித நேயத்தை விழியோரம் தேக்கிக் கொண்ட, சமகால அரசியல் சமூக இயக்கங்களில் சலிப்புற்ற, புதிய அலைத்தெறிப்பை இலக்கியத்தில் காண விரும்பிய, தமிழ் மரபறிந்து-மரபைக் கடக்க ஆசைப்பட்டவர்களின் கவிதைப் பயணம் 'வானம்பாடி'.

கோவை நகரம் தொழிலாளர் எழுச்சிக்கு விதை தூவிய தலைநகரம். இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பிரம்மசமாஜி சே.ப. நரசிம்மலு நாயுடு, அதன் இடைக் காலத்தில் பெ. தூரன், ஆர். சண்முகசுந்தரம் முதலியவர்களால் உருவான எழுச்சியும், இலக்கியப் பயிற்சியும் முன்னோடிகளாக அமைந்த நகரம்.

அறுபதுகளில் (20-ஆம்) பல கலை இலக்கிய அமைப்புகள் கோவை நகரில் செயல்பட்டுவந்தன. 1967-68இல் செயல்பட்ட தேன்கூடு இலக்கிய அமைப்பின் தேனீ புதுமை ஆக்கத்தில் ஈடுபடக் கவிஞர் புவியரசு, இளமுருகு காரணமாக இருந்தனர். கோவைக் கவிஞர் மன்றம், கோவை இலக்கியப் பேரவை, ஞானி, ஜன. சுந்தரம், கு.வெ.கி. ஆசான் நடத்திய சிந்தனைப் பேரவை, முல்லை ஆதவனின் பூம்பொழில் இலக்கிய வட்டம், மார்க்சிய நண்பர்கள் நடத்திய 'புதிய தலைமுறை' என இலக்கியம்சார் முயற்சிகள் பல இருந்தன.

இவர்கள் தங்கள் இறுக்கங்களில் நெகிழ்ந்து ஒன்றுபட்டு, விவாதித்து 1971 அக்டோபர் முதல் 'வானம்பாடி' என்ற கவிதை இதழை வெளியிட்டனர். தமிழ்நாட்டில் எழுத்து, கசடதபற, நடை ஏற்படுத்திய தாக்கங்களும் வானம்பாடி வெளிவர உந்து சக்தியாக இருந்தன. ஞானி, ஜன. சுந்தரம், புவியரசு, சிற்பி,

அக்கினிபுத்திரன், முல்லை ஆதவன், இளமுருகு ஆகியோர் மையமாக இருந்து தொடங்கிய வானம்பாடி இயக்கத்தில் மு.மேத்தா, கங்கைகொண்டான், தேனரசன், பாலா ஆகிய கவிஞர்களும் பின்னர் இணைந்தனர்.

எனினும் அபி, அப்துல் ரகுமான், இன்குலாப், கல்யாண்ஜி, கலாப்ரியா, தமிழவன், பிரபஞ்சன், பிரமிள், மீரா, விக்ரமாதித்தன் எனப் பலரும் வானம்பாடியில் படைப்பாளர்களாக இருந்ததுண்டு.

சமூகச் சிக்கல்களை மையப்படுத்துதலும், விமர்சன யதார்த்த வாதத்தை முன்னிலைப் படுத்துதலும் வானம்பாடியை மற்ற புதுக் கவிதையாளர்களிடமிருந்து வேறுபடுத்தியது. இதனால் உரத்த குரல், கட்சி அரசியல், புனைவியல் புரட்சி என்றெல்லாம் வானம்பாடிக்கு எதிரான விமர்சனங்கள் எழுந்ததுண்டு. ஓரிரு உரத்த குரல்களைத் தான் அடையாளம் காட்ட முடியுமே தவிர இது வானம்பாடியின் பொதுப்போக்கல்ல. சிற்பி, புவியரசு, கங்கை கொண்டான், மு.மேத்தா, தேனரசன், பாலா, தமிழ்நாடன் ஆகிய வித்தியாசமான குரல்கள் கொண்ட கவிஞர்களையும், ஞானி போன்ற தர்க்கம் நிரம்பிய விமர்சகர்களையும், மீரா போன்ற தோழமைச் சக்திகளையும், சி.ஆர். ரவீந்திரன் போன்ற சிறுகதை இலக்கியத் தழைவுகளையும் தமிழ் இலக்கியத்துக்குத் தருவதற்கு வானம்பாடி துணை நின்றது.

வானம்பாடி மொத்தம் 22 இதழ்களாக மலர்ந்து 1983 செப்டம்பருடன் தன் வரவை நிறுத்திக் கொண்டது. 221 கவிஞர்களின் 491 கவிதைகள் வானம்பாடியில் வெளிவந்துள்ளன என்று ஆய்வாளர் ஜே. மஞ்சுளா தேவி தெரிவிக்கிறார்.

இளம் படைப்பாளிகளுக்கான களமாகத் திகழ்ந்தது, சிற்றிதழ்கள் தோன்றத் தூண்டுதலாக அமைந்தது, மொழி பெயர்ப்பை அறிமுகம் செய்தது, பிரமிள் - கடம்மனிட்டா-லா.ச.ரா இலக்கியச் சந்திப்புகளை வெளியிட்டது, புதுக்கவிதையை விரிந்த வாசகர்களின் அடிவாரம் புறவாழ்வுச் சிக்கல்கள் என்று அடையாளப்படுத்தியது எனப் பல விளைவுகள் வானம்பாடியால் நிகழ்ந்தன.

இதற்கும் மேலாக இன்றுவரை தொடர்ந்து வெவ்வேறு தளங்களில் இயங்கும் புவியரசு, சிற்பி, ஞானி, தமிழ்நாடன், பாலா, சி.ஆர். ரவீந்திரன் முதலிய படைப்பாளிகளை அளித்த சிறப்பும் வானம்பாடிக்கு உண்டு.

இன்றும் வானம்பாடி குறித்து அறிந்தோ, அறியாமலோ கூறப்படும் குற்றச்சாட்டுக்கள்: (1) கவிதையின் இறுக்கத்தை நெகிழ்வித்தது. (2) உரத்த குரல்.

இதற்கு எடுத்துக்காட்டாக அக்கினி புஷ்பங்கள் போன்ற வார்த்தைச் சேர்க்கைகளையும், ஓரிரு நெடுங் கவிதைகளையும், நெம்புகோலால் பூமியைப் புரட்டும் மு. மேத்தாவின் கவிதைகளையும் கூறலாம்.

இதற்கான விடை இது தான். எழுத்து இதழில் வந்த உள்ளீடற்ற சி.சு. செல்லப்பாவின் கவிதைகளையும், கசடதபற வில் வந்த நீலமணி, பாலகுமாரன் விளையாட்டுக் கவிதைகளையும் உதாரணப்படுத்தி அவ்விதழ்களின் கவிதைப் பங்களிப்பைக் குறைத்து மதிப்பிடுவது எப்படிக் குறுகிய பார்வையோ அது போன்ற பார்வையே இது.

உமி கொஞ்சம் இருப்பது எல்லாக் குழுவினர் கவிதைகளிலும் உண்டு. மு. மேத்தாவின் பூமிப் பந்தை நெம்புகோலால் புரட்ட அழைப்பு விடும் கவிதையை வெற்றுப் பிரகடனம் என்றால் 'தனி ஒருவனுக்கு உணவில்லை எனில்' என்ற பாரதியாரின் பிரகடனத்தையும் அப்படி எறிய முடியுமா? அது ஒரு கவிஞனின் கனவு காணும் உரிமை.

எனவே வானம்பாடிக்கு ஏற்பட்ட எதிர்ப்பு, அது சற்றே மார்க்சியச் சாய்வு கொண்டிருந்ததாலும், மரபு தெரிந்தவர் இயக்கமாக இருந்ததாலும் தான் என்றே கருத வேண்டி இருக்கிறது.

சில முக்கியமான வானம்பாடிக் கவிஞர்களைக் காண்போம்.

**புவியரசு**

வானம்பாடிக் கவிஞர்களில் மெத்தப் படித்து, பல சோதனைக் கவிதைகள் படைத்துத் தன் தனித்தன்மையால்

வைரத்தூண் ஆனவர் புவியரசு. 'தேனீ' இதழை முன்னோடியாக நடத்தியவர்.

மரபுக் கவிதையில் திளைத்த பின் வானம்பாடிச் சிறகசைப்பில் அதனை உதறி எறிந்தவர் புவியரசு. 'ஒரு அப்பளத்தின் மரணம்' என்ற அவருடைய யாப்பு உடைப்புக் கவிதையை முன்னரே பார்த்திருக்கிறோம்.

தன் கவிதையைப் பற்றிய இயல்பான பெருமிதம் அவருக்கு உண்டு.

**'வரம்பிலா வானில்**
**சிறகு விரித்து**
**அகண்ட வெளியைத்**
**தழுவித்தழுவி உயர்ந்து'**

பறக்கும் அவர் கவிதை தொழிற்சாலைப் புகைபோக்கியின் மேலும், கந்தல் குடிசைக் கூரையின் மேலும் பறந்து,

**'அந்த அலங்கார மாளிகையின்**
**முற்றத்தில் எச்சமிட்டு'**

இதயக் கூடு நோக்கி வருகிறது என்பார்.

'புல்லாங்குழலே' - கவிதை ஆன்மாவின் துயரங்களில் கசிகிறது. அதன் மௌன அழுகைக்குக் காரணம் அது ஆதியில் பட்டகாயமாம்.

**'தீக்குளித்த நாள் முதலாய்**
**உள்கசியும் மௌன அழுகை**
**உதடுகளின் தழுவலால்**
**வெடித்துப் பீறிடும்'**

கிறித்தவ மெய்யியலுக்குள் நுழைந்து, அதன் வேதாகமசாரத்தை - சமகால வேதனைகளோடு இணைக்கும் அருமையான கவிதைகள் 'சிலுவைப்பாட்டும், 'ஏலி ஏலி லாமா சபக்தானி'யும்.

சிலுவையில் அறையப்படும் ஏசுவின் பேச்சு வேதாகம வசனங்களோடு பின்னிப் பின்னி வருகிறது.

விசாரணைக்கு நிறுத்தப்பட்டிருக்கும் ஒரு மக்கள் தலைவனின் வாசகங்களாய் ஏசுவின் வார்த்தைகளை மெருகூட்டுகிறார் புவியரசு

**'சத்தியத்தைக் குறித்துச்**
**சாட்சி சொல்லவே நான் பிறந்தேன்**
**இதற்கென்றே இந்த**
**உலகத்தில் வந்தேன்**
**சத்தியத்திற்குரியவன் எவனும், என்**
**சத்தத்திற்குச் செவி கொடுக்கிறான்'**

என வேதாகமம் இன்றைய வாழ்க்கையின் குரலாக மாறுகிறது.

இஸ்ரேல் குண்டு வீச்சில் ஏசுவின் சிலை கழன்று தொங்கும் அவலத்தைப் பேசுவது 'ஏலி ஏலி லாமா சபக்தானி'. இது ஏசுவைப் பார்த்துக் கவிஞன் பேசுகிற பேச்சாக அமைகிறது. ஒரு யூதனின் சிலைக்கு யூதர்களே செய்த அலங்கோலம் - யூதர்கள் இட்லரிடம் பட்ட துயரக் கதை - என விரியும் கவிதையில் கவிஞர் சொல்கிறார்:

**'உன்னை நான்**
**என்ன செய்ய?**
**மீண்டும் சிலுவையில்**
**அறைந்து விடவா?**
**அது என்னால் முடியாது**
**நான் பிலாத்து மன்னன் அல்ல**

**சிலுவையோடு பூமியில்**
**புதைத்து விடவா?**
**அது என்னால் முடியாது**
**நான் இட்லரல்ல'**

மனித குமாரனாய் வந்த தேவகுமாரனின் துயரம் - போரின் அவலமாய், எதேச்சாதிகார எதிர்ப்பாய் உருமாறுகிறது புவியரசு கவிதையில்.

வாழ்வின் எளிமைகளைச் சித்திரப்படுத்தவும் வல்லவர் புவியரசு. 'மானம்' பார்க்கும் ஏழ்மை ஆதங்கத்தோடு கவிதையாகிறது.

*'காவிரி வாய்க்கால் படித்துறையில்*
*ஆனந்தமாய்க் குளிக்கிறாள்*
*ஆடைகுலைய அந்த அம்மணி*
*கழுத்தின் அழுக்கைத் தேய்க்கையில்*
*கறுத்துப் போன தாலிக்கயிற்றுடன்*
*பின்னிக் கிடந்த பித்தளைச் செயின்*
*நெருட*
*இழுத்துப் பிடித்துப் புளியைத் தேய்க்கிறாள்*
*அக்கம் பக்கம் பார்த்து*
*அவசரமாக!'*

சூழல் கேடு பிரசாரமாகாமல் அழகிய கவிதையாய்ப் பரிணமிக்கிறது 'ரகசியம்' கவிதையில். 'காற்றே வா' என்ற அழைப்போடு தொடங்கும் கவிதை சொல்கிறது:

*'உன் சங்கீத மரங்கள்*
*இல்லை இப்போது*
*அதோ அந்த இரும்பு மரங்களின்*
*உலோகக் கம்பிகளில்*
*வீணை வாசிக்கக் கற்றுக்கொள்'*

தன்னைத் தானே அறிந்து கொள்ள முயலும் தத்துவ நோக்கும் அவரிடம் உண்டு. தன்னையே அந்நியப்படுத்தி அறியப் பார்க்கிறார் கவிஞர்.

*'வளைந்து வளைந்து செல்லும்*
*நெடுஞ்சாலையில்*
*ஒரு கரும்புள்ளியாய்*
*நடந்து போவதுயார்?*
*நானா?*
*பாவம்!*
*ஒன்றும் பயனில்லை*
*திரும்பி வரச்சொல்லுங்கள்*
*என்னிடம்!'*

புவியரசு வெறும் 'ஒப்புக்கும் பாடி புளிக்கும் ஒரு கவிதை ஒப்பிக்கும்' கவியல்ல. அவருக்குள்ளே ஒரு பிரபஞ்ச யாத்திரிகன் உறைகிறான். 'மீறல்' என்ற சிறிய கவிதைத் தொகுப்பில் இதனைக் கண்டு வியக்கலாம்.

என்ன தான் அளக்கலாகா அளவும் விரிவும் பிரபஞ்சத்துக்கு இருந்தாலும், நான் அதில் பெறும் மதிப்பு என்ன?- வினவுகிறார் புவியரசு.

**‘கிழக்கு மேற்கு தெற்கு வடக்கு**
**மேல் கீழ் எல்லாம் விழுங்கிச் செரித்த**
**அகண்டாகாரப் பிரபஞ்சக் கோயிலின்**
**சொக்க வாசற் கதவுகள் தம்மை**
**அறிவியல் அறிஞனின் மணிக்கரம் திறக்க**
**பதைப்புடன் பாய்ந்து பார்த்த பொழுதில்**
**திகைப்பே நின்றது திரிவிக்ரமனாக!**
**ஊசி முனையில் கருமை தோய்த்து**
**வெள்ளைத் தாளில் வைத்த புள்ளியாய்ச்**
**சிறுத்துப் போனேன் அதன் காலடியில்**
**இந்நிலை எனக்குச் சம்மதமில்லை**
**இந்தச் சிறுமை சகிப்பதாயில்லை’**

கவி மனம் தன்னைக் கண்காணா அணுவாக்கிக் காணாமல் தொலைப்பதில் சம்மதம் கொள்ள மறுக்கிறது. மழையில் கரையும் அய்யனார் சிலையாய் இருக்க நேரினும், ஆற்றில் கரையும் பிள்ளையாராக இருக்க நேரினும்,

**‘மார்கழிப் பனியின் வைகறைப் பொழுதில்**
**செம்பருத்தி மலரைச் சிரசில் சூடி**
**வாசற்கோல நடுவரசாளும்**
**சாணியுருண்டையாய் இருக்க நேரினும்**
**அதுவே எனக்குச் சம்மதமாகும்**
**அதுவே எனக்கு வாழ்க்கையுமாகும்’**

மானுட வாழ்வின் வேர்களில் கொண்ட பிடிப்பால், ஈரம் தேடும் தவிப்பால் - கவிதையை அந்த வாழ்க்கைக்கே அர்ப்பணம் செய்கிறார் புவியரசு.

தம் சொந்தப் படைப்புகளாலும் (இதுதான், புல்லாங்குழலே, ஒரு முக்கிய அறிவிப்பு முக்கூடல்), அற்புதமான மொழிபெயர்ப்புகளாலும் இலக்கிய இருப்பை உறுதி செய்து கொண்டவர் புவியரசு.

'எந்த விதையில்
என்ன முளைக்குமென
ஆராய்ந்து கொண்டிராதே
விதை
அதில் அதுதான் முளைக்கும்'

இப்படி அழுத்தந் திருத்தமாகச் சொல்லும் புவியரசுக்கு விதைகளும் தெரியும் அவற்றின் விளைவுகளும் தெரியும்.

சிற்பி

வானம்பாடி இயக்கத்தின் கூர்முனையாகச் செயல்பட்ட கவிஞர்களில் முக்கியமானவர் சிற்பி. மரபுக் கவிதைப் பணிமனையிலிருந்து இருபதாம் நூற்றாண்டின் எழுபதுகளில் புதுக் கவிதைப் பட்டறைக்குக் குடிபெயர்ந்தவர்.

எழுத்து, இலக்கிய வட்ட இதழ்களின் மூலம் வானம்பாடிக்கு முன்பே புதுக்கவிதையை அறிமுகம் செய்து கொண்ட சிற்பி, க.நா.சு. நடத்திய இலக்கிய வட்டம் இதழில் புதுக்கவிதை எழுதியவர்.

மாணவப் பருவத்திலேயே மார்க்சியத்தைப் புரிந்து கொண்டவரென்றாலும், வானம்பாடி அந்தத் திரியைத் தூண்டி விட்டது. வானம்பாடியில் பிளவு ஏற்பட்டபோது அவ்விதழைத் தானே தொடர்ந்து ஆசிரியராக இருந்து நடத்தியவர் சிற்பி.

பதினைந்து தொகுதிகளாகக் கவிதைகளைத் தந்துள்ள சிற்பியின் தேர்ந்தெடுத்த கவிதைகள், 'சிற்பி-கவிதைப் பயணங்கள்', 'தேவயானி' என இரு தொகுதிகளாக 2005-இல் வெளிவந்துள்ளன. 'மௌன மயக்கங்கள்' புதுக்கவிதையில் முதலில் வந்த சிறுகாவியம். 'ஒரு கிராமத்து நதி' - சாகித்திய அகாதெமி விருது பெற்ற தொகுப்பு.

புதிது புதிதாகப் பரிசோதனைகள் செய்து கொண்டே போகிற போக்கைச் சிற்பியிடம் காணலாம். கதைக் கவிதைகள், உரையாடல் வடிவில் அமைந்த 'பூஜ்யங்களின் சங்கிலி', பாரதியாரின் 25 நாள் கடலூர்ச் சிறைவாசத்தை அந்த மகாகவி நோக்கில் சித்திரிக்கும் 'பாரதி கைதி எண் 253' என வளரும் பரிசோதனை முயற்சிகள் பல.

'மானுட வாழ்க்கையை அனுபவத் தராசில் நிறுத்துப்
பார்ப்பது என் கவிதைப் பார்வை
மனிதனுக்குள்ளும் இயற்கை வெளியிலும் அன்பை
விதைப்பது என் எழுத்துக்களின் நோக்கம்'

என்று கவிஞர் தன் இலக்கிய நோக்கைத் தெளிவு படுத்தி இருக்கிறார்.

சிற்பி கவிதைகளில் அகமும் புறமும் அதிசயமாகக் கலந்திருக்கக் காணலாம். 'துணை' என்றொரு கவிதை அதன் சலனங்கள் தரும் அனுபவம் நுட்பமானது. மூன்று படிமங்கள்:

'கரைதொட்டு . . கரைவிட்டு
கலங்குமொரு
தனிப்படகு. . .
மறைந்தபடி மணந்தபடி
மயங்குமொரு
தாழைமடல் . . .
தலை திருப்பி உடல் திருப்பி
தயங்குமொரு
கடற்பறவை
அங்கே நான்
ஒரு படகோட்டி
மடலுக்கும் பறவைக்கும் துணையாக
கடலுக்கும் மீனுக்கும் நினைவாக . . .'

இனம் புரியாத மனம் ததும்பும் சோகம் இந்தக் கவிதையில் மெல்ல மெல்ல ரூபம் கொள்ளக் காணலாம்.

'தளை' என்று ஒரு கவிதை. ஒரு காளையைப் படிமமாக்கி அதன் நினைவோட்டங்களைப் பேசுவது போல் சமூக விதிகள் வரம்புகட்டியதால் ஏற்பட்ட மனநிலை உணர்த்தப்படுகிறது.

'முன்னால் தெரிவது
முத்துக் கொண்டைச்
சோளக் கொல்லை
பக்கத்தில் இருப்பது
பழுத்த நெல் வயல்'

அப்படியே பசும்புல்வெளி, பருகப் பிண்ணாக்கு நீர் எல்லாம் வாய்க்கெட்டும் பக்கத்தில் . . . ஆனால்

**'பார்க்கும் திசையெலாம்**
**பச்சையின் அழைப்பு**
**விழிகளில் வெறிப்பு**
**நாவிலே நீரூற்று**
**ஆனால் நானோ**
**தளையில் சிக்கிய கோழை**
**முளையில் கட்டிய காளை'**

சி.மணியின் பச்சையம், நரகம் கவிதைகளோடு இந்தக் கவிதையின் நினைவோட்டத்தை ஒப்பிட்டுப் பார்க்கலாம்.

தனிமனித அகப்போராட்டங்களைச் சித்திரிக்கும் இத்தகைய கவிதைகளைப் போல, நவீன வாழ்வில் சமூகத்தோடு ஒட்டியும் ஒட்டாமலும் விடிவுக்காகக் காத்துக் கிடக்கும் அவலங்களையும் சிற்பி பேசியிருக்கிறார்.

தன்னந்தனி மூங்கில் - தன் செழுமைப் பருவங்களை இழந்து ஒரு துளி மழைக்காகக் காத்துக்கிடக்கிறது.

**'புற்றுக் கருநாக வீடான போதும்**
**புல்லாங் குழலுக்குத் தாயாய் நிமிர்ந்தேன்**
**சிற்றாடை கட்டிய சிற்றூரின் பெண்கள்**
**செக்கச் சிவந்த சிரிப்பில் வளர்ந்தேன்**
**கற்றாழையும் வெந்து காயுமிக் கானல்**
**கரிசலில் வெந்து**
**கிறங்கியே வாடும்**
**காலக் கொடுமைக்கு**
**மாற்றத்தை நாடும்**
**தன்னந்தனி மூங்கில் – ஒரு**
**தன்னந்தனி மூங்கில்.'**

அன்புக்கு ஏங்கும் ஏக்கத்தின் சாரத்தைக் கவிதைக்குள் பார்க்க முடிகிறது.

காத்திருப்பு - இன்றைய வாழ்வின் யதார்த்தம். 'கதவு' கவிதை இதை நொந்தபடி நுவல்கிறது.

'கதவுக் கருகில்
காத்துக் கிடப்பதே
வாழ்க்கையாகி விட்டது
தொட்டால் திறக்குமெனத்
தோன்றுகின்றது
தைரியம் வரவில்லை
மணியை அழுத்தினால்
அழகிய முகம் ஏதும்
எட்டிப் பார்க்குமோ?
நிச்சயமில்லை...
உறுமும் நாய் வந்து
தலையை நீட்டுமோ
பயம் ததும்புகிறது...'

வாழ்க்கையின் அர்த்தம் தான் என்ன? மரணமா? முதுமைத் துயரமா? 'முதுமை' அறைக்குள் கிடந்து கடைசி நிமிடங்களை எண்ணுபவன் மன நிலையைச் சொல்கிறது:

'சுற்றிலும் இருந்த
அறையின் சுவர்கள்
மெல்ல நகர்ந்து
நெருக்கிற்று
மேல்தளம்
விரலுக்கு எட்ட
இறங்கிக் கொண்டது
நெடுங்கால ஓட்டைகளால்
மூச்சு அடைத்தது...'

அறையில் பொருள்கள் எல்லாம் கொஞ்சம் கொஞ்சமாய் வந்து, வந்து நெஞ்சைக் கௌவுவதாய்ப் பிரமை... உண்மையில் நெஞ்சில் படரும் முதுமையின் அச்சம் தான் அது. நினைவு வந்தும் சென்றும் இருக்கிற நிலையில் கடிகார ஓசை சொல்கிறது

'நினைவை முட்டி முட்டி
விலகியது
கண்ணுக்குப் புலப்படாத
தலைமாட்டுப் பக்கக்
கடிகாரப் பெண்டுலங்கள்

*என் அறை*
*ஆ . . .என்*
*கல்லறை. . .'*

மனம் எழுப்பும் மர்மக் கோலங்களைத் துல்லியமாகச் சொல்லத் தெரிந்தவர் சிற்பி எனக் காட்டுகின்றது இக் கவிதை.

எடுத்துக் கொண்ட பொருளுக்கு ஏற்பக் கவிதையின் குறுமையும் நெடுமையும் அமைவதைச் சிற்பியிடம் காணலாம். 'சம்பள வர்க்கம்' என்ற கவிதைக்கு மூன்றே வரிகள்.

*'முதல் தேதிச்*
*சக்கரவர்த்திகள்*
*மாத நடுவில்*
*மன நோயாளிகள்*
*கடைசி வாரத்தில்*
*தத்துவ ஞானிகள்'*

அவமதிக்கப்படும் உழைப்பின் நிலையைக் கூறும் 'மௌனம்' குறியீடாகும் சின்னஞ்சிறு கவிதை.

*'அகன்ற உலகு நான்*
*என்றது அகல்*
*அழகிய உடல் நான்*
*என்றது திரி*
*அசையும் உயிர் நான்*
*என்றது சுடர்*
*உழைப்பு வடித்த*
*உதிரத் துளிகளாய்த்*
*தேங்கிய எண்ணெய்–வாய்*
*திறக்கவே இல்லை. . .'*

குறியீடாகச் சொல்லும் உத்தி சிற்பிக்கு அருமையாக வந்து உதவுகிறது. படைப்பு எத்தனை வார்த்தைப் பொலிவும், வடிவ நேர்த்தியும் கொண்டிருந்தாலும் அனுபவப் பக்குவம் இல்லையேல் எல்லாம் வீணாகி விடும். இந்த உண்மையைப் பேசும் கவிதை 'மதுரை வீரன்'.

களி மண் எடுத்து அளவாய் நீர்விட்டுக் குழைத்து வெகு கவனமாக ஒரு மதுரை வீரன் சிலை செய்யப்படுகிறது.

'தலைக்கு மேலொரு பட்டாக்கத்தி
வலத்தில் உருவிய தோற்றம்
மலைகளை வாரி விழுங்கும் முட்டை
விழிகளில் உருமிய சீற்றம்
கலையா இளமைக் கன்னி மார்பாய்
நிமிர்ந்த மீசையின் ஏற்றம்'

சிலை பூசைக்கு வைக்கப்பட்டது. ஒரு நாள் இரவு கொட்டியது மழை. விடிந்து பார்த்தால் களி மண் கூழ். . . களி மண் முனகியது;

'அனுபவத்துத் தனி நெருப்பில்
ஒற்றைப் பொழுதில்
ஒரு கணம் நான் வெந்திருந்தால் . . .'

மனித வாழ்வில் தான் எத்தனை வகை வகையான பாத்திரங்கள். அவர்களை எல்லாம் வெவ்வேறு கவிதைகளில் பதிவு செய்திருக்கிறார் சிற்பி. இயந்திரமாகி விட்ட ஒட்டல் பரிசாரகனைப் போல் அலுவலகத்தில் சக்கையாகப் பிழியப்படும் ரங்கசாமி 'ரோஷம்' கவிதை நாயகன்.

'காலை மணி பதினொன்று
காரணமின்றி முகத்தில் ஃபைலை
வீசி எறிந்த
காட்டுக் குரங்கு
மேலதிகாரிக்கு
ஒரு பலவீனமான
ஹி. . .ஹி. . .ஹி!'

அலுவலகத்தில் எல்லாருக்கும் ரங்கசாமியைக் கண்டால் ஏளனம் தான். கடைநிலை ஊழியருக்கும் கூட . . .

'தேநீர் வேளை
பாரா முகமாய்ப் போகும்
ஆபீஸ் சேவகன் ஆராமுதனிடம்
எனக்கும் ஒரு டீ . . . பிரதர்
– கெஞ்சாக் குறையில் முறையிட
பழைய பாக்கியை நினைவூட்டும்
அவன் முணுமுணுப்புக்கு

ஒரு கேடயம்
ஏம்ப்பா . . ஆராமுது . .
கொழந்தையை வீட்டுக்கு
எடுத்துண்டு வந்தாச்சோ?'

இத்தனையும் சகித்துக் கொண்டு வீடு சேர்ந்ததும் சின்ன மகள் சிலேட்டும் கையுமாக 'அப்பா வந்தாச்சேய்' என்று முன்னால் வருகிறாள்:

'எட்டு வயதுச் சுட்டி
கவிதாக் குட்டி
சிலேட்டும் கையுமாய் ஓடி
அப்போங் கணக்கிலே
எனக்கு தொண்ணூறு மார்க்
என்று
கொட்டி அளந்த
கொள்ளைச் சிரிப்புக்கு
முதுகு பழுக்க ஒருபதில்
பளார் . . பளார். . பளார்
நம்ம
ரங்கசாமி
ரோஷக்காரன் தான் . . .'

இந்த விதமாகக் கண்முன் தெரியும் பாத்திரங்களைக் காட்சிப் படுத்தும் அழகு மட்டுமன்றி, நம் காலச் சிக்கல்களுக்கு விடைகாணத் தொன்மங்களைப் பயன்படுத்தும் உத்திகளையும் சிற்பி பயன்படுத்துகிறார்.

விடுதலைத் தவிப்பில் காலடிகளுக்காகக் காத்திருந்து,

'இல்லை இந்தக் காலடிகள்
இராமனல்ல வெறும் தவிப்பு'

என்று மயங்கும் அகலிகை, துஷ்யந்தனால் ஏமாற்றப்பட்ட சகுந்தலாவைப் போல் இக்காலப் பெண் ஏமாறமாட்டாள் என்று சொல்லும் 'ஓ சகுந்தலா', மேனகைக்கும் சகுந்தலைக்கும் புறக்கணிப்பைச் செய்த விசுவாமித்திரன் - இராமனை மிதிலைக்கு அழைத்துச் செல்வது - அகலிகைக்கும், சீதைக்கும் வாழ்வு என்பதால் அதற்கு இது கழுவாயோ என்று கேட்கும்

'பிராயச்சித்தம்' இப்படிப் பல தொன்மங்களின் சித்திர அடுக்குகள் சிற்பியிடம் உண்டு.

அறிவியலின் பேரழிவைச் சொல்லும் 'நாய்க்குடை', விந்தையை விளக்கும் 'ஹாலி வால் நட்சத்திரத் தோடு', விளக்க முடியாத புதிராய் விளங்கும் 'காலம்' - இப்படி ஒரு சிந்தனைத் தொடர் ஓட்டம் - 'புதுக்கவிதையில் அறிவியல் ரதம்' என்பார் ஓர் அறிவியல் அறிஞர்.

'நான் யார்?' என்ற தேடலின் தவிப்பாக விளைந்த 'சூரிய நிழல்' கவிதையில் ஓயாது ஒலிக்கும் வினா. . .

**'என் மனப் பிரபஞ்சத்திலிருந்து**
**ஓர் இடறிய குரல் . . .**
**யாருடைய**
**நிழல் நான்?'**

மரணத்தைக் கூட ஒரு பக்குவத்தோடு ஏற்கும் மனோ நிலைக்கு அடையாளமாக. . . (எங்கெங்குக் காணினும்)

**'கரைந்து கரைந்து**
**காணாமல் போவது**
**எங்கும் நிரம்புவதற்காகவே'**

இப்படி வளர்ந்து கொண்டே போகிறது சிற்பியின் கவிதைப் பிரபஞ்சம்.

ஆழ்நிலை உணர்வுகளைத் தொடும் 'தவம்', 'தியானம்', இயற்கையில் ஒன்றிக் கலக்கும் 'நேசம்', 'ஓடையின் கனவு', வன்முறைகளின் வேரைத் தொடும் 'கவிதை முடியவில்லை', 'அவள் முடிவெடுக்கிறாள்', நாட்டுப்புறப்பாட்டுகளை ஞாபகப்படுத்தும் 'பூவே பூ . . புளியம் பூ', 'மழை' - இப்படி வகைமைகளின் களஞ்சியமாகிறது சிற்பியின் படைப்பு.

தனித்துச் சொல்ல வேண்டியவை சிற்பியின் கதைக்கவிதைகள். தமிழின் முதல் தலித் கவிதை என மொழியத்தக்க 'சிகரங்கள் பொடியாகும்', 'சாக்கடைகளும் தான் வற்றிவிடவில்லை' - இன்னும் 'தேவயானி' தொகுப்பில் உள்ள கவிதைகள் கவிதையில் கதை சொல்லும் சிற்பியின் திறமைக்குச் சான்றுகள்.

முழுமையான ஒரு காதல் சிற்பம் என 'மௌன மயக்கங்கள்' நூலைச் சொல்லலாம். 'ஒரு கிராமத்து நதி' - ஆய்வறிஞர் கா. சிவத்தம்பிக்குத் தம் கிராமத்தை ஞாபகப்படுத்திய கிராமிய ஓவியம்.

**'தானும் உணவாகி**
**மீனும் உணவாகும்**
**அந்த நதிக்கு**
**நானும் உணவாவேன்'**

என்று நதியின் சரித்திரச் சுருக்கம் சொல்வது போல் சுழன்று சுழன்று வரும் கிராமத்தின் நினைவு அலைகள்.

குருவும் சீடனுமாகத் தத்துவ விசாரணை நடத்தும் 'பூஜ்யங்களின் சங்கிலி' ஓர் அபூர்வ அனுபவமாக விரிகிறது.

தமிழ்க் கவிதையில் ஒரு புதுமையாக்கமாக அமைகிறது பாரதி-கைதி எண் 253. கடலூர்ச் சிறையில் மகாகவியின் நனவோடை பெருகி வரும்போது வரலாறு அதில் கரைந்து வருகிறது.

> இன்னும் ஒரு கவிதை இயக்கமாகச் சிற்பி திகழ்கிறார். அவரை வானம்பாடி என்று மட்டுமே குறிப்பிடும்போது 'புன்னகை பூக்கின்றன பூனைகள்', அவரை 'ஒளிப்பறவை' எழுதிய கம்யூனிஸ்ட் என்று சொல்லும்போது 'ஒரு கிராமத்து நதி' வெள்ளப் பெருக்காகி வேகம் காட்டுகிறது. அவரைத் திராவிட இயக்க மரபுக்கவி என்று வருணித்தால் 'பெருமூச்சின் பள்ளத்தாக்கு'கள் விரிகின்றன. அவரை ஆன்மிகக் கவி எனில்
>
> **'தாகம் தொலைக்கும்**
> **சிறு நதியாய் என்**
> **கவிதை நடக்கட்டும்'**

என்ற குரல் கேட்கிறது.

அகண்ட கவிதை நதியாக இக்குரல் கேட்கிறது என்கிறார் திறனாய்வாளர் பேராசிரியர் பாலா.

## ப. கங்கை கொண்டான் (1950–1988)

வானம்பாடிக் கவிதை இயக்கத்தில் மாணவக் கவியாகக் களம் புகுந்தவர் கங்கை கொண்டான். உற்சாகமும், கவிதைகளில் ஒரு புது மொழியுமாக - கடற்காற்றுப் போல் வந்த கங்கை கொண்டான் சின்ன வயதிலேயே காலம் சென்றது இலக்கிய இழப்பு. திரையுலகம் பழிவாங்கிய கவிஞர்களில் அவரும் ஒருவராகிப் போனார்.

புதிய விழிப்பை அவர் பாடிய முறையே வேறு. 'ஒளிப்பறவை' தொகுப்பில் 'மாயக் கண்ணன் மண்ணில் பிறக்கிறான்' என்ற சிற்பியின் கவிதை தந்த எதிரொலியாக வந்த கவிதை கங்கையின் 'எந்தக் கண்ணன் இங்குப் பிறந்தால்'.

**'பேய்மழைக் கரங்களின்**<br>
**பிணைப் பறுக்க வேண்டுமெனில்**<br>
**எந்தக் கண்ணன்**<br>
**இங்குப் பிறந்தால்**<br>
**கோவர்த்தனங்கள்**<br>
**குடையாகும்?**<br>
**பூஞ்சிறகுப் பறவைகள்**<br>
**நீர் பருக வேண்டுமெனில்**<br>
**எந்தக் கண்ணன்**<br>
**இங்குப் பிறந்தால்**<br>
**காளிங்க நாகங்கள்**<br>
**கட்டுப் படும்?'**

என்று வினாக்களைக் கம்பீரமாக நிறுத்தும் கங்கையின் கவிதை.

அம்மா சொல்லும் குழந்தைப் பருவக் கதைகளைக் குறித்துப் பேசும் 'சில நை லான் கனவுகள் எரிகின்றன' என்ற கவிதையில் அம்மாக்களுக்கு ஒரு வேண்டுகோள் வைக்கிறார்.

**'அம்மா . . .**<br>
**நீ பின்னி முடித்த**<br>
**நைலான் கனவுகள் எரிகின்றன**<br>
**அன்று நீ சொன்ன மாதிரி**<br>
**கால் முள்ளை**<br>
**எடுத்துவிடச் சொல்லும்**

கானகத்துச் சிங்கங்களை
நான் கண்டதே இல்லை அம்மா'

என்று வாழ்வின் நிதரிசனங்களைச் சொல்லுகிறார். கடைசியாக இந்தக் கதைகள் சொல்லாமல்,

'வாரியணைத்து
வாழ்த்துக்கள் சொல்லி
வாழ்ந்ததைச் சொல்லு
வாழ்க்கையைச் சொல்லு'

என்கிறார்.

குழந்தைகளைப் பற்றிய கவிதைகளிலெல்லாம் கொள்ளை அழகைக் குவித்து வைப்பார் கங்கை. கடைசியில் 'ணங்' கென்று ஒரு மணியோசை தொனிப் பொருளும் கிடைக்கும். 'ஙங்கா' என்ற கவிதையில் இதைப் பார்க்கலாம்.

'கறுப்பு வெளி துறந்து
கஷ்டப் பட்டுச் சிவப்பாகின்றது
காலம், கை வீசிச்
சாய்ந்தாடச் சொன்னாள்
அம்மா, புருவம் குறுகுறுக்கக்
கண்ணடித்து
அக்காவைக் கூப்பிடென்றான்
மாமா, பட்டு மணிக் கரங்கள்
மார்பில் படர விட்டுப்
பாசம் என்மேல் தானென்றார்
அப்பா. இரண்டு இலை விடு முன்னே
இத்தனை விலங்குகளை
இழுத்தபடி தவழ்ந்து
எதிர்காலம் விழிக்கு மொரு
குழந்தை – யார் வீட்டிலும்'

காதல் கவிதைகளை வெகுநயமாகவும், புதுமையாகவும் எழுத வல்லவராகக் கங்கை இருந்தார். சில வேடிக்கைகளைத் தலைப்பிலும் நிகழ்த்தினார். ஒரு கவிதையின் தலைப்பும், கவிதையும் கீழே தரப்பட்டுள்ளன.

'என்னை
அநாகரிகமானவனெனக்
காட்டும் உன் மேலுள்ள
எனது ஆசைகள்
எல்லாரும் சொன்னார்களே
என்பதால் – விழிப்பிலும் துயிலிலும்
என் காலைச் சுற்றி மியாவ்விட்ட
என் ஆசைக்குரிய பூனைக்குட்டியை
எடுத்துப் போய் காட்டில் விட்டேன்

நெஞ்சை–கை நகங்களால்
நானே கீறிக்கொண்டு
வீடு திரும்பினால் – எப்படியோ
எனக்கு முன்பே வந்து
நிற்கிறது என் பூனைக்குட்டி'

தவிர்க்க நினைத்தாலும் காதல் தடைகளை மீறி நெஞ்சில் வந்து நின்று கொள்வதை இப்படிச் சொன்னவர் கங்கை.

அரசு என்பது நசுக்கும் இயந்திரமாக, அதிகாரக் குவியலாகவே எப்போதும் மாறி விடுகிறது. அதை எத்தனை லாவகமாகப் படம் பிடிக்க முடிகிறது கங்கையால் . . . ! ஒரு தொன்மத் துணையோடு!

'உரிமைகள்
அளித்துக் காக்கும்
அரசாங்கங்கள்
ஊன்றிய அம்பின் கீழே
தேரைகள் 'ராமா' என்னும்'

கங்கை 'கூட்டுப் புழுக்கள்' என்ற அருமையான தொகுப்பைத் தந்து விட்டுப் போய்விட்டார்.

வானம்பாடியுடன் எதிர்ப்பாட்டுப் பாடிய பிரமிள் ஒரு கவிதையில்,

'பாட்டாளிக்கு உங்கள்
ரொமான்டிக் புஷ்பங்கள்

**என்ன இழவென்றே**
**புரியாது'**

என்று கடிந்து கொண்ட போது, பதில் சொன்னவர் கங்கை.

**'இன்டலக்சுவல்களுக்கு**
**நீ எழுதாமலே**
**எல்லாம் புரியும்**
**அவருக்காய் நீ**
**எதற்கெழு தோணும்?'**

ஆயினும் கடுமை கங்கையின் இயல்பல்ல. மென்மையும், இனிமையும், பளிச்சென்ற புதுமொழியும் கங்கையின் அடையாளங்கள்.

வானம்பாடி இயக்கத்தில் செவிகளைப் பூக்கவைத்துக் காற்றில் சட்டென்று கரைந்து போன அபூர்வ ராகம் ப. கங்கை கொண்டான்.

மு. மேத்தா

அண்மைக் காலத்தில் வியப்புக்குரிய சாதனையாகக் கவிதை உலகில் குறிப்பிடத்தக்க நிகழ்வு மு. மேத்தாவின் 'கண்ணீர்ப் பூக்கள்' 25 பதிப்புகளைக் கண்டதாகும்.

வானம்பாடி இயக்கம் சார்வதற்கு முன் நா. காமராசன், இன்குலாப் போல மரபுக் கவிதைகளைப் புனைவியல் வண்ணங்களோடு படைத்துக் கொண்டிருந்தார். அதிசயமான ஒரு பரிணாமம் நேர்ந்தது.

**'எங்கெல்லாம் மானுடம் காயம்படுகிறதோ**
**அங்கெல்லாம் பூக்கும்**
**சகோதர சோகங்களின் சர்வதேசியப் பூக்கள்'**

என்று கண்ணீர்ப் பூக்கள் அறிமுகமாயிற்று.

வாழ்வின் அடித்தளத்திலிருந்து பெற்ற அனுபவங்களால் மு.மேத்தாவின் கவிதைகளில் ஓர் ஆங்காரம் தொனிக்கிறது.

**'திருவிழா வரும்போது**
**அவர்கள் பாட வருகிறார்கள்**

**நாங்கள் பாட வரும்போது**
**திருவிழாக்கள் வருகின்றன'**

என்றும்,

**'நான் சுதந்தரமானவன்**
**என்னைக்**
**கட்டுப்படுத்த முடியாது**
**கட்டிப் போட முயன்றவர்கள்**
**தங்கள் காயங்களுக்குக்**
**கட்டுப் போட்டுக் கொண்டிருக்கிறார்கள்'**

என்றும் அவர் குரல் ஒலிக்கும் போது 'நான்'- 'நாம்' ஆகிறது. வானம்பாடி இதழில் அவர் எழுதிய 'நெம்புகோல்' கவிதை பலத்த வரவேற்புக்கும், கடுமையான தாக்குதலுக்கும் உரியதாயிற்று.

**'ஓ வானம்பாடிகளே**
**இந்தப்**
**பூமி உருண்டையைப்**
**புரட்டி விடக் கூடிய**
**நெம்புகோல் கவிதையை**
**யார் பாடப் போகிறீர்கள்?'**

ஒரு கவிஞன் தன் உணர்ச்சி உச்சத்தில் பேசுகிற பேச்சுக்குக் கண்டனம் தெரிவிப்பவர்கள், விசாலித்த கற்பனைகளின் வீச்சை அறியாதவர்கள்.

**'வறுமை என்பதை**
**மண்மிசை மாய்ப்பேன்**
**மண்ணிலார்க்கும்**
**துயரின்றிச் செய்வேன்'**

என்று பாரதியார் செய்கிற பிரகடனம் அளவிறந்த ஆதங்கத்தில், ஆசையில் விளைய வில்லையா? அது போன்றது தான் மு.மேத்தாவின் பெருமித வீச்சு!

மு. மேத்தாவின் புகழ் வாய்ந்த கவிதை 'தேசபிதாவுக்கு ஒரு தெருப்பாடகனின் அஞ்சலி'. அவருக்குள் காந்தியம் குடி இருந்து வருகிறது.

'கண்ணீர்க் கடலில்
கலங்கள் மூழ்கிய பிறகு
அடைக்கலம் தேடிய
ஆபுத்திரனே
அமுத சுரபியைத் தான்
நீ தந்து சென்றாய்
இப்போது
எங்கள் கைகளில் இருப்பதோ
பிச்சைப் பாத்திரம்'

என்று அண்ணலோடு விரிவாகக் கவிதை உரையாடுகிறது. காந்தியடிகள் சிலை கயவர்களால் சேலத்தில் உடைக்கப்பட்ட போது 'மாம்பழ நகரில் மனக்குயில்கள் அழுகின்றன' என்று எழுதினார்.

'காந்தியை மறந்தாலும்
காந்தியின்
கைத்தடியையாவது
ஞாபகப்படுத்தும்
காலம் வந்து விட்டது...'

என்றார் அவர். கவிஞருக்கு நாட்டார் வழக்கில் நாட்டமும் பயிற்சியும் மிகுதி. அதனால் 'அரளிப்பூ அழுகிறது' என்ற கவிதை நாட்டுப்புற ஒயிலோடு அமைகிறது. ஒரு முதிர்கன்னியின் சோகம் இங்கு உருவகமாகிறது.

'பூக்களிலே நானுமொரு
பூவாய்ப் பிறப்பெடுத்தேன்
பூவாய்ப் பிறப்பெடுத்தும்
பொன் விரல்கள் தீண்டலியே
பொன் விரல்கள் தீண்டலியே – நான்
பூ மாலை ஆகலியே'

காதல் கவிதைகளில் மு.மேத்தா திளைத்து விளையாடுகிறார். சோகமும் மோகமும் அலை அலையாய்ப் பெருகுகின்றன.

'தொட முடியாத
தொலைவில் இருப்பதாய்க்
கனவு காணாதே

*இந்த பூமியின் விளிம்பையே*
*தீண்டி விடுமளவிற்கு*
*என் விரல்கள்*
*நீளமானவை*
*ஏனென்றால்*
*என் கைகள் வெறும் கைகளல்ல*
*கவிதைகள்'*

என்று பேசும் காதல் வீரம் ஒரு புறமென்றால், காதலியுடன் உல்லாசமாக உரையாடும் கவிதைகள் இன்னொரு புறம்.

*'பேசக்கூடாதா*
*பேசக்கூடாதா*
*என்ன தான்*
*மௌனம்*
*மொழிகளிலேயே சிறந்த*
*மொழியென்றாலும்*
*இன்னொரு மொழியைத்*
*தெரிந்து வைத்துக் கொள்வதில்*
*என்ன குற்றம்?*
*பேசு'*

காதல் தடைகளின் மத்தியில் தானே போராட்டம் நிகழ்த்துகிறது. பல சமயங்களில் வெற்றியைத் தொட முடியாமல் தவிக்கிறது. அந்த உணர்வை 'காவல்' கவிதை அற்புத ஓவியமாக்குகிறது. ஒரு துளி வேதனை ஊசியின் கூர்மையாகக் குத்துகிறது.

*'விழிகள்*
*நட்சத்திரங்களை வருடினாலும்*
*விரல்கள் என்னவோ*
*ஜன்னல் கம்பிகளோடு தான் . . .'*

மனிதன் போராட்டத்தின் பிள்ளை. ஒவ்வொரு தலைமுறையிலும், வரலாற்றின் ஒவ்வொரு தாழ்வாரத்திலும் ஆதிக்கங்களைப் புறங்காண அவன் போராடியே வந்திருக்கிறான். தோல்விகள் துரத்திய போதும் போராட்டத்தை அவன் கைவிட்டதில்லை. வாழைமரம் என்ற உருவகத்தில் வைத்து, அதன் மாண்புமிகு குரலாக மானுடத்தின் குரலைப் பதிவு செய்கிறார்.

'மரங்களில் நான் ஏழை—எனக்கு
வைத்த பெயர் வாழை

மண்ணில் வேரோடி
மாநிலத்தில் கால் பதித்து
வீசும் புயற் காற்றை
விழும் வரைக்கும் நின்றெதிர்ப்பேன்

நின்றெதிர்த்த முடிவினில் நான்
நிலத்தில் விழுந்து விட்டால்— என்
கன்றெதிர்க்கும் — கன்றுடைய
கன்றெதிர்க்கும்! கன்றுகளின்
கன்றெதிர்க்கும்!'

தடுமாறும் நெஞ்சங்களிலும் உருக்கைக் காய்ச்சி ஊற்றுகிற வரிகள் இவை.

நகைச்சுவையிலும் கருத்துப் பொதிவைக் கவனமாய் வைப்பவர் மு. மேத்தா. 'செருப்புடன் ஒரு பேட்டி' நிகழ்த்துகிறார். சுரீல் சுரீலென்று பதில் தருகிறது செருப்பு. கேள்வி கேட்கிறார் கவிஞர்.

'தீவிரமாக எதைப்பற்றியாவது நீங்கள்
சிந்திப்ப துண்டா?
உண்டு
சில தேசங்களையும்
சில ஆட்சிகளையும்
பார்க்கும் போது
மீண்டும் நாங்களே
சிம்மாசனம் ஏறிவிடலாமா
என்று யோசிப்பதுண்டு'

வெகு எளிதாக வாசகர்களை எட்டும் எளிமையும், சொல்ல விரும்புவதை நேர்த்தியாகத் திரட்டி முன் வைக்கும் செய்திறனும், சொற்களின் நெகிழ்வு புலப்படாதபடிக் கையாளும் அருமையும், பெருவாரியான வாசகர்களை மு.மேத்தா ஈர்த்திருப்பதற்குக் காரணம்.

புதுக்கவிதைப் பரவலுக்கு முக்கியமான பங்களிப்பைச் செய்தவர் மு.மேத்தா. காலம் அவர் கவிதைப் பாங்கில் பெரிய

மாற்றங்களைச் செய்துவிடவில்லை. 'கண்ணீர்ப் பூக்க'ளின் மற்றொரு வகையாகவே புதிய தொகுப்புக்களும் அமைந்திருக்கின்றன.

ஒரு வானவில்லாக - மழைத் துளிப் படிமங்களின் வண்ணச் சேர்க்கையாக, என்றும் குறிப்பிட்ட வாசகர்களின் எதிர்பார்ப்புகளை நிறைவு செய்யும் அழகியலாக மு.மேத்தா திகழ்கிறார்.

## பாலா

வானம்பாடி இதழில் குறைவாக எழுதியிருந்தாலும் புதுக்கவிஞர்களில் தனக்கெனத் தனி வெளியீட்டுப் பாங்கைக் கொண்டவர் பாலா. இதற்கு அவருடைய ஆங்கில இலக்கியப் பயிற்சி காரணமாக இருக்கலாம்.

'இன்னொரு மனிதர்கள்' என்ற வித்தியாசமான தலைப்பில் முதல் தொகுதி வெளிவந்தது. 'திண்ணைகளும் வரவேற்பறைகளும்' இரண்டாவதாக வந்த தொகுதி.

அர்த்தப் பன்மைகளைத் தூண்டும் அழகு பாலாவிடம் உண்டு.

**'காற்று வந்து தொட்டதும்**
**மரம்**
**சங்கீதமானது**
**ஒரு மனிதன் வந்து தொட்டதும்**
**மரம்**
**விறகாகிப் போனது**
**இன்னொரு மனிதன் வந்து தொட்டதும்**
**விறகு**
**இசையாகி மலர்ந்தது**
**இன்னொரு மனிதர்களால்**
**வாழ்கிறது உலகு'**

ஒவ்வொரு மனிதனுக்கும் ஒவ்வொரு பங்களிப்பு இருக்கிறது. ஒன்றை மற்றொன்று ஈடு செய்கிறது. வாழ்க்கையின் இந்தப் பேருண்மையை எளிமை என்ற காப்ஸ்யூலில் தந்து விடுகிறார் பாலா. 'இன்னொரு மனிதர்கள்' என்ற பிரயோகம் நம்மை இழுத்து நிறுத்துகிறது.

குழல்கள் மாறிப்போன உலகம் இது. இன்றும் குயில்கள் கூவத்தான் செய்கின்றன. கேட்கிறவர்களின் செவிகளுக்கு அது பழக்கமில்லாமல் போய்விட்டது. குயில் பாடத் தேர்ந்து கொண்ட இடம் கூட எத்தனைத் தூரம் மாறிப் போய்விட்டது! இது பாரதியார் கண்ட மாந்தோப்புக் குயில் இல்லை.

**'பூப்பு நீராட்டு விழா வண்ணப் போஸ்டர்**
**சூடிச் சிறந்த சுவரின் சரிவில் அமர்ந்து**
**கூவிப் பறந்தது குயில்'**

மனிதர்களுக்குக் காதுகள் இல்லையே என்ற கவலை அதற்கு. சாலைப் புளிய மரம் - அதன் நிழலில் அதிர்ஷ்டச் சீட்டுப் பொறுக்கும் கிளி ஒன்று. அங்கும் குயிலைக் கேட்பார் இல்லை.

காதலர் கொஞ்சும் தனியறைப் பக்கம் கூவிப் பார்த்தது, அவர்களோ நாடா இசையில் குயில் பாட்டுக் கேட்டுத் தம்மை மறந்திருந்தனர். மெய்யான குயில் பாட்டு 'நாடா இசை' யாகவே ஆகிவிட்டது.

**'குயில்களுக்கான உலகம் இல்லை இப்போது**
**எனினும் கூவாதிருக்குமோ குயில்?'**

இந்தக் கேள்விக்குள் இயற்கையை நேசிக்காத மனிதர்களின் காலமாக இது மாறிப்போன சோகம் புதுவிதமாகச் சித்திரிக்கப்படுகிறது.

எத்தனை முரண்பாடான உலகமாகி விட்டது இது. வெறும் பாவனைகளால் கழிகின்றன உறவுகள். சிதிலமடைந்த உறவுகளை ஒரு சின்னக் கவிதையில் சொல்கிறார் பாலா.

**'வணக்கம் என்பார்**
**வணங்க மாட்டார்**
**நலம் பார்த்தறியார்**
**நலமென் றெழுதுவார்**
**பொதுவான பொய்களில்**
**பொலிகிறது வாழ்க்கை'**

எல்லாம் சம்பிரதாயமும் சடங்குமாகி விட்டன. இதற்குச் சொற்களும் விதி விலக்கல்ல. தொலைபேசிச் சொற்கள், அரசு

முத்திரையிட்ட வானொலிச் சொற்கள், வாங்கிய கடனை ஞாபகப்படுத்தும் தொலைக்காட்சிச் சொற்கள் - இப்படி எத்தனையோ. ஆட்டோகிராப் கேட்பவரிடம் கவிஞர் வினவுகிறார்.

**'எதை எழுதி வாங்குகிறாய் நீ**
**காலத்தால் துருப்பிடிக்காத**
**தேவதைச் சொற்களையா? . . .**
**எதுவே யாயினும்**
**உன் ஆட்டோகிராபை**
**என்னிடம் நீட்டாதே**
**உனக்கான சொற்கள்**
**என்னிடம் இல்லை'**

மரபுகளைச் சொற்களால் உடைத்தெறிகிறார் கவிஞர் 'இரவல் சொற்களுக்கு ஏங்காதே' என்ற அறிவுரையோடு.

நவீன வாழ்க்கை தரும் அதிர்வுகளையும், அந்த அதிர்வுகளால் புலனாகும் அபத்தங்களையும் பேசுகிறார் பாலா. 'பட்டமரம்' கவிதையைப் பாருங்கள்.

**'ஒரு குழந்தை போதும்**
**விளம்பரத் தட்டி பேசியது**
**ஒரு பட்ட மரத்தில்**

**அதன் மரக்கிளையில்**
**கண் சிமிட்டியது**
**ஒரு பசுந்தளிர்**

**வயோதிகத்தில் கருவுற்ற மாது போல**
**பாவமாய் மரம்'**

வள்ளிமுத்து என்ற பால்ய காலத் தோழனை முன் நிறுத்தியும் சில கவிதைகளைப் படைத்திருக்கிறார். இதுவும் பாலா செய்திருக்கும் புதுப்பரிசோதனை.

இயற்கையை நேச பாவத்தோடு அணுகும் கவிஞர் மென்மையில் அழுத்தத்தை வைக்கிற அழகே அழகு. மழைத்தூறல். கார் கண்ணாடிகளை ஏற்றிப் பறக்கிறது. முகப் பூச்சு கரைவதைத் தடுக்க கைப்பையால் தலையை மறைக்கின்றனர்

இளம்பெண்கள். சிறுவர்கள், பார வண்டிக்காரர்கள் விரைகின்றனர். ஆனால் மழை...

**'மலர்களை இலைகளை மரக்கிளைகளை**
**எளிய தூசி மனிதர்களை**
**கழுவிக் கொண்டிருந்தது மழை'**

புதிய கோணங்களில், பாரம் ஏற்றாத கற்பனைகளுடன், வாழ்வையும் மனிதர்களையும் விலகி நின்று பார்க்கிற கவிஞர் பாலா. எவ்விதப் பூச்சும், பாசாங்கும், பிரகடனமும் இல்லாமல் கவிதை படைக்கிறார்.

**'புரளும் செங் கூந்தலில்**
**ஒரு கண்ணிப் பூவும் இல்லாமல்'**

வரும் பூக்காரியைப் போல - கூடை நிறையப் பூக்களோடும், சுய மிதப்பான அலங்காரமற்றும் பாலா கவிதை அர்த்தங்களைச் சமைக்கிறது.

**தமிழ் நாடன்**

பன்முகம் கொண்ட எழுத்தாளர் தமிழ் நாடன் வானம் பாடி வட்டத்துக்குள் தாமதமாக வந்த போதும் தம் கவிதைகளால் இருப்பைப் புலப்படுத்திக் கொண்டவர்.

'அம்மா அம்மா' என்ற நூல் வாயிலாக ஆப்பிரிக்கா முதல் இந்தியா வரையிலான நாடுகளை உறவுப் பாலத்தில் அன்போடும் விமர்சனத்தோடும் இணைத்துக் கொண்டவர். ஆப்பிரிக்காவை 'ஆதிமலரே' என்று அழைப்பார். அமெரிக்காவை, 'தன தேவதையே' என்பார். பிரிட்டனை 'ராஜசிம்மமே' என்பார். இந்தியாவையோ,

**'சத்தியப் பிரவாகம்**
**உன் பாதகமலம்**
**உன் ஸ்தனம்**
**என் ஜீவிதம்'**

என்று உயிரொழுக அழைப்பார். வரலாறுகள் பெருகியோடும் ஜீவநதி தமிழ் நாடனின் 'அம்மா அம்மா'.

வேள்வி, மண்ணின் மாண்பு, காமரூபம் என பல்வேறுபட்ட களங்களில் அவர் கவிதை நின்று கருத்துரைக்கும்.

ஜீன் என்ற உயிர் மூலம், எய்ட்ஸ், சுற்றுச்சூழல் சீரழிவு, காதல் என வானத்தின் கீழ் அனைத்தும் அவர் கவிப்பொருள்கள். 1975 இலேயே 'Pollution' என்ற தலைப்பில் கவிதை தந்தவர்.

**'நடக்காதே நிலத்தில்**
**பறக்காதே விண்ணில்**
**பார்க்காதே விழித்து**
**சூழ்நிலைக்கேடு**
**எங்கும்**
**சூழ்நிலைக்கேடு'**

என அன்றே எச்சரித்தவர் தமிழ் நாடன்.

எதையும் எப்படியும் எழுதலாம் என்ற சுதந்தரத்தைக் கவிஞனுக்குத் தர ஆசைப்பட்டவர். மூடு பல்லக்கில் கவிதையை இரகசியமாய்ப் பதுக்கும் மூடத்தனத்தை எதிர்த்தவர்.

**'எழுத்தெண்ணிப் பாடினால் கவிஞனாம்**
**கருத்தெண்ணிப் பாடினால் அல்லவாம்**
**சாவினைச் சிந்தித்தால் கவிஞனாம்**
**வாழ்வைச் சித்தரித்தால் அல்லவாம்**
**தேகத்தை வருணித்தால் கவிஞனாம்**
**தின்னச் சோறு கேட்டால் அல்லவாம்**
**அழகினை மோகித்தால் கவிஞனாம்**
**அசிங்கத்தைக் கண்டித்தால் அல்லவாம்**
**போமய்யா**
**உமது 'கவிஞன்' பட்டத்தை**
**எடுத்துக் கொண்டு'**

என்று பொய்மை கண்டு சீறுவார் தமிழ் நாடன்.

கவிதையின் எல்லைகளை விரிவுபடுத்தியதில் குறிப்பிடத்தக்க பங்களிப்பைச் செய்தவர் தமிழ் நாடன்.

அவருடைய 'வானம்பாடிகளின் இலக்கிய வானம்' ஒரு கவிதைக் காலக் கட்டம் குறித்த சிறந்த ஆய்வு நூல்.

### தேனரசன்

வெள்ளை ரோஜா என்ற கவிதை நூல் வாயிலாகக் கவிதை வாசகர்களின் கவனத்தைக் கவர்ந்த வானம்பாடிக் கவிஞர் தேனரசன்

**'கதையில் அகலிகை**
**சாபவிமோசனம்**
**கட்டிலுக்கு அடியே**
**யாரது'**

என்று வாழ்க்கை முரண்களைத் தொட்டுக் காட்டியவர். சமூகச் சிக்கல்களை நேரடியாகப் பேசாமல், அதே சமயம் அந்நியப்பட்டும் போகாமல் உணர்த்துகிற குரல் தேனரசனுடையது.

அடக்குமுறை வலுப்பெற எதிர்ப்புச் சக்திகளும் வலுப்பெறும் என்பதை அவர் உணர்த்துகிற முறையே வேறு. சொல்கிறார் கவிஞர்:

**'இந்த வெயில் போதாது**
**இன்னுமிது தகிக்கட்டும்**
**அந்த மழை வருவதற்கும்**
**அடிப்புழுதி குளிர்வதற்கும்'**

ஒரு பேச்சு மொழியின் வசீகரம் எப்போதும் தேனரசனிடம் உண்டு. 'நினைத்துப் பார்க்கிறதுண்டோ நீங்கள்' என்று ஒரு கவிதை தொடங்கும். 'விடியல் தேவன்' என்று காலை நேரத்துப் பால்காரனைச் சொல்வதும்,

**'ஆளு அரக்காசுக்கு ஆகாட்டியும்**
**போளைக்கு மூடியாட்ட**
**பொணச்சு வெக்கறதிலே**
**கெடியன் நம்ம மசையன்'**

என்று கொங்குத் தமிழில் பேசுவதும் அவர் தனிக் கலைக் கூறுகள்.

தேனரசன் வாழ்க்கையையே ஒரு தத்துவப் பயணமாகப் பார்க்கிற இயல்புடையவர். 'நான் எந்த நான்?', 'இயற்கை ஞானம்', 'எது எனக்கு?' என்று சாதாரண நிகழ்வுகளில் அசாதாரணங்களைத் தேடுவது அவர் பண்பு.

'ஒரு சருகின் அசைவினிலே
சங்கீதத்தையும்
ஒரு சிறகின் வருடலிலே
சிருங்காரத்தையும்
அனுபவித்துச் சுவைக்கிறேனே
அந்த நானா நான்?
என் வழியில் ஒரு கனவாய்
வந்து போன ஒருத்திக்காக
காலங்களின் மீது
கண்ணீர் தெளித்து நிற்கிறேனே
அந்த நானா நான்'

என்று எளிய உண்மைகளின் மீது ஒரு தத்துவப் பந்தல் அமைக்க முயல்கிறார் தேனரசன்.

'மேகங்களைத்
துரத்தியடிக்கும் காற்று
விரட்டக் கூடுமோ
நட்சத்திரங்களை'

என்று அழகாக வினவுதலும் அவருக்குச் சாத்தியம். அதன் சாரமாக,

'வந்துபோகும் சுகதுக்கங்கள்
அலை போல்
வாழ்க்கை நித்தியமாக நிற்கும்
கடல் போல்'

என்று சொல்லவும் முடிகிறது.

'வானம்பாடிகளின் முற்றுப் பெறாத கவிதைக் கொடைக்கு இன்னொரு அடையாளம்' என்று திறனாய்வாளர் பாலா குறிப்பது தேனரசன் கவிதைகளுக்கு வைத்த சந்தனத் திலகம்.

## ஞானியும் மற்ற கவிஞர்களும்

வானம்பாடி இயக்கத்தில் படைப்பிலக்கியம் மிகுதியும் செய்யாமல் ஒரு தத்துவார்த்தத் தளத்தில் நின்றவர் ஞானி. இன்று புறக்கணிக்க முடியாத ஒரு திறனாய்வாளராக உருப்பெற்றிருக்கும்

ஞானி மார்க்சியம் கற்றவர். அது குறித்து விவாதித்து விவாதித்து இன்று மொழி, இன விடுதலை என்ற எல்லை நோக்கி நகர்ந்திருப்பவர்.

எதையும் தத்துவப் பின்புலத்தில் பார்க்கும் அவர் படைத்த புகழ் பெற்ற நெடுங்கவிதை 'கல்லிகை'. அகலிகை கதை எடுத்த ஆயிரம் அவதாரங்களில் ஞானியின் சித்திரிப்பு ஒரு வரலாற்று ஆழத்தைக் காண முயல்கிறது.

வானம்பாடியின் ஏழாவது இதழ் சற்று கனமானது. அந்த இதழியல் புவியரசு, நா. காமராசன், கங்கை கொண்டான், மீரா, தமிழன்பன், இன்குலாப் எனப் பல கவிஞர்களின் கவிதைகளும் வெளிவந்தன. அவற்றினிடையே ஒரு நெடுங்கவிதையாக ஞானியின் 'கல்லிகை' பெருக்கெடுத்தது.

காலம் காலமாக அவமதிக்கப்பட்ட பெண்மை, அடிமைப்படுத்தப்பட்ட பெண்மை அகலிகையாக உருவகப்படுத்தப்படுகிறாள்.

**'என்னுள் உலகைப் புதைத்த நான் –**
**இன்று**
**என்னையே எனக்குள் புதைத்து**
**கல்லறை ஒன்று கட்டிக் கொள்கிறேன்'**

என்கிறாள் அகலிகை. என்ன காரணம்?

**'என் கணவன்**
**மானோடு ஓட வேண்டிய என் கால்களில்**
**மந்திரக் கயிறு பூட்டினான்'**

அவன் உழைப்பை அவமதிக்கும் வர்க்கத்தின் பிரதிநிதி பழமையின் வடிவம். மாற்றங்களை விரும்பாத, அடிமைகளை ஏவல் கொள்கிற வர்க்கம்.

வருகிறான் இந்திரன், புதுமைகளின் தூதுவனாக, புதிய புல்லரிப்புகளை விதைத்தபடி.

**'நிலத்தைக் குடைந்து இரும்பைக் கண்டு**
**ஆற்றை மடக்கி வயலிற் பாய்ச்சி . . .**
**ஆடை புனைந்து அணிகலன் செய்து**

**வீட்டை அமைத்து வியன் நகர் கண்டு**
**தேட்டை பெருக்கிய தேவேந்திரன்'**

மாற்றங்களின், புதுமைகளின் தூதுவன். அவனை விழைகிறாள் அகலிகை. ஆனால் கௌதமன், அகலிகை ஆத்மாவை, அவள் தாகத்தை உணரவில்லை.

**'உடலக் கூட்டை உயிர்க் கயிற்றில் கட்டி**
**இழுத்துத் திரியும் எந்திரம்'**

அவன். அதனால் மொட்டை மரமாய் நின்ற அகலிகைக்கு ஆசைக் கிளைகள் விரிந்து பெருத்தன.

**'திமிர்ந்து கிடந்த என் தசைத்தீயை**
**எந்த நாய்க்கு முன்னரும்**
**எடுத்தெறிய'**

அவள் தயாரானாள். அதன் விளைவாய் இந்திரனை ஏற்கிறாள். அவனுட் கலந்தாள்.

கௌதமன் குறுக்கிட்டபோது, 'முனிவனைச் சாணியாய்த் தட்டிக் கூரை மேல் எறியாமல்' ஓடிப் போனான் இந்திரன்.

**'ஒருவன் என்னை**
**காலுக்குச் செருப்பாக்கிக் கழற்றி எறிந்தான்**
**மற்றவன்**
**தோலுக்குப் போர்வையாக்கித் தூர எறிந்தான்**
**இரு நாய்களும்**
**என்னிடத்தில் எலும்பையே தேடின**
**இதயத்தைத் தேடவில்லை'**

என அகலிகை நொந்து புலம்பினாள். இனிக் கதிமோட்சம் இராமனால் என்று முடிவு செய்கிறாள்.

ஒரு பார்வையில் ஒவ்வொரு சமுதாயத்திலும் பெண் அடிமைப் படுத்தப்பட்ட உருவகமாகத் தோன்றுகிறது கல்லிகை. ஆனால் அதன் அடியாழத்தில் இன்னொரு படிவ அடுக்கு இருப்பதும் புலனாகிறது. ஆண்டான் அடிமைச் சமூகம் மாறி, முதலாளி தொழிலாளி யுகம் தோன்றும்போதும் மனிதன் விடுதலை இன்றித் தவிக்கிறான். உடைமைப் போரால் உறவு குலைகிற சூழலில் மானுடம் முழுவதையும் தோழமையால்

அணைக்கிற, சுரண்டல் அரக்கனை மாய்க்கிற ஆற்றல் மிகு மானுட சக்தியின் உருவகமாக இராமன் வருகிறான். போலி ஆன்மிகம் (கௌதமன்) பொடிபட, விடுதலை நாடகம் போடுகிற போலி வீரம் (இந்திரன்) தூர்ந்து போக, உழைக்கும் வர்க்க வெற்றியாக இராமன் திகழ, அவனை நாடுகிறது விடுதலைத் தாகம் கொண்ட மானுடம் (அகலிகை).

இப்படி ஒரு சாராம்சம் கொண்டு கல்லிகை உயிர் பெறுகிறது. இந்த ஒற்றைக் கவிதை ஞானியின் வெற்றி.

வானம்பாடியின் பயணத்தில் 'ஒரு ரோடு ரோலரின் பவனி' யைத் தந்த சக்திக் கனல், 'காலம் தோறும் சுதந்தரப் பிரசவத்துக்கு மருத்துவச் செலவுகள் அதிகமாகிறது' என்று சிந்தித்த அக்கினி புத்திரன், 'வெந்துயர் முன் மன வேலி' என்ற உருவகம் தந்த பரணன்' புதிய பாடு பொருள்களை அளித்த இளமுருகு, 'துருவயுகச் சூனியம்' பற்றிய அதிசயக் கற்பனையில் திளைத்த முல்லை ஆதவன், 'ஞான உடுக்கையில் கால கீதங்களை' உதிர்த்த பா. செயப்பிரகாசம், 'இரவிலே வாங்கினோம் இன்னும் விடியவே இல்லை' என்று சுதந்தரத்தை எழுதிய ஏ. அரங்கநாதன், இன்னும் சி.ஆர். ரவீந்திரன், ஜீவ ஒளி, ஜன. சுந்தரம் எனப் பலர் பங்கு கொண்டனர்.

மீரா, ரகுமான், நா. காமராசன், தமிழன்பன், கல்யாண்ஜி, கலாப்ரியா என இன்னொரு கவிஞர் வரிசையும் வானம்பாடியில் எழுதினார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

மலர வேண்டிய ஒரு புதுயுகம் குறித்த கனவு வானம்பாடி. அது நிறைவேற வேண்டுமே என்ற கவலை இருந்தது. வழிப் போக்கர்கள் வெவ்வேறு திசை நோக்கி நடந்த அவசரத்தில் வானம்பாடி இயக்கம் சிதறியது. ஆயினும் அது விதைத்த விதைகள் முழுமையும் பயனற்றுப் போய்விட வில்லை.

வானம்பாடியின் மையப் படைப்பாளிகளான புவியரசு, சிற்பி, ஞானி, மு.மேத்தா, சி.ஆர். ரவீந்திரன், தமிழ் நாடன், பாலா, முல்லை ஆதவன் முதலிய பலர் தனித்தனித் துறைகளில் ஆற்றலாளர்களாக இன்றும் தொடர்கின்றனர்.

# 10. புதுக்கவிதை - படைப்புக்களம் விரிகிறது

புதுக்கவிதைக்கு வளம் சேர்த்த படைப்பாளிகள் சிலரை இந்த இயலில் பார்க்க முற்படுகிறோம். முன்னே குறித்த இதழ்கள், இயக்கங்களை முழுமையாக ஏற்காமல் தங்கள் தனித்துவம் புலப்படுத்திய கவிஞர்களை இங்கே சந்திக்கிறோம்.

*அப்துல் ரகுமான்*

திராவிட இயக்கச் சார்பானவராகப் பொதுவாக அறியப்பட்டாலும், கவிதைகளைப் பரிசுத்த நிலைக்கு உயர்த்த வேண்டுமென்ற கோட்பாடு உடையவர் என்று அப்துல் ரகுமானைக் கருதலாம்.

மரபுக் கவிதைகளில் ஆழங்காற்பட்டவராக இருந்தும், முதன் முதலாக அவர் வெளியிட்ட தொகுதி புதுக்கவிதைகள் அடங்கிய 'பால் வீதி'. சாகித்திய அகாதெமி விருது பெற்றிருக்கும் கவிஞரின் கவிதை நூல்கள் : 'பால் வீதி', 'நேயர் விருப்பம்', 'சுட்டு விரல்', 'பித்தன்', 'ஆலாபனை'.

மாணவப் பருவத்திலேயே புதுக்கவிதை நிகர்த்த வசன கவிதைகளைப் படைத்தவர் என்பர். இறுக்கமாகச் செய்யப்பட்டு, சர்ரியலிசப் பார்வையோடு சிதறிய பிம்பங்கள் கொண்டதாய், இருண்மைப் பண்பு ஓரளவு செறிந்ததாய் 'பால் வீதி' திகழ்கிறது.

**'கோடிச் சூரியர்களைப் பிழிந்து**
**நட்சத்திரங்கள் செய்தேன்**
**இவைகளை**
**உங்கள் சுவர்களில்**
**தேதித்தாள் ஆக்கி விடாதீர்கள்'**

என்பது கவிஞரின் எச்சரிக்கை.

**'என் ஆறாவது விரல் வழியே**
**சிலுவையிலிருந்து**

*வடிகிறது ரத்தம்*
*ஆம்*
*என் 'மாம்சம்'*
*வார்த்தை ஆகிறது'*

என்ற தொன்மம் படிமம் வாயிலாக எழுத்தின் புனிதத்தையும், பெருமையையும் பேசுகிறார் ரகுமான்.

இருண்மையும், படிமமுமாகப் பேசும் ரகுமான் கவிதைக்கு ஓர் எடுத்துக்காட்டு 'நார்சிஸ்ஸஸ்'. இக் கவிதையை உணர நார்சிஸ்ஸஸ் பற்றியும் தெரிய வேண்டும். சிந்திக்கவும் வேண்டும்.

*'கண்ணாடிச் சமாதியிலிருந்து*
*என்னை வெறிக்கும் இது*
*என் பிணம்'*

இந்த வரிகளில் புரிதல் நிகழ்ந்தாலன்றி மேற் செல்லல் இயலாது. தன் புகைப்படத்தையே கவிஞர் குறிக்கிறார். இறந்த காலப் படம் என்பதால் படத்தைப் 'பிணம்' என்கிறார். இனிக் கவிதை எளிதாகி விடும்.

*'என்னிலிருந்து கிழிக்கப்பட்ட*
*ஒரு தேதித்தாள்*
*இங்கே சுவரில்*
*சிலுவை அறையப்பட்டிருக்கிறது*
*இறந்த காலத்தில்*
*சிறைப்பட்ட என் நிழலை*
*நிகழ்காலம் எட்டிப்பார்க்க*
*ஒரு சாளரமா இது?*
*கிரண நூலிழை பின்னிய*
*இந்தக் கைக்குட்டை*
*விடைபெற்ற ஒரு நேரத்தின்*
*ஞாபகச் சின்னம்'*

தொடரும் பிம்பங்கள் கவிதையை மேலெடுத்துச் செல்கின்றன. கவிதையின் இறுக்கம் மெல்லக் கட்டவிழ்ந்து விடுகிறது. ரகுமானின் 'பால்வீதிக்' கவிதைகள் இத்தகையவை.

தொன்மங்களை வெகு லாவகமாகக் கையாளுபவர் கவிஞர். எல்லாச் சமயத் தொன்மங்களும், பேரிலக்கியத் தொன்மங்களும் அவருக்கு அத்துபடி. 'ஐந்தாண்டுக்கு ஒரு முறை' என்ற சிறிய கவிதையைப் பார்க்கலாம்.

*'புறத்திணைச் சுயம் வர மண்டபத்தில்*
*போலி நளன்களின் கூட்டம்*
*கையில் மாலையுடன்*
*குருட்டுத் தமயந்தி'*

மிகக் கூர்மையான எள்ளல் நம் தேர்தலைக் குறித்ததாக அமைகிறது. இதில் புறத்திணை என்ற சொல் வேண்டுமோ? தேவையில்லை தான். ஆனால் அகத்திணை தானே சுயம்வரம் இங்கு நடப்பது அது அல்லவே. அதற்காக இந்தக் குறிப்பு. கவிஞர் இலக்கணத்திலும் வல்லவராயிற்றே.

இந்தத் தொகுப்பில் உள்ள மிகச் சிறந்த கவிதைகளில் ஒன்று, 'என் செவியின் சுவாசம்'. லதா மங்கேஷ்கருக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கக் குறிப்பால் கவிதைக்குள் செல்ல முடிகிறது.

*'பாடகி!*
*என் ஏகாந்த சோபன அறைக்குள்*
*உன் முகத்திரை அணிந்த கீதம்*
*ஸ்வர பாதசரம் ஒலிக்க*
*நாண அலங்காரத்துடன்*
*நடந்து வருகிறது . . .*

*உன்னை மொய்க்கும்*
*காற்றின் சிறகுகளில்*
*சொர்க்க மகரந்த கர்வம்*

*உன் தாலாட்டில்*
*காயங்கள் இமை மூடும்*
*என் கண்ணீர் மேகங்களில்*
*உன் கிரணங்கள்*
*வர்ணக் கோலம் வரையும்*
*அர்த்தப் பாதையை விட்டு*
*உன் காந்தக் காட்டில்*

***காணாமல் போகும் போது***
***என்னை***
***அடையாளம் காண்கிறேன்'***

அடுத்த வரியால் முந்தைய வரியை வெல்லும் அதிசயமாக எப்போதும் அப்துல் ரகுமான் திகழ்வதை இந்தக் கவிதையில் பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதமாகக் காண முடியும்.

'Epigram' என்று சொல்லும்படிச் சிந்தனைகளைத் தமக்குள் அடக்கிய வாமன வரிகளைப் படைப்பதில் அப்துல் ரகுமான் கை தேர்ந்த கலைஞர்.

***'வரங்களே***
***சாபங்கள் ஆகுமென்றால்***
***இங்கு***
***தவங்கள் எதற்காக?'***

நவீனக் கவிதையில் அப்துல் ரகுமான் பல்வேறு உத்திகளைக் கையாண்டிருக்கிறார். அவற்றுள் இதுவும் ஒன்று. வானம்பாடி இதழில் வெளிவந்த கவிதை இது. 'பால் வீதி'க்குப் பிறகு அப்துல் ரகுமான் கவிதை நெகிழ்ச்சியைக் கண்டது. சுட்டு விரல் தொட்டு வந்த கவிதைகளில் இந்த மாற்றம் நிகழ்ந்தது. அரசியல், சமுதாயச் செய்திகள் சொல்ல இந்தக் கருவி மாற்றம் ஏற்பட்டிருக்கலாம்.

'மும்மாரி' என்ற கவிதையில் தட்டுப்பாடின்றிப் பெய்யும் மூன்று மழைகளைச் சொல்கிறார் கவிஞர்.

***'நமக்கென்ன குறைவு***
***மாதம் மும்மாரி பெய்கிறது***
***கண்ணீர் மழை***
***வேர்வை மழை***
***ரத்த மழை'***

சமூக எதார்த்தங்களைச் சொல்லவும் அப்துல் ரகுமான் தயங்கியதில்லை. 'காக்கிச் சட்டை' என்ற கவிதையில் உள்ளூறையும் கோபம் உருத்தெழக் காணலாம்.

***'உங்கள் தாலியைச்***
***சுமப்பவள் தான் நான்***

இருந்தாலும்
உங்கள் காக்கிச் சட்டையை மட்டும்
துவைக்கச் சொல்லாதீர்கள்
என்னை
இந்த
ரத்தக் கறைகளில்
கூக்குரலைக் கேட்கிறேன் நான்
கூக்குரலைக் கேட்கிறேன் நான்
கூக்குரலை என்னால்
கழுவ முடியாது'

ஒரு தத்துவ இழை அப்துல் ரகுமானுக்குள் சஞ்சரித்தபடியே இருப்பதைக் காணலாம். 'ஆலாபனை'யிலும், 'பித்தனி'லும் இதன் கூறுகள் காணக்கிடக்கின்றன. இரண்டும் நேர்முகமும் முரணும் ஆக அமைந்த கோணங்கள். 'பயணம்' என்ற கவிதை ஓர் எடுத்துக்காட்டு.

'பித்தன்
பின்பக்கமாக
நடந்து கொண்டிருந்தான்
என்ன செய்கிறாய்
என்று கேட்டேன்
திரும்புகிறேன்
என்றான்'

அவன் மேலும் சொன்னான்:

'புறப்படுதல் அல்ல
திரும்புதல் தான்
பயணம்

வெளியே புறப்படுதல் அல்ல
வெளியிலிருந்து
புறப்படுதல் தான்
பயணம்'

இப்படி விதம் விதமான தொனியில் முன்னும் பின்னுமாக மூச்சுக் காற்றைப் போல் அப்துல் ரகுமானின் கவிதை தொடர்கிறது.

வாழ்வின் முரண்களைக் கவிதையின் இரண்டு பாதங்களாக்கியபடி எல்லையின்மை நோக்கிப் பயணமாகிற ஒரு இலக்கிய யாத்திரிகர் அப்துல் ரகுமான்.

*மீரா (1938 – 2002)*

மீ. இராசேந்திரன் மீரா என்ற அழகிய பெயரில் எழுதிய கவிஞர் மரபிலிருந்து புதுக்கவிதைக்குப் பயணித்த முதல்வர்களில் ஒருவர்.

அங்கதம், சமூகவிமர்சனம், இயல்பான வெளியீட்டு முறை, நகைச்சுவை, மெல்லிய காதல் சித்திரிப்பு என அவருடைய களம் தனித்தன்மை வாய்ந்தது.

'கனவுகள்+கற்பனைகள் = காகிதங்கள்' என்ற புதுமையான தலைப்பில் எழுதப்பட்ட காதல் கவிதைகளைப் பின்பற்றிப் பலர் எழுதினார்கள். எழுத வைத்தது மீராவின் எழுத்து. 'ஓர் ஆன்மாவின் யாத்திரை' என்று இதனை அடையாளம் காட்டியவர்கள் உண்டு.

**'நியூட்டன்**
**புவியீர்ப்புச் சக்தியைக்**
**கண்டு பிடித்தான்**
**நான்**
**என் உயிர்ஈர்ப்புச் சக்தியைக்**
**கண்டு பிடித்தேன்**
**என் கண்டு பிடிப்பே**
**நீ வாழ்க'**

என்று காதலியையும் ஒரு சக்தியாகக் காண்கிறார். சங்க இலக்கியத்தின் சாரம் வடித்தது போல் இனிய, எளிய, காதல் உணர்வுகளை நயமாகச் சொல்பவர் மீரா.

**'நீ முதல்முறை**
**என்னைத் தலைசாய்த்துக்**
**கடைக்கண்ணால் பார்த்தபோது**
**என் உள்ளத்தில்**
**முள் பாய்ந்தது**

**அதை இன்னும் எடுக்கவில்லை**

முள்ளை முள்ளால் தானே
எடுக்க வேண்டும்?

எங்கே, இன்னொருமுறை பார்'

மகாகவி பாரதியாரைப் போலவே காதல் கற்பனைக்குள் ஒரு கருத்துப் பொதிவை வைக்க மீராவால் முடிகிறது.

'வாசலில் நின்று
உன் வீட்டையே பார்க்கிறேன்
எல்லையில் நின்றவாறு
நாடு கடத்தப்பட்ட தேசாபிமானி
தன் நாட்டை ஏக்கத்தோடு பார்ப்பதைப் போல'

மீராவின் இன்னொரு பரிமாணத்தை அவருடைய 'ஊசிகள்' புலப்படுத்துகிறது. அங்கதமாகச் சமூகச் சிக்கல்களைக் குத்திக்காட்டும் கூர்மை அந்நூலின் கவிதைகளுக்கு உண்டு. நலம் பார்த்து வருகிற பழைய காதல் போலன்றி, பணம் பார்த்து, குலம் பார்த்து வருகிற இன்றைய காதலைச் சுவையாகக் கூறுவார் 'ஊசிகளில். 'யாயும் ஞாயும்' பாடலின் இன்றைய பிரதி இது.

'உனக்கும் எனக்கும்
ஒரே ஊர்
வாசுதேவ நல்லூர்
நீயும் நானும்
ஒரே மதம்
திருநெல்வேலிச்
சைவப் பிள்ளைமார்
வகுப்பும் கூட
உன்றன் தந்தையும்
என்றன் தந்தையும்
சொந்தக்காரர்கள்
மைத்துனன்மார்கள்
எனவே
செம்புலப் பெயர்நீர் போல
அன்புடை நெஞ்சம் தாம்கலந்தனவே'

வயிற்றுப் பாட்டிலிருந்து பட்டிமன்றம் வரை, மஞ்சப்படியிலிருந்து இலஞ்சம் வரை அத்தனையும் ஊசிகளால் நறுக்கென்று குத்தப்படுகின்றன.

தமிழ்க் கவிஞர்கள் ஹைகூ எழுதப் பரபரப்புற்றபோது, அதிலிருந்து விலகித் தமிழ்மரபுக்கேற்பக் குக்கூ எழுதியவர் மீரா. அவற்றில் சில அதிர்வும் தந்தவை.

**'மார்கழி மாத விடியல்**
**குளித்து முடித்துக்**
**குங்குமப் பொட்டிட்டு**
**மலம் அள்ள வந்தாள்**
**தோட்டி மகள்'**

அதிர்வு தரும் கவிதையைப் போலவே யதார்த்தங்களின் அழகோடு வலம் வரும் கவிதைகளும் உண்டு.

**'பின்னால் இருந்த**
**என் மடிச்சந்தில்**
**வந்து விழுந்தது**
**மாற்றான் தோட்டத்து**
**மல்லிகை**
**ஒரு பேருந்தில்'**

எழுத்தாளர்களின் வேடந்தாங்கலாக அன்னம், அகரம் பதிப்புகளை வெளியிட்டு நவீன இலக்கியம் வளர்த்த மீராவுக்கு மரபுக் கவிதையின் விசால வீதிகளில் கடிவாளமில்லாத புரவியாய்ப் பவனி வரவும் முடிந்தது. புதுக்கவிதையின் விசுவ வெளியில் ஓசையின்றி நழுவும் விண்கலமாவதும் சாத்தியமானது.

**நா. காமராசன்**

புனைவியலின் இழைகளோடு புதுக்கவிதை நெசவுக்கு வந்த நா. காமராசன் தன் 'கறுப்பு மலர்கள்' தொகுதியால் ஒரு மகிழ்ச்சியான அதிர்ச்சியைத் தந்தவர்.

**'நாங்கள் ரஜனியின் மக்கள்**
**மன்மதனின் ஒற்றர்கள்**
**கற்புச் சிறையை உடைப்பதால்**
**கைது செய்யப்படுகிறோம்'**

என்று தொடங்கி,

**'நாங்கள் நிர்வாணத்தை விற்பனை செய்கிறோம்**
**ஆடை வாங்குவதற்காக'**

என அதிர்ச்சியூட்டியவர் நா. காமராசன்.

**'பகுத்தறிவு, சோசலிசம் என்கிற அடிப்படை இலட்சி யங்கள் எனக்குண்டு, அவற்றைக் கலாபோதையோடு நான் பாடுவேன்'**

என்று தம்மை அறிமுகம் செய்து கொண்டவர் நா.கா.

ஒரு மயக்க நிலைக்குக் கொண்டு போகும் சொல்லழகு நா. காமராசனிடம் உண்டு. அதுவரை யாரும் பாடாத அலிகளைக் குறித்து, மலைவாசிகளைக் குறித்து முதன் முதலில் எழுதியவர் நா.கா.

**'கால மழைத் தூறலிலே**
**களையாய்ப் பிறப்பெடுத்தோம்**
**தாய்ப்பாலின் சரித்திரத்தில்**
**சதுராடும் புதிரானோம் . . .**

**மூங்கையனின் பாட்டானோம்**
**முடவன் கை எழுத்தானோம்**
**முழுக்குருடர் படிக்கின்றார்**
**சந்திப் பிழை போன்ற**
**சந்ததிப் பிழை நாங்கள்'**

என்பது அலிகளைப் பற்றிய அபூர்வ சித்திரம்.

குற்றவாளிகள் நீதிமன்றத்தை விசாரணைக்கு உள்ளாக்கு வதாகப் புதிய கோணத்தில் பிச்சைக்காரி, குடிகாரன், ஆகியோரை முன்னிறுத்திப் பேசும் வாசகங்கள் தமிழ்க் கவிதையில் முதன் முதலாக நா.கா. வழியே ஒலித்தன.

அவரிடம் பாரசீகக் கவிஞர்களின் மொழி அபிநயமும், கம்பதாசன் போன்ற முன்னோடிகளின் சொல் முறையும் கலந்த புதிய வெளிப்பாடு அமைந்தது.

நாட்டுப்புறப் பாடல்களின் வனப்பும் வசீகரமும் கலீல் ஜிப்ரானின் சிந்தனைப் பாங்கும் வியப்புறு கலவையாக நா. காமராசனிடம் பொலிந்தன.

'மாசிப் பிறையடிக்கும்
ராத்திரிகள் சொல்ல வேணும்
மசங்கலிலே விளையாடும்
மழைமேகம் சொல்ல வேணும்
எழுத்துச் சுமைகாரர்
எங்க ஊரு தபால்காரர்
எழுத்து மங்கும் சாயங்காலம்
எமனோடு போனதென்ன?'

என்று கிராமத்துத் தபால்காரரைக் குறித்து வேறு யாரும் இப்படி எழுதி இருக்க முடியாது.

'வடகாற்று வீசி வர
வாகைமரம் சலசலக்கும்
பொன்போல் உருகிப்
பொழுதிறங்கும் ஆகாயம்
மண்மேல் தெரிவதுபோல்
மாலைவெயில் பளபளக்கும்

கம்மாளர் தெருவில்
கடைபோடும் வீதியிலே
என்மாமன் மகளுடைய
இளம்பாதம் நடைதுவளும் . . .

ஆடியிலே விதைத்தாலும்
அறுவடைகள் நடந்தாலும்
அரைவயிற்றுக் கஞ்சிக்கு
ஆலாய்ப் பறந்தபடி
தண்ணீர்க் குடம் சுமக்கும் – என்
தாய் மாமன் கிராமம்'

இப்படிச் சொல்லோவியம் தீட்டும் போதே அழகிய தூரிகையின் வண்ணங்களாக வாழ்க்கையின் வெயிலையும், நிழலையும் ஒருங்கே வரைய வல்லது நா.கா.வின் எழுதுகோல்.

'தும்பைப் பூச் சந்திரன்', 'சூனியம் ஏந்திய தீபங்கள்', 'சூரியன் தூங்கிய துருவங்கள்', 'வால் முளைத்த மண்', 'நாக்கின் மயான பூமி', 'நதிகளின் கல்லறை', 'புயலின் வேட்டை நாய்', 'மோகலயச் சிறு பொழுது' - வனப்புகளே வார்த்தைகளாகும் ரகசியங்கள் - அலிபாபாவின் குகையைப் போல் நா.கா. கவிதைக்குள் குவிந்து கிடக்கின்றன.

'மிகச் சின்ன வயதிலேயே ஒரு ஞானியைப் போல் எழுதியவன்' என்று தன்னைக் குறிப்பிட்டுக் கொண்ட நா.காமராசனின் எதிர்பார்த்த விசுவரூபம் நிகழாமல் போனாலும், இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிதைக்குப் புது இரத்தம் பாய்ச்சிய பிரும்மா என்று நிச்சயம் வரலாறு அவரைப் பத்திரப்படுத்தும்.

### த. பழமலய்

புதுக் கவிதையை மக்கள் மொழியை நோக்கியும், கிராமத்து வாழ்க்கையை நோக்கியும் மடைமாற்றம் செய்ய முயன்ற முதல்வர்களில் பழமலய் குறிப்பிடத்தக்கவர்.

அவருடைய சனங்களின் கதை தென்னார்க்காடு மாவட்ட எளிய கிராம மக்களை வாசகர்களுக்குக் காட்சிப்படுத்திற்று. கிளியப்பட்டு ஆயி, அத்தை, சீனிவாச நாயகர் இப்படிப் பாத்திரங்களும், குழம்பு, முருங்கைமரம், கீழ ஓடைப் புளிய மரம் இப்படியான அசல் கிராமத்துப் படம் சனங்களின் கதை.

**'ஒரு புயலில் சாய்ந்தது முருங்கை**
**வெறவுக்கு ஆவும் என்றேன்**
**புள்ளயாட்டம், அடுப்பிலியா வைக்கிறது?**
**மலடி தான் அத்தை**
**என்றாலும், முருங்கையும் ஒரு பிள்ளை, அவளுக்கு'**

உறவின் அடியாழம் வரை போகிற அன்பின் பெருக்கைப் பழமலய் சிறைப்பிடித்து விடுகிறார் - வெகு எளிய சொற்களில்,

**'அம்மா**
**எந்த பாக்கியத்தை**
**என்னுடைய கொள்ளி தரும்?**

**என்கொள்ளி கிடக்கட்டும்**
**இருந்தால்**

**உன்னைச் சுடும்போது**
**விறகுக்கும் வைகுந்தம்'**

கவிதைக்குப் பிரம்மாண்டங்களைக் கற்பிப்பவர்களிடம் கண்ணாமூச்சி ஆடுகிறது பழமலய் கவிதை.

செடிகளைக் குழந்தைகளாய் நேசிக்கிற பழமலய் தந்த தாவர இயல் கவிதை நூல் 'குரோட்டன்சுகளோடு கொஞ்ச நேரம்'. கொஞ்ச நேரம் என்பதற்குக் கொஞ்சும் நேரம் என்றும் பொருள் சொல்லலாம்'. அப்படி ஒரு செடிப் பயித்தியம் பழமலய்க்கு.

**'குரோட்டன்கள் என்னை வளர்க்கின்றனவா?**
**நான் குரோட்டன்கள் வளர்க்கிறேனா?**
**செடிகளால் முடியுமா மனிதர்களை வளர்க்க**
**செடி கொடிகள் இல்லாமல் முடியுமா**
**மனிதர்களால் வளர**
**பிறகு பேசலாம்**
**முதலில் செடியைக் கவனிக்கணும்**
**குடிக்க நீர் குந்த மண்'**

திறனாய்வாளர் க. பஞ்சாங்கம் குறிப்பிட்டிருப்பது போல த. பழமலய் ஒரு Trend Setter ஒரு புதிய பாணி எழுத்துக்கு. அரசியல், கிராமம், உறவு, இயற்கை எல்லாம் அவர் எழுத்துக்குள் கலந்து, குவிந்து கிடக்கின்றன.

### தமிழன்பன்

இன்றைய தலைமுறையில் தமிழன்பனைப் போல் பெருகிய அளவில் கவிதைகள் படைத்தவர்கள் யாருமில்லை. 1970 இல் களம் புகுந்த தமிழன்பன், தமிழன்பன் கவிதைகள் முதல் கவின் குறு நூறு வரை 27 கவிதை நூல்களைத் தந்திருக்கிறார்.

மரபுக் கவிதையிலிருந்து புதுக்கவிதைக்கு ஒரு நெடும்பாய்ச்சல் நிகழ்த்தியுள்ள தமிழன்பனுக்குள் பெரிதும் திராவிட இயக்கம் சார் பெரியாரியமும், மனித நேயம் சார் மார்க்சியமும் ஒன்று கலந்திருக்கப் பார்க்கலாம்.

கவிதைகளில் புதிய பரிசோதனைகளைச் செய்யத் தமிழன்பன் தயங்கியதில்லை. ஹைகூ கவிதைகள், சென்ரியு கவிதைகள், லிமரைக்கூ கவிதைகள் என்பனவற்றை அறிமுகம்

செய்யவும் முந்தினார். அவருக்கு மிகவும் பிடித்த பாப்லோ நெரூடாவைப் போல் கேள்விகளால் நடத்திய வேள்வியாகக் 'கனாக் காணும் வினாக்கள்' என்ற நூலையும் படைத்தவர். அண்மையில் தாகூரின் இளம்பிறை போலக் 'கவின் குறு நூறு' தொகுப்பையும் அளித்துள்ளார். பரிசோதனைப் பாவலர் என்றே அவரை அழைத்தல் தகும்.

மரபில் வீறார்ந்த புலமையும், சமூகப் பொருளாதார மாற்றங்களில் வேட்கையும், புதிய கவிதைச் செல்நெறிகளில் தேர்ச்சியும் அவருக்கு உண்டு.

திராவிட இயக்கம் கவிதைக்குத் தந்த தேர்ந்த படைப்பாளிகளில் தமிழன்பன் முக்கியமானவர். இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிதையில் அவருடைய இடம் தெளிவானது.

பாவேந்தர், பாரதிதாசன் அடித்தளங்களில் தொடங்கிய கவிதைப் பயணம், புதுக்கவிதையில் ஆழ்ந்த சுவடுகள் பதித்து, ஜப்பானிய ஹைகூ, ஆங்கில லிமரிக் கலப்புத் திருமணத்தை நிகழ்த்தி, மேலும் தொடர்கிறது.

சாகித்திய அகாதெமி விருது அவருடைய 'வணக்கம் வள்ளுவ' நூலுக்கு வழங்கப்பட்டது.

'தமிழன்பன் கவிதைகள்' நூல் (1970) வெளியான போது, மரபின் முழுமையான ஆட்சி அவர் கவிதைக்குள் இருந்தது. என்றாலும், அபூர்வமான சொல்லாட்சியும், உருவகப் பாங்கும் அக்கவிதைகளில் ரேகைகளாய் ஓடின.

'தோணி வருகிறது' (1973) வெளிவந்தபோது தமிழன்பன் கவிதைக் கலையின் புதிய வெள்ளத்துக்குள் கலம் செலுத்தும் கருவிகளோடு புறப்பட்டு விட்டதை அடையாளம் காண முடிந்தது.

மிகக் கூரிய சமூக விமர்சனங்களை நிகழ்த்த அவர் கையாண்டு வரும் ஆயுதங்களில் ஒன்று அங்கதம். எழுபதுகளிலிருந்து இன்று வரை மேலும் மேலும் அந்த ஆயுதம் கூர்மைப்பட்டே வந்திருக்கிறது.

*'காந்தி நூலகத்துள்*
*நேப்தலின் குண்டுகள்*
*நிறையப் போட்டதில்*
*தெள்ளுப் பூச்சிகள்*
*தியாகிகள் ஆயின'* (1973)

என்று எழுதிய அதே கரிசனத்தோடும் சுவையோடும் 'பனி பெய்யும் பகலி'லும் எழுதுகிறார் (1998).

*'விளக்குகள் எல்லாம்*
*எங்கள் தேசத்துப் பெண்கள்*
*இருளுக்குள்*
*வாழச் சம்மதித்து விட்டன'*

இந்தக் கைத்திறனோடு கலந்த அங்கதத்தைப் பொதுவாக அவர் கவிதைகள் எங்கும் காணலாம்.

*'ஆடி கிருத்திகை அரோகரா*
*போட்டுப் போனால் சென்னிமலை மேல்*
*கேட்கும் பாடல் வசீகரா'*

எனினும் அவருடைய குறும்பாக்கள் வெறும் குறும்பாகவே போய் விடுவதில்லை. 'சூரியப் பிறை'களில் ஒரு ஐகூ.

*'சிலம்பை*
*உடைத்து என்ன பயன்*
*அரியணையிலும் அந்தக் கொல்லன்'*

இத்தகைய பார்வையின் தீட்சண்யம் காரணமாகவே வள்ளுவனிடம் சொல்கிறார்.

*'வாழ்க்கையால்*
*யாரேனும் உரை எழுதிக்காட்டினால்*
*நீ*
*வசப்படாமல் போக முடியுமா?'*

ஆம், வாழ்க்கைதான் அவருடைய கவிதைகளின் கழனி, காணிநிலம், கனவு, போராட்டம் எல்லாம். 'இது ராஜராஜன் யுகமல்ல, ராக்கட் யுகம்' என்ற தெளிவு அவருடைய கவிதையை ஊசிக் கூர்மையாய் மாற்றியிருக்கிறது.

ஒவ்வொரு தொகுதியிலும் அவர் புதிதாகிக் கொண்டே வந்திருக்கிறார். கடைசியாக வெளிவந்துள்ள நூல்களில் ஒன்றான 'இரவுப் பாடகன்', ஒரு புதிய பரிமாணம், இருளின் தளத்திலிருந்து ஒளியைப் பார்க்கும் முயற்சி இந்த நூல்.

இரவை அழகும் ஆழமும் நிரம்பியதாகக் காணும் முரண் செறி பார்வை இந் நூலில் இயங்குகிறது.

**'இருளின் அழகைப்**
**பார்க்க மறுக்கும் மக்களை**
**எண்ணியே கண்ணீர் வடிக்கிறது**
**அவன் பாட்டு'**

இன்னொரு கவிதையில் தமிழன்பன் இரவு குறித்துக் கூறுவார்.

**'ஒளியின் தியானமே இருள்**
**ஒழுக்கத்தின் விரிவே இருள்**
**விடுதலையின் நிறமே இருள்'**

பாரம்பரியம் கூட ஒருவகை இருள்தான். அந்த இருளின் மகா மண்டபம் ஒளியை ஏற்பதாக இல்லை. நியாயம், நேர்மை இவற்றின் நெஞ்சிலாவது இருந்து கொள்கிறேனே என்று கெஞ்சுகிறது ஒளி. இருள் சொல்கிறது:

**'இருந்து கொள்**
**நாக்கிழந்து அவை வெகு**
**நாள்களாக**
**நம் அடிமைகளாக**
**இருந்து வருகின்றன . .**
**இருந்து கொள் . . . அவற்றோடு'**

அற்புதமான படிமங்களும், கவிதைத் தெறிப்புகளும் மாறி மாறி வருகின்றன 'இரவுப் பாடகன்' நூலில்.

**'இருள்**
**ஒரு கிண்ணத்தில்**
**துக்கம் நிரம்புவது மாதிரி**
**பூமிக்குள் வந்து மவுனமாய்**
**அடர்கிறது'**

என்பது போன்ற பரவச வரிகள் பல இத்தொகுதியில் உண்டு.

'கனாக் காணும் வினாக்கள்'- அண்மையில் வந்த நூல்களில் ஒன்று. சிந்திக்க வைக்கும் வினாக்கள் நம்மைச் சுற்றிலும் சிறகுகள் விரிக்கின்றன.

*'தன் வழிபாட்டு அறையில்*
*கடவுள்*
*வைத்திருப்பது*
*குழந்தைகள் படமா?*

*அசைவற்ற*
*புத்தருக்கு மேல்*
*போதிக் கிளைகள்*
*எதனால்*
*ஆடிக்கொண்டே இருக்கின்றன?*

*பூமியாய் இருந்து*
*இரண்டு நாள்கள்*
*தாக்குப் பிடிக்குமா வானம்?'*

சிந்தனைகளில் அலை பாய வைக்கும் தந்திரம் வல்லவர் தமிழன்பன். அதற்குக் கேள்விகளும் கருவியாகும் அழகை இங்கே பார்க்கிறோம்.

குழந்தைக் குறும்புகளைச் சொல்லும் 'கவின் குறுநூறு' புதிய நூல்.

*'கீழே விழுந்து*
*அடிபட்ட பொம்மை*
*அழவில்லையே...*
*அதற்காக அழுதான்*
*அவன்'*

இப்படிச் சொல்லிமாளாத குறும்புகளின் கொலுவரிசை இந்த நூல்.

தமிழன்பனின் கவிதை வானம் விசாலமானது. புள்ளி நட்சத்திரங்களும் அதில் உண்டு. பால் வீதிகளும் உண்டு. பூமி அனைய கிரகங்களும் உண்டு. இன்னும் அந்த நீலத்தை நிரப்ப அவர் எழுதுகோலும் உண்டு.

## இன்குலாப்

கவிதை பூங்காற்று மட்டுமல்ல போர்ப்பறையும் ஆகும் என்பதற்கு இன்குலாப் கவிதைகள் எடுத்துக்காட்டு. பொதுவுடைமை இயக்கத்தின்பால் ஈர்ப்பும், உலகத்துப் புரட்சிகளின்பால் ஈடுபாடும் கொண்டவர் இன்குலாப்.

தொடக்க நாட்களின் புனைவியல் போர்வையை உதறி எறிந்து, ஒடுக்கப்பட்ட மனிதர்களின் எழுச்சிக் குரலாகவும், போர்ப்பாடகராகவும் தன்னை உருவாக்கம் செய்து கொண்டவர் கவிஞர் இன்குலாப்.

***'சேரிகளின் ஓலங்களில்***
***வயல்வெளிப் புலம்பல்களில்***
***ஊர்வலங்களில்***
***உரிமை முழக்கங்களில்***
***எந்த ராகங்களை இசைத்துச் சென்றோமோ***
***அந்த ராகங்களுக்கு நான் வீணை மீட்டுகிறேன்'***

என்பது கவிஞரின் வாக்கு மூலம்.

'கூக்குரல்' என்ற கவிதையில் இன்குலாப் சொல்லுவார்:

***'ஆயிரம் ஆயிரம் ஆண்டுகள் மிதித்துச்***
***சாட்சி சொல்ல***
***இந்த***
***அவைக்கு வந்தேன்***

***வேள்வித் தீயின் கொழுந்துகளில் நின்று***
***கூவி அழைத்தேன்***
***என் குரல் கேட்டதா?***
***வெட்டரிவாள்களின் முனையில் மீண்டும்***
***குருதி சிந்தினேன்***
***உங்களைச் சுட்டதா?'***

சரித்திரத்தின் இருண்ட குகைகளிலிருந்து, உயர்ந்த மாடங்களிலிருந்து, வியர்வை மணிகள் உதிர்ந்த வயல் வெளிகளிலிருந்து, பிரமிடுகளிலிருந்து, தஞ்சைக் கோபுர நிழல்களிலிருந்து இந்திய இரத்தமும், கண்ணீரும் இன்குலாப்

வழியே பொங்கிப் பெருகுகின்றன. அவருடைய கோபம் இராஜராஜனையும் புல்லென இகழ்கிறது.

'ஈழம் கொண்டானாம்
சாவகம் வென்றானாம்
காலனி ஆதிக்கத் தொழுநோய்த் தேமலை
பூமியின் முகத்தில் எழுதிய புல்லன்'

என்ற அவருடைய ஆவேச எதிர்ப்புக் குரல் பல சோதனைகளை அவருக்குத் தந்தது.

'வயல் வெளிகளின் கதா நாயகன்' என உழவனைச் சித்திரப்படுத்தும் அவர் கவிதை, நெஞ்சங்களில் நெருப்பேற்றிய கவிதை.

'ஏர்ப்பேனா பிடித்து வேர்வை மைதொட்டு
நிலத்தின் தாள்களில் நெல்லின் கவிதையை
வடிக்கும் கவிஞன்; நான் ஓர் உழவன்'

என்று ஆரம்பமாகும் கவிதையில் சரம்சரமாய் அம்புகள் இலக்குகளை நோக்கிப் பறக்கின்றன.

'எனது சிலுவையின் இதயம் அழுகையில்
சீசர் தனது சிம்மாசனம் ஏறுகிறான்'

என்று முழக்கமிடுகிறான் உழவன்.

சமூக யதார்த்தங்களைக் கன்னத்தில் அறைவது போல முகத்தில் தூக்கி வீசுகின்றன இன்குலாப் வரிகள்.

'மதுரையைக் கொளுத்திய தெய்வீகக் கற்பைப்
பத்துக்கும் அஞ்சுக்கும் குத்தகைக்கு விடுவது
சிலம்பை ஏந்திய சிலையின் கீழ்தான்'

இந்த யதார்த்தங்களால் சூடு பிறந்து சொரணை கொள்ளும்படி மக்களை ஆயத்தப்படுகிற பணியையும் செய்கிறது இன்குலாப் கவிதை.

'எழுக சூரியனே எழுக –உன்னைப்
பிணிக்கும் மேகச் சங்கிலிகளைத் தவிர
இழப்பதற்கு உனக்கு என்ன இருக்கிறது?'

தொழிலாளர்களுக்காக, தாழ்த்தப்பட்டோர் உரிமைக்காகப் பளபளக்கும் வாளாகக் களத்தில் இறங்கிய தமிழ்க் கவிதை இன்குலாபினுடையது.

'போராட்டம்
என்பிறப்பின் நியதி
போராட்டம்
என் வாழ்வின் நியதி
போராட்டம்
என் முடிவின் நியதி'

வாழ்வின் இறுதி கண்டவனுக்கு அச்சம் ஏது? அதனால் இன்குலாப் முழங்குகிறார். 'மாவோ' என்ற கவிதை பேசுகிறது:

'உண்மைக்குத் திரையிடும்
திரிபுவாதத்தைப்
பொசுக்கும் நெருப்பே
உனக்கு ஒரு தீபம்

எங்களைப் பிணிக்கும்
எல்லாத் தளைகளையும்
நொறுக்கும் ஓசையே
உனக்கு ஒரு அஞ்சலி

என்னிலிருந்தும் நானிலிருந்தும்
விடுபட்டு உங்கள் சங்கமத்துறைக்கு
சர்வதேசிய கீதத்துடன் வருவோம்
சர்வ தேசிய கீதத்துடன் வருவோம்'

இத்தகைய புரட்சி தீவிரம் கொண்டிருந்ததனால்தான் அடுத்த வேளை கஞ்சி அறியாத, சாதித் திமிரால் மிதிக்கப்பட்ட ஏழை மனிதனின் ஆவேச வெடிப்பாக இன்குலாப் பாடல் இசைக்கிறார்.

'மனுசங்கடா – நாங்க
மனுசங்கடா
ஒன்னைப் போல அவனைப் போல
எட்டு சாணு உயரமுள்ள
மனுசங்கடா – டேய்
மனுசங்கடா'

என்ற பாடல் இன்று ஒடுக்கப்பட்டவரின் தேசிய கீதமாக மாறியிருப்பது இன்குலாபின் மனிதநேயத் தீவிரத்துக்குக் கிடைத்த வெற்றி.

'கட்டை விரலை இழந்த
ஏகலைவர்கள்
கண்ணையும் இழந்ததனால்
மௌன வாசிப்புக்காரனே!
நான்
கண்ணில் எழுதாமல்
காதில் எழுதுகிறேன்'

எனத் தன் கவிதைகளின் உரத்த குரலுக்குக் காரணம் கூறுகிறார் இன்குலாப்.

மென்மையான உணர்வுகளோடு பேசத் தெரியாதவர் அல்ல இன்குலாப். 'படகுக்காரரே' என்ற காதல் கவிதையில் காதலர் பேச்சு கருணையாய் இழைகிறது.

'பௌர்ணமி இரவின் படகுக்காரரே
நதிக்கரை அலைக்கும் நாணற் புதர்களை
விலக்கிச் செல்கையில் மெதுவாகச் செல்லுங்கள்
வழியில்
தண்ணீர் வாத்துகள் அடைகாத்த
முட்டைகள் இருக்கலாம்
கால்கள் மோதி விடாதிருக்கட்டும்'

இந்தப் பரிவின் விரிவுதான் இன்குலாப்பின் பேரிகை முழக்கத்துக்கும் அடிப்படை ஆகிறது.

அண்மைக் காலங்களில் கவிதை நாடகப் படைப்புகளில் கவிஞரின் கவனம் திரும்பி இருக்கிறது. ஔவை, குறிஞ்சிப்பாட்டு நாடகங்கள் சென்ற கால விழுமியங்களை இக்காலத் தராசுகளில் எடைபோட்டுப் பார்க்கின்றன.

பாரதியாரின் விடுதலைத் தீவிரமும், பாரதிதாசனின் ஒருலகச் சிந்தனையும், பட்டுக்கோட்டையின் சமூகப் பார்வையும், ஈழம் போல் உலகம் முழுதும் எரியும் புரட்சியின் நெருப்புக் கங்குகளும் இன்குலாபை 'மக்கள் யாகப் பரணி' பாடும் கவிஞராக வார்த்துத் தந்துள்ளன.

*அபி*

புரிந்து கொள்வதற்கு மிகக் கடினமான கவிதைகளைப் படைப்பவர் அபி என்கிற அபிபுல்லா. உள் மனதின் 'சரிகைத் தூற்றலில்' நனைந்து கொண்டே செல்லும் அவருடைய சொற்களின் பின்னே அதே அலைவரிசையில் சென்றாலன்றிக் கவிதைத் தடம் காண இயலாது.

'மௌனத்தின் நாவுகள்', 'அந்தர நடை' என்ற நூல்களைத் தந்துள்ள அபியைச் சமயத் தொடர்பில்லாத ஆன்மிகக் கவி என்று கூறுவார் உண்டு.

ஒரு வகை அகத்தேடலாகத் தன்னில் தானே இலயிக்கும் அனுபவங்களை அபி பேசுகிறார். காத்திருந்து, கவனித்து, அடிதோறும் பின்பற்றிப் போகச் சிரமப்பட்டால் தான் அபியின் கவிதை புரிய வாய்ப்புண்டு.

அவருடைய 'ராப்பிச்சைக்காரன்' காமத்தின் குறியீடு என்று கண்டு சொன்ன பிறகு தான் புரிதல் நிகழ்கிறது. காதலும் காமமும் ஜெகிலும் ஹைடுமாக ஒருவனிடமே விளையாட்டுக் காட்டுகின்ற அதிசயத்தை இக்கவிதை சொல்வதாக மீரா குறிப்பிடுவார்.

***'சிலர் மட்டுமே***
***தங்களுக்காகச் சமைத்ததில்***
***உனக்குப் பங்கு வைக்கிறார்கள்***
***பலர்***
***உனக்காகவே சமைக்கிறார்கள்'***

என்று காமத்திடம் உரையாடுகிறார் கவிஞர்.

வட்டங்கள் வரைவதும் கோலங்கள் வரைவதுமாகப் புள்ளியை மரியாதைப்படுத்துவதில் அபிக்கு ஆசையில்லை. நீ அதுவாகிற 'உள்பாடு' தான் அவசியம் என்கிறார்.

***'இந்தப் பழக்கம் விட்டுவிடு***
***முடிந்தால்***
***புள்ளியைத் தொட்டுத்தடவி***
***அதன் மூடி திறந்து***

*உள் நுழைந்து*
*விடு'*

இந்த உள் முகப் பார்வையே கவிதையின் சொல்லும் பொருளுமாக அபியிடம் உருக் கொள்வதால் அத்தனை எளிதில் அவர் கவிதைக்குள் செல்ல முடியாது.

காலம் பற்றிய அவருடைய கவிதைகள் ஒரு தரிசனமாக அவருள் கனிந்த அனுபவத்தின் விளைவு.

*'பிரக்ஞையின்*
*அறா விழிப்பு*
*இரவிலி நெடுயுகம்*
*இடம் தொலைத்த ஆழ்வெளி*
*சிறையிருப்பது*
*காலமும் தான்'*

எத்தகைய விசாலமான வீச்சு இருந்தால் காலத்தை ஒரு சிறையாகக் காண முடியும் என்பது எண்ணி வியக்கத்தக்கது.

அபி ஒரு தனித்துவமான கவிஞர். இறுக்கமான சொற்களுக்குள் ஆழ்மனப் பிம்பங்களை அகப்படுத்தும் லாவகம் தெரிந்தவர்.

எனினும் அவருடைய அனுபவங்களைத் தமதாக்க முயலும் வாசகர்கள் அரிதினும் அரிதாகவே கிடைப்பார்கள் என்று தோன்றுகிறது.

## தாமிரவருணிக் கவிஞர்கள்

தாமிரவருணிக் கவிஞர்கள் எனச் செல்லமாக அழைக்கப்படும் கவிஞர்கள் கல்யாண்ஜி, கலாப்ரியா, விக்ரமாதித்யன், வண்ணநிலவன் ஆகியோர். ஒரே காலத்தில் எழுதத் தொடங்கியவர்கள் அவர்கள். கசடதபற, வானம்பாடி இதழ்களிலும் எழுதினார்கள். பல நூல்களையும் வெளியிட்டிருக்கிறார்கள்.

## கல்யாண்ஜி

அமைதியாய் நகரும் தாமிரவருணி, கால் நூற்றாண்டுக் காலத்துக்கு முன்பு நெல்லைச் சிந்துபூந்துறையில் கருமமே

கண்ணான ஒரு யோகியைப் போல் சாந்தமே வடிவாக மெல்லென நகர்ந்து கொண்டிருக்கும்.

தாமிரவருணி என்றென்றைக்குமாய் இழந்துவிட்ட அந்த அமைதி கலந்த மென்மையைத் தனக்குள் சேமித்து வைத்திருக்கும் களஞ்சியம் கல்யாண்ஜி கவிதைகள்.

ஈரம் மிகுந்த பாத்தியில் கத்தரி நாற்றை நடுவது போன்ற ஒரு பயனுள்ள சுகம் கல்யாண்ஜி கவிதைகளில். அமைதியை உபதேசிக்கும் சவுக்கு மரத் தோப்புகளில் கூடக் காற்று ஒரு குறும்புக்காரச் சிறுவனைப் போல் சீழ்க்கையடித்துக் கொண்டு போவதுண்டு.

ஆனால் நிதானம் கைவிடாத அமைதி - புத்தரின் ஞானத் திருமுகம் போல் பூத்துக்கிடக்கும் அமைதி கல்யாண்ஜி கவிதைகளில்.

அமைதியைக் கண்டு ஏமாந்து விடக்கூடாது. இந்த அமைதிக்குள் சிறகின் ஓசை கேட்காத உயரத்தில் பறந்து போகும் விதவிதப் பறவைகள் போல் வாழ்க்கையின் சலனங்கள்.

புதுமைப்பித்தனின் 'இது மெஷின் யுகம்' கதையில் வரும் ஓட்டல் பணியாள் கிருஷ்ணனைப் போல் எத்தனை மனிதர்கள் நவீன வாழ்க்கையில் சொன்னதைச் சொல்லி, செய்ததையே செய்து, தின்றதையே தின்று. . .! இந்த மனிதர்கள் அசல் வாழ்க்கையைத் தொலைத்து விடுகிறார்கள். 'என்ன செய்கிறோம்' என்று அறியாமல் செய்கிறார்கள், இவர்களை மன்னியும் என்று ஏசுநாதர் சொன்னாரே அது போல் எப்படி வாழ்கிறோம் என்று தெரியாமல் வாழ்வைத் தொலைத்து விடுகிறார்கள். இதைச் சொல்வது தான் கல்யாண்ஜியின் 'அலைச்சல்'.

**'இக்கரைக்கும் அக்கரைக்கும்**
**பரிசல் ஓட்டி**
**பரிசல் ஓட்டி**
**எக்கரை**
**என்கரை என்று**
**மறக்கும்**
**இடையோடும் நதிமெல்லச்**
**சிரிக்கும்'**

கல்யாண்ஜி தன் கவிதைக்குப் பொருளாகத் தேர்ந்தெடுக்கும் எந்தப் பொருளும் செயற்கையானது அல்ல. வீட்டுக்கு உள்ளும் புறத்தும், சாலையிலும், புதர்களிலும், புல்லிலும், வெளியிலும் காணும் சின்னச் சின்னப் பூச்சிகள், புழுக்கள், பிராணிகள், செடிகள், கொடிகள் - இவைகளைச் சுற்றி வளைய வரும் மனிதர்கள் என ஒரு எளிய பிரபஞ்சம் கல்யாண்ஜியினுடையது.

சிட்டுக் குருவி, வண்ணத்துப் பூச்சி, கறவைப்பசு, சினை வெள்ளாடு, சவ்வு மிட்டாய்க்காரன், கோயில் தேர், டீக்கடை பாய் இப்படியாக மற்றவர் கண்களில் பட்டு உறுத்தாத, யாரும் அதிகம் திரும்பிப் பார்க்காத பிறவிகள்! இது போல் எளியவற்றுள் ஆழ்ந்து, சிலிர்க்க வைக்கிற ஏதோ ஒன்றைத் தரிசிக்கிற தீட்சண்யம் கல்யாண்ஜி கவிதை.

பெயர் தெரியாத ஒரு பூச்சிக்கு வளையல் பூச்சி என்று பெயர் வைத்தாராம். இளைய தங்கை ரயில் பூச்சி என்றும், நர்சரி போகிற குழந்தை ட்ரெயின் பூச்சி என்றும் அழைத்தார்களாம். கவிதையை முடிக்கிறார் கல்யாண்ஜி.

**'மாறும் பெயர்கள் அறியாமல்**
**ஓரத்தில் மஞ்சள் கருப்புமாக**
**ஊர்ந்துகெண்டே**
**இருக்கிறது**
**உயிரின் அழகு'**

இந்தக் கவிதைக்குத் தலைப்பே இல்லை. முடிகிற இடத்தில் முத்தம் வைத்திருக்கிற முத்திரையே தலைப்பாகப் பரிணாமம் கொள்ளும் போது தனியே ஒரு தலைப்பு எதற்கு?

எல்லாரும் பார்க்கும் ஒன்றைப் பாராது தனக்கென்று தனிப்பார்வையை வளர்த்துக் கொள்பவன் கவிஞன். இந்தச் சிருஷ்டி இரகசியத்தைத் தன் எழுத்துக்களுக்குள் பொதிந்து வைத்திருப்பவர் கல்யாண்ஜி.

**'ஆரியங்காவுக் குகையில்**
**எல்லோரும்**
**பாறையைப் பார்க்க**
**நான்**

கசியும் நீரையும்
துளிர்த்த புல்லையும்
பிறிதொன்றைப் பார்ப்பதில்
பிழையொன்றும் இல்லையே'

அவரவர் அனுபவம் அவரவர்களுக்கு என்றாலும் கவிப் பார்வை வித்தியாசமானது. அங்கங்கே வாழ்க்கையின் ஆனந்தங்களும் அவலங்களும் பிச்சிப்பூவும் கள்ளி முள்ளுமாய்ச் சிதறிக் கிடக்கின்றன.

'தப்பித் தவறி வந்து
ஊர்ந்து கொண்டிருக்கிறது
வயலின் நரம்புகளில்
மேல்நோக்கி ஒரு சிற்றெறும்பு
வாய் வைத்து ஊதத்தயக்கம்
விரலால் அப்புறப்படுத்தவும்
. . . . . . . . . . . . . . . . . . . . . . .
எறும்பு ஊர்வது ஒரு ராகத்தின்
மேல் தானே'

என்று வாஞ்சையுடன் கேட்பது கல்யாண்ஜியின் ஊற்றாய்ப் பெருகும் பரிவுக்கு அடையாளம். அதே போல வாழ்வின் இசைக் கேடுகளைத் தத்துவப் பிரமைகளுக்குள் அடைக்காமல் முகம் பார்த்து நேரே சொல்வதும் கல்யாண்ஜியின் தனித்தன்மை.

'சூரியனை
ஆற்றங்கரை மணலை
தொட்டாற் சுருங்கிச் செடியை
பாசஞ்சர் ரயிலின்
அற்புத இரைச்சலை

பட்டாம் பூச்சியைத்
தொலைத்து விட்டு
நாற்காலிக் கால்களில்
நசுங்கிக் கிடக்கிறது
சோற்றுக் கலையும் வாழ்க்கை'

கல்யாண்ஜியின் கவிதைகளில் மனம் ஈடுபடுவது சலசலத்தோடும் ஓடையில் குளிரக் குளிரக் கால்களை நனைத்துக்

கொண்டே கரையில் உட்கார்ந்திருப்பதைப் போல. பக்கத்தில் உள்ள மரத்தை, அதன் பட்டுக் குஞ்சுப் பூக்களை, ஓரக் கிளையில் தத்தித் தத்தி நகரும் குருவியை, மரத்தின் அடியில் ஊர்ந்து கொண்டிருக்கும் சிற்றெறும்புகளை, சில சமயம் வெட்டுக்கிளிகளைப் பார்த்தபடியே உட்கார்ந்திருக்கலாம். குளிர்ச்சி அலை அலையாய்க் கால் வழியே பரவிக் கொண்டிருக்கும்.

வாழ்வின் மென்மைகளுக்குக் கோலம் போட்டு, நடுவே பூச்சூடிப் பார்க்கும் அழகு வித்தகம் கல்யாண்ஜி.

## கலாப்ரியா

விரிவான ஆய்வு நூல் ஏதும் வராவிடினும் போதுமான அளவுக்குக் கலாப்ரியா ஆராயப்பட்டிருக்கிறார். சுஜாதா கலாப்ரியா கவிதை உள்முகப்பாங்கு, நினைவுத் தூண்டல் (introspection, evocation) என்ற இரு பண்புகள் கொண்டது என்கிறார். சுகுமாரன் கலாப்ரியாவிடம் காணும் சிறப்புகள்: உணர்வுப் பெயர்ச்சி, வன்முறை, பாலியல் கலவரம் என்ற பண்புகள். நஞ்சுண்டன் மூன்று அடுக்குகளை (தொடர்பற்ற, தொடர்பு இருப்பது) கலாப்ரியாவிடம் காண்கிறார். இன்னும் பலரும் தங்கள் கோணங்களில் கலாப்ரியாவை அடையாளம் காண முனைந்துள்ளனர்.

இதற்கெல்லாம் இடம் கொடுக்கும் வாய்ப்பு கலாப்ரியா கவிதைகளில் உண்டு.

**'அழகாயில்லாததால்**
**அவள் எனக்குத்**
**தங்கையாகி விட்டாள்'**

என்ற அதிர்ச்சிக் கவிதையோடு வந்தவர் கலாப்ரியா.

வாழ்வின் சராசரி மனிதப் பண்பு பிறருக்கு உதவுவதே என்றாலும் ஆற்றாமையும், இயலாமையும் வந்து முடக்கிப்போட்டு விடுகின்றன.

**'அந்திக் கருக்கலில்**
**இந்தத் திசை தவறிய**
**பெண் பறவை**

தன் கூட்டுக்காய்
தன் குஞ்சுக்காய்
அலைமோதிக் கரைகிறது
எனக்கதன்
கூடும் தெரியும்
குஞ்சும் தெரியும்
எனக்கதன்
பாஷை புரியவில்லை'

இந்தக் கவிதையின் தலைப்பு 'விதி'. விதிக்கு எதிராகச் செயல்பட முயன்றும் முடியாமை என்றும் சொல்லலாம். எனினும் உதவி செய்ய முடியாத தவிப்பு அற்புதமான உருவகமாகி இருக்கிறது என்று சொல்லலாம்.

'கண்ணிரண்டும் விற்றுச் சித்திரம் வாங்கிய கதை' யைப் பாரதியார் சொல்ல, அதன் புதிய வார்ப்பாக வருகிறது கலாப்ரியாவின் சுதந்தர வெள்ளிவிழா பற்றிய கவிதை.

'விழியுள்ள கனவான்
விழாக்கொடி யேற்ற
வெறும் கைதட்டலுடன்
வெள்ளிவிழா வென்று
களித்தனர், சுற்றி நின்ற
கண்ணற்றவர்'

எனினும் கவிதை விளையாட்டுப் போல் செவிட்டில் அறைந்து விடுகிறது.

எல்லாருக்கும் நன்மையாக இருப்பது உண்மையில் எல்லாருக்கும் நன்மையாகி விடுவதில்லை. ஒருவருக்கு உணவு மற்றவருக்கு விஷம் என்பது தான் விதி. வறண்டு கிடந்த குளம் சிலருக்கு வசதியாய் இருந்தது. வழிப்போக்கனுக்குக் குறுக்கு வழி, ஆட்டுக்கு மேய்ச்சல், பறவைக்கு நிழல் படிய நிலம். நாளை நீர் வந்து விட்டால் இதெல்லாம் பறி போகும்.

'நாளை இந்தக் குளத்தில்
நீர் வந்து விடும்
இதன் ஊடே
ஊர்ந்து நடந்து

ஓடிச் செல்லும்
வண்டித் தடங்களை
இனி காண முடியாது
இன்று புல்லைத்
தின்று கொண்டிருக்கும்
ஆடு-நாளை
அந்த இடத்தை
வெறுமையுடன்
சந்திக்கும்
மேலே பறக்கும்
கழுகின் நிழல்
கீழே
கட்டாந்தரையில்
பறப்பதை
நாளை பார்க்க முடியாது
இந்தக் குளத்தில் நாளை
நீர் வந்து விடும்'

வாழ்வின் இத்தகைய விசித்திரங்களில் கலாப்ரியா ஈடுபடுகிறார். சூரியன் வருகிற காலைப் பொழுது, வெளிச்சம் வருகிறது. பூக்களில் மலர்ச்சி. இன்னொரு புது விடியல். பாரதி சொன்னது போல.

'புல்லை நகையுறுத்திப் பூவை வியப்பாக்கி
மண்ணைத் தெளிவாக்கி நீரில் மலர்ச்சி தந்து'

வருகிறது விடியல். இதைத் தெய்வீகப்படுத்தி 'எம்பாவாய்' என்று பாடல் புனைந்தவர் ஆண்டாள்.

'கீசு கிசு என்று எங்கும் ஆனைச்சாத்தன் கலந்து
பேசின பேச்சரவம் கேட்டிலையோ?. . .
வாச நறுங்குழல் ஆய்ச்சியர் மத்தினால்
ஓசை படுத்த தயிரரவம் கேட்டிலையோ?'

இது பண்டைப் பாசுரம். இன்றைய விடியலை 'எம்பாவாய்' கவிதையில் சொல்லி அதிர வைக்கிறார் கலாப்ரியா.

உடை. மரப் புதர்கள், கெடத்துவங்கும் கால்வாய், காவல் வரும் கறுப்பு நாய் - இந்தச் சூழலைச் சொல்லிவிட்டு நகரோரத்துச்

சேரிப் பெண்கள் காலைக்கடன் கழிக்கச் செல்வதைக் கூறுகிறது கவிதை.

'ஆரஞ்சுச் சூரியன், பாதி
அம்மணத்தைப்
பார்த்துவிடக் கூடாதென்றபடி
வருகிற பாதையை
இருட்டால்
வழி மறைத்துவிடக் கூடாதென்றபடி
கொஞ்சம் சிரித்துப்
பேசியபடி,
நகரோரத்துக்
குடிசைப் பெண்கள்
ஆண்டாளின் வம்சங்கள்
சொறியுதிர்க்கும்
கறுப்பு நாயைத்
துணைக் கழைத்து
ஊரை விட்டு வெளியே
கக்கூஸ் தேடிப் போவார்
கருக்கலில் . . .'

இந்தத் திடுக்கீடுகள் கலாப்ரியா கவிதைகளில் அசுர யதார்த்தமாக முன் நிற்கின்றன.

வாழ்க்கை கோயிலும் குளமுமாய், சாக்கடைகளும் தாமிர வருணியுமாய், சன்னதித் தீபமும் அதை மறைக்கும் வண்ணாத்தியின் தலை மூட்டையுமாய், காயடித்த வண்டிக்காளையும் எதிர்வந்த பசுவுமாய், தப்பி ஓடிவிட்ட ஆடும் தேடிப்போய் துணித்த தலையுடன் தவம் செய்யும் வெள்ளாடுமாய், மூளையை மூடும் பெண்களின் இடுப்புச் சதையும் உத்தரத்தில் மறைத்த அப்பாவின் பிணமுமாய், விடுபட முடியாமல் பின்னிக் கிடக்கும் கோலங்களையும், அலங்கோலங்களையும் கூசாமல் பேசுகிறது கலாப்ரியாவின் கவிதை.

இந்த எட்டயபுரமா பாரதி பிறந்த ஊர் என்று மனம் மறுகும்படி ஒரு மெய்யான எட்டயபுரத்தை அதன் அழுக்குகளோடும் ஆசைகளோடும், புழுதிகளோடும் சகதிகளோடும், வெகு சராசரியான மனிதர்களோடும் அவர்களின்

ஆசாபாசங்களோடும் கலாப்ரியா படைத்துக்காட்டியிருப்பது வித்தியாசமான படைப்பு.

வாழ்க்கையை அதன் அபத்தங்களோடும் அழகியலோடும் உயிர்ப்பின் நெளிவு சுழிவுகளோடும் சொல்லும் கலாப்ரியாவுக்கு மனத்தடைகள் ஏதுமில்லை. மண்பானையை உடைப்பதைப் போல் மனம் ரசிக்கும், சுவைக்கும், வேவுபார்க்கும் எல்லா உணர்வுகளையும் திகம்பரமாய்ப் போட்டுத் தரிசிக்க வைக்கிறார் கலாப்ரியா.

**'அடிமரம்**
**மகிழ்வுடன் வேடிக்கை**
**பார்க்க**
**விழுதுகள்**
**பரிமாணம் திரஸ்கரித்த**
**காற்றில்**
**எழுதுகின்றன**
**புதிய**
**பதச் சேர்க்கைகள்'**

என்று அவரே எழுதியிருப்பது போல அவருடைய புதிய பதச் சேர்க்கையில் - கிழிபடும் வாழ்க்கை அதன் பிசிறுகளோடு காட்சி தருகிறது.

நவீனத் தமிழ்க் கவிதையில் உன்னதங்களைத் தொட முனையும் வார்த்தை விரல்கள் கலாப்ரியாவின் கவிதைகள்.

### விக்ரமாதித்யன்

ஆகாசம் நீல நிறம், ஊரும் காலம், உள்வாங்கும் உலகம், எழுத்து சொல் பொருள், திரு உத்தர கோச மங்கை, கிரக யுத்தம், ஆதி, சுடலை மாடன் வரை, வீடு திரும்புதல் எனப் பல கவிதை நூல்கள் தந்தவர் விக்ரமாதித்யன்.

பெரும்பாலான கவிதைகள் எளிய வரிகள். அவற்றுள் புதைபொருள் காண முயல்வது வாசக மனோதர்மத்தைப் பொறுத்தது.

*சில கவிதைகள்*

1. *குழந்தைகளாகவே*
*இருக்கிறார்கள் குழந்தைகள்*

2. *காற்றை*
*காற்றென்று சொல்லித்தந்தது யார்?*

3. *இருளில் புதைந்திருக்கிறது*
*ஏராளமான நட்சத்திரங்கள்*

மேற்போக்கான வரிகளை வைத்துக் கொண்டு விக்ரமாதித்யனை அலட்சியப்படுத்த முடியாது. குற்றால அருவி பற்றி ஒரு நீண்ட கவிதை. அதில் சில பகுதிகள்.

*'அருவி*
*யாருக்கும் சொந்தமில்லை*
*அதனால்*
*அருவிக்கு யாரும் அந்நியமுமில்லை*
*விழுவது தவிர்த்து*
*வேறு லட்சிய மென்ன உண்டு அருவிக்கு*
*. . . . .    . . . . . . . . . .*
*பொறுப்பு அலட்சியம்*
*மகிழ்ச்சி வருத்தம்*
*பேறு இழப்பு*
*எல்லாம் கடந்தது அருவி*

*அத்வைதம் மார்க்சியம் ஸ்ட்ரக்சுரலிசம்*
*எதுவும் தெரிந்து கொள்ள வேண்டிய*
*ஹிம்சையற்றது அது*

*ஆயிரம் தடவை அருவியில் குளித்தாலும்*
*யாருக்கும் ஏன் புத்தி வருவதில்லை'*

இந்தக் கவிதைக்குப் பன்முக விரிவாக்கம் செய்யமுடியும். அருவிக்குப் பதில் கவிதை என்று போட்டுக் கொண்டாலும் பொருள் புரியும். விக்ரமாதித்யனின் கவிதையும் அருவியும் ஒன்று.

*'தன்னிச்சையானது, தடங்கல் அற்றது, இயல்பானது.*
*நான்*

பனிக்கட்டியை உடைப்பதேயில்லை
உருகட்டுமது
தன் போக்கில்'

என்ற கவிஞரின் கூற்று அவர் கவிதை பற்றிக் கொண்டிருக்கும் கருத்து.

சில இடங்களில் மலையாளக் கவி குஞ்ஞுண்ணி கவிதைகளை ஞாபகப்படுத்துகின்றன - அமைப்பளவில் - விக்ரமாதித்யனின் ஈரடிகள் நாலடிகள்.

1. பேச்சுக்கலை பெரியகலை
எழுத்துக் கலை எச்சிக்கலை

2. திரை போட்டு வைத்தால்
தீ வைத்துக் கொளுத்து

3. சாமி மலை யேறி
எங்கே போகும்
தேவி மடியில்
விழுந்து கிடக்கும்

4. தில்லாலங்கடி தில்லாலங்கடி
தில்லாலங்கடிடோய்
தெம்மாங்கு பாடும் மனசை
தொலைச்சிடாத டோய்'

நெடிய தமிழ் மரபும், பக்தி மரபும், நாட்டுப்புற மரபும் ஒன்றிக் கலந்து கட்டுக்களை வெறுத்துச் சுதந்தரம் சுவாசிக்கும் தமிழ் விக்ரமாதித்யன் கவிதை.

**வண்ணநிலவன்**

கவிதைகள் மிகுதியாக எழுதாமல் கதைகளில் கவனம் பதித்தவர் வண்ண நிலவன். எனினும் எண்ணிக்கையில் குறைந்த கவிதைகளிலும் தம் இருப்பைப் பதிவு செய்தவர் வண்ண நிலவன்.

கல்யாண்ஜியையும், கலாப்ரியாவையும் பார்த்துக் கவிதை எழுதியதாக அவர் குறிப்பிட்டிருந்தாலும், அவர்களின் தாக்கம் எதுவும் அவரிடம் இல்லை.

சின்ன வயதில் பார்த்த சாணை பிடிப்பவனைப் பற்றிய பதிவு 'ரெயினீஸ் அய்யர் தெரு' குறித்த கவிதையில் வெகு அழகாக விழுந்திருக்கிறது.

'அந்த மழையிலும்
அவனது சாணைக்கல்
தீப்பொறியிட்டது
கூர் இழந்த
எங்கள் ஆயுதங்கள்
கூரடைந்தன
அவனொரு மந்திரக்காரன்'

பின்னொரு மழை நாளில் தாத்தாவும் பிள்ளைகளுமாகக் காத்திருந்தார்கள் அவனுக்காக.

'தாத்தாவைத்தவிர
பழைய சோறு
பத்துப் பைசா நாணயம்
அப்பாவின் கிழிந்த சட்டை
எல்லாம்
அவனுக்காகக் காத்திருந்தன'

பிள்ளை மனதின் வெள்ளைப் பதிவாகச் சாணைக்காரன் நிலை நிற்கிறான்.

ஒரு வகையான மெய்யியல் வண்ணநிலவனுக்குள் ஊடாடுகிறது. தன்னைப் பிட்டு உலகம் கண்டதாகவும், உலகைப்பிட்டுத் தன்னைக் கண்டதாகவும் பேசுவார். இன்னொரு அழகான கவிதை, சார்ந்திருந்து கரைந்து போவதன் மெய்ம்மை கூறும்.

'எதையேனும் சார்ந்திரு
கவித்துவம்
தத்துவம், காதல்
இங்கிதம், சங்கீத மிப்படி
எதன் மீதேனும் சாய்ந்திரு
இல்லையேல் உலகம்
காணாமல் போய் விடும்'

வண்ண நிலவனின் கவியுலகம் சிறியதென்றாலும், பேருலகைப் பார்க்கிற அழகிய சாளரம் அதற்கு உண்டு.

நெல்லை மண் வாசனை கமழ எழுதிப் போகும் இந்நூல் வரும் தாமிரவருணியின் புதல்வர்கள்.

## தேவதேவன்

'குளித்துக் கரையேறாத கோபியர்கள்' (1976) முதல் 'விடிந்தும் விடியாத பொழுது' வரை பத்துக்கு மேற்பட்ட கவிதைத் தொகுதிகளைத் தந்திருப்பவர் தேவதேவன்.

**'கவிஞன் நிச்சயமாக ஒரு பிரபஞ்ச ஜீவி**
**தவிர்க்க முடியாமல் ஒரு சமூக ஜீவியும்கூட'**

என்று தெரிவிக்கும் தேவதேவன் தனித்ததொரு கவிதானுபவம் படைப்பின் உன்னதம் என்று கருதுகிறார்.

நெகிழ்வின்றி நெசவு செய்யப்பட்டிருப்பது அவரது படைப்பு மொழி. 'மொழி' குறித்து ஒரு கவிதை:

**'ஒன்றான ஒன்றாய்**
**சொல்லும் செயலும்**
**ஒன்றேயான கோலமாய்**
**இந்த மழை'**

என அவர் மொழிவது போன்றே கவிதை மொழியும், நுவல்பொருளும் இடையீடு யாதுமின்றி இறுகி ஒன்றிக் கொள்கின்றன.

**'வெறுமையை**
**அளந்து அளந்து கொட்டும் முயற்சியாய்**
**முடிவற்ற வட்டமிடுதல்களில்**
**மூழ்கியிருந்தது விண்வெளியில்**
**ஒரு பருந்து'**

என்று அவர் காட்சிப்படுத்தும் போது மௌனமான ஒரு தொடுகையை வாசகமனங்களில் நிகழ்த்தி விடுகிறது அவர் கவிதைமொழி.

மிகச் சாதாரணமான காட்சிகளினூடே உணர்வுக் கூர்மையும், பிரமிப்பும் கொண்ட தூரிகை வண்ணங்களைத் தந்து

விடுகிறார் தேவதேவன். கொடியில் ஆடும் ஆடைகள் பற்றியது கவிதை.

*உரத்த காற்றில்*
*கொடியிலாடும் ஆடைகள்*
*உடல்கள் வேண்டி*
*ஆர்ப்பரிக்கும் விகாரங்களா?*
*அல்ல*
*உடல் துறந்த பரவசங்கள்*

எளிமையிலிருந்து நுண்மைக்கான பயணங்கள் அவர் கவிதைகளில் மண்டிக் கிடக்கின்றன.

இந்த மண்ணின் புதல்வரென்றாலும் தேவதேவனுக்குள் பிரபஞ்ச அலைகள் பாய்ந்து கொண்டே இருக்கின்றன. இந்தப் பார்வை தமிழ்க் கவிதையின் எல்லைகளை முறித்தெறிந்து அப்பாலுக்கு அப்பாலும் நம்மைச் செலுத்தி விடுகிறது.

ஒரு மரத்தில் கட்டப்பட்டிருக்கிற தூளியில் தூங்குகிற குழந்தையைப் பற்றிய ஒரு கவிதை. இதனைச் சித்திரிக்க முற்படும்போது தேவதேவனின் வெளிப்பாடு ஒரு சந்ததம் கொண்டதாய் மாறுகிறது.

*'மரத்தில் கட்டப்பட்ட தூளியில்*
*துயிலும் குழந்தையைத்*
*தாலாட்டுகிறது*
*யாதுமாகி நின்ற பிரபஞ்சம்'*

இந்தப் பிரபஞ்ச மனிதனுக்குள் வித்தியாசமான கவிதைக் கோணங்கள் செழிக்கின்றன. அந்த அனுபவங்களே தேவதேவனைத் தனித்துவப்படுத்துகின்றன. ஒரு சிறு குருவி மரக்கிளையை உந்திப்பறக்கிறது. தேவதேவன் சொல்கிறார்:

*'மரக்கிளையினை*
*நீச்சல் குளத்தின் துள்ளு பலகையாக மதித்து*
*அங்கிருந்து தவ்விப் பாய்கிறது*
*மரணமற்ற பெருவெளிக் கடலை நோக்கி'*

இங்குக் குருவி வேறு நாம் வேறு என்றில்லாத அமர அனுபவம் சித்திக்கிறது நமக்கு.

இன்னொரு அனுபவத்துக்குள் எப்படிக் கூடுவிட்டுக் கூடுபாய்கிறார் தேவதேவன் என்பதைக் 'குருவிக் கூடு' கவிதை பேசுகிறது. மொட்டை மாடியோடு கூடிய ஒரு வீடு கட்டுகிறார் கவிஞர். அந்த மாடியின் மீது கவிந்தபடி நிற்கிறது ஒரு மரம். அதனைக் காட்சிப்படுத்துகிறார் தேவதேவன்.

**'அந்த மரக்கிளையோடு அசையும்**
**ஒரு குருவிக் கூடாய்**
**அசைந்தது நான் அமர்ந்திருந்த**
**அந்த மொட்டை மாடி'**

இப்போது மரமும், மாடியும், மனிதனும் அத்துவிதமாகி விடுகிற அற்புத அனுபவம் உருவாகிறது.

இரவில் தனிமையில் புத்தகம் படிக்கிறபோது கவிஞருக்கு ஒரு குறுகுறுப்பு. தன்னுடன் யார் அது? மௌனம்!

**'அந்த மௌனத்தோடு**
**நான் மௌனமாய் இணைகையில்**
**வெளிப்படுவது: மௌனம் மற்றும்**
**அதில் பேருயிராய்த் ததும்பும் இறவாமை'**

இப்படியாக நுட்ப அனுபவங்களின் சேர்க்கையாகின்றன தேவதேவனின் கவிதைகள்.

தேவதேவனிடம் ஓங்கி நிற்கும் பண்பு - உள்ளும் புறமுமாய் ஊடுருவிக் கிடக்கும் இயற்கை. நதியும், கடலுமாய், குருவியும், கொக்குமாய், மரங்களும், வனங்களுமாய் எங்கும் ததும்பும் இயற்கையையும், அதனுள் முகம் புதைத்துக் கிடக்கும் குழந்தையாய்க் கவிஞரையும் காண்கிறோம்.

இயற்கை பாழ்படும்போது ஏற்படும் உணர்வுத் தகிப்பு தேவதேவனின் கவிதைகளில் வாசகனைச் சுட்டுப் பொசுக்குகிறது. மாசுபட்டுப் போன நதியை,

**'கவனிப்பாரற்ற அநாதைப் பிணத்தின்**
**கண்வழி நீராய்க்**
**கிடந்தது நதி'**

என்கிறார். இந்தப் படிமத்துள் நோய் கொண்ட நொய்யலும், கந்தலாய்க் கிழிந்த காவிரியும், நிறம் மாறிய பவானியும், அழுக்குச்

சாலான வைகையும் ஒடுங்கிக் கிடக்கிற சோகம் உறைந்து கிடக்கிறது.

ஒரு புல்லைப் பறிக்கிற போதுகூடக் கவி இதயம் அலறிப் புலம்புகிறது.

**'வங்கொலையாய்ப் பிடுங்கப்படும்**
**புல்லின் வேர்களில்**
**அலறுகிறது**
**லட்சோப லட்சம் வயதான சொந்தம்'**

இயற்கையை நிராகரிக்கும் அல்லது பரிகசிக்கும் நகரங்கள் கவிஞரின் கோபாவேசத்துக்கு இரையாகின்றன.

**'எந்தப் பீரங்கிகளை வைத்து**
**விருட்சங்களை அரவணைக்காத**
**இந்தக் கான்கிரீட் காடுகளின் கொடுமையை**
**அழிப்பது?'**

உறைந்த வெஞ்சினத்தின் வெளிப்பாடாகிறது கவிதை.

சொற்களை உக்கிரத் தன்மைக்கு ஏற்றி நிறுத்திக் கவிதானுபவத்தில் தானும் திளைத்து வாசகனையும் அதில் திக்கு முக்காட வைக்கிற தேவதேவன் நவீனத் தமிழ்க் கவிதையில் ஒரு பிரளயத்தின் கனிவாய்த் துலங்குகிறார்.

## இந்திரன்

தமிழ்க் கவிதையின் உள்ளடக்கத்தை நவீனப்படுத்திய முதல் கவிஞர் இந்திரன்.

'அந்நியன்' தொகுப்பின் மூலம் அறிமுகமான இந்திரன் 'மின்துகள் பரப்பு' வரை பல கவிதை நூல்கள் தந்தவர். கலை இலக்கிய விமர்சகராகப் பெரிதும் அறியப்பட்ட இந்திரன் சொந்தக் கவிதைகள் மட்டுமன்றி 'அறைக்குள் வந்த ஆப்பிரிக்க வானம்', 'கடவுளுக்கு முன் பிறந்தவர்கள்' என்ற நூல்களால் தேர்ந்த மொழிபெயர்ப்பாளராகவும் திகழ்பவர்.

அந்நியன் முதல் தொகுதியாக எண்பதுகளில் வந்தபோதே புதுமையாகச் சிந்தித்துக் கவிதை எழுதுபவர் என்பதை நிரூபித்துக் கொண்டவர். 'இரவு' என்ற கவிதையில்,

**'தூங்கு மூஞ்சி மரத்தில்**
**இரவுக்கு ஒடுங்கிய**
**மைனாக் குருவியின்**
**மடிந்த சிறகுகளுக்குள்**
**நாலாயிரம் திசைகள்'**

என்று ஆச்சரியப்பட வைத்தவர்.

எண்பதுகளிலேயே கவிதைச் சொற்களில் பல அடுக்குப் பொருள் காண்கிற பரிசுத்தக் கவிதையாளர்கள் குறித்துத் தம் ஐயங்களை எழுப்பியிருக்கிறார்.

**'வார்த்தைகள் மீதே எனக்கு**
**நம்பிக்கை அற்றுப் போச்சு**
**நான் சொல்ல**
**மற்றவன் வேறொன்றாய்ப் புரிந்து கொள்ள**
**விளக்கம் – மறு விளக்கம்**
**விளக்கத்திற்கு விளக்கமெனப்**
**புதராய் மண்டி**
**புற்றாய் வளரும்**
**வார்த்தைகள்'**

என்ற தன் ஆதங்கத்தை அன்றே பகிர்ந்து கொண்டவர்.

இந்திரனின் 'முப்பட்டை நகரம்' தமிழ்க் கவிதையில் ஓர் அடியெடுத்து வைப்பு என்று சொல்லலாம்.

**'நகரம் எனது சூழல்**
**எனது சம்மதம் / சம்மதமின்மையுடன் அது தன் ரேகை**
**களை என் மீது பதித்திருக்கிறது'**

என்று குறிப்பிடும் கவிஞர் நகர வாழ்வின் அவலங்களையும் குரூரங்களையும் கூர்மையாகப் பதிவு செய்திருக்கிறார்.

**'அடுக்கு மாடிகளில் வாழ்பவர்கள்**
**சூரியனை**
**காங்கிரீட்டில் புதைத்தாயிற்று**
**சோடியம் விளக்குகளின்**
**மஞ்சளில் நனைந்த மனிதர்கள்**

*தொலைக்காட்சிப் பெட்டி முன்னால்*
*மரத்துப் போனார்கள்'*

நகர வாழ்வின் இயந்திர கதியை மேலும் கூர்மையாக 'மின்துகள் பரப்பு' நூலில் பதிவு செய்கிறார்.

*'என் உடம்பை நேசிப்பது போல்*
*எந்திரங்களின்*
*ஒவ்வொரு பகுதியையும்*
*நேசிக்கிறேன்*

*சக்கரத்தைக் காட்டிலும்*
*உன்னதமான பூவை*
*நான் இதுவரை பார்த்ததில்லை'*

இயந்திரங்களும் பாடு பொருள்கள் தான் என்று பாரதியார் சொல்லிப் போயிருந்தாலும் அதற்கு வடிவம் கொடுத்தவர் என்று இந்திரனைச் சொல்லலாம்.

மூச்சு முட்ட வைக்கும் விளம்பரங்களைக் குறித்து எழுதிய 'வேட்டையாடும் விளம்பரங்கள்' இப்படி முடிகிறது. எதிர்ப்பு உணர்வு பீறிடுகிறது கவிதையில்.

*'வேண்டாம்*
*நான் குளிக்கப் போவதில்லை*
*அழகாயிருக்கப் போவதில்லை*
*உணவுகளின் நறுமணத்தை*
*நுகரப் போவதில்லை . . . .*

*என்னை விட்டுவிடு*
*நான் பழைய மிருகமாகி விடுகிறேன்*
*விளம்பரம் வேண்டப்படாத*
*ஆதி மிருகம்'*

இந்திரனின் குரலில் நவீனத்துவம் தன் அருவருப்பு களோடு, அசிங்கங்களோடு, நகரின் கூவங்களோடு பவனி வருகிறது.

சில கவிதைகளைப் புதிய முறையில் சித்திரக் கவிதையாகவும் பதிப்பித்திருக்கிறார்.

இருபத்தோராம் நூற்றாண்டின் விளிம்பில் நின்று கொண்டிருக்கும் ஓர் ஆதிவாசித் தமிழனின் மன உளைச்சல்களை இந்திரன் பதிவு செய்கிறார்.

மெய்யாகவே இந்திரன் காலத்தின் குரலாகிறார்.

**வைரமுத்து**

திரைப்பாடல் ஆசிரியராகவே பெரிதும் கருதப்படும் வைரமுத்து பல கவிதை நூல்களைத் தந்தவர். அறிஞர்கள் தேர்ந்தெடுத்த 187 கவிதைகள் 'வைரமுத்து கவிதைகள்' என்ற தனித் தொகுப்பாகவும் வந்துள்ளன.

உரக்கப் பேசும் தொனியுடன் அமைந்த கவிதைகளே பெரிதும் அவருடைய தொகுப்பில் காணப்படுகின்றன. அது அவருடைய கவிதை நெறி என்று கருதலாம்.

**'நதி**
**நடந்து போகும் சங்கீதம்**
**மழை**
**அவரோகண சங்கீதம்**
**மழலை**
**பிழைகளின் சங்கீதம்'**

என்பது போல அடுக்கிச் சொல்லுதலும் அதிரச் சொல்லுதலும் தன் கவிதை இயல்பாக அமைத்துக் கொண்டவர் வைரமுத்து. ஒரு மேடைப் பேச்சாளராகவும் விளங்குவதால் இந்தச் சொல் நெறியை மேற்கொண்டார் போலும்.

இந்தியச் சுதந்தரத்தைக் குறித்து அவர் எழுதிய வரிகள் புகழ்பெற்றவை.

**'அவன்**
**ஒரு**
**பட்டு வேட்டி பற்றிய**
**கனாவில் இருந்த போது**
**கட்டியிருந்த கோவணம்**
**களவாடப்பட்டது'**

'நச்' சென்று விழுந்த தாக்குதலாக இவ்வரிகள் மனங்களில் ஆழப் பதிந்து விட்டன.

காதல் கவிதைகளைச் சுவையாகப் படைப்பதிலும் அவர் கைவண்ணம் பளிச்சிடுகிறது. 'மழைக்காலப் பூக்கள்' இதற்கு அருமையான எடுத்துக்காட்டு.

*'அது ஒரு*
*காலம் கண்ணே*
*கார்காலம்*
*நனைந்து கொண்டே*
*நடக்கிறோம்*

*ஒரு மரம்!*
*அப்போது அது*
*தரைக்குத்*
*தண்ணீர் விழுதுகளை*
*அனுப்பிக் கொண்டிருந்தது*
*இருந்தும்*
*அந்த*
*ஒழுகும் குடையின் கீழ்*
*ஒதுங்கினோம்'*

காதலை நாகரிகமான உணர்வாக வடித்தெடுக்கும் இந்தக் கவிதை மெல்லிய அன்பின் இழைகளை நூற்றுத் தருகிறது.

*'உனக்குப்*
*பொன்னாடை போர்த்தும்*
*கர்வத்தோடு*
*எனது கைக்குட்டையை*
*எடுத்து நீட்டினேன்*
*அதில்*
*உன் நெற்றியை ஒற்றி நீ*
*நீட்டினாய்*
*நான் கேட்டேன்*
*இந்தக் கைக்குட்டை*
*உலராமல் இருக்க*
*ஓர்*
*உத்தி சொல்லக்கூடாதா?*
*நீ சிரித்தாய் . . .'*

இன்று எழுதப்படும் காதல் கவிதைகளோடு ஒப்பிட்டால் மிக உயர்வான தரத்தில் எழுதப்பட்டது இந்தக் கவிதை என்பதை உணர முடியும்.

வைரமுத்து கவிதைகளில் நாட்டுப்புறச் சந்தம் அபிநயம் பிடிக்கும் சில படைப்புகள் உண்டு. அவை அரிய படைப்புக்கள். 'விதைச் சோளம்' அவற்றுள் ஒன்று. மழையில்லாத வறட்சி. . .

**'ஆடி முடிஞ்சிருச்சி**
**ஆவணியும் கழிஞ்சிருச்சி**
**சொக்கி கொளம் கோடாங்கி**
**சொன்ன கெடு கடந்திருச்சி**
**காடு காஞ்சிருச்சி**
**கத்தாழை கருகிருச்சி**
**எலந்த முள்ளல்லாம்**
**எலையோட உதிந்திருச்சி'**

வெக்கை பொறுக்காம குருவி ரெக்கை கூட வெந்து விட்டதாம். கடும் எதிர்பார்ப்புக்குப் பிறகு கொட்டியது மழை, உழவன் சொல்கிறான்:

**'ஒத்த ஏரு நான் உழுகத்**
**தொத்தப் பசு வச்சிருக்கேன்**
**இன்னும் ஒரு மாட்டுக்கு**
**எவனப் போய் நான் கேட்பேன்?**
**ஊரெல்லாம் தேடி**
**ஏரு மாடு இல்லாட்டி**
**இருக்கவே இருக்கா**
**இடுப்பொடிஞ்ச பொண்டாட்டி'**

மனைவியையும் ஏரில் பூட்டத் துணிகிறான். அத்தனைப் பஞ்சம்! அத்தனை வறுமை!

விதைச் சோளம் கடன் வாங்கி வந்த பின்னும் மழைவிட்ட பாடில்லை. ஒருவாறு மழை ஓய்கிறது. உழவன் விதைச் சோளம் எடுக்க விரைகிறான்.

**'மழையும் வெறிக்க**
**மசமசன்னு வெயிலடிக்க**
**மூலையிலே வச்சிருந்த**

மூட்டையைப் போய் நான் பிரிக்க
வெதச்சோளம் நனஞ்சிருச்சே
வெட்டியாப் பூத்திருச்சே
மொளைக்காத படிக்கு
மொளைகட்டிப் போயிருச்சே
ஏர் பிடிக்கும் சாதிக்கு
இதுவே தான் தலைப்பெழுத்தா?
விதி முடிஞ்ச ஆளுக்கே
வெவசாயம் எழுதிருக்கா?'

துயரக் குரல் வைரமுத்துவின் நாட்டுப்புறத் தமிழில் கண்ணீர்க் கோடுகளாய் வழிகிறது. அற்புதமான சித்திரிப்பு இது.

ஏராளமாக எழுதிக் குவித்திருக்கும் வைரமுத்து காதலை வரைகையிலும், கிராமத்து வேதனைகளை அவர்கள் மொழியில் பேசுகையிலும் கீழிறங்கி வருகிற வைகறை மேகம் ஆகிறார். மற்றைப் பொழுதுகளில் ஒரு பீடத்திலிருந்து பேசும் தொனி மிகுதியாய் ஒலிக்கிறது.

கவிதையின் இன்னொரு முகமாக ஒரு வாழ்க்கை வரலாற்றைப் புதுக் கவிதையில் நேர்த்தியாகத் தந்திருப்பதைக் குறிப்பிட வேண்டும். மகாகவி பாரதியாரின் வரலாற்றைக் 'கவிராஜன் கதை'யாக -ஓர் இதழில் தொடராக எழுதிச் சாதனை படைத்திருக்கிறார்.

மற்றொரு சிறப்பும் அவருக்கு உண்டு. திரைப்பாடல்களைக் கவிதைகளாகப் படைத்து வருவது அவருடைய தனி முத்திரை எனலாம்.

'இது ஒரு பொன்மாலைப் பொழுது
வான மகள் நாணுகிறாள்
வேறு உடை பூணுகிறாள்
வானம் எனக் கொரு
போதி மரம்'

'இது ஒரு நிலாக்கலம்
இரவுகள் கனாக் காணும்'

'ஆயிரம் தாமரை மொட்டுகளே'

'மேகமே மேகமே'

'விழியில் விழுந்து
இதயம் நுழைந்து
உயிரில் கலந்த உறவே'

'அந்தி மழை பொழிகிறது – அதில்
ஒவ்வொரு துளியிலும் உன் முகம் தெரிகிறது'

'எரிமலை எப்படிப் பொறுக்கும் – நம்
நெருப்புக்கு இன்னுமா உறக்கம்?'

இவையெல்லாம் திரைப்பாடல்களில் கவிதைச் சுவையை வைரமுத்து சேமித்து வைத்திருப்பதற்கு ஒரு சிறுதுளிச் சான்று.

வைரமுத்து திரையில் கவிதை வரையும் வித்தகராகவும் இருப்பது கவிதை உலகுக்குப் பெருமை அல்லவா?

**புதுக்கவிதை விளைச்சல்**

இருபதாம் நூற்றாண்டின் கடைசி முப்பதாண்டுகளில் மிகப் பெரிய விளைச்சல் கண்டிருக்கிறது தமிழ்ப் புதுக்கவிதை.

இதற்குக் காரணமான புதிய கவிஞர்கள் அனைவரையும் விரிவாக அறிமுகப்படுத்துவது எளிதான காரியமல்ல. சிறிதும் பெரிதுமான பங்களிப்புகளைத் தந்து தொடர்கிறவர்களும் இருக்கிறவர்களும், ஓய்ந்தவர்களும் இருக்கிறார்கள்.

கவிதையைத் துடுப்பாகவும், துப்பாக்கியாகவும் பயன்படுத்த விழைந்த அறிவுமதியை முதன்மையாகக் குறிப்பிட வேண்டும். காதலை நோகாமல் சொல்லவும், களப்போரை பூமியதிரப் பேசவும் அறிவுமதியின் எழுத்துக்கள் வல்லவை.

'கழுத்தை
நீட்டச் சொன்ன இடத்தில்
நீட்டிய
இந்த அம்மாக்களுக்கு
நம் ஏக்கங்கள்
எங்கேயடி
புரியப் போகிறது?'

என்று நியாயம் பேசும் காதலனையும்,

**'ஏய்**
**நெஞ்சில்**
**ஒட்டிக் கொண்டு**
**உயிரையே உறிஞ்சும்**
**அட்டை நீ'**

என்று செல்லம் கொஞ்சும் காதலியையும் திகட்டாமல், உவட்டாமல் தருகிறார் அறிவுமதி.

அதே சமயம் 'நெருப்பின் மக்கள்' கவிதையை நெஞ்சு தகிக்கும்படியும் எழுதுகிறார்.

**'எங்களை அடித்தால்**
**குருதி வரும்**
**கண்ணீர் வராது**
**எங்களை உதைத்தால்**
**முக்கல் வரும்**
**அழுகை வராது**
**. . . . . . . . . . . . . .**

**இந்தச்**
**சின்னத் தூறலுக்கே**
**இப்படி**
**இரும்புக் குடைக்குள்**
**ஒண்டுகிறீர்களே**
**நாளைய**
**நெருப்பு மழைக்கு**
**எந்தக் குடையில்**
**அடேய்**
**எந்தக் குடையில்?'**

எனினும் அறிவுமதியின் தனித்தன்மை அவருடைய ஹைகூ கவிதைகளிலும், குறுங்கவிதைகளிலும் தான் மேலோங்கி நிற்கிறது.

**'உடைந்த வளையல் துண்டு**
**குளத்தில் எறிந்தேன்**
**அடடே எத்தனை வளையல்கள்'**

என்று பேசும் அழகுணர்ச்சி.

**'பருத்திக் கொல்லை**
**காவல் பொம்மைக்குக்**
**கந்தல் சட்டை'**

என்று உரைக்கும் முரண்.

**'விறகு வெட்டி வேறுமரம்பார்**
**பொந்துக்குள்**
**கிளிக் குஞ்சு'**

என்று பொங்கும் கருணை- இத்தனையும், இதற்கு மேலும் அறிவு மதியின் ஹைகூ கவிதைகளில் கொட்டிக் கிடக்கின்றன. முதன் முதல் ஹைகூ தொகுப்பை வெளியிட்ட பெருமையும் அறிவுமதிக்கு உண்டு.

'அணுத் திமிர் அடக்கு' வரிசையில் வரும் குறுங்கவிதைகளிலும் ஆற்றலின் சேமிப்பு புலப்படுகிறது.

**'நச்சுக்**
**கொடி**
**தாலி**

**வளையல்**
**விலங்கு**

**குருதிப்**
**பிணம்**
**குங்குமம்**

**விழித்துப்**
**பார்**
**விடிந்தே**
**இருக்கும்'**

அறிவு மதியின் 'நட்புக்காலம்' - ஆண், பெண் நட்பை மலினப்படுத்தப்படாத அன்பாகப் பார்ப்பது ஒரு தனி வெளிப்பாடு. அறிவுமதி - இன்னும் வைரங்கள் வைத்திருக்கும் சுரங்கம். தோண்ட வேண்டும்.

ஆங்கில இலக்கியத் தாக்கத்தால் தமிழில் நவீனக் கவிதை செய்து வருபவர்களில் **பிரம்மராஜன்** குறிப்பிடத் தக்கவர். ஆயினும் இருண்மை அவர் கவிதைகளில் வரித்துக் கொண்ட பண்பாக நிற்கிறது.

எழுத்து பன்முகப்பொருளாய் இருக்கிறபடியால் அதற்கு முழுமையான அர்த்தம் என்று ஒன்றுமே கிடையாது என்கிற ரோலான் பார்திதின் கருத்தை அவர் நூலொன்றின் முன்னுரை பேசும். இந்தப் பார்வையோடு அவர் கவிதைகளை அணுகுவதாகக் கருதலாம்.

'பித்தமும் பிரமும்' என்ற கவிதை:

**'அரைக் கனவு துளிர் பிறை**
**கயிற்றரவு கங்கையாறு**
**சர்ப்பக் காற்று சலனிக்காது**
**மூன்றாவது கண் மூடியே நோக்கும்**
**பித்தமும் பிதற்றலும்**
**கவிதையே ருத்ர மூர்த்தி**
**ஆறாது புண் அது என்றும் நாறும்'**

இதனுள் செல்வது கடினமாகத் தோன்றுகிறது அல்லவா? பிரம்மராஜனின் பெரும்பான்மைக் கவிதைகள் இவ்வாறே அமைந்துள்ளன.

தொண்ணூறுகளில் கவிதைக் களத்துக்கு வந்தவர் **மனுஷ்ய புத்திரன்**. அவருடைய 'கால்களின் ஆல்பம்' கவிதை அனைத்துத் தரப்பு வாசகர்களையும் கவர்ந்தது.

**'ஆல்பம் தயாரிக்கிறேன்**
**கால்களின் ஆல்பம்**

**எப்போதும்**
**முகங்களுக்கு மட்டும் தான்**
**ஆல்பமிருக்க வேண்டுமா?**

**திட்டமாய் அறிந்தேன்**
**என் சாண் உடலுக்கு**
**காலே பிரதானம்'**

படிகளில் இறங்கும் கால்கள் முதல், குஷ்டத்தில் அழுகிய கால்கள் வரை அத்தனைக் கால்களையும் பற்றி விவரிக்கிறது கவிதை. பின்னர் இவ்வாறு முடிகிறது:

***'யாரைப் பார்த்தாலும்***
***நான் பார்ப்பது கால்கள்***
***ஒட்டுவேன்***
***என் கால்களின் ஆல்பத்தில்***
***எல்லாக் கால்களையும்***
***பெட்டிக்கடியில்***
***ஒளித்து வைத்து விடுவேன்***
***அன்னியர் பார்த்து விடாமல்***
***என் போலியோ கால்களை மட்டும்'***

எடுத்துக்கொண்ட புதிய பொருளாலும், திடுக்கிட வைக்கும் முடிவாலும் இக்கவிதை மனதை உலுக்குகிறது. ஊனன் 1, 2 கவிதைகளும் வேதனை தேக்குகின்றன.

இடமும் இருப்பும் அவர் கவிதைகளின் மையமாக அமைகின்றன. வீடும் வெளியும் பற்றி நிறையவே சிந்தித்திருக்கிறார். அது போலவே காலமும் அவர் சிந்தனைகளில் முக்கியப்பொருள் ஆகிறது. வெகு அழகான ஒரு கவிதை காலம் பற்றிய கற்பனைகளை அடித்து நொறுக்கி ஒரு புள்ளியாக்கி விடுகிறது.

***'காலம் என்கிறீர்கள்***
***அகாலம் என்கிறீர்கள்***
***காலத்தை வெல்வதென்றும்***
***காலத்தைக் கடப்பதென்றும்***
***பயங்கரக் கதைகள் சொல்கிறீர்கள்***
***குட்டி இளவரசி சஹானா***
***நாளைக்கு மழை பெய்தது***
***என்கிறாள் அமைதியாக'***

***(குட்டி இளவரசியின் அறிதல்கள்)***

மனுஷ்ய புத்திரனுக்குள் குவிந்து கிடக்கும் கவிதைகளில் முளை விட்டிருப்பவை சில. பருவம் பார்த்துக் காத்திருப்பவை பல.

குறைவாக எழுதினாலும் கத்தியின் கூர்மை பளபளக்கும் சுகுமாரன் கவிதைகளில். கோடைகாலக் குறிப்புகள், பயணியின் சங்கீதங்கள், வாழ்நிலம் எனச் சின்னச் சின்னத் தொகுப்புகள். புதிதாக வந்திருக்கும் கவிதைகளில் அனுபவம் சொற்களை இயல்பாக்கி இருப்பதைக் காணலாம். ஒரு மனச்சாட்சிப் பதற்றத்தை (தொலைக்காட்சிச் செய்திப் பிரிவில் பணியாற்றுவதால் நிறையவே கண்டிருக்க வேண்டும் இதை) 'குற்றம் பார்க்கில்' கவிதை பேசுகிறது.

'அந்தக் குற்றவேளைக்குப் பிறகு
அந்நியமாயிற்று எல்லாம்
பயந்து தப்பியோடுகைளில்
என்பெருமூச்சில் சுழன்று
வேருடன் பெயர்ந்தன தாவரங்கள்
தாகித்து நீர் அள்ளுகையில்
என் கைச்சூட்டில் கொதித்து
மணலாய் மிஞ்சியது நதி

கால் சோர்ந்து சாய்கையில்
என நிழலின் சுமையால்
இடிந்து சரிந்தது சுவர்

வீடு திரும்பி முகம் பார்க்கையில்
என் பிம்பம் விழுந்து
நொறுங்கி உடைந்தது கண்ணாடி

என்னைக் காப்பாற்றிக் கொள்ள
நண்பனைக் களபலியாக்கிய
அந்தக் குற்றவேளைக்குப் பிறகு
அந்நியமாயிற்று எல்லாம்'

நிலை தவறிய மானுடத்தைக் கண்டு இயற்கையும் அஞ்சி நடுங்குவதைக் காவியங்களில் பார்த்திருக்கிறோம். புதுக்கவிதையில் அதன் இன்னொரு பரிமாணத்தைக் காட்டுகிறார் சுகுமாரன். பதர்களில்லாத தானிய விளைச்சலை எப்போதும் சுகுமாரனிடம் பார்க்கலாம்.

பல கவிதை நூல்கள் தந்திருந்தாலும் வெண்பா என்ற மரபு வடிவத்தைப் புதுக்கவிதை வாகனமாக மாற்றியதில் **ஆகாசம்பட்டு** சேஷாசலம் முக்கியமானவர்.

**'என்ன விவசாயம் எழவு விவசாயம்**
**பொன்னு விளையுற பூமியாம் – இண்ணைக்கும்**
**போர்வையில் பாதியே சோமனாச்சி! அண்ணாச்சி!**
**வேர்வையில் பாதி மழை'**

இப்படி வடிவப் பழமையை வசீகரமாக்கி வருகிறார் சேஷாசலம்.

மிகவும் நம்பிக்கையூட்டும் புதுக்கவிதையாளர்களில் **ரவி சுப்பிரமணியம்** குறிப்பிடத்தக்கவர்.

**'முற்போக்கு**
**பிற்போக்கு**
**லீனியர்**
**நான்லீனியர்**
**இசங்கள் கசங்கள்**
**இத்யாதி இத்யாதி**
**எதற்குள்ளும் இல்லை நான்**
**சிரமம் ஏன் சிக்க வைக்க?'**

என்று தன் வட்டங்களற்ற கவிப்பாங்கைச் சொல்லும் ரவி சுப்பிரமணியத்துக்கு மொழி வசமாகி விட்டதைப் பல கவிதைகளில் பார்க்கலாம்.

**'கையணைப்பில்**
**காணாமல் போனோம்**
**நானும் நீயும்**
**இருப்பதை விட**
**தொலைவது**
**சுகம்**
**வா**
**காணாமல் போகலாம்'**

என்று மலரினும் மெல்லிய காதலைப் பல கவிதைகளில் பேசிய கவிஞர் இப்போது வார்த்தைகளை ஓமியோபதி மருந்து

உருண்டைகள் போல இரத்தினச் சுருக்கமாக்கி உணர்வுகளைப் பதிய வைக்கிறார்.

1. தூண்டிலில்
துடிக்குது
காலம்

2. சொல்லாமல் இருப்பது போலவே
தோன்றுகிறது
சொல்லிய பின்பும்'

வீணை மீட்டி ஓய்ந்த பிறகும் எழும் நாத அலைகளைப் போல் இவற்றைப் படித்த பின்னும் அலைகள் நம்முள். ரவி சுப்பிரமணியம் கனிந்து கொண்டிருக்கிறார்.

அவரைப் போலவே சிக்கனச் சொற்களில் மனக் கோலங்களை வரைகிறார் **ஆ. இளம்பரிதி.** 'மழை' என்றொரு கவிதை:

'ஜன்னலிலிருந்து கண்ட
மழையல்ல
நனையும் போது'

'காலடியில் ஆகாயம்' என்ற அருமையான கவிதைத் தொகுதி தந்த **ஆனந்த்,** கால, இடை வெளிகளைச் 'சற்றைக்கு முன்' கவிதையில் சிறைப்பிடிக்கிறார்:

'சற்றைக்கு முன்
ஜன்னல் சட்டமிட்ட வானில்
பறந்து கெண்டிருந்த
பறவை
எங்கே?
அது
சற்றைக்கு முன்
பறந்து கொண்டிருக்கிறது'

அவரைப் போன்றே நல்ல கவிஞரான **எம். யுவன்** மின்னலைப் போல் சொற்களைச் சுழற்றி லாவகமாகக் கவிதையைப் பேச வைக்கிறார். 'குறிப்பு' என்ற கவிதையைப் பார்ப்போம்.

**'கிளியென்று சொன்னால்**
**பறவையைக் குறிக்கலாம்**
**பச்சையைக் குறிக்கலாம்**
**மூக்கைக் குறிக்கலாம்**
**பெண்ணைக் குறிக்கலாம் கூட்டுச்**
**சிறையைக் குறிக்கலாம்**
**சமயத்தில் அது**
**கிளியையும் குறிக்கலாம்'**

'கிளி' என்ற சொல்லின் அர்த்த அடுக்குகளைச் சொல்லும் இந்தக் கவிதை உண்மையில் கவிதையின் இரகசியத்தையும் சொல்லி விடுகிறது.

சூத்ரதாரி மற்றொரு அருமையான கவிஞர். 'குரல்களின் வேட்டை' - அவர் நடத்திய நுண் உணர்வுகளின் வேட்டை என்றே சொல்லலாம். 'இருத்தல் விதிகள்' என்ற கவிதையில் கூறுவார்:

**'பூக்கிற முதல் பூவையேனும்**
**செடியில் விட்டு வை**

**முடிந்த மட்டும்**
**கத்திகளை உறையிலேயே இருக்க விடு**

**இருப்பதின் அர்த்தம்புரிய**
**முடிந்த மட்டிலும்**
**இல்லாமல் போ'**

'கடைசியாய் ஒரு கை குலுக்கல்' போன்ற அருமையான கவிதைகளைத் தந்திருக்கிறார் சூத்ரதாரி.

பல நல்ல கவிதை நூல்களைத் தந்திருப்பவர் **பா.சத்தியமோகன்.** 'தனை இழக்கும் ருசி', 'மீன்கள் கடிக்கும் மரம்', 'வானம் மட்டும் இருக்கிறது' என்பன அவர் நூல்கள்.

**'கொட்டப்பட்ட மணலில் நாம்**
**கோபுரம் கட்டி ஆடிய மகிழ்ச்சி**
**கட்டப்பட்ட வீட்டிற்குள்**
**நுழையவே இல்லை'**

என்று வாழ்க்கை இழந்த ருசியை விளக்குவார் கவிஞர். மெல்லிய மனம் கவிஞனின் உடைமை அல்லவா? 'கசிவு' - கவிதையைப் பாருங்கள்:

> **'குழந்தைகள் பாடிய**
> **ஒலிநாடா இழை பிரிபட்டு**
> **தெருவோரக் கருவேல முள்ளில் சிக்கி**
> **ஆடிக் கிடக்கிறது**
> **வேலி முள் கீறுமோ குழந்தைகள் இசையை?**
> **பரிதவித்த நினைப்புடன் ஓடிய**
> **விரல்களின் நுனியில்**
> **வேலியில் சிறு ரத்தக் கசிவு'**

ஏப்படியெல்லாம் கவிமனம் கனிவு கொள்ளும் என்பதற்கு பா. சத்தியமோகன் எடுத்துக்காட்டாகிறார்.

**இளைய பாரதி** மிகவும் கவனத்துக்குரிய கவிஞர்களில் ஒருவர். அவருடைய மரணத்தின் நட்சத்திரங்கள், பட்டினப்பாலை இரண்டும் கனமான படைப்புகள்.

மரணத்தின் நட்சத்திரங்களைச் சிந்தனைப் பொறிகளாய், கவிதை நெருப்புப் பிஞ்சுகளாய், சில வேளைகளில் அழுந்தக் கீறி வைத்த இரத்தப் பொட்டுக்களாய்ப் படைத்திருக்கிறார். முடிவில்லாப் பயணம் போல் இந்த முத்திரைக் கவிதைகள் முகம் காட்டுகின்றன.

> **'நான்**
> **இருளில் முளைத்தாலும்**
> **நட்சத்திரம் . . . .**
>
> **நீந்தத் தெரியாதவன் செல்லும்**
> **திசையெல்லாம் நீர்'**

வாழ்வின் அக முரண்பாடுகளை (paradoxes) மையமாக்கி ஒரு கார் மேகம் மழைத்துளிகளைச் சிந்திக் கொண்டே போவது போல் அவர் கவிதைகள் ஈரப் பாதங்களை நம் மனதில் பதிய விட்டுக் கொண்டே செல்கின்றன.

குரூர யதார்த்தங்களை எவ்விதக் கீழ்த்தர இரசனை நோக்கங்களும் இன்றி முன் வைக்கிறார் இளைய பாரதி.

'தொப்புள் கொடி ஈரம் துடைக்கு முன்பு
சிசுவின் சின்ன உதடுகள் திறந்து
கள்ளிப் பால் ஊட்டி கரிசலிலே புதைத்து விட்டு
புற்றில் முலைப்பால் பீய்ச்சிப்
புலம்புவாள் தென்திசைக்காரி ஒருத்தி'

உண்மையில் இத்தகைய கவிதைகள் மரணத்தின் நட்சத்திரங்கள் தான். பாதிரியாரின் ஞாயிற்றுக் கிழமைச் சுவிசேஷ உபதேசம் போல் தேய்ந்து போய்விடாமல் கவி இதயத்தின் மூச்சுக் காற்று கவிதைக்கு உயிர் கொடுத்து விடுகிறது.

யதார்த்தத்தை விட்டு விலகாமலும், பின் நவீனத்துவப் பசாங்குகள் செய்யாமலும் கவிதையைக் கச்சிதமாக - எவ்விதப் பேற்று நோவும் இல்லாமல் பெற்றெடுக்கிறார் இளையபாரதி!

'அழகுக்கும் தெய்வாம்சத்துக்கும்
அந்தரங்கத் தொடர்புகள் இருக்கிறதென்றால்
இந்த அருவருப்புகள் யாருடையவை ?

அமுதம் திரண்டு
ஆவதென்ன
வெண்ணெய் திரண்டாலே
விசேஷம்'

'மரணத்தின் நட்சத்திரங்களை'த் தொடர்ந்து இளைய பாரதியின் 'பட்டினப்பாலை' வெளியாகியுள்ளது. பட்டினம் பாலை ஆவதை - நெஞ்சம் உலர்ந்த நெடுநகராகிற அனுபவத்தை இந்த நூலின் கவிதைகள் பேசுகின்றன. கவிதையைப் பற்றி ஓர் அற்புதமான கவிதை இந்தத் தொகுப்பில் உண்டு.

'மனசில் மழைமூட்டம் கொண்டிருந்த
ஒரு தேவகணத்தில்
ஒரு வானவில்லாய் கவிதை உதிக்கிறது
அனைவருக்கும் வாய்க்கிறதா
அமிர்தம் வழியும் அந்தப் பொற்கணம்
கணநேரத்தில் கலைந்துவிடும்
வானவில்லின் நிறங்களை நிரந்தரப்படுத்துவதில்
அழிகிறது ஆயுள்
கழிகிறது காலம்'

இந்த உண்மை அவருக்குள் குடியிருப்பதால் தான் உன்னதமான கலைப்படைப்பைத் தரவேண்டும் என்ற பிடிவாதம் அவரிடம் நிரம்பிய பசுவின் மடி போல் கனமாகவே இருக்கிறது. காதல் கவிஞருக்கு ஒரு நிர்ப்பந்தமாகவே தொடர்கிறது. அதனால் எழுதுகிறார்:

**'நான் தாகத்தில் வறண்டு விடாதிருக்க**
**என் கிண்ணத்தில் கிடக்கிறது**
**அலையடித்தபடி ஒரு கடல்'**

என்று இந்த உண்மை முன் வைக்கப்படுகிறது.

**'காலத்தின் மசக்கை**
**தீராதது**
**மனிதச் சாம்பலை**
**தின்று கொண்டே இருக்கிறது'**

என்று வாழ்வின் தவிர்க்கவொண்ணா மரணத்தைப் பேசுகிற அதே மூச்சில் 'செம்புலப் பெயல் நீர்' என்று காதல் கவிதைகளையும் படைத்திருக்கிறார்.

**'ஒரு**
**முளைப்பாரியை**
**வனமாக்கியவள்**
**நீ'**

என்று காதல் உலகுக்கே உரிய இனிய பொருளிலிகளை (Sweet Nothings) பக்கங்கள் தோறும் நந்தவனப் பூக்களாய் உதிர்க்க இளைய பாரதி சளைக்கவே இல்லை.

இளைய பாரதி ஒரு கலைஞர் - திரைப்படக் கலைஞர். அதனால் வரிகளைக் காட்சிப் படிமமாக்கும் வித்தை அவருக்குக் கைகூடி இருக்கிறது.

நவீனத் தமிழ்க் கவிதையில் தவிர்க்க முடியாத இடம் இளைய பாரதிக்கு உண்டு.

இன்று திரைப்படத் துறைக்குக் கவனத்தைத் திருப்பியிருந்தாலும் இளங்கவிஞர்கள் சிலரிடம் வியத்தகு திறமை பொதிந்து இருக்கிறது. அவர்களில் **கபிலன், பழநிபாரதி, நா.முத்துக்குமார்** ஆகியோர் குறிப்பிடத் தக்கவர்கள்.

சிரிக்கவும் சிந்திக்கவும் வைக்க கபிலனால் முடிகிறது- வெறும் மூன்று வரிக் 'குறில்' கவிதைகளில்.

'புகழேந்திப் புலவன்
நடந்து போனான்
செப்பலோசை'

கடைசி வரியில் ஒரு சிலேடை வேறு தலைகாட்டி இன்புறுத்துகிறது. வெகு அழகான உணர்வுச் செதுக்கல்களைக் கபிலன் தன் கவிதைகளில் அமைக்கிறார். 'மூங்கில் முகம்' கவிதையைப் படித்தால் ஆச்சரியமாக இருக்கிறது.

'நான்கு குடிசைகளில் வைக்கோல்
திருடி வந்து
என் குடிசைக்குள் கூடுகட்டியது
குருவி

ஒழுகுகிற குடிசைக்குள் ஒழுகாத குடிசை

குறட்டை விட்டால் குஞ்சுகள் விழிக்குமென்று
குஞ்சுகள் உறங்கத்
தூங்காமல் இருக்கிறேன்

அதற்கு சிறகு முளைக்கிற வரை
வெளியே தான் படுக்கை சில இரவுகள்

மூங்கில்
புல்லாங் குழலாவது இனிமையானது தான்
அதைவிட மூங்கில்
குடிசையாவது இன்றியமையாதது.'

வாழ்வின் ஆதார சுருதியின் உயிரிரக்கம் கபிலனின் கவிதைகளில் தலையாய பண்பு.

மற்றொரு நம்பிக்கைத் தாரகை பழநிபாரதி. எல்லாரையும் போல அவரும் காதல் கவிதைகளைப் பாடியிருக்கிறார். ஆனாலும் பழநிபாரதியின் காதல் கவிதைகளில் ஓர் ஒளிவட்டம் எப்போதும்.

'பார்த்துக் கொண்டே இருக்காதே
ஒரு பார்வையில் என்னைச் சமை

*சமைத்துக் கொண்டே இருக்காதே*
*ஒரு சிரிப்பில் என்னைப் பரிமாறு*
*பரிமாறிக் கொண்டே இருக்காதே*
*ஒரு முத்தத்தில் என்னைச் சுவைத்துவிடு*
*சுவைத்துக் கொண்டே இருக்காதே*
*ஓர் இறுக்கத்தில் என்னைச் செரித்து விடு'*

பிற காதல் கவிதைகளில் காணப்படாத நெருக்கமும், அன்பும், வசீகரமும் பழநிபாரதியின் கவிதைகளில் உண்டு.

வெறும் காதல் மயக்கப் போதை விநியோகம் செய்கிற கவிஞர்களிலிருந்தும் அவர் வேறுபடுகிறார்.

சுற்றுச் சூழலில் மாசு குவிவதைக் கவலையோடு பேசுகிறார். வாழ்வின் ஆதாரங்களான ஐம்பூதங்களின் அழிவு வருத்திய மனதோடு அன்று பிறந்த குழந்தையிடம் பேசுகிறார்:

*'உனக்காக வைத்திருந்த*
*முத்தத்தில்*
*ஃப்ளோரைட் வாசம்*
*உனக்காகப் பறித்த பூவில்*
*டீசலின் தூசி*
*உனக்காக வாங்கிய*
*வாழ்த்து அட்டையில்*
*மரத்தின் இரத்தம்'*

பழநி பாரதியின் தனித்துவம் இன்னும் வளர்வது நவீனத் தமிழ்க் கவிதைக்குப் புதிய பரிமாணமாகும்.

நா. முத்துக்குமாரை ஒரு நொடியில் புகழின் உச்சிக்கு அழைத்துச் சென்றது அவருடைய 'பட்டாம் பூச்சி விற்பவன்'. சக மனிதர்கள் தான் முத்துக்குமாரின் கவனத்தைக் கவர்ந்தவர்கள். வசந்தும், கண்ணனும், சாக்னா விற்பவரும், ஆனந்தும் அவர்களோடு அப்பாவும், தாத்தாவும், அம்மாவும் என மனித உறவுகளுள் திளைப்பது நா. முத்துக்குமாரை வேறுபடுத்திக் காட்டுகிறது.

அவருடைய 'மனுஷிகள்' வாழ்க்கையின் பாடங்களில் தேர்ந்தவர்கள். ஆனால் பாவப்பட்டவர்கள்.

'கள்ளுக் கடையில்
'சாகனா, விற்பவள்
கெட்டவார்த்தைத் துணையால்
காத்துக் கொள்கிறாள்
கடையையும் கற்பையும். . . .
வாசனையாகப் பேசி
அய்யர் தெருவிலும்
விற்று விடுகிறாள்
கருவாட்டுக்காரி
கைக்கும் வாய்க்குமாய்
வாழத்தான் செய்கிறார்கள்
இவர்களும்'

நா. முத்துக்குமாரின் 'தூர்' மிக அற்புதமான கவிதை. சொல்லப்படும் பொருளால் மட்டுமல்ல, சொல்லும் முறையாலும் தனியழகு கொஞ்சும் கவிதை அது.

'வேப்பம் பூ மிதக்கும்
எங்கள் வீட்டுக் கிணற்றில்
தூர் வாரும் உற்சவம்
வருடத்திற் கொருமுறை
விசேஷமாய் நடக்கும். . .
ஆழ் நீருக்குள்
அப்பா முங்க முங்க
அதிசயங்கள் மேலே வரும்.'

கொட்டாங்கச்சி, கோலி, கரட்டை, துருப்பிடித்த ராட்டினம், திருட்டுப் போன வெள்ளி டம்ளர் இத்யாதிகள் வெளிவரும்.

'பகைவென்ற வீரனாய்
தலைநீர் சொட்டச் சொட்ட
அப்பா மேல் வருவார்

இன்றுவரை அம்மா
கதவுகளின் பின்னிருந்து தான்
அப்பாவோடு பேசுகிறாள்
கடைசி வரை அப்பாவும்
மறந்தே போனார்
மனசுக்குள் தூரெடுக்க'

நோகாமல் விடுகிற அம்பாகப் பாய்கிறது கவிதை. பம்மாத்து எதுவும் பண்ணாமல், முகத்தை ஏற இறங்க அசைத்துத் தராசு பிடிக்காமல், நேராகவே பேசிக் காரியத்தைச் சாதிக்கிறது கவிதை.

நா. முத்துக்குமார் மனிதர்களைப் படிக்கும் கவிஞர்.

திரைக்கலை இவர்களுடைய கவிதை ஆற்றலைத் திரை போட்டுவிடாமல் பாதுகாக்க வேண்டியது அவர்களுடைய கடமை.

புதிய தமிழ்க் கவிதையில் ஓர் அடையாளம் குறிக்கும் நூல் மைலாஞ்சி. ஹெச்.ஜி.ரசூல் நிரம்பவே எழுதி வருகிறார். எல்லாரும் எழுதுகிற பாதையை விட்டு ஒரு சமூக விமர்சனத்தை - இதுவரை வெளிச்சப்படுத்தப்படாத இசுலாமியச் சமூகம் பற்றி - முன் வைக்கிறார் ரசூல். சோதனைகள் நேர்ந்த போதிலும் கவிதை மனச்சாட்சியாய் நிலைக்கிறது.

**'பொட்டு வச்சுப் பார்க்க**
**எனக்கும் ஆசை**
**உம்மா திட்டுவாளோ'**

என்ற குழந்தையின் அந்தரங்கம் கலாசார மோதல்களை மென்மையாய்ச் சித்திரிக்கிறது. அது போன்றே பெண்ணுக்குத் தேவைப்படும் அன்பையும் ஆறுதலையும் நினைவூட்டுகின்றன ரசூலின் கவிதை வரிகள். கதீஜா கேட்கிறாள்:

**"அழகழகாய் எழுதித் தள்ளுகிறது**
**உங்கள் பேனா**
**'மஹர்' பெறுவதிலிருந்து**
**'குலா' சொல்வது வரை**
**அல்லாஹ் திருமறையில்**
**பெண்ணுக்கு வழங்கிய உரிமைகள் பற்றி**
**. . . . . .   . . . . . . . . . . . .**
**கண்ணில் தூசு விழுந்தால்**
**இமை விரித்து ஊதிவிடுவதும்**
**கண்ணீர்த் துளிகள்**
**விழியோரம் துளிர்த்தால்**

சுண்டு விரலால் சுண்டி எறிவதும்
நான் செய்ய மட்டும் தானா?'

கதீஜாவின் கேள்வி காலத்தின் முகத்தில் அறைந்து இந்தக் கேள்வியை முன் வைக்கிறது.

"இறைவன் ஆணுமில்லை, பெண்ணுமில்லை
. . . . .   . . . . .   . . . . .
ஆண் தன்மையும் பெண் தன்மையும் அற்ற
என் அல்லாவை
எப்படி நான் அழைப்பேன்
என் தமிழில்?'

அல்லாவுக்கு ஒரு மொழி வேண்டுமே என்று ஆதங்கப்படுகிறார் கவிஞர்.

தன் செல்ல மகளுக்கு நபிமார்களின் கதை சொல்கிறார் கவிஞர். ஒரு இலட்சத்து இருபத்து நான்காயிரம் நபிகள் வந்து போனார்களாம். ஆதம் நபி முதல் இறுதியாய் வந்துதித்த அண்ணல் முகம்மது நபி வரை.

'சொல்லிக் கொண்டிருந்த போது
செல்லமகள் கேட்டாள்
இத்தனை
இத்தனை
ஆண் நபிகளுக்கு மத்தியில்
ஏன் வாப்பா இல்லை
ஒரு பெண் நபி. . . .

உலகம் முழுதிலுள்ள இசுலாமியச் சமய எல்லைக்குள் வந்த சிந்தனையாளர்களில் எவருமே இப்படிக் கேட்டதில்லை. ஹெச்.ஜி.ரசூல் மட்டும் தான் கேட்டிருக்கிறார்.

ரசூலின் மார்க்சியம் தோய்ந்த கவிதை வரிகளில் பகுத்தறிவும், பெண்விடுதலையும் அபூர்வ சங்கமம் ஆகின்றன. தீபத்தில் கொளுத்திய தீப்பந்தம் ரசூலின் கவிதை.

**இரா. பச்சியப்பன்** : அச்சு அசலான கிராமத்துப் பிறவி. அவருடைய எழுத்து முழுவதும் பச்சை நெடி வீசும் கிராமியம்.

அதன் அசலான கோபத்தோடும் தாபத்தோடும் வெளிப்படுகிறது. இந்த உணர்வைச் சொல்லும் கவிதை : 'என் வயல் இது தான்'.

**'ஒப்பனைகள் நீட்டாதே**
**என் நிறம்**
**அனாதையாகக் கூடாது**
**என் முகமுடிக்குத்தான்**
**மதிப்பு எனில்**
**உன் சபையின் மீதே**
**சந்தேகம் எனக்கு.**
**முள்ளை விட்டுவிட்டு**
**கள்ளியை வரையமுடியாது**
**. . . .   . . . . .   . . . . .**
**நான் என்றால்**
**என் கற்றாழை நாற்றமும்**
**சேர்த்துத்தான் . . . . . .**
**வற்றிப் போவதானாலும்**
**இந்த மீனுக்கு**
**ஓடை போதும்**
**உன் கண்ணாடித் தொட்டியில்**
**நீயிரு'**

புதிது புதிதாக உவமைகளை அழகுறப் பொழிவதிலும் - ஒரு கிராமியச் சுவையோடு சொல்வதிலும் வல்லவர் பச்சியப்பன். ஒரு 'வலி' யைச் சொல்கிறார் கவிஞர்.

**'ஓடும் போது**
**கல்லடித்துப் பெயர்ந்த கால்விரல் நகத்தில்**
**அருகம்புல் மாட்டி இழுத்ததாய்**
**அப்படி வலி**
**உன் திருமணப் பத்திரிகை பார்த்தபோது'**

பச்சியப்பனின் அசலான கிராமியமும், அதிகார எதிர்ப்பும் மேலும் வலுப்பெறுமென எதிர்பார்க்கலாம்.

ஒட்டுப்புல் தந்த பஞ்சு (க. பஞ்சாங்கம்) இன்னும் புதிதாகத் தந்து கொண்டிருப்பதன் அடையாளம் 'பயணம்'. அடிப்படையில் திறனாய்வாளரென்றாலும் அவருக்குள் ஒரு

கவிஞன் அடைகாக்கப்படுகிறான். பயணம் என்ற ஒரு பொருள் நுதலிய தொகுப்பில் வாழ்க்கை ஒரு தீராப்பயணம் என்று நிரூபிக்கிறார். அதில்தான் எத்தனை அனுபவங்கள்!

'இடதுபக்கம் உட்கார்ந்தால்
பிந்திய வண்டிகளைப் பார்க்கலாம்
வலது பக்கம் உட்கார்ந்தால்
எதிரே வரும் வண்டிகளைப் பார்க்கலாம்
முன்னாலே உட்கார்ந்தால்
சாலை நடப்பு அனைத்தையும் பார்க்கலாம்
பின்னாலே உட்கார்ந்தால்
தலைகளாய்ப் பார்க்கலாம்
நடுவிலே உட்கார்ந்தால்
காணாமல் போவதோடு
எதையும் காணவும்
முடியாமல் போகலாம். . .'

பயணத்தில் இப்படியும் ஒரு தத்துவம் காண்கிறார் பஞ்சு. அவருடன் கூடப் பயணித்தால் அவர் அனுபவங்களும் கிடைக்கும். புதிய அனுபவங்களுக்காக நம் மனதும் தவிக்கிறது.

வசந்த் செந்தில் மற்றவர்கள் பேசாததையும், காணாததையும் காட்ட விழையும் கவிஞர். எல்லாருக்கும் தெரிந்த பொருள்களிலிருந்து அவர்கள் பார்க்காததைச் சொல்லத் தெரிந்தவர். பல கவிதை நூல்களை வெளியிட்டிருக்கிறார். ஒரு சான்று : (ஒற்றை இறகு).

'கடிதம்' என்ற சிறுகவிதையில் மனதைச் சலனப்பட வைக்கிறார்:

'விடுமுறை முடிந்து
வீடு திரும்புகிறோம்
இருந்த கூடொன்றை
இழந்து நிற்கிறது
முன்பக்க மரக்கிளை
கடிதம் வந்திருக்கலாமென
கதவைத் திறக்கிறாய்
வீழ்ந்து கிடக்கிறது

ஒற்றை இறகு
எதுவும் இல்லையென்று
எடுத்து வீசுகிறாய்
கடிதம் இல்லையா அது?'

கவனிக்கத் தவறும் பல செய்திகளை அழகு ததும்பச் சொல்வதில் வசந்த் செந்தில் மிகத் தேர்ச்சி உடையவர். குழந்தைகளை மதிப்பெண் வாங்கும் இயந்திரங்களாய் மாற்றிவிட்ட கொடூரர்கள் நாம். அவர்களின் 'குழந்தைமை'யைக் களவாடி விட்ட கள்வர்கள் நாம். 'பொம்மை' கவிதையில், குழந்தைக்கு வாங்கி வந்த பொம்மைகளைத் திரும்பிப் பார்க்க முடியாதபடி அதன் முழுநேரத்தையும் படிப்பு காவு வாங்கி விட்டதைக் கூறுகிறார். கவிதையை இப்படி முடிக்கிறார்.

'என்றைக்காவது
ஏதோ ஒரு மகிழ்ச்சியில்
துள்ளிக் குதித்து
தவ்வி விழுந்து
தடுமாறும் போதாவது
உன் கால்கள் பட்டு
அந்த பொம்மைகள்
உடையாதா என்று காத்திருக்கிறேன்'

வசந்த் செந்திலுக்கு இன்னும் சொல்ல அனுபவங்கள் இருக்கின்றன. அவை கவிதைகளாகக் காத்துக் கிடக்கின்றன.

புதுக்கவிதையின் எல்லைகளை விரித்துக் கொண்டே போக எழுதுகோல் எடுத்திருக்கும் கவிஞர்களின் - நல்ல கவிஞர்களின் எண்ணிக்கை பெரியது.

வசீகரன், சேதுபதி, ஆறாவயல் பெரியப்பா, பொன். குமார், நஞ்சுண்டன், உமாபதி, எஸ். சண்முகம், நீலமணி, வசந்தகுமாரன் பாதசாரி, கரிகாலன், அமிர்தம் சூர்யா, சமயவேல், வாலி என நீள்கிறது அந்தப் பட்டியல். தனித் தனியாகப் பேசப்பட வேண்டியவர்கள் இவர்கள்.

'பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையினானே'.

# 11. புதிய அலைகள்

இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிதையின் எல்லைக்குள் நின்று பார்க்கும் போது அதன் கடைசி இருபதாண்டுகளில் அடிப்படையான இரண்டு இலக்கியப் போக்குகள் வீறு கொண்டெழுந்தன. **பெண்ணியம், தலித்தியம்** என்ற இரண்டு பேரலைகள் அவை.

**பெண்ணியம்** - வாழ்வின் மகத்தான பாதியான பெண் தன்னை முழுமையாக உணர்ந்து கொண்ட தருணத்தில் முகிழ்த்தது. தமிழ்க் கவிதையைப் பொறுத்த வரையில் கவிஞர் மாலதி மைத்ரி காரைக்கால் அம்மையையும், ஆண்டாளையும் நிராகரித்து ஔவையையே முதன்மைப் படுத்துகின்றார்.

> **'ஔவை என்பது தமிழ்ப் பெண் அறிவு மற்றும் விடுதலையின் ஒரு குறியீடு'**

என்கிறார்.

> 'மானுடம் என்பது ஆண் சார்ந்த விஷயமாகும். ஆணினது வெற்றிகளையும் தோல்விகளையும் உள்ளடக்கியதாகும். பெண் என்பவள் என்றுமே நியதி அல்ல. விதியல்ல. அவள் ஒரு விதி விலக்குத்தான். . . . . '

என்று பெண்ணின் இன்றைய இருப்பைக் கூறும் வ. கீதா, புதுவகைப் பெண் எழுத்து பற்றியும் தெளிவாக அறிமுகம் செய்கிறார்.

> 'எங்களது உடல், ஆளுமை, வாழ்வு இவற்றைப் பற்றிப் பேச, எழுத தனியொரு மொழியை நாங்கள் படைத்தாக வேண்டும். எங்கள் உடல் வாடையைக் குறிக்க, மாதவிடாய் குறித்துப் பேச, மகப்பேற்றின் வேதனையை உணர்த்த, பெண்களுக்கிடையே நிலவும் காதலை

வெளிப்படுத்த, எங்கள் மார்பகங்களில் சுரக்கும்
பாலின் மகிமையைக் கொண்டாட . . . '

வேறொரு வகையாகச் சொன்னால், பெண்ணின் இன்றைய அவலத்தை உணர்த்தவும், அவலங்களுக்கான காரணங்களைக் கூறவும், அவற்றிலிருந்து விடுபடும் வழிகளைச் சொல்லவும், இந்த விழிப்புணர்வைத் தடம்பிடித்து முன்னேறவும் தூண்டுகிற எழுத்துதான் பெண்ணிய எழுத்து.

தமிழ்க் கவிதையில் பெண் விடுதலை பேசிய பாரதியாருக்கும், பாரதிதாசனுக்கும் பிறகு சுயமான பெண் விழிப்பை உணர்த்திய கவிஞராக இரா. மீனாட்சியைத் தான் குறிப்பிட வேண்டும். இருபதுகளின் எழுபதுகளிலேயே தன் அடையாளங்களைப் பதித்தவர் அவர். அவருடைய விடுதலை உணர்வுக்குச் சிறகுகள் தந்தவர் பாரதியார்.

'நானே பாரதி
என் காலத்தின் கவிச்சக்ரவர்த்தினி
என் கவிதை சோதிமிக்க நவகவிதை
இந்த விதை களர் நிலங்களிலும்
கிளர்ச்சி செய்யும்
மண் கீறும்
ஊற்றடைப்புகளை
வெடியெனத் தகர்க்கும்'

எனப் பிரகடனம் செய்தவர் அவர்.

'இவர்களுக்காக' என்ற கவிதையில் சதையாசை நரிகளுக்குப் பலியாகும் பால் கன்றுகளையும், நீதி மன்றங்களைத் தேடாத நித்ய கல்யாணிகளையும் பார்த்துக் கேட்கிறார்:

'என்றைக்கு உடைத்தெறியப் போகிறீர்கள்
இந்த மான வேலிகளை'

'புதுதேவி' கவிதையில் பெண்ணின் ருத்ர மூர்த்தம் வெளிப்படுகிறது. இராவணன் முளைத்தபோது தேவி என்ன செய்தாள்?

'தலை முடித்தாள்
முந்தானை இறுக்கினாள்
கைகள்
செங்கல் பிளக்கத் தயாரான பின்
வழிமறித்தவன் என்ன ஆவான்?'

இந்தத் துணிவின் குரல் 'புனிதக் கூண்டு வடிப்பவர்'களுக்கு எதிராக முழங்குகிறது. மணம் முடிக்க முடியாமல் நோகிறவர்களிடம் கவிஞர் சொல்கிறார்:

'சொந்தக் கருப்பையை
குத்தகைக்கு ஏன் விடணும்
நாங்கள் கூட்டமாய்க் குரவையிட்டு
கன்னியராய் வீடு செய்வோம்'

அவருடைய தொடர்ச்சியாகப் புதுக்கவிதை யுகத்தில் அதிர்ச்சி அலையாக எழுந்த கவிஞர் ரோகிணி பெண் கவிஞர்களில் எழுச்சி மிக்கவராக அந்நாளில் கருதப்பட்டார். 'நடைபாதைத் தொழிற்சாலைகள்' கவிதையில், ஏழை விலைமகளிரை அவர்கள் வாழ்வின் குரூரத்தோடு சித்திரித்தவர்.

"'பத்தினித்தனம்' செத்துவிட்ட
முதல்நாளின் மலர்களைச்
சிக்குத் தலையில் சுமந்துகொண்டு
சரிந்து கொண்டிருக்கும்
'மூல தனங்களை'
கடை பாடிகளில்
நுழைத்துக் கொண்டு. . .
இருட்சந்தின் மூலைகளில்
காலியான இரைப்பையின்
சங்கேதத்தை
வெளிப்படுத்துகின்ற அவர்கள்
'தெருவோரத் தொழிற்சாலைகள்'.
அவர்களுடைய
கர்ப்பப்பைகள்
பட்டம் பெறாத

மருத்துவச்சிகளால்
டெட்டால் வாசனை
அறிந்திராத
குடைக்கம்பிகளைக் கொண்டு
அடிக்கடி
சுத்திகரிக்கப்படுகின்றன'

படிக்க அதிர்வூட்டும் வருணனையென்றாலும், திடுக்கிட வைப்பது தான் நோக்கம்.

இப்படிப் பல கவிதைகளைப் பெண்ணியம் அரும்பிய அடி நாட்களிலேயே எழுதியவர் ரோஹிணி.

வத்ஸலா பெண்ணின் தனித்தன்மை குறித்த கவலையையும், அதை நிலை நாட்டும் உறுதியையும் புலப்படுத்தியவர்.

'மறவேன் இனி ஒரு போதும்
நான் மானுடம்
நான் தனி
நான் மட்டுமே நான்'

இந்தப் புது உணர்ச்சி அவர் கவிதைகளில் கொழுந்து விட்டுப் படர்வதைக் காணமுடியும்.

அந்தப் பாதையில் எழுந்த மற்றொரு முதல் குரல் கி.வி என்கிற கி.விஜயலட்சுமி.

'நீயும் இருக்கிறாய்
ஏன் நானும் இருக்கிறேன்
என்றாலும் எதற்கிந்த
சங்கடமான மௌனம்?
வேறொன்றுமில்லை
அருகருகாய் ஒன்ற மறுத்து
எதிர் எதிராய்
தனித்து நிற்கும்
காரணமற்ற காரியத்தால்'

என்ற கவிதையில் பெண்கள் ஒன்றுபட வேண்டிய நியாயத்தைப் பேசியிருக்கிறார்.

அந்தக் கால எல்லையில் தன் அடையாளத்தை நிலை நிறுத்தியவர் சுகந்தி சுப்பிரமணியம். அவ நம்பிக்கைகளுக்கும் ஆதிக்கங்களுக்கும் உடைபட்டுப் போகாத உள்ளத்தை அவர் புலப்படுத்தினார்.

'ஒவ்வொரு கணமும்
அழுது கொண்டிருந்தேன்
ஜன்னல்களும் கதவுகளும் மூடிக் கிடந்தன
அறைகள் இருட்டியிருந்தன
எல்லாம் மௌனமாய்
கதவு மெல்ல அழைத்தது
அழாதே சாப்பிடு என்றது
எழுந்து போய்
திறந்தேன்
பேரிரைச்சலுடன் நகரத்தை
அதிகாலை தந்தது
புன்னைகையுடன் தரை இறங்கினேன்
என்னைக் கழுவு என்றது வாசல்
கோலம் போடு என்றழைத்தது மண்
தண்ணீர் விடு என்றழைத்தன செடிகள்'

இருபதின் எண்பதுகளில் தேவமகள் பெண்ணின் இருப்பையும் இடத்தையும் உணர்ந்தவராய் எழுதினார்: (புறப்பாடு)

'ஏன் ஒதுங்குகிறாய்
ஒதுங்கினால்
ஒதுக்கப்படுவாய்
மௌனத் திரை கிழித்து
வெளியே வா
மின்னலாய் ஒளிர்
மழையாய்ப் பொழி
பிரளயமாய்ப் பெருக்கெடு'

ஒரு குடும்ப நாயகியாக இருந்து கொண்டே பெண்ணின் உணர்வுகளை, வேதனையை 'மலர் விடும் மூச்'சாக வெளியிட்டவர் பத்மாவதி தாயுமானவன். எண்பதுகளின் கவிஞர் வரிசையில் இடம் பெற்றவர். அவருடைய 'வேக்காடு' கவிதை ஒன்று போதும் அவர் வெஞ்சினத்தை முன் வைக்க.

*'பிரசவத்தில் துணையிருக்கும்*
*தாதிப் பெண்ணையும்*
*சுடுகாட்டுப் பணியாளனையும்*
*சந்தித்தேன்*
*தாதிப்பெண் சொல்கிறாள்*
*'பெண் குழந்தை என்றால்*
*பிறப்பதற்குச் சற்றுத் தாமதமாகும்'*
*மனதில் என்ன தயக்கமோ*
*இந்த மண்ணில் வந்து விழுவதற்கு*
*விட்டேத்தியாக வெட்டியான் சொல்கின்றான்*
*'பெண் பிணம் என்றால்*
*சீக்கிரம் வெந்து விடும்*
*வேலை சுளுவாய் முடிந்துவிடும்'*
*ஏன் முடியாது?*
*அவர்கள் தான்*
*வாழுகின்ற நாட்களிலேயே*
*பாதிவெந்து விடுகிறார்களே'*

எத்தனைக் கசப்பும் துயரும் கலந்தவை பத்மாவதி தாயுமானவனின் சொற்கள்!

புதுக்கவிதை அல்ல என்றாலும், பெண்ணுரிமையை வல்லமையோடும் ஆற்றலோடும் புலப்படுத்திய இருபதாம் நூற்றாண்டுக் கவிஞர்களில் மாலதி ஹரீந்திரனுக்கும் இடம் உண்டு.

*'பெண்ணே உன்னைப் 'பூ' எனச் சொல்வார்*
*பெருமிதம் கொள்ளாதே – என்*
*கண்ணே உன்னைக் 'கண்மணி' என்பார்*
*கருத்தினில் கொள்ளாதே*

**பூவாய் உன்னைப் போற்றுவ தெல்லாம்**
**'பூ'வென ஊதிடத்தான்**
**கண்மணி என்றுனை ஏத்துவதெல்லாம்**
**காரியமாகிடத் தான்'**

நகைகளுக்குள் தன்னைப் புதைத்துக் கொண்ட பெண்ணைப் பார்த்துப் பொன்மணி வைரமுத்து பொட்டில் அடித்துச் சொல்லுவார்:

**'அடீ என் சோதரி!**
**பைத்தியக்காரி**
**அத்தனை சிறைக்குள்ளே**
**அகப்பட்டுக் கொண்டிருந்தால்**
**சுதந்தரக் காற்று வந்தும்**
**சுகப்பட முடியாதே'**

எண்பதுகளில் எழுதத் தொடங்கி ஒரு காவியக் கவிஞராக உருவான பெண் கவிஞர் நிர்மலா சுரேஷ்.

'மண்ணில் பதியும் பாதங்கள்' வழி அறிமுகமான இவர் இயேசு மகா காவியம் எழுதியதால் வரலாற்றில் இடம் பெறுகிறார். இவருடைய சமய அனுபவங்கள் சமுதாய அனுபவங்களிலும் பார்க்கச் செழுமையானவை.

'தைலச் சிமிழும் தச்சன் மகனும்' அந்தச் சமய அனுபவத்தின் தொடர்ச்சியாக அமைகிறது. இயேசுவுடன் தொடர்புடைய எல்லாப் பொருள்களும் கவிஞர் வழியே பேசுகின்றன. சில அருமையான வரிகள் நூலை அழகு செய்கின்றன.

**'கடல் அச்சடிக்கும்**
**காசு நான்'**

என்கிறது மீன்.

**'வானத்தையும் பூமியையும்**
**வாகனமாய்க் கொண்டவரால்**
**தேவ பல்லக்கு ஆனேன்'**

என்று கர்வம் கொள்கிறது படகு.

**'இயற்கையின்**
**ஒரே ஒரு தேவதாரு**
**அவர் மட்டும் தான்'**

என்று பெருமிதம் கொள்கின்றன மரங்கள். ஒரு காவியக் கவிஞராகப் பெண் கவிஞர்களில் இடம் பெறுகிறார் நிர்மலா சுரேஷ்.

ஐகூ கவிதைகளைப் பலர் முயன்று தோற்பதுண்டு. சிலர் தோற்று எப்போதேனும் வெல்வது உண்டு. ஆனால் எப்போதும் வென்ற ஒரு கவிஞரைச் சொல்ல வேண்டுமானால் '**மித்ரா**' வைத்தான் குறிப்பிட வேண்டும்.

மித்ரா என்ற புனைபெயரில் தோன்றும் பேராசிரியர் உண்ணாமலை 'குடையில் கேட்ட பேச்சு' மூலம் தமிழ்க் கவிதையில் ஒரு தனிச் சாயலைப் பிரதிபலிக்கிறார். 1990-இல் 'ஹைகூக் கவிதைகள்' தொகுப்பை வெளியிட்ட மித்ரா 1993-இல் 'குடையில் கேட்ட பேச்சு' நூலை வெளியிட்டார்.

சில சொல்லிப் பல சிந்திக்க வைக்கும் ஐகூ மித்ராவிடம் ஆழ் மன உரையாடலை நிகழ்த்திப் பார்க்கிறது.

**'இவ்வளவு கவிஞர்கள்**
**சுரண்டினால் நிலவே**
**ஏன் வராது அமாவாசை'**

என்ற அங்கதம்.

**'குளம்**
**முகம் பார்க்கும் நிலா**
**குளிக்காமல் திரும்பினேன்'**

என்ற ஆதங்கம்.

**'ஓடும் ரயில்**
**கணப்பொழுது**
**எரியும் சிதைமேல் என் நிழல்'**

என்ற தத்தவ இழை - இப்படிச் சுவைப்புக்குத் தனித்தனி அழகுகளோடு திகழும் மித்ராவின் ஐகூக்கள்.

மித்ரா தமிழ் ஐகூ உலகில் தனிச் செங்கோல் செலுத்துகிறார்.

இருபதின் தொண்ணூறுகளில் பெண்ணியம் மேலும் வீச்சுக் காணத் தொடங்கியது. வாழ்வின் கடுமையான ஏமாற்றுதல்களுக்கு உள்ளாகிற பெண்ணைக் குறித்துப் பேசுகிறார் க்ருஷாங்கினி.

'பெரு வெளி யென
மென் சிறகுகள் கொண்ட
வண்ணத்துப் பூச்சி
கீழிறங்கித் துணை தேட
ஸ்டாண்டு இட்டு
நட்டு நிறுத்திய தட்டில்
பிசுபிசுத்த ஈ வர்ணம்
மென் இறக்கை அப்பிக்கொள்ள
இறகை அடித்து அடித்து வெளியேற
உடல் கனத்தால்
பின்னும் பின்னும் உள் அமிழும்'

க்ருஷாங்கினி 2001 ஆம் ஆண்டில் 'பறத்தல் அதன் சுதந்திரம்' என்ற பெண் கவிதைகளைத் தொகுத்தவர்.

வைகைச் செல்வி மரங்களையும், காடுகளையும் நேசிக்கும் மென்மை மிக்க கவிஞர். ஆனால் அந்த மென்மைக்குள் ஒளிந்திருக்கிறது சீற்றம்.

'கருவில் பெண்ணை அழிப்போருக்குக்
காட்டை அழித்தல் பெரிதாமோ?'

என்ற வினாவுக்குள் உயிர் நேயம் இரட்டிப்பாகப் பொங்குகிறது.

'என் வீட்டு ரோஜாப்பூ
யாருடைய மேஜையிலோ
நான் கோர்த்த மணிமாலை
எப்பொம்மை கழுத்திலோ
என் தோட்ட மருதாணி

யாருடைய விரல்களிலோ
என் வீட்டுத் தென்னங்கீற்று
யார் வாசல் தோரணமோ?
ஆனால்
யார் யாருக்கோ வரவேண்டிய
வலியும்
வேதனையும்
துயரமும்
துக்கமும்
ஒட்டு மொத்தமாய்
எனக்கே
எனக்கு மட்டும்தான்'

என்ற வரிகளில் தேங்கும் பெண்ணின் வேதனை பெரிது, பெரிது கடலினும் பெரிது.

இந்தக் காலப் பகுதியில் எழுதத் தொடங்கிய இளம்பிறை கூர்மையாக எழுதவல்லவர். அவருடைய அறுவடைக் காலம் கவிதை ஒரு கிராமத்து ஏழைப் பெண்ணின் குரலாகத் துயரத்தை விதைக்கிறது.

'அல்லுபகல் உழைப்பவள
அடிக்கக் கையை நீட்டாதய்யா
சீக்கிரமா சமச்சித் தாரேன்
சிடு சிடுண்ணு பேசாதய்யா
. . . .  . . . . .  . . . . .
புள்ளகுட்டி போதுமுண்ணு
பண்ணிகிட்ட ஆபரேசன் – கதுர
அள்ளிப் போட்டுத் தூக்கயிலே
முள்ளு போல குத்துதய்யா
மூச்சுவிடத் திணறு தய்யா
. . . . . .  . . . . . .  . . . . . .
உழைச்சதால உனக்குமட்டும்
உடம்புவலி தாங்க லேனு
ஊத்திகிட்ட சாராயத்த
அல்லுபகல் உழைப்பவள
அடிக்கக் கையை நீட்டாதய்யா'

குட்டி ரேவதியும் இருபதாம் நூற்றாண்டின் இறுதியில் கவிதை படைக்க முனைந்தவர். மிகப் புதுமையான சொற் சேர்க்கைகளால் 'பூனையைப் போல் அலையும் வெளிச்சம்' என்று அடர் நினைவுகளை எழுப்ப வல்லவர். தொண்ணூறுகளின் பெண் உறுப்புகளைக் கொண்டாடும் இயக்கம் வலுத்த காலத்தைப் பிரதிநிதிப்படுத்துபவர். 'கொடுக்கு' - கவிதையில் இவ்வாறு சொல்கிறார்:

**'சொல்லின் முள்ளொன்று தந்தாய்**
**மீனின் முள்ளையோ தாவர முள்ளையோ**
**ஒத்திராதது**
**சதைக்குள் இறங்கி அக் கொடுக்கை**
**விட்டோடிப் பறந்தது குளவி**
**கடுக்கின்றன**
**என் விசேஷ உறுப்புகளான**
**கண்களும் முலைகளும் யோனியும்**
**அழியாத வலியின் சாயலெலாம்**
**கொடுக்கு தானோ?**

அவருடைய துணிச்சலான வெளிப்பாடு எதிர்ப்பைத் தந்ததெனினும் அவர் அதைப் பொருட்படுத்தவில்லை.

பிருந்தா 'மழையைப் பற்றிய பகிர்தல்கள்' நூலால் அறியப்பட்டவர். தொண்ணூறுகளிலிருந்தே எழுதி வருபவர்.

**'நடக்கும் திசையெலாம்**
**முட்ட நேர்கிற சுவர்கள்**
**சிலை போலென்னை**
**இறுக்குகிற சுவர்கள்**
**நானொரு சமாதியுள்**
**நிறுத்தி வைக்கப்பட்டு'**

என்று பெண்படும் கட்டுப்பாடுகளின் இறுக்கத்தை உணர்த்தியவர்.

'ஒரு கதவும் கொஞ்சம் கள்ளிப்பாலும்' தொகுப்பால் அனைவரின் கவனத்துக்கும் வந்தவர் தாமரை. அழுத்தமும் உறுதியும் நிரம்பிய கவிதைகள் தந்தவர்.

'. . . . . . . . . என் கால்கள்
முட்களின் கூர்மையைத் தாங்காது – ஆனால்
முட்கள் என் கால்களை
முத்தமிடுவதை நீ விரும்பினால்
சாகும் வரை அதில் நடனமாடுவேன்
முட்கள் எனக்குப் பொருட்டல்ல
ஆனால். .
உன் கோழைத்தன்மையை என்
கால்கள் பொறுத்துக் கொள்வதே இல்லை
மிதித்து அழிக்கவே விரும்புகின்றன'

என்று மிகத் தெளிவாகக் காதலனுக்குச் சொல்லும் மனோ திடம் ஒருவகையில் பெண்ணுக்கு இருக்க வேண்டிய கருத்துச் சுதந்தரத்தின் வெளிப்பாடே ஆகும்.

குழந்தைப் பருவத்திலேயே பெண் அடிமைச் சங்கிலியை விரும்பி அணியும்படிப் பழக்கப்படுத்தப்பட்டு விடுகிறாள். இந்த உண்மையை நடைமுறை உதாரணங்களால் - பிரம்பினால் கூடை முடையும் லாவகம் போல - சொல்லி விடுகிறார் கவிஞர் அ. வெண்ணிலா.

'கீரைக்காரி வந்தால்
அம்மாவைக் கூப்பிடவும்
செய்தித்தாள் வந்தால்
அப்பாவிடம் கொடுக்கவும்
யாரும் சொல்லித்தராமலே
கற்றுக் கொள்கிறது குழந்தை'

குடும்ப உறவுகளை நுண்ணிய சித்திரங்களாக்க வல்ல வெண்ணிலா பெண்ணின் உடல் தரும் சிக்கல்களையும் கவிதைப் படுத்தியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இருபதாம் நூற்றாண்டின் இறுதியில் தங்கள் பதம் தீட்டிய சொற்களோடு பெண்ணின் இருப்பையும் எதிர்ப்பையும் புலப்படுத்திய கவிஞர்கள் மாலதி மைத்ரி, சல்மா, கனிமொழி ஆகிய மூவரும்.

'எமக்கு என்று
சொற்கள் இல்லை
மொழி எம்மை
இணைத்துக் கொள்வதுமில்லை
உமது கதைகளில்
யாம் இல்லை'

என்று நிஜங்களின் கொடுமையைப் பேசுவார் கனிமொழி.

'சட்டாம் பிள்ளையாய்
அம்மா
சிறைக் காவலராய்
அப்பா
அறிவுச் சலவைக்கு
படிப்பு
கைகொட்டிச் சிரித்து அடக்கி வைக்கச்
சுற்றம்
சிலுவையின் ஆணிதகர்த்து இறங்கி வந்தால்
கையில் தாலிக்கயிற்றோடு
கணவன்
உன் கருவறைக்குள் மற்றுமொரு
அடிமை'

பெண்ணை நெருக்கும் சிறைக் கம்பிகளைக் குறித்து ஒரு நாயகப் பெண் பிள்ளையாக நின்றுபேசுகிறார் கனிமொழி. நவீனக் கவிதையில் குறிப்பிடத்தக்க புதிய சலனங்கள் அவரால் விளைந்தவை.

பெண்ணியம் தந்த ஆரோக்கியமான விளைச்சலாக மாலதி மைத்ரியைக் கருதலாம். வெளி அரங்கில் காரமாக அவர் எடுத்து வைக்கும் கருத்துக்களின் வெப்பம் வேறு. அவர் கவிதைகளில் சுரக்கும் நேசம் வேறு.

கடலும், சங்கராபரணி ஆறும், அகதிகளும், காட்டுப் பாதையுமாக வளைத்துக் கிடக்கும் மாலதி மைத்ரியின் கவிதைகளில் முதிர்ச்சியும் பக்குவமும் கலை நேர்த்தியும் நிரம்பியிருக்கின்றன.

துண்டிக்கப்பட்ட நாக்குகளைச் சேகரிக்கும் மாலதி மைத்ரி கல்லறைகளிலிருந்து வார்த்தைகளையும் சேகரிக்கிறார். பெண்ணுக்கு அவர் சொல்லும் அறிவுரை:

**'தேர்ந்தெடுக்கலாம்**
**இதிலிருந்து உனக்கான வாக்கியத்தை**
**உனது மரணத்தை உயிர்ப்பை மீட்பை**
**உடன் நிகழ்த்த அல்லது ஒத்திப் போட'**

பெண்ணுக்கே உரிய மாதவிடாய் நிகழ்வை வெகுநயமாக எடுத்துரைக்கிறார். அந்த முதல் அனுபவம் அச்சமும் உவகையும் கலந்த கலவையாக இருந்தது. 'தெய்வ உடல்' என்ற தலைப்பே நிகழ்வைப் பெருமைப்படுத்துவதாகிறது.

**'அத்தி பூக்கக் காத்திருந்தேன்**
**கண்விழித்து**
**பௌர்ணமி மரத்தடியில்**
**விடியலில் நான் பூத்திருந்தேன்**
. . . . . . . . .
**பறவைகளும் மிருகங்களும்**
**தாவிக் குதித்து ஏறி இறங்கி**
**விளையாடிக் கொண்டிருக்கின்றன**
**வலியும் கூச்சமும் பொறுக்காமல்**
**கத்தியபடி விழிக்கிறேன்**
. . . . . . . . . . .
**வீட்டுக்குள்ளிருந்து அம்மாவின் குரல்**
**'என்ன பாப்பா'**
**'இப்பத்தான் தனியா படுக்கிறாள்**
**மாசாமாசம் பழகிடும்' என்றாள் ஆயா'**

பெண்கள் மட்டுமே அனுபவிக்கிற உடல் அனுபவங்களை முதன் முதல் தமிழ்க் கவிதைக்குள் கொண்டு வந்தவர்களில் மாலதி மைத்ரி முக்கியமானவர்.

இதுவரை பார்த்த பெண் கவிஞர்களுக்கு மாற்றான ஓர் உலகம் சல்மாவின் உலகம். மாற்ற முடியாத விதியின் சங்கிலிகளால் பிணைக்கப்பட்டிருப்பதால் ஒரு வாழ்க்கையே

தனிமையின் துயரங்களால் இருள்படிந்து கிடக்கிறது. ஒரு இசுலாமியப்பெண்ணின் பெருமூச்சுக்களாக வெளிப்படுகின்றன அவர் கவிதைகள்.

'எல்லா இடத்திலும்
பொய் சொல்ல வேண்டி இருக்கிறது
கண்ணாடியில்
சிரிக்கும்பொழுது கூட'

என்று தரைகீறி நிற்கிறது கவிதை.

தன் வீட்டு அறையொன்றை அறிமுகம் செய்கிறார் சல்மா கசப்பும் விரக்தியுமாகச் சிறுபான்மைச் சமூகம்சார் பெண்ணின் துயர் இழைய.

'இந்தக் கட்டில்
எஜமானின் ஆயுதம்
என் உருவம் காட்டும்
இந்த நிலைக் கண்ணாடி
பேசிக் கொண்டிருக்கக் கூடாதா
என்னிடம்?
மின்விசிறி
நான் காற்றைத் தேடி ஓடிவிடாதவாறு
கட்டுப்படுத்தும் தந்திரம் கொண்டது'

இவ்வாறு தொடரும் அறை பற்றிய விவரிப்பு ஒரு கூரிய கத்தி வீச்சோடு முடிகிறது.

'எண்ணற்ற ஜடப் பொருட்களுடனும்
ஒரு மனிதனோடும்
தொடரவியலா வாழ்க்கை
தொடர்கிறது அதே அறையில்'

பயணம் முடிந்து வீடு திரும்பும்போது, அது, 'அகோரப் பசியுடன் விழுங்கக் காத்திருக்கும் ஒரு மிருகமாகத் தெரிகிறது.

தீரவே தீராத ஒரு தனிமையான பயங்கரம், வெறுமை, சல்மாவை முழுமையாகச் சூழ்ந்திருப்பதை ஒவ்வொரு வரியும் கசிந்து கசிந்து சொல்கிறது.

வெறுத்து ஒதுக்க முடியாமல் வரித்துக் கொண்ட தனிமை ஒரு நூற்றாண்டுத் தனிமையையும் விட வலிமையையும், நோவையும் தருகிறது. சல்மா சுமப்பது தனிமை அல்ல சிலுவை என்ற அனுபவம் - எல்லாச் சிறைப்பட்ட பெண்களின் அனுபவமாகவும் ஆழத்தில் வேர் கொண்டு மேகமில்லாத வானத்தை வறிதாகத் தொட்டுத் தொட்டு அலை பாய்கிறது.

இன்னும் பல பெண் கவிஞர்களும் சென்ற நூற்றாண்டின் இறுதியில் எழுதத் தொடங்கி இருந்தாலும் அவர்களின் முழுமையான சிறகு விரிப்பு 21-ஆம் நூற்றாண்டில் என்பதால் இங்குக் குறிக்கப் பெறவில்லை.

இன்று பெண்ணியம் நாற்புறமும் அகலக் கைவீசிநடை பயில்வதால் திசையெங்கும் பேரதிர்வுகள் நேர்கின்றன.

சென்ற நூற்றாண்டின் இறுதியில் மற்றொரு பேரலையும் கிளர்ந்தெழுந்தது. அதுதான் தலித்தியம். தொடக்கத்தில் இவ்வியக்கம் புனைகதைகளையே மையம் கொண்டிருந்தது. தேர்ந்த திறனாய்வாளரான தி.சு. நடராசன் கூறுகிறார்:

> 'கலை இலக்கியச் சிந்தனைத் தளங்களில், தமிழகத்தில் எழுபதுகளுக்குப் பிறகு பெண்ணியமும், தலித்தியமும் சமூக உணர்வுகளாக எழுச்சி பெற்றுள்ளன. புனைகதை இலக்கியத்திலும், நாடக வடிவங்களிலும், ஆய்வுக் கட்டுரைகள் மற்றும் பேச்சு மேடைகளிலும் இவை விளக்கமாகவும் விரிவாகவும் இடம்பெற்றன. ஆனால், கவிதை நீண்ட காலம் இதிலே அக்கறை செலுத்தாமலே இருந்து வந்திருக்கிறது. . . . எண்பதுகளுக்குப் பிறகு கவிதைகளில் தலித்தியம் தடம் பதிக்கத் தொடங்கியுள்ளது'

இந்தக் கூற்றின் உண்மையை அறிந்தால் தலித் கவிதை இலக்கியம் தமிழில் காலதாமதமாகவே வளரத் தொடங்கியது என்பதும், காத்திரமான படைப்புகள் குறைவு என்பதும் புலனாகும்.

தலித்துகளின் வாழ்க்கைப்போரை முதன் முதல் பதிவு செய்த கவிதைகளில் ஒன்று - சிற்பியின் 'சிகரங்கள் பொடியாகும்'. தலித்துகளின் போர்க்குணத்துக்கு அடையாளமாகத் திகழும் இக்கவிதை தாமரை இதழில் வந்தது. ஓர் உண்மைச் சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டது.

சென்ற காலங்களில் தலித் அல்லாத கவிஞர்கள் (பாரதியார், பாரதிதாசன், பெ. தூரன்) சில உணர்வுகளைப் பதிவு செய்திருந்தாலும், மராட்டியத்திலும் கருநாடகத்திலும் தலித் இயக்க வீச்சுகள் பரவியபோது தமிழகத்திலும் அதன் எதிரொலிகள் தலித்துகள் வழியே கேட்கலாயின.

தலித்துகளே தலித் இலக்கியம் அல்லது கவிதை படைப்பதென்பது தன்னியல்பான, தன்னெழுச்சியான உணர்வின் விளைவாகும் என்பதை மறுப்பதற்கில்லை.

வெறும் ஒடுக்கப்பட்டோரின் எழுச்சிக்குரல் என்று மட்டும் அதை வரையறுத்துவிட முடியாது. தலித் சமூகங்களுக்கே உரிய நாட்டுப்புறப்பாடல், கலை, சடங்கு, சம்பிரதாயம், வழிபாடுகள் உண்டு. அவற்றையும் பின்புலமாகக் கொண்டு தலித்தியப் படைப்புகள் செழுமை பெறுகின்றன. அதனால் மொழியின் வட்டாரக் கூறுகளும் பதிவாகின்றன.

> 'ஒடுக்கு முறைகள், வறுமை, பசி, போதாமைகளில் கழிந்த நாட்கள் - இவைகளை உள்ளடக்கியது என் வாழ்க்கை. என் வாழ்வின் சக மக்கள் வாழும் வாழ்வின் தன்மைகள் அச்சு அசலாய்ப் பதியப்பட்டிருந்த எழுத்துகளை வாசிக்க நேர்ந்தபோது மற்றெல்லாவற்றையும் விட அவைகளே அதிகம் ஈர்த்தன.... எதிர்ப்புக் குணம், கலகக் குணம், மறுப்புத் தன்மை, புரட்டிப் போடுதல், வெளிப்படையாகப் பேசுதல், பகடி, பேச்சுமொழி இப்படியான கூறுகளை உள்ளடக்கிய தலித் இலக்கியம் என்கிற புது இலக்கிய வகை'

என்று விளக்கம் தருவார் **அழகிய பெரியவன்.**

'தலித் என்ற சொல் மையப்படுத்துவது ஒரு தத்துவத்தையோ கோட்பாட்டையோ அல்ல. அது ஒரு வாழ்க்கை முறையைத்தான் முன்னிறுத்துகிறது. அந்தச் சொல் ஒரு சக்தி, எழுச்சி, உத்வேகம், இன்னும் சொல்லப்போனால் அது ஒரு கனவு, நெருப்பு'

என்று புகழ்பெற்ற நாவலாசிரியர் **இமையம்** குறிப்பிடுகின்றார். **விழி.பா. இதயவேந்தன்**, பள்ளத்தில் வீழ்ந்த வாழ்க்கையும், வாய்க்கும் வயிற்றுக்குமான போராட்டமும், வறுமையும், அவமான உணர்ச்சியும், தன் சொந்த மக்களின் நிஜ பிரச்சினைகளும் தலித் இலக்கியம் படைப்பதற்குத் தன்னைத் தூண்டியதாகக் குறிப்பிடுகிறார்.

விழி.பா. இதய வேந்தன் வடித்த கண்ணீர்த் துளிகளாக அவருடைய 'கனவுகள் விரியும்' கவிதைகள் அமைகின்றன. 'பன்றிகள் கிளறிய குப்பையும், புழுப் புழுத்து நுரைத்துச் சகதியுமான' சேரி வாழ்க்கை கவிதைக்குள் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. பொன். குமார் தன் விமர்சனத்தில் குறித்திருப்பது போல இந்தக் கவிஞருக்குத் தன்னை உருவாக்கிய அம்மாவின் மீது அப்படி ஒரு பாசம்!

**'சேற்றிலும் துர்நாற்றத்திலும் ஊறிப்போன**
**அம்மா நெட்டி முறித்து**
**அழகு பார்ப்பாள் என்னை**
**திரும்பத் திரும்ப'**

என்று நினைவுகூர்கிறார். இன்னும் சொல்கிறார், இதயவேந்தன் அம்மாவின் தொழில் பற்றி.

**'மலம் அள்ளும் அம்மாவிற்கு**
**மகனாய்ப் பிறந்தது**
**என் பாக்கியம்'**

இந்த அனுபவத்தையும் தேக்கிய சோகத்தையும் ஒரு தலித் அன்றி யாரால் சொல்ல முடியும்?

**அழகிய பெரியவன்** கவிதைகள் அவருடைய கதைகளைப் போலத் தலித் வாழ்வியலைச் சுற்றி அதிகம் அமையவில்லை.

ஆனால் கவிதை அனுபவங்கள் மிக ஆழமானவை. எடுத்துக்காட்டாக ஒரு கவிதை :

'சுருக்குப் பையிலிருந்து பாட்டிதந்த
புகையிலை சுண்ணாம்பு
மணம் கொண்ட ஓரணாவை
இன்னும் அப்படியே வைத்திருக்கிறேன்
ஓரணாவின் ராஜா தலை
பாட்டி தலையாகவே மாறிவிட்டது இப்போது
. . . . . . . . . . . . . . . . . . . .
ஞாபகங்கள் படிந்திருக்கும் பொருட்களை
இழந்துவிட மனம் விரும்புவதில்லை
இறந்த காலம் அப்பிய துண்டுகளின் மீதுதான்
நிகழ்ந்தபடி யுள்ளது வாழ்க்கை'

என்.டி. ராஜ்குமார் தலித் கவிஞர் மட்டுமல்ல, தமிழ் நவீனக் கவிதையில் ஒரு புது மொழியையும் அனுபவத்தையும் கொண்டு வந்து சேர்த்தவர். பாரம்பரியாக மந்திர வித்தைகள் செய்து வந்த குடும்பத்தவராதலால் அவர் கவிதைக்குள் அவையும் குடியிருக்கின்றன.

'ஆதியிலே பாடி பூங்குலை யெடுத்தபாடி
நிணத்தை வெட்டிக் கீறி தரும்பலி கொள்ளு
கொள்ளடியம்மா என்று
மாமிசம் திண்ணக் கொடுத்தோம்
எலும்புக் கூட்டை எடுத்து வைத்து கொடை நடத்தி
போதையில் கிடந்து குதூகலமாய் கூவி மகிழ்ந்தோம்
மலைவாதை கொட்டித்தரும் அருவியில் குளித்துவிட்டு
கெட்டிக்கிடந்த சலனமற்ற கண்ணாடி நீரில் எட்டிப்பார்க்க
கஞ்சா இழுத்துக் கொண்டு நேரில் தெரிந்த
கடவுளை நோக்கி செய்கைகாட்டி பேசினோம்
அதுவும் பேசிக்கொண்டது
எங்களைப் போல்'

தொன்மங்களும், சடங்குகளும், பேய் பிசாசு ஆவிகளும் நடமாடும் ஓர் உலகத்தைப் பின்புலமாக்கித் தலித் மேன்மைகளை உருவகிக்கிறார் என்.டி. ராஜ்குமார்.

அதிகார ஆதிக்க எதிர்ப்புகளைப் புனிதங்கள் தகர்த்த மொழியில் பேசுகிறார் ராஜ்குமார் - அதிர்ச்சி தரும் பூகம்பமாய்.

**'வலக்கை உண்பதற்கு**
**குண்டி கழுவ இடக்கை இயல்பென்றும்**
**நிறுவப்பட்ட பெருங்கதையாடல்கள்**
**சுற்றி நிறைய கட்டமைக்கும் அதிகாரத்தை**
**உடைத்துப் பார்த்தால்**
**உமையவளுக்கும் புரியும்**
**ஈசனுக்கு இடப்பக்க மிருப்பது'**

என்.டி. ராஜ்குமாரின் கவிதை அனுபவம் மின்சாரக் கம்பிகளுக்கு இடையே செல்லும் பயணம்.

இருபதாம் நூற்றாண்டுத் தலித் கவிதையின் நகர்வை அன்பாதவனிடமும் பார்க்கலாம்.

**'காய்ச்சக் காய்ச்ச**
**இறுகுகிறது எம்பறை**
**சிறு தீண்டலிலும்**
**பேரலையாய் அதிர்வுகள்'**

என்பது அன்பாதவனின் குரல். அழுத்தமான கேள்விகள் அழகிய கவிதைகளுக்குள் இரகசிய ஆயுதங்களாய்ப் பதுங்கி இருக்கின்றன. அலுவலகங்களில் இருக்கும் சாமி படங்களில் மதுரை வீரன், காத்தவராயன்கள் கிடையாது. இது குறித்துத் தலித் கறுப்பனிடம் பேசுகிறார் அன்பாதவன்:

**'கருவாட்டுக் குழம்பும் முருங்கைக் கீரையும்**
**அரிசி அடையும் பிரசாதங்கள் ஆகாதா?**
**நம்ம சாமிக்குப் பிடிச்சதைத் தானே**
**நாம் படையல் போடமுடியும்?**
**யோசி நீ கறுப்பா'**

இருபத்தோராம் நூற்றாண்டின் தோரண வாயிலில் தலித் இலக்கியம் முழக்கங்களோடு வருகிறது. இனித் தலித் கவிதையின் ஆழங்களும், விசாலங்களும் பெருகும்.

புதிய பேரலைகளாக எழுந்த பெண்ணியமும், தலித்தியமும் ஒன்றைத் தெளிவாக நிலை நிறுத்தியுள்ளன. சுதாகர் கத்தாக் சொல்லி இருப்பது போல, 'ஏற்கெனவே நிறுவப்பட்டிருக்கும் இலக்கியக் கோட்பாடுகளான உள்ளொளி தரிசனம், அகவயப்பார்வை, நவீனத்துவம், பின் நவீனத்துவம் சிக்கலான பருண்மைத் தன்மை, அரூபத்தின் சாயல்' ஆகிய வகைகளைப் பின்னடையச் செய்திருக்கின்றன தலித் இலக்கியங்கள் - பெண்ணியப் படைப்புகள்.

## மதிப்பீடு

1. இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிதை நெடும் பரப்பில் புதுக்கவிதையின் வளர்ச்சி ஒரு சாதனைப் பரிணாமம் ஆகும்.

2. அதுவரை அரசோச்சிய மரபுக் கவிதை (பாரதியார் பாரதிதாசனுக்குப் பிறகு) தேய்புரிப் பழங்கயிறாயிற்று.

   புதுக்கவிதை தொட்ட எல்லைகளை மரபுக் கவிதை தொட முடியாமல் தோற்றது.

3. தொடக்க நிலையில் படிமம், குறியீடு என்ற உத்திகளையே புதுக்கவிதையாளர்கள் (எழுத்து காலத்தில்) முன் நிறுத்தினார்கள். அவை அணிகளே தவிர கவிதையின் உயிர் அல்ல என்று போகப் போக நிரூபணமாயிற்று.

4. கசடதபற / வானம்பாடி சமகாலத்தில் அகமுகப் பயணம் கவிதையின் ஆதாரமென்று வாதிட்டவர்கள் உண்டு. அதனால் வானம்பாடி வெற்று முழக்கம் என்று சொல்லியவர்கள் உண்டு.

   ஆனால் கவிதை அகமும் ஆகும் புறமும் ஆகும். அனைத்துமாகும் என்ற நிலை இன்று உருவாகி இருக்கிறது.

5. இன்று கவிதை வாழ்வுச் சித்திரிப்புடன் இணைந்த கவிதானுபவமாக மாறி இருக்கிறது. அதன் புனிதக் கோட்டைகள் தகர்ந்திருக்கின்றன.

   தலித்திய, பெண்ணியக் கவிதைகள் மீண்டும் வாழ்வின் சாத்தப்பட்ட கதவுகளின் மீதான முற்றுகையாகி

வெளிப்படையாகக் குரல் கொடுக்கின்றன. இதனால் வானம்பாடியின் மீது வைக்கப்பட்ட விமர்சனங்களும் சேர்ந்து புழுதியாகின்றன.

6. வட்டார, சாதிய மொழி - இதுவரை தவிர்க்கப்பட்ட பாலியல் மொழி, மந்திர மொழி எனப் புதிய மொழி மூர்க்கமாக நுழைந்திருக்கிறது.

7. இருபத்தோராம் நூற்றாண்டின் முதல் கால் நூற்றாண்டு புதுக்கவிதையின் இருப்பையும் மாற்றத்தையும் பரிசீலித்துத் தீர்மானிக்கும்.

## துணை நூல்கள்


1. வல்லிக்கண்ணன், **புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும்**, அன்னம் வெளியீடு.
2. பாலா, **புதுக்கவிதை ஒரு புதுப்பார்வை**, அன்னம் வெளியீடு.
3. கண்ணன், எம். **தலித் இலக்கியம் எனது அனுபவம்**, விடியல், கோயம்புத்தூர்.
4. நூற்றுக்கும் மேற்பட்ட கவிஞர்களின் நூல்கள்.
5. க்ருஷாங்கினி, **பறத்தல் அதன் சுதந்தரம்** (20-ஆம் நூற்றாண்டுப் பெண்கவிஞர்கள் தொகுப்பு), காவ்யா, 2001.

## உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை - 600 113

### அண்மை வெளியீடுகள்

| | ரூ.பை. |
|---|---|
| உலகத் தமிழிலக்கிய வரலாறு கி.பி. 901 - கி.பி. 1300 | 100.00 |
| பண்டிதமணி மு. கதிரேசன் செட்டியார் | 40.00 |
| பெண்ணிய உளப்பகுப்பாய்வும் பெண் எழுத்தும் | 40.00 |
| தொல். பொருள். (அகம்-புறம்)-ஆங்கில மொழிபெயர்ப்பு | 50.00 |
| தமிழ் ஆய்வு இதழ்கள் | 50.00 |
| வேதாத்திரியத்தில் சமூகவியல் இறையியல் சிந்தனைகள் | 130.00 |
| மக்கள் நேயச் சுயமரியாதை | 30.00 |
| ஏ.என். சிவராமனின் பத்திரிகை உலகம் | 30.00 |
| தமிழிலக்கிய வகைமையியல் தொகுதி - 3 | 150.00 |
| தமிழிலக்கிய வகைமையியல் தொகுதி - 2 | 115.00 |
| தமிழிலக்கிய வகைமையியல் தொகுதி - 1 | 130.00 |
| தமிழரின் மரபுச் செல்வங்கள் - அறிவியல் - தொழில்நுட்பம் II | 100.00 |
| தமிழரின் மரபுச் செல்வங்கள் - அறிவியல் - தொழில்நுட்பம் I | 90.00 |
| மௌனத்தின் அதிர்வுகளும் மொழியும் - பெண் | 40.00 |
| உலகத் தமிழிலக்கிய வரலாறு கி.பி. 1851 - 2000 | 180.00 |
| தமிழர் கண்ட தாவரவியல் | 40.00 |
| இதழாளர் பெரியார் | 160.00 |
| திராவிட இயக்க இதழ்கள் - தொகுதி 1 | 60.00 |
| சைவ சித்தாந்தத்தில் ஆன்மக் கொள்கை | 65.00 |
| பெரியபுராணம் - திருமுறைகளின் கவசம் | 55.00 |
| காஞ்சிபுரம் கி.பி. 6-ஆம் நூற்றாண்டுக்கு முன் | 65.00 |
| திருவாவடுதுறைப் புராணம் | 250.00 |
| மகாவித்துவான் ரா. ராகவையங்கார் | 30.00 |
| சித்தாந்தச் செல்வர் க. வெள்ளைவாரணனார் | 25.00 |
| தமிழ் உரைநடையும் கிறித்தவர் பங்களிப்பும் | 20.00 |
| திருக்குறளில் பொதுநிலை உத்திகள் | 30.00 |
| தமிழிலக்கித்தில் மனித நேயம் | 115.00 |
| தமிழ்க்கடல் இராய சொக்கலிங்கம் | 30.00 |
| தமிழில் பிறதுறைக் கோட்பாட்டாய்வுகள் வரலாறும் மதிப்பீடும் | 25.00 |
| தமிழ் இதழ்கள் - விடுதலைக்குப் பின் | 40.00 |
| பாவாணரின் ஞாலமுதன்மொழிக் கொள்கை | 45.00 |
| பெண்ணியப் படைப்பிலக்கியம் | 75.00 |

**561 இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிதை 80.00**